# மரணமும்
# ஜனாஸாவின் சட்டங்களும்.

மூலநூல்:
இமாம் நாஸிருத்தீன் அல்பானி
றஹிமஹுல்லாஹ்.

தமிழாக்கம்:
மௌலவி ஏ.ஜீ.எம் ஜெலீல் பலாஹி (மதனி)

المؤلف : الإمام ناصر الدين الألباني
ترجمة : الشيخ عبد الجليل المدني

| பொருளடக்கம் | |
|---|---|
| அணிந்துரை | |
| நூலாசிரியர் பற்றிய ஆசியுரை. | 03 |
| முன்னுரை | 05 |
| இமாம் அல்பானி (றஹ்) பற்றி சில வரிகள். | 06 |
| மரணம் நெருங்கிவிட்டால்... | 08 |
| துல்கீனுல் முஹ்ற்ளர்.. | 16 |
| உயிர் பிரிந்ததும் செய்யவேண்டியவை.. | 19 |
| உயிர் பிரிந்த பின் செய்ய வேண்டிய கடமைகள். | 25 |
| மையித்தின் உறவினர் செய்யய் வேண்டியவை. | 27 |
| உறவினர் செய்யக் கூடாதவை.. | 33 |
| நல்ல மரணத்தின் அறிகுறிகள். | 36 |
| ஜமயித்தைக் குளிப்பாட்டும் முறை.. | 45 |
| கபன் செய்தல். | 53 |
| மையித்தை சுமந்து செல்லும் ஒழுங்குகள்.. | 60 |
| ஜனாஸாத் தொழுகை பற்றிய சட்டங்கள். | 62 |
| ஜனாஸாத் தொழுகை முறை. | 89 |
| நல்லடக்கம் செய்தல். | 98 |
| அடக்கம் செய்து முடிந்ததும்.. | 109 |
| த.ஃ.ஸியத்- இரங்கல் தெரிவித்தல். | 119 |
| மரணத்தின் பின்னரும் நன்மை சேர்க்கும் காரியங்கள். | 127 |
| கப்ரிகளைத் தரிசிக்கும் ஒழுங்குகள்.. | 133 |
| மக்பராவில் செய்யக் கூடாதவை.. | 149 |
| பித்அத்தின் சட்ட விதிமுறைகள் | 172 |
| ஜனாஸா விடயத்தில் காணப்படும் பித்அத்துகள். | 177 |
| இத்தா பற்றிய சில சட்டங்கள். | 191 |
| முடிவுரை. | 197 |
| | |

# ஆசியுரை.

மௌலவி ஏ.ஜி.எம் ஜெலீல் மதனி அவர்கள் எனக்கு நன்கு பரிச்சயமான ஒரு ஆலிமாவார். காத்தான்குடியைப் பிறப்பிடமாக் கொண்ட இவர் அங்குள்ள ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல் லூயில் 1988ல் இணைந்து அல்குர்ஆனை மனனம் செய்து ஹாபிழ்பட்டம்பெற்று பின் 1998ல் மௌலவி, பலாஹியாகப் பட் டம்பெற்றார். இவர் மௌலவியாகப் பட்டம் கெற்ற அதே 1998ம் வருடமே மதீனாவிலுள்ள இஸ்லாமியப் பல்கலைக் கழக த்திற்கும் தெரிவாகி அங்குசென்று இஸ்லாமிய சட்டக்கலை – சரீஆ பீடத்தில் கற்று மதனீ பட்டம் பெற்றதுடன் நீதித்துறை சட்டவாக்க உயர் டிப்ளோமாக் கற்கைக்கும் தெரிவாகி கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் சவூதியரேபியாவின் கிழக்குப்பிராந்தியத்திலுள்ள அல் ஜூபைல் இஸ்லாமிய வழிகாட்டல் நிலையத்திலும் இஸ்லாமிய அழைப்பாளராகப் பணியாற்றி பல்வேறு நூல்களையும் எழுதியு ள்ளார். சூபித்துவம் அன்றும் இன்றும், நப்ல் தொழுகைகள், மனி தா! திருந்திவிடு.., பித்அத்தின் பின்னணிகளும் பக்க விளைவு களும், மற்றும் மரணமும் ஜனாஸா சட்டங்களும் போன்றன இவர் எழுதிய முக்கிய நூல்களாகும். இந்நூல்களையும் மற்றும் பல இவரின் ஆக்கங்களும் பல்வேறு இஸ்லாமிய வலைத்தள ங்களில் உலா வருகீன்றன.

நான் கல்முனை ஹாமியா அறபுக்கல்லூரியின் அதிபராயிருந்த காலத்தில் இவர் நாடுதிரும்பியுள்ளதை அறிந்த நான் உட னடியாக இவரை ஹாமியாவில் போதனாசிரியராக நியமனம் செய்தேன். பிற்பட்ட காலப்பகுதியில் இவருக்கு சவூதி இஸ்லா மிய விவகார அமைச்சின் நியமனத்தைப் பெற்றுக்கொடுப்பதிலும் முன்னின்றேன். ஹாமியாவிலிருந்து வெளியாகும் அல்ஹாமியா சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் இவர் அப்போது செயற் பட்டார்.

தற்போது அவர் பட்டம்பெற்ற கல்லூரியாக காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக் கல்லூரியில் சிரேஸ்ட விரிவுரை யாளராகப் பணிபுரியும் இவர் சிறந்த எழுத்தாளரும் பேச்சாளரு மாவார். இவரது இஸ்லாமிய த.ஃவாப் பணிகள் மென்மேலும் தொடரவேண்டும் என மனதார வாழ்த்தி அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன். ஆமீன்.

மௌலவி எஸ். எச் ஆதம்பாவா மதனி M.A

அதிபர், தைபா மகளிர் அறபுக் கல்லூரி. சாய்ந்தமருது.

15-08-2022

# முகவுரை

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அவன் விரும்பியோ விரும்பாமலோ மரணத்தை அது நிச்சயிக்கப்பட்ட நேரத்தில் சந்தித்தே ஆகவேண்டும். படைத்த இறைவன் படைப்புக்களின் மீது விதித்த இம்மரணத்திலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. இவ்வுலக வாழ்வு ஒவ்வொரு மனிதனுக்கும் பரீட்சை மண்டபமாகும். இவ்வுலகில் அவன் செய்யும் நல்லமல்களே அப்பரீட்சையில் அவன் எழுதும் பதில்களாகும். அதை நபியின் வழி காட்டலுக்கமைய செய்திருந்தால் அவை சரியானவையாகக் கணிக்கப்பட்டு இறைதிருப்தியையும் சுவர்கத்தையும் பெற்றுத் தரும். தன் விருப்பப்படி தான்தோன்றித்தனதாக செய்திருந்தால் அல்லாஹ்வால் நிராகரிக்கப்பட்டு அம்மனிதன் கைசேதப்பட வேண்டி ஏற்படும். தீய வழியிலும் பாவச்செயல்களிலும் தனது காலத்தைக் கழித்திருப்பின் இறைவனின் கோபத்துக்கு இலக்காகி கொடிய நரக வேதனையை அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

மனிதன் வாழப்போவது அதிகபட்சம் அறுபதோ எழுவதோ ஆண்டுகள்தான். அதில் பாதி தூக்கத்திலும் அதிலும் பாதி சிறுபிராயத்திலும் கழிந்துவிட வெறும் பதினைந்து வருடங்களே பரீட்சைக்காலம். அதில் நபிவழிப்படி நடந்தவன் ஜெயம் பெறுகின்றான். இப்லீஸ் வழியில் கழித்தவன் நாசமாய்ப் போகின்றான். இதுதான் வாழ்வின் சாரம்.

இந்த தத்துவத்தை அல்லாஹ் அல்குர்ஆனில் தெட்டத் தெளிவாகவே எடுத்துரைக்கின்றான்.

‘ அனைத்தின் ஆட்சி அதிகாரத்தையும் தன் கைவசம் வைத்திருப்பவன் எவனோ அந்த அல்லாஹ் உயர்வாகிவிட்டான். அவனே உங்களில் நல்லமல்கள் செய்வதில் சிறந்தவர் யாரென சோதிப்பதற்காக மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்.’ (சூரா முல்க் 1-2 வசனம்)

அனைத்து ஆன்மாக்களும் மரணத்தைச் சுவைத்தே ஆக வேண்டும். (இது இறை நியதி). எனவே யார் நரகிலிருந்து தூரமாக்கப்பட்டு சுவர்க்கத்துக் சென்றுவிடுகின்றாரோ அவரே நிச்சயமாக வெற்றிகெற்றுவிட்டார். இவ்வுலக வாழ்க்கை (மனிதனை) ஏமாற்றிவிடும் சாதனமேயன்றி வேறில்லை, ஆலஇம்ரான்.

நபியவர்கள் அடிக்கடி இவ்வாறு கூறுவார்கள்.. எனக்கும் இவ்வுலகிற்கும் என்ன சம்பந்தம்.? நான் இவ்வுலகில் பயண க்களைப்பினால் ஒரு மரத்தடியில் ஓய்வெடுக்கும் வழிப் போக்கனைப் போலாவேன். தன் களைப்புத் தீர்ந்ததும் அவ் விடத்தை விட்டுவிட்டு வழிப்போக்கன் செல்வதுபோல் நானும் இவ்வுலகை விட்டுச் சென்றுவிடுவேன்.(ஸஹீஸுல் ஜாமிஉ:)

எனவே அனேக நண்பர்கள் ஜனாஸாவின் சட்டதிட்டங்களை ஸுன்னாவின் ஒளியில் திரட்டித் தருமாறு என்னைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்நூலை வாசகர்களான உங்களுக்காகத் தொகுத்துள்ளேன். இதன் நிறைகள் அல்லாஹ்வைச் சேரும். குறைகளுக்கு நானே பொறுப்பு. வாசகர்கள் இதிலிருந்து பயன்பெற வேண்டும என்பதே எனது எதிர்பார்ப்பு. அல்லாஹ் எம் அனைவருக்கும் அனைத்து விவகாரங்களிலும் ஸுன்னாவை முன்னலைப்படுத்துவதற்கு அருள்பாலிப்பானாக. ஆமீன்.

# இமாம் நாஸிருத்தீன் அல்பானி (றஹ்).

இமாம் அல் முஹத்தித் நாஸிருத்தீன அல்பானி அவர்கள் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்து மரணித்த மிகப்பெரும் ஹதீஸ்க்கலை அறிஞர்களில் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார்கள். அவர்களில் பலநூறு நூல்களில் அஹ்காமுல் ஜனாஇஸ்- ஜனாஸா தொடர்பான சட்டதிட்டங்கள் எனும் இந்நூல் மிகப் பிரபலமிக்கதாகும். ஸுன்னாவின் ஒளியில் மரணம் அதன் பின் மையித்தின் விடயத்தில் புரியப்பட வேண்டிய சுடமைகள் , ஸுன்னத்துக்களை ஹதீஸ் ஆதாரத்தோடு அவர்கள் எடுத்துச்சொல்லும் பாங்கு மிக அழகானது. அதுமட்டுமின்றி ஒவ்வொரு ஜனாஸா சார்ந்த சட்டங்களையும் குறிப்பிடும்போது அதோடு தொடர்புபட்ட ஸஹாபாக்கள் ஸலபுகளின் சம்பவங்கள் மத்ஹபு ரீதியான நிலைப்பாடுகளையும் அவர்களுக்கே உரிய தனிப் பாணியில் எடுத்துரைக்கின்றார்கள். அறபுலகில் இவர்களின் நூல்களுக்கு மிகுந்த மதிப்புண்டு. ஹதீஸ்த்துறைக்கு மிகப் பெரும் பங்காற்றிய இவர்கள் அபூதாவுத் திர்மிதி,நஸாயி, இப்னுமாஜா, மிஸ்காத்,றியாளுஸ் ஸாலிஹீன் போன்ற பல ஹதீஸ் நூல்களிலுள்ள ஹதீஸ்களை ஆராய்ந்து தரம்பிரித்து முஸ்லிம் உலகிற்கு வளங்கியுள்ளமை இவர்களின் ஆழ்ந்த அறிவுக்கும் நபியவர்களின் ஹதீஸ்களின் மீது இவர்களுக்கு இருந்த அலாதி பிரியத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. நான் 1998ல் மதீனாவுக்கு உயர்கல்விக்காகச் சென்றிந்த காலத்தில் அன்னாரின் இந்நூலை வாசிக்கும் பாக்கியம்பெற்றேன். வாசித்து முடித்த நாள்முதல் இந்நூலில் கூறப்பட்டுள்ள அரிய அறிவூற்றை மக்களுக்கும் புகட்டவேண்டும் என்ற ஆர்வத்தினால் உந்தப்பட்ட நான் 2010 களில் காத்தான்குடியில் செயற்பட்ட பிராந்திய வானொலி சேவையான றிஸாலா எப்எம் வானொலியில் இக்கிதாபை பாடமாக நடத்தி முடித்தேன். அது நேயர்களிடத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. பின் காலத்தால் அழியக் கூடாத பொக்கிசமான இந்தூலை மொழியாக்கம் செய்து தமிழுலக வாசகர்களுக்கு அளிக்க ஆசைப்பட்டு மேற்கொண்ட எனது முயற்சியிள் வெளிப்பாடே இந்நூலாகும். மனிதன்

குறைபாடுள்ளவன் என்ற வகையில் எனக்கும் தவறுகள் பல இடம்பெற்றிருக்கலாம். வாசகரகள் தயவுகூர்ந்து அதற்காக என்னை மன்னித்து திருத்திக் கொள்வதுடன் எனக்கும் அவற்றைத் தெரியப்படுத்துமாறு வினயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

அல்லாஹ் எனது இம்முயற்சிளைக் கபூல்ச்செய்து தமிழ்பேசும் முஸ்லிம் உலகுக்குப் பயனுள்ள ஓர் தமிழாக்க நூலாக இதை ஆக்கிவைப்பானாக. ஆமீன்.

**மொழிபெயத்தோன்.**

# (1)

## மரணம் நெருங்கிவிட்டால் ...

நோயுற்றிருப்பவர் செய்யவேண்டிய கடமைகள்.

1- **தனக்கு மரணம் சம்பவிக்கப் போவதை உணரும் நோயாளி முதலில் அல்லாஹ் தனக்கு ஏற்படுத்தியிருக்கும் கழா – விதியை மனப்பூர்வமாக ஏற்று பொருந்திக்கொண்டு பொறுமை காக்க வேண்டும்.** அல்லாஹ் தன்னைக் கைவிட மாட்டான் என்று நல்லெண்ணம் வைக்க வேண்டும். இதுவே இவருக்கு இந்நேரத்தில் பயனளிக்கும் விடயமாகும்.

நபியவர்கள் கூறுகின்றார்கள்.. ஒரு இறைவிசுவாசியின் மனநிலை என்னை ஆச்சரியப்படுத்துகின்றது. அவனுக்கு ஒரு மகிழ்ச்சியான விடயம் நடந்தால் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதால் அது அவனது மறுமை வாழ்வுக்கு நல்லதாக அமைகின்றது. அவனுக்கு ஒரு துயர்தரும் விடயம் சம்பவித் தால் அப்போதும் அவன் பொறுமைகாப்பதால் அவனுக்கு நன்மையாகவே அது ஆகிவிடுகின்றது. (முஸ்லிம்)

‘ உங்களில் யாருமே அல்லாஹ்வைப்பற்றி நல்லெண்ணம் கொண்ட நிலையிலேயேயன்றி மரணித்துவிட வேண்டாம். (முஸ்லிம் )

**2-மரணப்படுக்கையில் உள்ள மனிதன் அச்சத்துக்கும் ஆதர வுக்கும் இடைப்பட்ட நிலையில் தன் மனதை ஆக்கிக்கொள்ள வேண்டும்.** அதாவது தான் செய்த பாவச்செயல்களால் தன் னை அல்லாஹ் தண்டித்து விடுவானோ என்று அஞ்சும் அதே வேளை அல்லாஹ் தனது நல்லமல்களை ஏற்று சுவனத்துக்கு அனுப்பலாம் என்ற நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

நபியவர்கள் மரணப்படுக்கையிலிருந்த ஒரு வாலிபரை நோய் விசாரிக்கச் சென்றிருந்த வேளை ‘எப்படி இருக்கின்றீர்கள்’

என்று வினவ அவர் அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் அருளை எதிர்பார்த்திருக்கின்றேன் . அதேபோல் என் கடந்த கால பாவங்களை எண்ணிப்பார்க்கும் போது பயமாகவும் உள் ளது என பதிலளித்தார். அதற்கு நபியவர்கள் எந்தவொரு மனிதனின் உள்ளத்தில் இறுதித் தருவாயில் அச்சம்,ஆதரவு ஆகிய இவ்விரண்டும் ஒன்றுசேர்ந்திருக்குமோ அல்லாஹ் அவருக்கு அவர் ஆதரவுவைத்து எதிர்பார்த்திருந்ததைக் கொடுத்து அவர் பயந்த தண்டனையை விட்டும் அவரைக் காப்பாற்றிவிடுவான் என்றார்கள். ( ஸஹீஹ் திர்மிதி )

**3.- எவ்வளவுதான் வலிவேதனையால் துன்புற்ற போதிரும் மரணித்துவிடுவது சிறந்ததென நினைத்து ஆசைப்படக் கூடாது.**

நபியவர்களின் சிறியதந்தை அப்பாஸ்(றழி) அவர்கள் நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தபோது நபியவர்கள் அங்கே செல்கின்றார்கள். அப்பாஸ் வலிதாங்க முடியாமல் தான் சீக்கிரம் மரணிக்க விரும்புவதாகக் கூறியதும் நபியவர்கள் ‘ என் சிறிய தந்தையே! மரணம் சீக்கிரம் வர வேண்டுமென ஆசைப்படாதீர்கள். ஏனெனில் ஒருவர் வாழும் காலத்தில் நல்லவராக இருந்தால் அவரது மரணம் தாமதிப்பதானது அவருக்கு இன்னும் நல்லமல்கள் செய்ய சந்தர்ப்பமளிப்பதால் அவருக்கு அது சிறந்தாகும். கெட்டவராக வாழ்ந்திருப்பின் கடைசி நேரத்திலாவது தன் தவறுகளுக்காக பாவமன்னிப்புத் தேடும் சந்தர்ப்பத்தை அது அளிக்கின்றது. எனவே சீக்கிரம் மரணிக்க வேண்டுமென ஆசைப்படாதீர்கள் வேண்றுமென்றால் யாஅல்லாஹ்! நான் இவ்வுலகில் உயிர் வாழ்வது சிறந்ததென நீ அறிந்திருந்தால் என்னை இன்னும் வாழவைப்பாயாக. நான் மரணிப்பதுதான் எனக்கு சிறந்த தெனில் என்னை மரணிக்கச்செய்வாயாக என்று பிரார்த்திக கவும் என்றார்கள் புகாரி,முஸ்லிம், பைஹகி.

**4-மரணப்படுக்கையிலுள்ளவர் யாரிடமாவது கடன்பட்டிருந்தால், யாருக்காவது வேறு கொடுக்கல்வாங்கல்கள் இருந்தால் உடனடியாக அவற்றை கொடுத்துவிடவேண்டும்.** அன்றேல் குறைந்தபட்சம் அதை முறைப்படி நிறைவேற்றிட ஒருவரை நியமித்து வஸிய்யத் செய்ய வேண்டும் . இல்லாதபட்சத்தில்

இவரது சொர்க்கப் பிரவேசத்தை அது தடுத்து இவரை நரகில் தள்ளிவிடக்கூடும்.

நபியவர்கள் கூறியுள்ளார்கள்..
'ஒரு முஸ்லிம் தன் சக சகோதரன் யாருக்காவது அநீதியிழைத்திருந்தால் மறுமைநாள் வருவதற்கு முன் உயிரோடிருக்கும் போதே அதைத் திருப்பிக்கொடுத்து விடட்டும். அந்நாளில் தங்க,வெள்ளிப்பணத்தை அதற்காகக் கொடுக்கவும் முடியாது. அவை ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது. மாறாக அவரிடம் நல்லமல்கள் இருந்தால் அவற்றிலிருந்து இவன் செய்ய அநியாயத்தினளவுக்கு எடுத்துக்கொடுக்கப்படும். நல்லமல்கள் இல்லாவிடில் அநீதியிழைக்கப்பட்டவனின் பாவங்களை எடுத்து இவன் மீது சுமத்தப்படும். புகாரி : 3-369

நபியவர்கள் ஒருமுறை ஸஹாபாக்களை நோக்கி வங்குரோத்து- திவாலானவர் யாரென நீங்கள் அறிவீல்களா? என வினவ அவர்கள் அல்லாஹ்விக் தூதரே! வியாபாரத்தில் நட்டமடைந்து எவ்வித பணமோ பொருளோ இல்லாமல் ஓட்டாண்டியானவனையே நாங்கள் வங்குரோத்துகாரன் என்போம் என பதிலளித்தனர். அதற்கு நபியவர்கள். உண்மையில் திவாலானவன் யாரெனில் நாளை மறுமையில் ஒருவன் விசாரனைக்காக நிறுத்தப்படுவான். மலைகளினளவு பிரமாண்டமான நன்மைகளை அவன் கொண்டுவந்திருப்பான். இருப்பினும்அவன் ஒருவனை ஏசியிருப்பான். மற்றொருவனுக்கு அடித்திருப்பான். ஒருவனின்பொருளை அநியாயமாக எடுத்திலுருப்பான். பிறிதொருவனை இரத்தம் சிந்த வைத்திருப்பான். எனவே அநீதியிழைக்கப்பட்ட அவர்கள் அனைவருக்கும் இவனின் நல்லமல்களுக்கான நன்மைகளில் இருந்து எடுத்து அள்ளி வளங்கப்படும். ஒருகட்டத்தில் இவனது நன்மைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டதும் அவர்களது பாவச்சுமைகளை எடுத்து இவன்மீது சுமத்தப்படும். பின்னர் இவன் நரகில்தூக்கி வீசப்படுவான். முஸ்லிம்: 8-18

மற்றொரு ஹதீஸில் 'யார் கடனை வைத்த நிலையில் மரணிக்கின்றாரோ அங்கே மறுமையில் காசோ பணமோ

செல்லாது. மாறாக நல்லமல்களையும் தீயசெயல்களையும் வைத்துத்தான் ( சரிசெய்யவேண்டும்.) இப்னுமாஜ.்.2-70
தன்னால் கடனை அடைக்க முடியாதல் போதும்போது தனது நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் அதை நிறைவேற்றும்படி உறுதிமொழி- வஸிய்யத் எடுக்க வேண்டும்.
நபித்தோழர் ஜாபிர்(றழி) அறிவிக்கின்றார்கள்..
உஹுத் யுத்தத்தின் போது அன்றிரவு என் தந்தை என்னை அழைத்து என் மகனே! நான் நாளை நடக்கவிருக்கும் உஹுது ப்போரில் சஹீதாகி விடுவேன் என நம்புகின்றேன். இவ்வுலகில் நபியவர்களுக்கு அடுத்து எனது விசுவாசத்துக்குரியவர் நீ தான்,, எனக்கு கொஞ்சம் கடன்கள் உள்ளன. அவற்றை என் சார்பாக நீதான் அடைக்க வேண்டும். செய்வாயா?, உன் சகோதரர்களுடனும் (பாகப்பிரிவினையின் போது) நல்ல முறை யில் நடந்துகொள்ள வேண்டுமென வஸிய்யத்செய்கிறேன் என் றார்கள். மறுநாள் போரில் கொல்லப்பட்டவர்களில் முதன் மையானவர்களில் அவர்களும் இருக்கக் கண்டேன். புகாரி.

**5- மரணத்தருவாயிருப்பவர்கள் செய்யவிரும்பும் வஸிய்ய த்துக்களை முன்கூட்டியே தாமதிக்காமல் செய்துவிடுவதும் அல்லது அதை எழுத்தில் சமைத்து தன்வசம் வைத்திருப்பதும் நபிவழியாகும்.**

எந்தவொரு முஸ்லிமான மனிதனும் தான் செய்யவிருக்கும் வஸிய்யத்தை அவனது தலையணைக்குக் கீழ் எழுதி வைக்காத நிலையில் இருதினங்களைக்கூடக் கடத்துவது அவ னுக்கு ஆகாது என நபியவர்கள் கூறியதும் இப்னு உமர்(றழி) அவர்கள் ‘இதை நான் நபியவர்களிடமிருந்து செவியுற்ற நாள் முதல் எனது வஸிய்யத்தை என்தலைக்குக் கீழ் எழுதிவைக காமல் ஒருநாளைக் கூடக் கழிக்கவில்லை என்றார்கள் . (புகாரி,முஸ்லிம்)

6- ஒருவர் தனது சொத்திலிருந்து யாருக்காவது கொடுக்கப்பட வேண்டுமென மரணசாசனம் செய்வதாயில் அது தனக்குப்பின் தன் சொத்தில் வாரிசுரிமை பெற முடியாத உறவினருக்காகவே செய்யப்பட முடியும். வாரிசுமையில் பங்குபெறுபவருக்கு வஸிய்யத் ஊடாக சொத்துசேராது என்பது குர்ஆன் ஹதீஸின் சட்டமாகும்.

அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.. உங்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிட்டால் அவர் சொத்தையும் வைத் திருந்தால் வஸிய்யத் செய்வது கடமையாகும். பகரா: 180

நபியவர்கள் கூறும்போது...
அல்லாஹ் ஒவ்வொறு வாரிசுக்குமுரிய பங்குகளை தெளிவுபடுத்திவிட்டான். எனவே வாரிசுரிமையில் பங்கு பெறுப வனுக்கு வஸிய்யத் செய்ய முடியாது. புகாரி:1577

**7- ஒருவர் தனது சொத்தில் மூன்றிலொரு பகுதிக்கு மேற்படாத அளவுக்கே வஸிய்யத் செய்ய முடியும்**. அதைவிட அதிகமா யிருப்பின் மூன்றிலொன்றுக்கு மேற்பட்டது செல்லுபடியற்றதா கும் . வஸிய்யத் அதைவிடவும் குறைவாகச் செய்யப்படுவதே மிகசிறந்ததாகும். ( வஸிய்யத் செய்யப்பட்டவர்கள் பலராயின் சொத்தின் மூன்றிலொன்றை மாத்திரம் அவர்களுக்கு மத்தியில் சமமாகப் பங்கிடப்படும். )

நபித்தோழர் அபூஸயீதுல் குத்ரி கூறுகின்றார்கள். நான் நபியவர்களுடன் இறுதி ஹஜ்ஜில் கலந்துகொண்டேன். அப் போது நான் மரணத்தை நெருங்குமளவுக்கு கடுமையாக நோய்வாய்ப்பட்டேன். நபியவர்கள் என்னை நோய்விசாரிக்க வந்திருந்தார்கள். அவர்களிடம் நான் யாரஸூலல்லாஹ்! ஏன க்கு ஏராளமான சொத்துக்கள் உள்ளன, எனக்கு ஒரேயொரு மகளைத் தவிர வேறு வாரிசுகளுமில்லை. எனவே எனது சொத்தில் மூன்றில் இரண்டு பகுதிகளை வஸிய்யத் செய்ய ட்டுமா? என வினவ நபியவர்கள் முடியாது என்றார்கள். அப் படியெனில் பாதியை செய்யட்டுமா? என வினவ அதற்கும் மறு த்துவிட்டார்கள். மூன்றிலொரு பகுதியை செய்யட்டுமா? என்றதற்கு மூன்றிலொன்றா? அதுவும் அதிகம்தான் என்று கூறிவிட்டு ஸ:.தே! நீர் உம் வாரிசுகளை செல்வ நிலையில் விட்டுச்செல்வது அவர்களை வறியவர்களாக – பொதுமக்களி டம் உதவிகேட்டு கையேந்தும் நிலையில் விட்டுச்செல்வதை விட உனக்குச் சிறந்ததாகும் எனக் கூறிய நபியவர்கள் எனது கையைப்பிடித்து .. ஸ:.தே! நீ அல்லாஹ்வின் திருப்தியை நாடி செலவுசெய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் நிச்சயமாக உனக்கு அல்லாஹ்விடம் கூலி உண்டு. அது நீ உன் மனை

வியில் வாயில் வைக்கும் ஒரு சிறு கவள உணவாயினும் சரியே! என்றார்கள். புகாரி, முஸ்லிம்.
இப்னு அப்பாஸ்(றழி) குறிப்பிடும்போது மக்கள் வசிய்யத் விடயத்தில் மூன்றிலொன்றை விடுத்து நான்கிலொன்றாக ஆக்கிக் கொள்வதை நான் விரும்புகின்றேன். ஏனெனில் நபியவர்கள் மூன்றிலொன்றும் அதிகம்தான் எனக் கூறியுள்ளார்கள். -புகாரி.

**8- வஸிய்யத் விடயத்தில் இருவரை சாட்சியானர்களாக நியமிப்பதும் மார்க்கத்தில் வலியுறுத்தப்பட்ட விடயமாகும்.**
அல்குர்ஆனில் அல்லாஹ் ‘விசுவாசிகளே! உங்களில் ஒருவருக்கு மரணம் நெருங்கிவிட்டால் அவர் வஸிய்யத் - மரண சாசனம் செய்யும்போது நீதியான இருவரை சாட்சிகளாக்கிக் கொள்ளட்டும். ( மாயிதா:106)

9- மரணத்தருவாயிலுள்ள ஒருவர் செய்ய வஸிய்யத்தை அது பற்றிய மார்க்க நிலைப்பாட்டை பார்க்காமல் அப்படியே நிறைவேற்ற வேண்டுமென்று நினைப்பது தவறாகும். மாறாக மார்க்கத்திற்கு முரணான விடயங்களுக்கு வஸிய்யத் செய்திருந்தாலோ அல்லது வாரிசுகளுக்கோ ,ஏனைய உறவினருக்கோ பாதகமாக அமையும் வகையில் வஸிய்யத் செய்திருந்தாலோ அதை நிறைவேற்றுவது ஹறாமாகும். ஏனெனில் சொத்துப் பங்கீடு பற்றிய வசனத்தில் ‘ சொத்துக்களை வாரிசுகளுக்கு பிரித்துக்கொடுப்பதானது அவர்களுக்கு கெடுதல் ஏற்படுத்தாத வகையில் வஸிய்யத், கடன் ஆகியவற்றை நிறைவேற்றியத்குப் பின்னரே செய்யப்பட வேண்டும் என அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

நபியவர்கள் குறிப்பிடுகையில்..ஒருவர் பிறருக்கு கெடுதல் செய்தலாகாது. அவரும் கெடுதலுக்கு பதில் கெடுதல் செய்தலுமாகாது. பிறருக்கு கெடுதல் செய்வோருக்கு அல்லாஹ் கேடு விளைவிப்பான். பிறறை வேண்டுமென்றே சிரமப்படுத்தியவரை அல்லாஹ்வும் சிரப்படுத்தி விடுவான் என்று கூறியுள்ளார்கள். ஹாகிம் : 2-57

**10- இவ்வாறு யாராவது ஹராமான முறையில் அநியாய வஸிய்யத் செய்திருந்தால் மார்க்கத்தில் அது செல்லுபடி**

**யற்றதாகும். அவ்வஸிய்யத்தின்படி கொடுக்கப்பட்ட சொத்து திருப்பிப் பெறப்பட வேண்டும்.**
ஒருமனிதர் தன் மரணத்தருவாயில் தன்னிடமிருந்த ஆறு அடிமைகளையும் விடுதலை செய்யுமாறு வஸிய்யத் செய்திரு ந்தார். அவ்வாறே செய்யப்பட்டு விட்டது ( இதனால் பாதிக் கப்பட்ட) அவரது வாரிசுதாரர்கள் நபியவர்களிடத்தில் வந்து இவ்விடயத்தை முறையிட்டனர். நபியவர்கள் ஆச்சரியத்துடன் அவரா அப்படிச் செய்தார் என்று வினவி விட்டு இவ்விடயம் முன்னமே எனக்குத் தெரிந்திருந்தால் அவருக்கு நான் ஜனா ஸா தொழுகை நடத்தியிருக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டு (அந்த ஆறு அடிமைகளையும் அழைத்து) சீட்டெழுதிப் போட்டு அதில் இருவரை விடுதலை செய்துவிட்டு மீதி நால்வரையும் மீண்டும் அடிமைகளாக ஆக்கிவிட்டார்கள். அஹ்மத்:4-446 , (முஸ்லிம்)

**11- இக்காலத்தில் மற்றொரு முக்கிய விடயத்தை வஸிய்யத் செய்வது அவசியமாகும்.** அது யாதெனில் மரண கடமைகளை நிறைவேற்றும் விடயத்தில் உயிர் பிரிந்ததிலிருந்து அடக்கும் வரைக்கும் ஏன்? அதற்குப்பின்னரும் கூட சமூகத்தில் ஏராள மான ஹராம்களும் பித்அத்துக்களும் மார்க்கமுரண் விடயங் களும் அரங்கேறுகின்றன. எனவே நபியவர்களை மனப்பூர்வ மாக நேசிக்கும் ஒவ்வொருவரும் தனது ஜனாஸா ஸுன்னத் தின் அடிப்படையில் எவ்வித பித்அத்களும் அரங்கேற்றப் படா மல் நல்லடக்கம் செய்யப்பட வேண்டுமென வஸிய்யத் செய்வ து முக்கியமான ஸுன்னத்தும் ஸஹாபாக்களில் வழிமுறை யுமாகும்.
மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களது குடும்ப த்தினரையும் நரகிலிருந்து காப்பாற்றிக்க கொள்ளுங்கள். மனிதர்களும் கற்களுமே அதன் எரிபொருளாகும். தஹ்ரீம் : 06

ஸ.்.திப்னு அபீவக்காஸ் (றழி) அவர்கள் மரணிக்கும்போது ‘ நபியவர்களுக்கு செய்யப்பட்டது போன்றே எனக்கும் கப்றுக் குழியை லஹ்து- பக்கவாட்டு குழியாக வெட்டி கற்களை நட்டிவைத்து கப்ரை மூடி அடக்கம் செய்யுங்கள் என வஸி ய்யத் செய்தார்கள். முஸ்லிம் : 3-407

நபித்தோழர் அபூமூஸா அல்அஸ்அரி (றழி) அவர்கள் மரணப் படுக்கையில் இருக்கும்போது.. நான் மரணித்துவிட்டால் எனது ஜனாஸாவை விரைவாக அடக்கம்செய்ய எடுத்துச் செல்லுங் கள். ஜனாஸாவுக்கு புகைபோடவோ தீச்சட்டி எடுத்துச்செல்ல வோ வேண்டாம். எனது கப்ரில் என்மீது மண் படுவதைத் தடு க்கும் வகையில் எப்பொருளையும் வைக்கவேண்டாம். என் கப்ரின் மீது கட்டிடம் அமைக்கவேண்டாம் என வஸிய்யத் செய்துவிட்டு எனது மரணத்தையிட்டு ஒப்பாரிவைப்போர், ஆ டைகளைக் கிழிப்போர், தலையை சிரைத்துக் கொள்வோரின் செயல்களுக்கும் எனக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதை அல்லாஹ்வை சாட்சியாக்கி சொல்கின்றேன் என்றார்கள். இது விடயமாக எதாவது ஆதாரம் உமக்குக் கிடைத்ததா? எனக் கேட்கப்பட்ட போது ஆம்! நபியவர்களிடமிருந்து கேட்டுள்ளேன் என்றார்கள். அஹ்மத்: 4-397

இவ்வாறே நபித்தோழர் ஹுதைபா(றழி) அவர்கள் வஸிய்யத் செய்யும்போது ‘ நான் மரணித்துவிட்டால் எனது மரணத்தை யாருக்கும் அறிவிப்புச்செய்யாதீரகள். ஏனெனில் அது மரண த்திற்காக ந.்.ய்- ஒப்பாரிவைத்து அழுது அறிவிப்புச்செய்யும் விதமாக மாறிவிடுமோ எனஅஞ்சுகின்றேன். நபியவர்கள் இச் செயலைத் தடுத்துள்ளார்கள் என்றார்கள். திரமிதி : 2-129.

இதனால்தான் இமாம் நவவி(றஹ்) அவர்கள் தனது அல் அத்கார் எனும் நூலில் ஒருவர் தனது மரணவேளையில் மக்களிடம் மரணவீட்டில் செய்யப்படும் பித்அத்தான விடயங் கள் எதையும் செய்யாது தவிர்ந்துகொள்ள வேண்டுமென வஸிய்யத் செய்வது வலியுறுத்தப்பட்ட முஸ்தஹப்பான (மிக வும் விரும்பத்தக்க) விடயமாகும் அதைக் கவனத்தில் கொள் வது மிக அவசியமாகும் என்று குறிப்பிடுகின்றார்கள்.

# (02)

# தல்கீனுல் முஹ்தளர்...

## மரணத்தறுவாயில் கலிமாச் சொல்லிக் கொடுத்தல்.

1.- ஒருவருக்கு மரணம் நெருக்கிவிட்டால் அருகிலுப்பவர்கள் அவருக்குச் செய்யவேண்டிய விடயங்களில் மிக முக்கிய மானது அவருக்கு ஸஹாதத் கலிமாவைச் சொல்லிக் கொடு க்க வேண்டும்.
நபியவர்கள் கூறினார்கள்.. உங்களில் மரணிக்கவிருப்பவருக்கு லா இலாஹ இல்லல்லாஹ் கலிமாவை சொல்லிக் கொடுங் கள். ஏனெனில் எவரது இறுதி வார்த்தை லாஇலாஹ இல்ல ல்லாஹ் எனும் கலிமாவாக ஆகிவிட்டதோ அவர் என்றாவது ஒருநாள் சுவர்க்கம் செல்வார். அதற்கு முதல் அவர் என்ன தான் வேதனையையைச் சந்தித்தாலும் சரியே!. -இப்னு ஹிப்பான்: 719

மற்றொரு ஹதீஸில் .. வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று உறுதியாக அறிந்தவர்- நம்பியவர் சுவனம் செல்வார்.
அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காத நிலையில் மர ணித்தவர் சுவர்க்கம் செல்வார் என வந்துள்ளது. - முஸ்லிம்.

2.-இதேபோல் மரணிக்கவிருக்கவருக்காகப் பிரார்த்திப்பதும் அவ் விடத்தில் நல்லவற்றைத் தவிர வேறு எதையும் பேசாதிருப் பதும் ஸுன்னத்தாகும்.

நபியவர்கள் கூறுகின்றார்கள்..
நீங்கள் மரணிக்கவிருப்பவர் இருக்குமிடத்துக்குச் சென்றால் நல்லவற்றையே பேசுங்கள். ஏனெனில் மலக்குகள் நீங்கள் கூறுபவற்றுக்கு ஆமீன் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். முஸ்லிம்.

3.- தல்கீன் என்பது சிலர் நினைப்பதைப்போல கலிமாவை அவர் முன்னிலையில் அவர் காது கேட்கும்படி சொல்வது அர்த்தமல்ல! . மாறாக கலிமாவைச் சொல்லுமாறு அவருக் குக் (அன்புக்) கட்டளையிடுவதே அதன் அர்த்தமாகும். இப் படியே நபியவர்கள் செய்துமுள்ளார்கள்.
நபியவர்கள் ஒருமுறை அன்சாரி ஸஹாபி ஒருவரை நோய்வினவச் சென்றபோது அவரிடம் சிறியதந்தையே ! லாஇலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லுங்கள் என்றதும் அது எனக்கு சிறந்ததாகுமா? என அவர் கேட்டார். நபியவர்களும் ஆம் என பதிலளித்தார்கள். அஹ்மத் : 3-152.

4.- மரணிக்கவிருப்பவரை கிப்லாப் பக்கம் திருப்பி வைத்தல், மற்றும் அவ்விடத்தில் யாஸீன் ஸூராவை ஓதுதல் ஆகிய வற்றைப் பொறுத்த வரைக்கும் இவ்விரு விடயமாக வரும் ஹதீஸ்கள் எதுவும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் சொல்லப்போனால் போதிய தெளிவின்மையால் ஸலபுகளில் சிலர் கூட தொழுகையில் கிப் லாப்பக்கம் முன்னோக்குவது போல் இவ்வாறான சந்தர்ப்பங் களிலும் அது நல்லதுதானே என நினைத்துச் செய்த வேளை களில் மார்க்க விளக்கமுள்ள ஸலபு இமாம்கள் அதைத் தடுத்துள்ளதை ஹதீஸ் நூல்களில் காணமுடிகின்றது.

இமாம் ஸயீத்பின் முஸய்யப்(றஹ்) அவர்கள் மரணப் படு க்கையில் இருக்கும்போது அங்கே நபித்தோழர் அபூஸலமா (றழி)யும் இருந்தார்கள். ஸ.்.து(றஹ்) அவர்கள் நினைவற்றுப் போன வேளை அபூஸலமா(றஹ்) அன்னாரை படுக்கையோடு கிப்லாப்பக்கம் திருப்பி வைத்து விட்டார்கள். பின்பு அவர் களுக்கு மயக்கம்தெளிந்தபோது எனது படுக்கையை மாற்றி விட்டீர்களோ? என வினவ அங்கிருந்தோர் ஆம் என்றனர். உடனே அவர்கள் அபூஸலமா(றழி)யிடம் இவ்விடயத்தில் உம் மிடம் ஆதாரம் உள்ளதா? என வினவ நான்தான் அவ்வாறு செய்யுமாறு கட்டளையிட்டேன் என அவர்கள் கூறியதும் ஸயீத்(றஹ்) அவர்கள எனது படுக்கையை முன்பிருந்தவாறே மாற்றிப்போடுங்கள் எளக் கட்டளையிட்டார்கள். – முஸன்னப் இப்னுஅபீ ஸைபா: 4-76.

5.- ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாதவரின் இறுதிவேளையில் நோய் வினவச் செல்லலாமா? என்றால் அவருக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்லி அதை அவர் ஏற்கலாம் என்ற எதிர் பார்ப்பு இருக்கும் பட்சத்தில் செல்ல அனுமதியுண்டு. (மார்க்கத்திற்கு முரணான அங்கு நடக்கும் சடங்குகளில் நாமும் பங்குகொள்ள வேண்டியேற்படும் என்றிருந்தால் செல்லக் கூடாது.)

நபியவர்கள் தனக்குப் பணிவிடை செய்துவந்த யூத இனத்து சிறுவனொருவன் மரணப்படுக்கையிலிருந்த போது அவனை நோய்வினவி வரச் சென்றார்கள். அங்கு சென்று அவனது தலையருகே இருந்துகொண்டு ‘இஸ்லாத்தை ஏற்றுக்கொள்! என்றார்கள். சிறுவன் தனது தந்தையின் பக்கம் திரும்பிப் பார்த்தான். அதற்கவர் அபுல்காசிம் சொல்வதற்கு கட்டுப்படு.. என்று கூற அவனும் கலிமாச்சொல்லி இஸ்லாத்தைத் தழுவினான். நபியவர்கள் அங்கிருந்து வெளியேறும் போது ‘ அவனை நரகினை விட்டும் பாதுகாத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்’ என்று துதித்தவர்களாக வந்தார்கள்.

அச்சிறுவன் மரணித்தபோது உங்கள் நண்பருக்காக(ஜனாஸா) த் தொழுங்கள் என்றார்கள். புகாரி

(03)

# உயிர் பிரிந்தவுடன் செய்யவேண்டியவை..

1.- உயிர் அடங்கி பிரிந்தவுடன் உடனே செய்யவேண்டிய சில விடயங்கள் உள்ளன. அவையாவன..

**அ.- மையித்தின் இரு கண்களையும் கசக்கி மூடிவிட வேண் டும். அவரது மறுவாழ்வுக்காக துஆச்செய்ய வேண்டும்.**

நபியவர்கள் அபூஸலமா (றழி) அவர்கள் மரணித்த வேளை அங்கு வந்தபோது அவரது கண்கள் பிளந்து விரிந்த நிலை யிலிருந்தன. நபியவர்கள் கண்களை மூடிவிட்டார்கள். பின்னர் ‘ உடலிலிருந்து உயிர் பிரியும்போது பார்வையும் அதை நோக்கியே செல்லும்’ என்றதும் அங்கிருந்த குடும்பத்தினர் சிலர் கூக்குரலிட்டு அழ ஆரம்பித்தனர். அப்போது நபியவர்கள் உங்களுக்காக நல்ல முறையிலேயேயன்றி ( பாதகமாக) துஆ க்கேட்டு விடாதீர்கள். ஏனெனில் மலக்குகள் இந்தநேரத்தில் உங்கள் துஆக்களுக்கு ஆமீன் கூறுகின்றனர் என்று கூறிவிட்டு யாஅல்லாஹ்! அபூஸலமாவை மன்னிப்பாயாக,நேர்வழ் பெற்ற வர்களோடு சேர்த்து அவரின் அந்தஸ்த்தை உயர்திடுவாயாக, அவருக்குப் பின் அவரது குடும்ப விடயங்களை நீயே பொறுப் பெடுப்பாயாக, அகிலத்தாரின் இரட்சகனே! எமக்கும் அவருக் கும் உன் மன்னிப்பபை அளிப்பாயாக. அவரது கப்ரை விசா லமாக்கி அதில் அவருக்கு ஒளியை ஏற்படுத்துவாயாக,, என்று பிரார்த்தித்தார்கள்.

**ஆ.- மையித்தின் முழு உடலையும் மறைக்கும் வகையில் ஒரு துணியால் மூடவேண்டும்.**

ஆயிஷா(றழி) அறிவிக்கின்றார்கள்..

நபியவர்கள் மரணித்தபோது கோடிடப்பட்ட துணியொன்றினால் ஜனாஸாவை மூடப்பட்டது. முஸ்லிம்.

**இ.- மரணித்தவர் ஹஜ்-உம்ராவுக்கு இஹ்ராம்தரித்த நிலையில் மரணமெய்தியிருப்பின் அவரது தலையையும் முகத்தையும் திறந்த நிலையில் வைக்க வேண்டும்.**

இப்னு அப்பாஸ்(றழி) அறிவிக்கின்றார்கள்..

ஒருமுறை ஹஜ் காலத்தில் அரபாவில் தரித்திருந்த ஒரு நபித் தோழர் ஒட்டகத்திலிருந்து தவறி கீழேவிழ ஒட்டகம் அவரை மிதித்து மரணித்து விட்டார். அப்போது நபியவர்கள் ' அவரை நீராலும் இலந்தை இலை பாவித்தும் குளிப்பாட்டுங்கள். இரண்டு துணிகளில் கபன் செய்யுங்கள். அவருக்கு மணம்பூசவோ தலையையும் முகத்தையும் மூடவோ வேண்டாம் ஏனெனில் மறுமையில் அவர் தல்பியாச் சொன்ன நிலையிலேயே எழுப்பப்படுவார் என்றார்கள். – புகாரி,முஸ்லிம்.

**உ. மய்யித்தை முடிந்தளவு சீக்கிரமாக அடக்கம்செய்வதற்காக அதன் கடமைகளான குளிப்பாட்டல், கபனிடல்,தொழுவித்தல் ஆகிய விடயங்களை விரைவுபடுத்துவது ஸுன்னத்தாகும்.**

நபியவர்கள் கூறுகின்றார்கள்..

ஜனாஸாவை விரைவுபடுத்துங்கள். ஏனெனில் மரணித்த அந்த ஜனாஸா நல்லவராக இருப்பின் அவருக்குக் கிடைக்கவிருக்கும் பாக்கியங்களை அனுபவிக்க நீங்கள் விரைவுபடுத்துகின்றீர்கள். அவர் கெட்டவராயின் வீணாக ஒரு பாவியை நீங்கள் உங்கள் பிரடிகளில் சுமந்து வைத்துக்கொண்டிருக்கின்றீர்கள். புகாரி,முஸ்லிம்.

**ஊ. அவர் மரணித்த அதே ஊரிலேயே அவரை நல்லடக்கம் செய்வது நபிவழியாகும்.** (தவிர்க்கமுடியாத நிலமைகளன்றி) வேறு இடங்களுக்கு எடுத்துக்கொண்டு சென்று அடக்குவது ஜனாஸாவை விரைவுபடுத்துவது சுன்னத் எனும் நிலைப்பாட்டுக்கு மாற்றமானதாகும். பின்வரும் ஹதீஸ்களும் அதற்கு ஆதாரமாகும்.

உஹுத் யுத்தம் முடிந்ததும் ஸஹாபாக்கள் போரில் மரணித்த ஸஹாபாக்களை மதீனா-அல் பகீ∴. மையவாடியில் அடக்குவதற்கு எடுத்துச்செல்ல ஆயத்தமானார்கள். அப்போது ஒருவர் மரணித்தவர்களை அவர்கள் இருக்கும் இடத்திலேயே அடக்கம் செய்யுமாறு அல்லாஹ்வின் தூதர் கட்டளையிடுகின்றார்கள்

என்று அறிவிப்புச் செய்தார். உடனே ஸஹாபாக்கள் அனைத்து ஜனாஸாக்களையும் திரும்பவும் இருந்த இடத்திலேயே கொண்டு போய் வைத்தனர். நானோ எனது மரணித்த தந்தை, சிறிய தந்தை இருவரின் உடல்களையும் ஒட்டகத்தின் இரு பக்கத்திலும் வைத்துக் கட்டியும் முடித்திருந்தேன். உடனே நாமும் அவ்விருவரையும் இருந்த இடத்திலேயே திரும்ப வைத்து விட்டோம். அபூதாவுத்

இவ்வாறே அன்னை ஆயிஷா(றழி) அவர்களின் சகோதரர் ஒருவர் வாதி ஹபஸா எனும் இடத்தில் மரணித்தபோது அங்கிருந்தோர் உடலை மதீனாவுக்கு எடுத்துவந்து விட்டனர். இதைக் கேள்வியுற்ற அன்னையவர்கள் 'அவர் மரணித்த இடத்திலேயே அடக்கம் செய்யபட்டிருக்க வேண்டும். இங்கு எடுத்துவரப்பட்டமை எனது மனதுக்குக் கவவையளிக்கின்றது என்று கூறினார்கள்.

**எ. மையித்தின் கடன்களை அவரின் சொத்திலிருந்து (தொழுகை,நல்லடக்கத்திற்கு முன்பாக) நிறைவேற்றுவதை யாராவது பொறுப்பேற்றுக் கொள்வது நபிவழியாகும்.** அவருக்குச் சொத்துக்கள் ஏதும்இல்லாவிடில் இஸ்லாமிய அரச கருவூலத்தினால் நிறைவேற்ற முடியுமானதை செய்யப்பட வேண்டும். அதற்கும் முடியாவிடில் யாராவது தன் கணக்கில் அவற்றை நிறைவேற்றப் பொறுப்பெடுக்கவும் முடியும். ( கடன் நிறைவேற்றப்படாமல் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படுவதானது மிகப் பாரதூரமானதாகும். இதற்கான ஹதீஸ் ஆதாரங்கள் இதோ..

ஸஃத் பின் அத்வல்(றழி) அவர்களது சகோதரர் மரணித்த வேளை குடும்பத்தாருடன் முன்னூறு திர்ஹம் பணத்தையும் விட்டுச் சென்றார்கள். நான் அப்பணத்தை அவரின் குடும்பத்தினரிடம் கொடுக்க முற்பட்ட வேளை நபியவர்கள் 'உன் சகோதரர் தான் செலுத்தாத கடனினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார், எனவே விரைந்து அக்கடனை நிறைவேற்று' என்றார்கள். உடனே நான் அக்கடனை அடைத்துவிட்டு நபியிடம் வந்து யாரஸூலல்லாஹ் நான் அனைத்து கடனையும் அடைத்துவிட்டேன். ஒரு பெண் மாத்திரம் தனக்கு இரண்டு திர்ஹம்கள் கடனுள்ளதாக வாதிடுகின்றார். ஆனால் அவளிடம்

எவ்வித ஆதாரங்களுமில்லை என்றதும் நபியவர்கள் ‘ அவள் உண்மை பேசுபவள்தான் எனவே கொடுத்துவிடுங்கள் என் றார்கள். இப்னு மாஜ. 2-282.
மற்றொரு தடவை நபியவர்கள் ஸுப்ஹுத் தொழுகையைத் தொழுவித்தார்கள். பின் இன்ன நபரின் உறவினர்கள் யாரும் இங்குள்ளனரா? என வினவினார்கள். யாருமே பதிலளிக்க வில் லை. மூன்று தடவைகள் இவ்வாறு நபியவர்கள் கேட்ட பின் ஒருவர் ஆம்! யாரஸூலல்லாஹ் ! இதோ நான் இருக்கின்றேன் என்றதும் உங்களது மரணித்த சொந்தக்காரரர் அவரது கடன்க ளை அடைக்காத நிலையில் மரணித்துள்ளதால் சுவர்க்கத்தை விட்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நீங்கள் விரும்பினால் அவருக்காக அக்கடனை நிறைவேற்றி அவரை ஈடேற்றம டையச் செய்யுங்கள். அல்லது அவரை அல்லாஹ்வின் வேத னையை நோக்கி ஒப்படையுங்கள் என்றதும் அவரது குடும் பத்தவர்கள் அவரின் கடன்களை எதுவும் பாக்கியில்லாது நிறைவேற்றி விட்டார்கள். அபூதாவுத் 2-84 நஸாயி2-233.

**மற்றொரு சம்பவம்:**
ஜாபிர்(றழி) அறிவிக்கின்றார்கள்.. ஒருமனிதர் மரணித்து விட் டார். நாங்கள் அவரைக் குளிப்பாட்டி கபன்செய்து தொழுகைக் காக (மஸ்ஜிதுந் நபவியிலுள்ள) மகாமு ஜிப்ரீல் என்ற இடத் தில் வைத்துவிட்டு நபியவர்களிடம் சென்று அறிவித்ததும் தொழுகை நடத்துவதற்காக வந்த நபியவர்கள் ‘உங்கள் நண் பரான இவருக்குக் கடன் இருப்பது போல் தெரிகிறதே! என்ற தும் ஆம் அல்லாஹ்வின் தூதரே! இரண்டு தீனார்கள் கடனு ள்ளது. என்றதும்( தொழுவிக்க தயாரான நபியவர்கள் பின் வாங்கியவர்களாக உங்கள் நண்பருக்கு நீங்களே தொழு வித்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள். உடனே அபூ கதாதா எனும் தோழர் நபியவர்களே! அதற்கு நான் பொறுப்பு! என்றதும் நீங்கள் பொறுப்பு, உங்கள் சொந்த சொத்திலிருந்து பொறுப்பு! மையித்துக்கும் அக்கடனுக்கும் இனிமேல் தொடர் பில்லை! அப்படித்தானே ! எனக் கேட்க அவர் ஆமென்றதும் நபியவர்கள் அவருக்குத் தொழவைத்தார்கள். மறுநாள் நபி களார் அந்த ஸஹாபியைக் கண்டதும் அந்த மையித்தின் கடன் இரண்டு தங்கக் காசுகள் என்னாயிற்று? என விசாரித் தார்கள். நபியவர்களே! அவர் நேற்றுத்தானே மரணித்தார் என்

று பதிலளித்தார். அடுத்தநாளும் வினவ ஆம் ! அக்கடனை அடைத்துவிட்டேன் என அவர் பதிலளித்ததும் நபியவர்கள் ' இப்போதுதான் அவரது உடல் குளிர்ச்சியடைந்துள்ளது' என்றார்கள். அஹ்மத்:3-330 ஹாகிம்:2-58

**மற்றொரு சம்பவம் :**

ஜாபிர்(றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்..

அன்னாரது தந்தையார் உஹது யுத்தத்தில் ஸஹீதாக்கப் பட்டிருந்தார்கள்.அவர்களுக்கு 6 பெண்பிள்ளைகள் இருந்தனர். தந்தையோ முப்பது வஸக்கு தானியத்தை ஒருவரிடம் கட னாகப் பெற்றிருந்த நிலையில் மரணித்திருந்தார்கள். கடன் காரர்களோ கடனை அடைக்கும்படி என்னை நெருக்கினார்கள். அவ்வருட அறுவடைக்காலம் நெருங்கியதும் நான் நபியவர் களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! எனது தந்தை உஹதில் மரணித்தது தாங்கள் அறிந்ததே!.அவர் அதிக கட னை விட்டுச்சென்று விட்டார். எனவே நான் கடனை அடை க்கும் வேளை தாங்களும் வருகைதந்து அக்கடன் காரர் களைப் பார்க்கவேண்டும். என்றார்கள். உடனே நபியவர்களும் சரி வருகிறேன். நீ அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு வகை பேரீச்சையையும் தனித்தனிக் குவியல்களாக ஆக்கு! என் றார்கள் அவ்வாறே செய்யப்பட்டது. நபியவர்கள் அங்கு வரு வதை அந்த (யூதக்) கடன்காரர்கள் கண்டதும் நபிக்கு முன்னி லையில் என்னை நெருக்கடியாக்க எண்ணினர். நபியவர்கள் அங்கு வந்ததும் அங்கிருந்த மிகப்பெரிய பழக்குவியலை மும் முறை சுற்றிவந்து அதில் பரக்கத் ஏற்பட துஆச் செய்தார்கள். பின்பு நபியவர்கள் அமர்ந்தவர்களாக உன் கடன்காரர்களை வரச்சொல் என்றார்கள். அவர்கள் வந்ததும் ஒவ்வொருவரின் கடனின் அளவுக்கேட்ப நபியவர்களே அளந்து கொடுக்க ஆரம்பித்தார்கள். நான் அப் பேரீட்சம்பழங்களால் என் தந் தையின் கடன் அடைக்கப்பட்டாலே போதும் , எனது சகோத ரிகளுக்கு எதுவும் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை என்றே எண்ணியிருந்தேன். ஆனால் நபியவர்களின் பரக்கத்தின் மகி மையோ மகிமை! அனைவரின் கடனும் இறுக்கப்பட்டும் கூட அந்தப் பெரிய குவியல் முன்பிருந்தபடி ஒரு பழம் கூடக் குறையாது அப்படியே இருந்தது. (ஏனைய குவியல்களும் அவ்வாறே இருந்தன.) பின் நான் ம.்.ரிப் தொழுகைக்காக

சென்றபோது நபியவர்களைக் கண்டு இவ்வற்புதத்தை நினைவு படுத்தியபோது சிரித்துக் கொண்டே அபூபக்ர்,உமர்(றழி) இருவரிடமும் இவ்விடயத்தைக் கூறுங்கள் என்றதும் அவ்வாறே கூறினேன். அதற்கு அவ்விருவரும் நபியவர்கள் இவ்வாறு செய்ய ஆரம்பிக்கும் போதே இவ்வாறு நடக்கும் என்று நாங் கள் யூகித்துக் கொண்டோம் என்றார்கள். (புகாரி)

**நபியவர்கள் மதீனாவில் இஸ்லாமிய அரசு உருவாகி செல்வ நிலை ஏற்பட்ட பிற்பாடு முஸ்லிம்களில் யாராவது கடனை அடைக்க முடியாது மரணித்துவிட்டால் அக்கடனை தான் பொறுப்பேற்று அரச பொதுத் திறைசேரியிலிருந்து அடைக்கும் திட்டத்தை பின்னர் அறிமுகப்படுத்தினார்கள்.**

ஆயிஷா(றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்...

எனது உம்மத்தில் ஒருவர் கடன்பட்டு அதை அடைக்க சிரமப்பட்டு இறுதியில் அடைக்காமலே மரணித்து விட்டால் அக்கடனுக்கு நான் பொறுப்புதாரியாவேள் என்றார்கள். (அஹ்மத்)

( இச்சட்டம் நபியவர்கள் தலைவராக இருந்த காலப் பகுதியி லும் அதற்குப்பின் வந்த ஆட்சியாளர்கள் இவ்வாறு பிரஜை களின் கடனை அரச செலவில் அடைக்கும் முறையை அமுல் ப்படுத்தும் சந்தர்ப்பத்திலும் பொருந்தும். ஆவ்வாறில்லையெ னில் ஒவ்வொருவரின் கடனுக்கும் அவரவரரே பொறுப்பாளி யாவார்கள். அவ்வாறே ஒருவரின் கடனை அவர்சார்பாக அவ ரது பிள்ளைகளோ உறவினர்களோ அல்லது மூன்றாம் நபர் கூட அவர் சார்பாக அடைக்க முன்வந்தால் அதற்கு அனுமதி யுண்டு என்பதையும் மேற்படி ஹதீஸ்கள் உணர்த்துகின்றன.) – -மொழிபெயர்த்தோன் .

# (4)

# உயிர் பிரிந்த பின்னர் செய்ய வேண்டியவை..

**மஸ்அலா: 1**

ஒரு மய்யித்தின் உயிர் பிரிந்ததும் சுற்றத்தார் அம்மையித்தின் முகத்தைத் திறந்து வைத்திருப்பதும் முகத்தை முத்தமிடுவதும் அவரின் பிரிவுக்காக மூன்று நாட்களுக்குள் (துக்க மேலீட்டால்) அழுவதும் ஆகுமானதாகும்.

**இதற்கான ஆதாரங்கள்..**

**அ.** நபித்தோழர் ஜாபிர்(றழி) அறிவிக்கின்றார்கள்.. எனது தந்தை உஹத் யுத்தத்தில் ஸஹீதாக்கப்பட்ட போது நான் அவர்களைப் போற்றியிருந்த துணியை நீக்கிவிட்டு அழுதேன். நபித்தோழர்கள் என்னைத் தடுத்தார்கள். நபியவர்களோ என்னைத் தடுக்கவில்லை. நபியவர்கள் ஜனாஸாவைத் தூக்குமாறு கூறியபோது என் மாமி பாத்திமா அழுதார்கள். அப்போது நபியவர்கள் நீங்கள் அழுதாலும் அழாவிட்டாலும் மலக்குகள் அவருக்காக அவர்களின் இறக்கைகளால் நிழல்கொடுத்துக் கொண்டே இருக்கின்றாாகள் என்றார்கள்.

( புகாரி- முஸ்லிம்.)

**ஆ.** ஆயிஷா(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்களின் மரணச்செய்தி கிடைத்ததும் எனது தந்தை அபூபக்ர்(றழி) அவர்கள் தனது வீட்டிலிருந்து குதிரையில் புறப்பட்டு மஸ்ஜிதுக்கு வந்தார்கள். உமர்(றழி) மக்களோடு பேசிக்கொண்டிருக்க இவர்களோ எதுவும் பேசாமல் எனது வீட்டுக்குள் வந்து நபியவர்களை நாடிச்சென்று அன்னாரைப் போர்த்தி வைத்திருந்த போர்வையை நீக்கிவிட்டு அவர்கள் மேல் விழுந்து இரு கண்களுக்கிடையிலும் முத்தமிட்டார்கள். பின்பு அழுதவர்களாக

என்தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டுமாக! அல்லாஹ் உங்களுக்கு இரண்டு தடவை மரணத்தைத் தரப் போவதில்லை. மரணம் ஒரு தடவைதான் . அதை அல்லாஹ்

உங்களுக்கு இப்போது தந்துவிட்டான் என்றார்கள்.– புகாரி.

**இ.** நபித்தோழர் உதுமான் பின் மழ்ஊன்(றழி) மரணித்த போது நபியவர்கள் அவரின் முகத்தைத் திறந்து அவர்களை முத்தமிட்டார்கள். அப்போது நபியவர்களது கண்களிலிருந்து கண்ணீர் தாடையில் வழிந்தோடியதை நான் கண்டேன் என ஆயிஷா( றழி) அறிவிக்கின்றார்கள். –திர்மிதி, பைஹகி.

**உ.** அனஸ் (றழி) அறிவிக்கின்றார்கள்..
நபியவர்களின் மகனான இப்றாஹீம்(றழி) அவர்கள் குழந்தையாயிருக்கும் போது ஒருநாள் நபியவர்கள் தன் வளர்ப்புத் தாயின் கணவரது வீட்டுக்குச் சென்று இப்றாஹீமை அணைத்து முத்தமிட்டு முகர்ந்தார்கள். பின்னொரு தடவை இப்றாஹீமுக்கு மூச்சு வாங்க உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் அங்கு நபியவர்கள் வந்தார்கள். நபியவர்களின் இரு கண் களிலும் கண்ணீர் வழிந்தோடியது. அப்போது அங்கிருந்த அப்துர் ரஹ்மான்(றழி) யாரஸூலல்லாஹ் ! நீங்களா அழுகின்றீர்கள்? என்றுகேட்க, இப்னு அவ்பே! இது கருனைக் கண்ணீர்! என்று கூறிவிட்டு.. கண்கள் கண்ணீரை வடிக்கின்றன. உள்ளமோ துக்கத்தில் மூழ்கி விட்டது. இப்றாஹீமே! உனது பிரிவால் நாம் கவலையில் ஆழ்ந்துள்ளோம். இருப்பினும் அல்லாஹ்வைத் திருப்திப் படுத்தும் வார்த்தைகளையன்றி வேறெதையும் பேச மாட்டோம் என்றார்கள். புகாரி , முஸ்லிம்.

**ஊ.** அப்துல்லாஹ் பின் ஜஃபர்( அறிவிக்கின்றார்கள்.. நபியவர்கள் ஜஃபர்(றழி) உஹத் போரில் மரணித்த போது அவரின் குடும்பத்தினருக்கு தான் மூன்று தினங்களின் பின் வருவதாகச் சொல்லியிருந்தார்கள். பின் அவர்கள் வந்ததும் இன்றைய தினத்துக்குப் பின் நீங்கள் என் சகோதரர் ஜஃபருக்காக அழக் கூடாது என்று கூறினார்கள். அபூதாவுத் .

(5)

# மய்யித்தின் உறவினர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை.

**மஸ்அலா: 1.**

மரணித்தவரின் உறவினர்கள் மரணச்செய்தி கேட்டதும் செய்யவேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன..

**முதலாவது:** மரணித்தவரின் பிரிவு விடயத்தில் பொறுமை காத்து அல்லாஹ்வின் கழா-விதியினை மனப்பூர்வமாகப் பொருந்திக் கொள்வது அவசியம்.

**இரண்டாவது:** அம்மரணத்துக்காக இஸ்திர்ஜா.ஃ.- இன்னா லில் லாஹி வஇன்ன இலைஹி ராஜிஊன்' என்று சொல்வது..

பொறுமையைக் கையாள்வதுபற்றி அல்லாஹ் அல்குர்ஆனில்.. நாம் நிச்சயமாக உங்களை அச்சத்தாலும், பசியாலும், சொத் து செல்வத்திலும், உயிர்களிலும் , (அறுவடை) வருமானத்தி லும்) இழப்பை ஏற்படுத்துவதாலும் உங்களைச் சோதிப்போம். (இந்நிலையில்) பொறுமையாயிருப்போருக்கு நபியே! நற்செய்தி கூறுங்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்களெனில் அவர்களுக்கு ஏதேனும் முஸீபத்- சோதனை ஏற்பட்டால் 'நிச்சயமாக நாம் அல்லாஹ்விடமிருந்தே வந்தோம். அவனிடமே நாம் திரும்பிச் செல்பவர்களாகவும் இருக்கின்றோம்' என்று கூறுவார்கள். . (பகரா: 155-157)

மரணம் சம்பவிக்கும் வேளை பொறுமை காப்பதன் சிறப்பு பற் றியும் அப்பொறுமைக்குப் பரிசாக அல்லாஹ் சித்தப்படுத்தி வைத்திருக்கும் வெகுமதிகள் பற்றியும் பல்வேறு ஹதீஸ்கள் விளக்குகின்றன..

**அ:** நபியவர்கள் ஒருமுறை மக்பராவுக்கு அருகில் நடந்து செல்லும் வேளை அங்கு ஒரு பெண் அழுது கொண்டிருப்பதை க் கண்டார்கள். அப்பெண்ணிடம் பெண்ணே! அல்லாஹ்வை

அஞ்சிக்கொள்! பொறுமையாயிரு! என்றார்கள். அதற்கு அப் பெண் ஆத்திரப்பட்டவளாக என்னை விட்டு தூரச் செல்லுங் கள். எனக்கு ஏற்பட்ட நிலை உங்களுக்கு ஏற்பட்டால்தான் தெரியும் என்றாள். அவர்கள்தான் நபியென அப்பெண் அறிந்தி ருக்கவில்லை. பின்னர் அவ்விடயம் அவளுக்குச் சொல்லப் பட்டதும் திடுக்கிட்டு மரண பீதியுடன் நபியவர்களின் வீட்டுவாச லுக்கு வந்தாள். அங்கு காவலர்கள் யாரும் இருக்கவில்லை. அவள் நபியிடத்தில் அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் தான் நபியென்று தெரியாமல் அப்படிப் பேசிவிட்டேன் என்றாள். ஆத ற்கு நபியவர்கள் ‘பொறுமையென்பது முதல் தடவை மோதும் போது தான்’ என்றார்கள் . – புகாரி, முஸ்லிம்
அதாவது எனக்கு மரியாதை செய்வதற்காக அமைதி காப்பது பொறுமையன்று. அல்லாஹ்வுக்காக பொறுமை காப்பதே உண்மையான பொறுமை என்றார்கள்.

**ஆ:** முஸ்லிம்களில் யாருக்காவது மூன்று பிள்ளைகள் சிறு வயதில் மரணித்து அதில் அவர்கள் பொறுமை காத்தால் அவரை நரகம் தீண்டப்போவதில்லை. – புகாரி,முஸ்லிம்.

**இ:** எந்தவொரு முஸ்லிமுக்காவது பருவவயதை அடையாத மூன்று பிள்ளைகள் மரணித்தால் ( அதில் பொறுமைகாத்ததன் பயனாக) மறுமையில் அல்லாஹ் தனது றஹ்மத்தால் அவர் களையும் அவர்களின் பொற்றோரையும் சுவர்க்கத்தில் நுழை விக்காமல் விடுவதில்லை. அப்பிள்ளைகள் சுவர்க்கத்தின் வாயி லில் நின்று கொண்டிருப்பார்கள் . அவர்களுக்கு நீங்கள் சுவர் க்கத்துக்குள் செல்லுங்கள் என்று சொல்லப்பட்டதும் எங்கள் பெற்றோர் வரும்வரை (செல்லமாட்டோம்) என்பார்கள் . அப் போது அல்லாஹ்வின் அருளினாலும் றஹ்மத்தினாலும் உங் கள் பெற்றோரையும் (விசாரணையின்றி அழைத்துக் கொண்டு) சுவர்க்கத்துக்குச் செல்லுங்கள் என்று அவர்களுக்குச் சொல்ல ப்படும்.- நஸாயி, பைஹகி.

**ஈ:** எந்தவொரு பெண்ணாவது அவளது மூன்று பிள்ளைகள் மரணித்திருந்தால் அப்பிள்ளைகள் அவளுக்கு நரகினைத் தடு த்திடும் திரையாக இருக்காமல் விடுவதல்லை என நபியவ ர்கள் கூறிய போது ஒரு பெண்மணி இரு பிள்ளைகள் மரணித்

திருந்தாலுமா? என வினவ நபியவர்கள் ஆம் இருவரா யிருந்தாலும் சரியே! என்றார்கள். – புகாரி, முஸ்லிம்.
**உ:** ஒரு விசுவாசியான மனிதன் தன் பாசத்துக்குரிய பால கனின் மறைவையொட்டி அல்லாஹ்விடம் நற்கூலி பெறவேண் டுமென்ற நல்ல நோக்கில் பொறுமை காக்கும்போது அதற்கு சுவர்க்கமின்றி வேறெந்தக் கூலியையும் அல்லாஹ் வழங்கு வதில்லை என நபியவர்கள் கூறினார்கள். – நஸாயி .

**இரண்டாவது**.. இன்னாலில்லாஹி கூறுவதன் சிறப்பு அதன் பலாபலன்கள் பற்றிய ஹதீஸ்கள் வருமாறு..

எந்தவொரு முஸ்லிமாயினும் அவர் வாழ்வில் முஸீபத்- சோத னைகள் ஏற்படும் வேளை அல்லாஹ் கட்டளையிட்டபடி இன் னாலில்லாஹி அஇன்னா இலைஹி ராஜிஊன் யா அல்லாஹ்! எனக்கு ஏற்பட்ட சோதனையில் என்னை இரட்சிப்பாயாக! நான் இழந்ததை விட சிறந்ததை எனக்குத் திருப்பித் தருவா யாக என்று கூறினால் அவருக்கு அல்லாஹ் இழந்ததை விடச் சிறந்ததை திருப்பிக் கொடுக்காமல் இருப்பதில்லை.

இந்த ஹதீஸை அறிவிக்கும் உம்மு ஸலமா(றழி) கூறுகி ன்றார்கள் .. எனது அன்புக்கணவர் அபூ ஸலமா மரணித்த வேளை இந்த நபிமொழி எனக்கு நினைவுக்கு வந்தது. அப் போது நான் எனக்கு இவ்வுலகில் மிக விருப்பமானவர் என் கணவர்தான். அவரையே நான் இழந்து விட்டேன். இப்படியிரு க்க அலரை விட எனக்கு சிறந்தவர் யார் உள்ளார்? என்ற எண்ணம் வந்தது. எனினும் நபியவர்கள் கூறியதற்காக அவ் வாறு பிரார்த்தித்துக் கொண்டேன். என்ன ஆச்சரியம்! அல் லாஹ் எனக்கு நபியவர்களை கணவராக ஆக்கித்தந்தான். நபியவர்கள் (சில காலம் கழித்து) என்னைத் திருமணம் செய்ய விரும்புவதாக ஹாதப் பின் அபீ பல்தஆ அவர்கள் மூலம் பெண்கேட்டு அனுப்பியிருந்தார்கள். நான் அதற்கு என க்கு ஒரு மகள் இருக்கின்றாள்.. அத்துடன் நான் அதிகம் ரோச குணம் உடையவளாயிற்றே! ( இந்நிலையில் நான் நபியவர்களுக்கு ஏற்றவளா? ) எனக் கேட்டனுப்பினேன். அதற் கு நபியவர்கள் அவரது மகளைப் பொறுத்தவரைக்கும் அவருக்கு தாயின் தேவை இல்லாமலாவதற்காக ( விரைவில் திருமணம் நடக்க ) நாம் பிரார்த்திக்கின்றோம். அவரது ரோச

குணத்தையும் நீங்குவதற்காகவும் நான் அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன் என்றார்கள் . – முஸ்லிம்.

**மஸ்அலா :2**

ஒரு பெண்ணைப் பொறுத்தவரை அவள் தன் கணவனல்லாத ( பிள்ளை, தந்தை, சகோதரங்கள் போன்ற) ஒருவரின் மரணத் திற்காக மூன்று தினங்களுக்குள்ளாக துக்கம் அனுஸ்டிக்க அனுமதியுண்டு. அக்காலப்பகுதியில் அம்மரணத்திற்காக பொறு மை காப்பதென்பது அவள் அலங்காரங்களை விட்டும் ஒது ங்கியிருக்க வேண்டுமென்று அர்த்தமாகாது. அலங்கரிப்பதால் பொறுமை காக்கவோ துக்கம அனுஷ்டிக்கவோ இல்லை என் றும் ஆகிவிடாது என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

ஸைனப் (றழி) அறிவிக்கின்றார்கள்..

நான் ஒருமுறை நபியின் மனைவியான உம்மு ஹபீபா(றழி) அவர்களிடம் சென்றேன். அவர்கள் எனக்குக் கற்றுத்தந்த ஹதீஸாவது.. ‘ அல்லாஹ்லையும் மறுமைநாளையும் விசுவாசி த்த எந்தவொரு பெண்ணுக்கும் தனது கணவரல்லாத எவரது மரணத்திற்காகவும் மூன்று தினங்களுக்கு அதிகமாக துக்கம் அனுஷ்டிப்பது ஹலாலாகாது . கணவருக்காக நான்கு மாதங் களும் பத்து தினங்களும் இத்தா- துக்கம் அனுஷ்டிக்க வேண் டும் என்றார்கள். பின்பு ஸைனப் பிந்து ஜஹ்ஸ் அவர்களது சகோதரர் மரணித்த போது அன்னாரிடம் சென்றேன். அவரோ வாசனைத் திரவியத்தை வரவழைத்து அதைத் தொட்டுப் பூசிக் கொண்டராக ‘ எனக்கு மணம் பூசவேண்டிய எவ்வித தேவையு மில்லை. எனினும் நபியவர்கள் கூறியதற்கேட்ப ( நான் சகோ தரரின் மரணத்துக்காக துக்கம் அனுஷ்டிக்க வில்லையெ ன்பதை வெளிப்படுத்தவே ) இவ்வாறு செய்தேன் என்றார்கள். – புகாரி.

**மஸ்அலா :3**

ஒருபெண் தன் கணவர் தவிர்ந்த வேறு உறவினருக்காக மூன் று நாட்கள் துக்கம் அனுஷ்டிக்க அனுமதியிருந்தாலும் தன் கணவரைத் திருப்திப்படுத்தி அவரது இல்லற தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக துக்கத்தை விடுத்து- மறைத்து கணவரை திருப்திப்படுத்தினால் அதற்காக அல் லாஹ் அப்பெண்ணுக்கு மிகப் பெரிய கூலியை வழங்குவதுடன்

அக்குடுமப்பத்திற்கும் பரக்கத் செய்கின்றான். இதற்குப் பின் வரும் நீண்ட ஹதீஸ் ஆதாரமாக அமைகின்றது.
உம்மு சுலைம்(றழி) அவர்கள் அபூதல்ஹா (றழி) யின் மனைவியாவார்கள். ஒருமுறை அவர்களின் குழந்தையொன்று கடுமையாகச் சுகவீனமுற்றது. அபூதல்ஹா (றழி) நபியவர்களை சந்தித்துவிட்டு வேலை நிமிர்த்தம் வெளியே சென்றுவிட்டார். அவ்வேளை குழந்தை மரணித்துவிடுகின்றது. உம்மு சுலைம் (றழி) அவர்கள் அக்குழந்தையை கழுவித் துடைத்து துணியால் சுற்றி வீட்டின் ஒருபக்கமாக வைத்துவிட்டார்கள். அக்கம் பக்கத்தில் இருந்தவர்களிடம் 'நான் அபூதல்ஹாவிடம் பிள்ளை மரணித்த செய்தியை சொல்லமுன் நீங்களாக யாரும் அவரிடம் சொல்லிவிடாதீர்கள் என்றும் கூறிவிட்டார்கள். இரவானதும் அபூதல்ஹா தனது தோழர்கள் சிலருடன் வீடு வந்ததும் மனைவியிடம் குழந்தையைப் பற்றி விசாரித்தார்கள். அதற்கவர் முன்பிருந்ததை விட மிக அமைதியாக இருக்கிறான். நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றான் என்றதும் நிம்மதியடைந்த அபூதல்ஹா நண்பர்களுடன் சந்தோசமாக உணவருந்தினார். நண்பர்கள் சென்றதும் அபூதல்ஹா தூங்கத் தயாரானார். அப்போது மனைவியார் தன்னை நன்றாக அலங்கரித்து மணம் பூசிக் கொண்டு கணவனுக்காக தன்னைத் தயார்படுத்தியவராக அங்கு வந்து படுக்கையில் அமர்ந்தார்கள். இருவரும் உடலுறவு கொண்டு அவ்விரவை இன்பமாகக் கழித்தனர். பஜ்ர் நேரத்தில் விழித்தெழுந்ததும் உம்மு சுலைம்(றழி) தன் கணவரிடம் ' அபூதல்ஹாவே! ஒருவர் நம்மிடம் ஒரு பொருளை இரவலாகத் தந்தால் அவர் திருப்பிக் கேட்கும் போது நாம் அப்பொருளை திருப்பிக் கொடுக்க வேண்டுமா?இல்லையா? என வினவினார்கள். அதற்கவர் இதிலென்ன சந்தேகம்! . திரும்பக் கேட்கும் போது கொடுப்பது நம்கடமையாயிற்றே! என்றார்கள். அதற்கு அவ்வம்மையார் ஆமாம்! அல்லாஹ் நமது குழந்தையை எம்மிடம் அமானிதமாக இரவல் தந்தான். இப்போது அவன் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டான் எனவே நற்கூலியை எதிர்பார்த்து பொறுமையாயிருங்கள் என்றார்கள். இதைக் கேட்ட அபூதல்ஹா நீ ஏன் அப்போதே எனக்குச் சொல்லவில்லை நம் பிள்ளை மரணித்த நிலையில் நேற்றிரவு நாம் சந்தோசமாக வேறு இருந்துவிட்டோமே என்று கோபப்பட்டவராக நபியவர்களிடம் விரைந்து வந்து விடயத்தைக் கூறி

யதும் நபியவர்கள் அமைதியாக ‘நேற்றைய இரவில் அல்லாஹ் உங்களுக்கு பரக்கத்துச் செய்வானாக ! என்றார் கள். அதன் பின் உம்முஸுலைம் (றழி) கர்ப்பமுற்றார்கள். நபி யவர்கள் அவரிடம் குழந்தையைப் பிரசவித்தவுடன் என்னிடம் எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று சொல்லியிருந்தார்கள். அவ்வாறே அவருக்கு ஆண் குழந்தை பிறந்தவுடன் அதை எடு த்துக் கொண்டு நபியவர்களிடம் வந்ததும் நபிகளார் பேரீச் சம்பழத்தை எடுத்து வாயில் வைத்து மென்று அச்சிசுவின் வா யில் வைத்தார்கள். அக்குழந்தைக்கு அப்துல்லாஹ் என்று பெயரும் சூட்டினார்கள். அக்குழந்தை பிற்காலத்தில் அன்சாரிக ளின் அழகிய வாலிபராகத் திகழ்ந்தார். அவரிலிந்து ஏராளமா ன சந்தியினர் தோன்றனர். – புகாரி , முஸ்லிம்.

# (06)

## மரணித்தவரின் உறவினர்கள் செய்யக் கூடாத ஹராமானவை..

மரணவீட்டில் செய்யக்கூடாதென நபியவர்கள் ஹராமாக்கிய ஏராளமான விடயங்கள் உள்ளன. எம்மில் பலர் மார்க்க விளக் கமின்மையால் அவற்றை மரண வீடுகளில் செய்து விடுகின் றனர். எனவே அவைபற்றி அனைவரும் அறிந்து வைத்திருப்ப து அவசியமாகும். அவையாவன…

**1.- ஒப்பாரி வைத்து அழுதல்.**

நபியவர்கள் கூறிய ஹதீஸாவது…. எமது சமூகத்தனரிடத்தில் நான்கு ஜாஹிலிய்யது மூடப்பழக்கங்கள் காணப்படுகின்றன. அவர்களும் அதை விட்டபாடில்லை. அவையாவன குலப்பெரு மை பேசுதல், பிற வம்சத்தினரை குத்திப் பேசுதல், நட்சத்திர த்தால் மழை பொழியுமென நம்புதல், மரணித்தவருக்காக ஒப் பாரி வைத்து அழுதல் ஆகியவையாகும். -முஸ்லிம்.

மற்றொரு ஹதீஸில் ‘மக்களிடம் காணப்படும் இரு பழக்கங் கள் குப்ரை- இறை நிராகரிப்பை ஏற்படுத்தி விடக் கூடியனவா கும் . அவைதான் வம்சாவளியில் குறைசொல்வதும், ஒப்பாரி வைத்து அழுவதுமாகும். -முஸ்லிம்.

நபியவர்களின் மகனார் இப்றாஹீம்(அலை) மரணித்த போது அங்கிருந்த உஸாமா பின் ஸைத்(றழி) அவர்கள் ஓலமிட்டு அழுதபோது அதைக் கண்ட நபியவர்கள் இதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை, ஓலமிட்டு அழ எவ்வித உரிமையுமில்லை. உள்ளம் கவலைப்படுகின்றது. கண்கள் கண்ணீர் வடிக்கின்றன எனினும் றப்பை கோபப்படுத்தும் செயல் செய்யப்படலாகாது என்றார்கள். - ஹாகிம், இப்னு ஹிப்பான்.

-உம்மு அதிய்யா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.. பெண் களாகிய எங்களிடம் மரணித்த வீட்டில் ஒப்பாரி வைத்து அழ

க்கூடாதென நபியவர்கள் பைஅத்-உறுதிமொழி எடுத்துக்கொண் டார்கள். புகாரி,முஸ்லிம்.

-மற்றொறு ஹதீஸில் 'நிச்சயமாக ஒரு மையித்துக்கான சில அழுகைகளால் அம்மய்யித்துக்கு வேதனை செய்யப்படுகின்றது என நபியவர்கள் கூறினார்கள். புகாரி ,முஸ்லிம் யாரின் மரணத்திற்காக ஒப்பாரிவைத்து அழப்பட்டதோ அதற்காக அம் மய்யித் மறுமையில் வேதனை செய்யப்படும்.

( சில அழுகையால் என்பதன் அர்த்தம் ஒப்பாரி வைத்து அழு வதைக் குறிக்கும் என்பது அறிஞர்களின் முடிவாகும்.

**2.-கன்னங்களில் அடித்துக்கொள்வது, சட்டையைக் கிழிப்பது..**

நபியவர்கள் கூறியுள்ளார்கள்..' மரணித்தவரின் துக்க மேலீ ட்டால் கன்னங்களில் அறைந்து சட்டைகளைக் கிழித்துக் கொ ள்பவர்கள் எம்மைச் சார்ந்தவர்களில்லர். புகாரி.

**3- தலைமுடியை மழித்து துக்கம் அனுஷ்டித்தல்.**

நபித்தோழர் அபூமூஸா(றழி) அவர்கள் மரணப்படுக்கையில் இருக்கும்போது அவர்களின் தலை அவரது உறவுக்கார பெண் ஒருவரின் மடியிலிருந்தது. அப்போது அப்பெண் சத்தமாக ஓல மிட்டு அழ இவர்களால் அவரைத் தடுக்க முடியாமல் போய் விட்டது. சற்று நினைவு திரும்பியதும் அங்கிருந்தவர்களைப் பார்த்து ' நபியவர்கள் நீங்கிக் கொண்ட பாவிகளை விட்டு நா னும் நீங்கிக் கொள்கின்றேன். நபியவர்கள் ஓலமிட்டு அழுப வள், தலைமுடியை மழிப்பவள்,மற்றும் ஆடைகளைக் கிழித் துக் கொள்ளும் பெண்களை விட்டும் நான் நீங்கிக் கொண் டேன் என்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். புகாரி,முஸ்லிம்.

**4- தலைவிரி கோலமாக இருத்தல்.**

-நபியவர்கள் மரண வீடுகளில் பெண்களான நாம் முகத்தை கீறிக் கிழித்தல், நாசமாய் போய்விட்டேனே! எனப் புலம்புதல், ஆடைகளைக் கிழித்தல் , தலைவிரி கோலமாக இருத்தல் போன்ற எதையும் செய்யக் கூடாது என எம்மிடம் பைஅத்- உறுதிமொழி எடுத்துக்க கொண்டார்கள். அபூதாவுத்.

**5- துக்க மேலீட்டால் தாடி வளர்த்தல்.** அதாவது தாடி சுன்னத் எனத் தெரிந்தே வாழ்வில் அதைப் புறக்கணித்து விட்டு உறவினரின் மரணவேளையில் துக்க மேலீட்டால் தாடி வளர்த்துவிட்டு பின்னர் சில நாட்கள் கழிந்ததும் மீண்டும் மழித்து விடுபவர் தலைவிரிகோலமாயிருப்பவரின் நடத்தையை யே பிரதிபலிக்கின்றார். எனவே அதேசட்டமே இவருக்கும் பொருந்தும். அத்துடன் இச்செயலானது அந்நிய சமயத்தவர்க ளிடமிருந்து வந்து புகுந்த பித்அத்துமாகும். அனைத்து பித்அத் துகளுமே வழிகேடாகும் அனைத்து வழிகேடும் நரகத்துக்கே இட்டுச் செல்லும் என்ற நபி மொழி ( நஸாயி) இங்கு கவ னிக்கத் தக்கதாகும்.

**6- அறியாமைக் கால வழக்கில் மரண அறிவிப்புச் செய்தல்.** அதாவது பறை அடித்து, அஞ்சலி போஸ்டர-பெனர் அடித்து இவைபோன்று பேர்-புகழுக்காக, பெருமைக்காக தேவையற்ற விதத்தில் அறிவிப்புச் செய்வதைக் குறிக்கும்.

ஹுதைபா(றழி) தனது குடும்பத்தவர் யாரும் மரணித்தால் இவ ரின் மரணச் செய்தியை யாருக்கும் அறிவிப்புச்செய்யாதீர்கள். ஏனெனில்அது நபியவர்கள் தடுத்த மரண அறிவிப்பு வகையாக மாறிடுமோ எள அஞ்சுகிறேன். நபியவர்கள் மரண அறிவித் தலை விட்டும் தடுத்துள்ளார்கள் என்றார்கள். திர்மிதி.

மரணச் செய்தியை அறிவிப்புச் செய்யும் விடயத்தில் நபிய வர்கள் நஜ்ஜாஸி மன்னரின் மரணத்தை அறிவிப்புச் செய்த தாக ஹதீஸில் இடம்பெறுகின்றது. அதைத் தடுத்ததாகவும் பல ஹதீஸ்கள் வந்துள்ளன. எனவே ஹதீஸ்க்கலை அறிஞ ர்கள் சாதாரணமாக ஒருவர் மரணித்த செய்தியை தகவலுக் காகவோ மக்கள் ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும் எனும் நோக்கிலோ செய்வது ஆகுமானதென்றும் ஜாஹிலிய்ய கால முறைப்படி பறையடித்தல், மேள-தாளம், கூலிக்கு மாரடித்தல், ஒப்பாரி ஓலமிடல், அஞ்சலிக்காக வைத் தல் போன்ற முறைகளில் அறிவிப்புச் செய்வதே தடுக்கப் பட்டதாகும் என்றும் விளக்கமளிக்கின்றனர்.

# (07)

## நல்ல மரணத்திற்கான அறிகுறிகள்.

ஒரு முஸ்லிமின் இறுதிமுடிவு நல்லதாக அமைந்து விட்டதை மறைமுகமாக உணர்த்தும் அடையாளங்கள் சிலவற்றை நபியவர்கள் எமக்குக் கற்றுத்தந்திருக்கின்றார்கள். அல்லாஹ் அவனது அருள்-கிருபையால் எமக்கும் அவ்வாறான மௌத்தை நஸீபாக்க வேண்டும். இவற்றில் ஏதாவதொன்று ஒரு முஸ்லிக்கு அவனது மரண வேளையில் ஏற்படும்பட்சத்தில் அதை அவனது இறுதிமுடிவு நல்லபடியாக அமைந்து விட்டதற்கான ஒரு நன்மாராயமாக எடுத்துக்கொள்ள முடியும். அவையாவன..

**1- மரணவேளையில் லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் ஸஹாதத் கலிமாவை முழு நம்பிக்கையோடு கூறுதல்.**

நபியவர்கள் கூறினார்கள்.. யாரின் இறுதி வார்த்தை லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவாகி விட்டதோ அவர் சுவனத்தில் நுழைந்து விடுவார். (ஹாகிம்)

உமர்(றழி)யவர்கள் தல்ஹா(றழி)யை சந்தித்தபோது அவர்கள் கவலையுடன் காணப்பட்டார்கள். காரணத்தைக் கேட்டதற்கு நபியவர்கள் ஒருமுறை ‘எனக்கு ஒரு விடயம் தெரியும். ஒருவர் தன் மரணவேளையில் அதைச் சொல்லி விட்டால் அவரது முகம் பிரகாசமாகி அவரது கஷ்ட்டத்தையெல்லாம் அல்லாஹ் போக்கிவிடுவான்’என்று கூறியுள்ளார்கள். ஆனால் அது என்ன வார்த்தையென்பதை மறந்துவிட்டேன் என்றபோது உமர்(றழி) அவர்கள் எனக்குத் தெரியும் அதுதான் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தை. இதைத்தான் நபியவர்கள் தனது சிறியதந்தை அபூதாலிபுக்கு மரணவேளையில் சொல்லிக் கொடுத்தார்கள்.. என்றுகூற தல்ஹா(றழி) அவர்களும் ஆமாம் நீங்கள் சொன்னது உண்மை.. அதே வார்த்தைதான் என உறுதிப்படுத்தினார்கள். – அஹ்மத், இப்னுஹிப்பான்.

## 2- நெற்றியில் வியர்வை வழிந்த நிலையில் உயிர் பிரிதல்.

புரைதா(றழி) அவர்கள் குராசான் நாட்டில் இருந்தபோது நோயுற்றிருந்த தனது சகாதரனைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். அவர் மரணத்தருவாயில் நெற்றியில் வியர்வை சொட்டும் நிலையில் காணப்பட்டார். அப்போது புரைதா(றழி) அவர்கள் அல்லாஹு அக்பர் என தக்பீர் சொல்லி விட்டு ‘ ஒரு மு.ஃ.மின் -இறைவிசுவாசியின் மரணம் நெற்றி வியர்வை வடியும் நிலையில் சம்பவிக்கும்’ என்று நபியவர்கள் சொல்ல நான் செவியுற்றுள்ளேன் என்றார்கள். – அஹ்மத், இப்னு மாஜ.ஃ..

## 3-வெள்ளிக் கிழமை இரவிலோ பகலிலோ மரணித்தல்.

நபியவர்கள் கூறியுள்ளார்கள்.. எந்தவொரு முஸ்லிமும் வெள்ளிக்கிழமை இரவிலோ பகலிலோ மரணிப்பின் அவர் கப்றுடைய வேதனையை விட்டும் பாதுகாக்க்படாமல் இருப்பதில்லை. திர்மிதி, அஹ்மத்.

## 4- போர்க்களத்தில் ஸஹீதாகி வீர மரணமடைதல்.

நபியவர்கள் சொல்லியுள்ளார்கள்.. ஷஹீத் - உயிர்தியாகிக்கு அல்லாஹ்விடத்தில் ஆறு பாக்கியங்கள் உள்ளன. அவரது முதல்ச் சொட்டு இரத்தம் வெளிப்பட்டபோதே அவரது பாவங்களனைத்தும் மன்னிக்கப்படும்.அவர் சுவர்க்கத்தில் தனது இருப்பிடத்தை (அப்போதே) கண்டுகொள்வார். கப்ருடைய வேதனை மற்றும் மஹ்ஷரின் போது ஏற்படும் திடுக்க நிலையிலிருந்து பாதுகாக்கப் படுகின்றர். ஈமானிய ஆடை எனும் ஆடையை அணிவிக்கப்படுகின்றார். ஹூருல் ஈன் எனும் சுவனக் கன்னியர்களை மணமுடித்துக் கொடுக்கப்படுகின்றார். தனது உறவினர்களில் எழுபது நபர்களுக்கு சுவர்க்கத்திற்கு சிபாரிசு செய்யும் தகைமை பெறுகின்றார். – திர்மிதி .

ஒரு மு.ஃ.மின் மனப்பூர்வமாக தனக்கு அறப்போரில் ஷஹீதாகும் பாக்கியத்தை வேண்டிப் பிரார்த்தித்தால் அவர் படுக்கையில் மரணித்தாலும் அந்தப் பாக்கியத்தை அல்லாஹ் அவருக்கு வழங்குவான்.

நபியவர்கள் கூறினார்கள். .யார் ஷஹாதத்தை வேண்டி உண் மையாகப் பிரார்த்திக்கின்றாரோ அவர் அவரது படுக்கையில் மரணித்தாலும் ஷுஹதாக்களின் அந்தஸ்தை அல்லாஹ் அவருக்கு வழங்கிடுவான். முஸ்லிம்.

**5- போர்க்கணத்தில் யுத்தத்தில் (கடமையில்) இருந்த நிலையில் மரணித்துப் போதல்.**

ஒருமுறை நபியவர்கள் ஸஹாபாத் தோழர்களிடம் ஷஹீத்- உயிர்த்தியாகி என்றால் யாரென்று தெரியுமா? என வினவ அவர்களும் யுத்தத்தில் வீர மரணமெய்தியவர்கள் தான் ஷஹீத்- உயிர்த் தியாகியாவார்கள் என பதிலளித்தார்கள். நபியவர்களோ அப்படியாயின் எனது உத்தினரில் மிகச் சொற்பமானவர்களே ஷஹீத் எனப்படுவர் அப்படித்தானே என்று கேட்ட அல்லாஹ்வின் தூதரே! அப்படியாயின் யாரெல்லாம் ஷஹீத் என எங்களுக்கு சொல்லித்தாருங்கள் எனக் கேட்க நபியவர்கள் அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் செய் தவர் ஷஹீதாவார். இறைபாதையில் வைத்து மரணித்தவரும் ஷஹீதாவார், பிளேக் எனும் தொற்று நோயால், வயிறு சம்பந் த்தப்பட்ட வலியால் மரணிப்பவரும் மற்றும் நீரில் மூழ்கி இறப் பவரும் ஷஹீதாவார் என நபியவர்கள் விளக்கமளித்தார்கள். முஸ்லிம்.

(இந்த ஹதீஸில் ஆறு வகையான ஸஹீத்கள் அடையாளப் படுத்தபடுகின்றனர். அபூதாவுதில் இடம்பெறும் அறிவிப்பில் விச ஜந்துக்களால் தீண்டப்ப்பட்டு மரணிப்பவர், வாகனம் மிதித்து மரணிப்பவர், படுக்கையில் வைத்துக் கொல்லப்படுபவர்களும் ஷஹீத் என வந்துள்ளது. மேலும் சில அறிவிப்பில் வருபவ ர்களையும் சேர்த்து மொத்தமாக பத்துப் பதினைந்து வகை யினர் ஷஹீதின் அந்தஸ்த்தைப் பெறுகின்றனர் என அறிய முடிகின்றது. அத்தோடு போர்க்களத்தில் போராடி வீரமரணம டைந்த ஸஹீதின் அந்தஸ்த்தும் ஏனையவர்களின் அந்தஸ் த்தும் பெயரளவில் ஒன்றுபட்டாலும் உண்மையில் வேறுபட்ட வையாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.)

**6- கொளரா – தொற்றுநோயால் மரணித்தல்.**

நபியவர்கள் கூறியுள்ளார்கள்.. காளரா- பிளேக் எனும் தொற்று நோயானது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஷஹாதத்தைப் பெற்றுக் கொடுக்கும். – புகாரி

அன்னை ஆயிஷா(றழி)யவர்கள் கொளோரா- தொற்று நோய் பற்றி நபியவர்களிடம் கேட்டபோது ‘ அல்லாஹ் தான் நாடிய வர்களை வேதனை செய்யவே–தண்டிக்கவே இந்நோயை அனுப்புகிறான். எனினும் இறை விசுவாசிளுக்கு அதை றஹ்மத் தாக ஆக்கிவிடுகின்றான். எனவே ஒரு ஊரில் இத்தொற்று நோய் ஏற்படும்போது அல்லாஹ் நாடியதைத் தவிர வேரெ துவும் தனக்கு ஏற்படாதென்ற மன உறுதியுடன் பொறுமையாக அவ்வூரை விட்டு வெளியேறாது அங்கேயே இருந்தால் அல் லாஹ் ஷஹீது-உயிர்த்தியாகிக்குக் கொடுக்கும் அதே கூலி யை இவருக்கும் கொடுக்கின்றான் என நபியவர்கள் கூறி னார்கள். – புகாரி.

மறுமைநாளில் ஷஹீத்-உயிர்த்தியாகிகளும் கொளரா தொ ற்றினால் மரணித்தவர்களும் வருவார்கள். அப்போது தொற்று நோயால் மரணித்தோர் நாங்களும் ஸஹீத்கள்தான் என வாதாட(ஷஹீத்கள் இதை மறுப்பார்கள்) அப்போது அல் லாஹ் இவர்களின் அவ்வுடல்களில் ஷுஹதாக்களைப்போன்று காயங்களிலிருந்து கஸ்தூரி மணம் வீசும் இரத்தம் வெளிப் படுகின்றதா என்று பாருங்கள் எனக்கூற அவர்களும் பார்ப் பார்கள் (என்ன ஆச்சரியம்) அவர்களின் உடல்கள் அவ்வாறே காட்சியளிப்பதைக் காண்பார்கள். அஹ்மத் , தபரானி.

**07- வயிறு சம்பந்தப்பட்ட (கடும் வலியை ஏற்படுத்தும்) நோய்களால் பாதிக்கப்பட்டு உயிரிழத்தல்.**

வயிற்றுநோயினால் மரணித்தவர் ஸஹீதாவார்- முஸ்லிம்

-வயிற்று நோய் யாரை மரணிக்கச் செய்கின்றதோ அவர் கப்ரி லே வேதனை செய்யப்பட மாட்டார். –திர்மிதி, நஸாயி.

**08- நீரில் மூழ்கி, கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி, கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மரணித்தல்.**

நபியவர்கள் கூறினார்கள்.. ஐந்து சாரார் ஸஹீத்- உயிர்த் தியாகிகளாவார்கள்.. குத்தப்பட்டவர்,வயிற்று உபாதைக்குள்ளா க்கப்பட்டவர், மூழ்கடிக்கப்பட்டவர், இடிபாடுகளுக்குள் அகப் பட்டவர் இந்த ஐவரும் உயித்தியாகியாவார்கள் -புகாரி.

**09- பிரசவ வலியால்,அல்லது அதன் பின்னரான நிபாஸ்- உதிரப்போக்கினால் மரணிக்கும் பெண்கள்.**

நபியவர்கள் கூறினார்கள்.. ஒரு பெண்ணை அவளின் வயிற்றி லுள்ள சிசு கொன்றுலிடுவது ஸஹாதத் ஆகும் . அக்குழந்தை தன்தாயை அவளின் தொப்புள்கொடியூடாக சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்கின்றான் என்றார்கள். – அஹ்மத்.

**10- தீக்காயங்களால் அல்லது பக்கவாதம் ஏற்பட்டதால் மரணித்தல்.**

போரில் வீரமணைமடைபலரைத் தவிர்த்து உயித்தியாகிகள் ஏழு சாராராவர். குத்துப்பட்டவர், நீரில் மூழ்கியவர், பக்கவாத த்தால் பாதிக்கப்பட்டவர், வயிற்று வலியால் அவதியுற்றவர், தீக்கிரையாக்கப்பட்டவர், இடிபாடுகளுக்குள் சிக்கியவர், உதிரப் போக்கிளால் உயிரிழந்த பெண் ஆகியோர் ஸஹீத் ஆவார்கள் என்று நபியவர்கள்ள கூறினார்கள். – அபூதாவுத், நஸாயி.

**11- தனது உயிர், உடமை, கற்பு , சமய உரிமை போன்றவற்றை அபகரிக்க முற்படுவோருக்கு எதிராக அல்லது அநியாயம் அக்கிரமத்துக்கெதிராகச் சண்டையிட்டு அதில் உயிர் துறத்தல்.**

நபியவர்களிடம் ஒருவர் வந்து அல்லாஹ்வின் தூதரே! ஒரு எதிரி எனது பொருட்களை அபகரிக்க வரும்போது நான் என்ன செய்யவேண்டும் என சொல்லுங்கள் என வினவ , நீ உனது பொருளை அவனுக்குக் கொடுக்காதே! என்றார்கள். அதற்கவர் அவன் என்னுடன் சண்டையிட்டால்.. என வினவ நீயும் அவனு டன் சண்டையிடு என்றார்கள். அவன் என்னைக் கொன்று விட் டால்? என்றதற்கு அவன் உன்னைக் கொன்றால் நீ ஷஹீதா வாய், நீ அவனைக் கொன்றால் அவன் நரகம் செல்வான் என் றார்கள். – முஸ்லிம்.

மற்றொரு ஹதீஸில் ஒருவன் என்னிடம் வந்து எனது பொருட்களைத் திருட எத்தணித்தால் நான் என்ன செய்ய வேண்டும் என வினவ அவனுக்கு அல்லாஹ்வை நினைவு படுத்து.. என்றார்கள். அவன் அல்லாஹ்வுக்கு அஞ்ச வில்லையெனில் .. என்றதற்கு அக்கம்பக்கத்திலுள்ள முஸ்லிம்களைக் கூவியழைத்து உதவிகோரு.. என்றார்கள். யாரும் அவ்விடத்தில் இல்லையெனில்.. என்றதற்கு அங்குள்ள அதிகாரியிடம் முறையிட்டு உதவிபெறு.. என்றார்கள் . அதிகாரி-சுல்தான் அவ்விடத்திலிருந்து வெகுதூரத்தில் இருந்தால்.. என்றதற்கு ஒன்று உனது பொருளை (எப்படியாவது) பாதுகாத்துக் கொள். அல்லது (உனக்கு முடிந்தால் )அவனுடன் சண்டையிடு . அதில் நீ மரணித்தால் மறுமையில் ஸஹீதாக ஆகிவிடுவாய் என்றார்கள். அஹ்மத், நஸாயி.

தனது பொருளைக் காக்க போராடி மரணித்தவர், தன் மனைவி குடும்பத்தினைரைக் காக்க போராடி மரணித்தவர், தன் மார்க்கத்துக்காக போராடி மரணித்தவர், தன் உயிருக்காகாப் போராடி மரணித்தவர் , அநியாயத்துக் கெதிராகப் போராடி மரணித்தோர் ஆகியோர் ஸஹீத்- உயிர்த்தியாகியாவார்கள் என நபியவர்கள் கூறினார்கள். – அபூதாவுத், நஸாயி.

**11- அல்லாஹ்வின் பாதையில் பாதுகாப்பு கடமையில் இருந்த நிலையில் மரணித்தவர்.**

நபியவர்கள் கூறினார்கள்.. இறைபாதையில் இரவும் பகலுமாக ஒருநாள் காவல் புரிவதானது ஒருமாத காலம் நோன்பு நோற்று இரவில் நின்று வணங்குவதைக் காட்டிலும் சிறந்ததாகும். அவர் (அந்த நிலையில்) மரணித்துப் போய்விட்டால் மறுமைநாள் வரை அவர் அதே வேலையைச் செய்ததாக எழுதப்படும். அவருக்கு (கப்ரில்) ரிஸ்க் அளிக்கப்படும். கப்ரின் பித்னாக்களை விட்டும் அவர் பாதுகாக்கப்படுவார். –முஸ்லிம்.

தபரானியின் அறிவிப்பில்.. அவர் மறுமையில் ஷஹீதாகவே எழுப்பப்படுவார் என்றும் இடம்பெறுகின்றது.

மற்றொரு ஹதீஸில் ‘ஒவ்வொரு மையித்தும் அவர் செய்த அமல்களுடன் முத்திரிரையிடப்பட்டு விடுகின்றது. ஆனால்

இறைபாதையில் காவல் புரிந்த நிலையில் மரணித்தவரைத் தவிர.. அவரின் நல்லமல்கள் மறுமைநாள் வரை வளர்ந்து கொண்டே இருக்கும். கப்ரில் ஏற்படும் பித்னா- குழப்பங்களை விட்டும் அவர் பாதுகாக்கப்படுவார் என நபியவர்கள் கூறியுள்ளார்கள். —அபூதாவுத், திர்மிதி.

**11- கடைசியாக ஒரு நல்லமலைச் செய்த நிலையில் ஒருவர் மரணத்தைத் தழுவுதல்.**

ஹுதைபா (றழி)யவர்கள் கூறினார்கள்...

நபியவர்களை நான் ஒருநாள் என் நெஞ்சில் சாய வைத்தேன். அப்போது நபியவர்கள்... யார் இறை திருப்தியை நாடி லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லி அதோடு அவர் மரண மடைந்தால் அவர் சுவனம் செல்வார். அல்லாஹ்வின் திருப் பொருத்திற்காக ஒருவர் நோன்பு நோற்று அதே நிலையில் அவருக்கு இறுதிமுடிவு ஏற்பட்டால் அவரும் சுவனம் செல்வார். ஒரு ஸதக்காவைச் செய்துவிட்டு அதுவே ஒருவரது இறுதியான காரியாமான நிலையில் மரணிப்பவரும் சுவனம் சென்றுவிட்டார். - அஹ்மத்.

**12- மரணித்தவரை மக்கள் புகழ்ந்து நல்லவரென அனுதாபந் தெரிவித்தல்.**

ஒருவர் மரணித்துவிடும் போது அருகிலுள்ள - அவரைப் பற்றி அறிந்த ஸாலிஹான முஸ்லிம்கள் அவரை நல்லவரெனப் புகழ்ந்து அவரது இறப்புக்காக அனுதாபப்படுவதும் அவர் ஒரு சுவர்க்கவாதியாக மரணித்துள்ளார் என்பதற்கான அடையாள மாகும். அனஸ்(றழி) அறிவிக்கின்றார்கள்..

ஒருமுறை நபியவர்களுக்கருகில் ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டபோது அங்கிருந்தோர் அவரைப் பற்றி நல்ல படியாகப் புகழ்ந்து பேசினர். நாமறிந்தவ வரை அவர் அல்லாஹ்-றஸூலை நேசிப்பவராகவே இருந்தார் என அனுதாபப்பட்டனர். உடனே நபியவர்கள் உறுதியாகி விட்டது .. என மூன்று தடவைகள் கூறினார்கள். சற்று நேரத்தில் மற்றுமொரு ஜனாஸா அவ்வழியாகக் கொண்டு செல்லப்பட்டது. அப்போது அங்கிருந்

தோர் அவரைப் பற்றி ‘அல்லாஹ்வின் மார்க்கத்தில் மோசமாக நடந்த கெட்ட மனிதர்’ என பேசிக்கொண்டனர். அதற்கும் நபி யவர்கள் ‘ உறுதியாகி விட்டது’ என்றே கூறினார்கள். அப் போது நான் யாரஸூலல்லாஹ் இருவருக்கும் ஒரே விதமாகவே கூறினீர்களே ! என வினவியதற்கு ஆம்! .நீங்கள் முதலாம் நபரை நல்லவரெனப் புகழ்ந்தீர்கள். அதனால் அவருக்கு சுவர்க்கம் உறுதியாகி விட்டது என்றேன். இரண்டாம் நபரை மோசமானவரென இகழ்ந்தீர்கள் . அதனால் நான் அவருக்கு நரகம் உறுதியாகி விட்டது என்றேன். மலக்குகள் வானுலகின் சாட்சியாளர்களாவர். மனிதர்களான நீங்களோ பூவுலகின் சாட் சியாளர்கள். அல்லாஹ் சில மலக்குகளை வைத்திருக் கின்றான். அம்மலக்குகள் ஒரு மனிதன் நல்லனா? கெட்ட வனா? என்பதை நல்ல மனிதர்கள் சிலரின் நாவுகளினால் வெளிப்படுத்தி விடுகின்றனர் என நபியவர்கள் பதிலளித் தார்கள். புகாரி,திர்மிதி,நஸாயி.

மற்றொரு ஹதீஸில் ‘எந்தவொரு முஸ்லிமும் மரணிக்கும் போ து அங்கிருக்கும் நான்கு பேர் அவரைப் பற்றி நல்லவரென சாட்சிகூறினால் அல்லாஹ் அவரை சுவர்க்கத்தில் நுளைவித்து விடுவான்’ என நபியவர்கள் கூறியபோது ஒரு நபித்தோழர் யாரஸூலல்லாஹ் மூவர் சாட்சி கூறினாலுமா? என வினவ ஆமாம் என்றார்கள் . இருவர் சாட்சிசொன்னால்?? என்றதற்கு ஆமாம் இருவர் சாட்சியம் சொன்னாலும்தான் என்றார்கள். ஒருவர் சாட்சி சொன்னாலுமா? என நாங்கள் கேட்கவில்லை என அறிவிப்பாளர் கூறுகின்றார். – புகாரி.

மற்றொரு ஹதீஸில் ‘ ஒருவர் மரணிக்குமிடத்து அங்கிருக்கும் நெருங்கிய உற்றார், சுற்றத்தாரில் நான்கு பேர் இவரைப்பற்றி நல்லவற்றைத் தவிர வேறெதையும் நாம் அறிந்திருக்க வில் லையெனப் பேசிக் கொண்டால் அல்லாஹ் ‘உங்களது நற் சாட்சியை ஏற்றுக் கொள்கிறேன். இவரைப்பற்றி உங்களுக்குத் தெரியாத இவர் செய்த தீயவற்றை மன்னித்து விடுகின்றேன் என்று சொல்வதாக நபியவர்கள் கூறினார்கள். – அஹ்மத் .

**குறிப்பு :** மேற்கூறப்பட்ட அடையாளங்களில் ஒன்றோ பலதோ முஸ்லிமான ஒருவரின் மரணத்தின் போது தென்பட்டால் அது

அவரது இறுதி முடிவு நல்லதாக அமைந்து விட்டதற்கான ஓர் அறிகுறியாகும். அதன் மூலம் அவர் சுவர்க்கவாதியாக இருக்கக் கூடும் எனத் திருத்திப்பட முடியுமேயன்றி அடித்துந் சொல்ல முடியாது. அவ்வாறே இவ்வாறன அறிகுறிகளில் எதுவும் ஒரு முஸ்லிமின் மரணவேளையில் ஏற்படாதவிடத்து அவரது இறுதிமுடிவு மோசமானதென்று முடிவெடுக்கவும் முடியாது. அதைப்பற்றி அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே!.

அவ்வாறே இங்கு இடம்பெற்ற நபிமொழிகளில் கூறப்படாத அடையாளங்கள் விடயத்தில் அவையும் ஒருமனிதனின் நல்ல இறுதிமுடிவுக்கான அடையாளமென கருதுவதற்கு நமக்கு அதிகாரமில்லை. உதாரணமாக ஒருவரின் மரண தினத்தன்று மழை பொழிதல், கிரகணம் ஏற்படல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். எனவே குறித்த நிகழ்வு அவரது மரணத்துக்காகத்தான் என எண்ணுவது, பேசுவது மூடநம்பிக்கை சார்ந்ததாகும்.

நபியவர்களின் மகனார் இப்றாஹீம்(அலை) அவர்கள் மரணித்த தினத்தன்று கிரகணம் ஏற்பட்டது. அன்னாரின் மரணத்துக்காக துக்கம் அனுஷ்டிக்கவே அது ஏற்பட்டதாக மக்கள் பேசியதை அறிந்த நபியவர்கள் உடனடியாக மிம்பரில் ஏறி மக்களுக்கு உபதேசித்தார்கள்..

எனது மக்களே! சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் இரு அத்தாட்சிகளாகும். யாரது பிறப்புக்காகவோ இறப்புக்காகவோ அவை மறைந்து கிரகணம் தோண்றுவதில்லை. எனினும் அல்லாஹ் தனது அடியார்களை அச்சமூட்டுவதற்காகவே அவ்வாறு செய்கின்றான். எனவே இவற்றிலிருந்து எதையாவது நீங்கள் கண்ணுற்றால் அல்லாஹ்வை பிரார்த்தித்து பாவமன்னிப்புக் கோரி அவன் பக்கம் திரும்புங்கள். அது நீங்கும் வரை தொழுகை தானதர்மங்களில் ஈடுபடுங்கள்.- புகாரி, குதுபுஸ் ஸுனன்.

# (08)

# மையித்தைக் குளிப்பாட்டுதல் .

## குளிப்பாட்டுவதற்கு முன் செய்யப்படும் சில விடயங்கள் பற்றி...

1-எமது பகுதிகளின் மரணம் சம்பவித்தவுடன் அடிக்கழுவுதல் என்ற பெயரில் அம்மையித்தை இடுப்புக்குக் கீழ்ப்பகுதியை கழுவி அசுத்தம் நீக்கிய பின்னரே மக்கள் பார்வைக்காக வைக்கின்றனர். இது இன்று கட்டாயக் கடமை போன்று ஆகி விட்டது. எனினும் மையித்தில் அசுத்தமேதும் ஏற்பட்டால் அவ் வாறு செய்வதில் தவறேதுமில்லை என்பதையும் இது ஜனாஸா கடமைகளில் உள்ளததல்ல என்பதையும் தெரிந்திருப்பது அவ சியம். அசுத்தம் வெளிப்பட்டோ படாத பட்சத்திலோ இதைச் செய்யாது விடுவதால் கூட எவ்வித குற்றமுமில்லை. இன்னும் சொல்லப்போனால் அசுத்தமேதும் வெளிப்படாதவிடத்து அடிக்க ழுவுதல் செய்யாமலிருப்பதே சாலச் சிறந்தது. அடிக்கழுவுதல் பற்றி சாபி மத்ஹப் பிக்ஹு நூல்களில் கூட நான் தேடிய வரை எதுவும் கூறப்படவில்லை.

2-மரணம் சம்பவித்தது உறுதியானவுடன் இரு கண்களையும் மூடிவிடுதல், முழு உடலையும் ஒரு போர்வையால் போர்த்தி விடுதல் ஆகிய இரண்டும் ஆதாரப்பூர்வமாக ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ளன. எனினும் கைகளைக் கட்டுதல், கால் பெரு விரல்களை இணைத்துக் கட்டுதல், நாடியைக் கட்டுதல், மூட் டுக்களை உருவி விடுதல், வயிற்றின் மீது பாரமொன்றை வைத்தல் போன்றன பற்றி ஹதீஸ்கள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. சாபி பிக்ஹு நூல்களில் இவை விரும்பத்தக்

கவையெனக் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுக்கான சில நியாய மான காரணங்கள் சொல்லப்படுவதால் அந்த நோக்கில் அவ ற்றை செய்வதில் தவறில்லை என அறிய முடிகின்றது. ஜனாஸாக் கடமை என்ற எண்ணத்தில் செய்வது தடுக்கப்பட வேண்டியதாகும்.

அவ்வாறே மரணவேளையில் யாஸீன் ஓதல், கிப்லாப் பக்கம் மையித்தை முன்னோக்குதல் ஆகியவற்றுக்கு ஆதாரங்கள் கூறப்பட்டாலும் அவை ஆதாரப்பூர்வமானவை அல்ல என்பதை அறிந்திட முடிகின்றது. ( இவைபற்றி விரிவாகப் பேசப்படும்).

# குளிப்பாட்டுதல் .

முஸ்லிமான ஒருவருக்கு மரணம் சம்பவித்து விட்டால் அங்கிரு க்கும் ஏனைய முஸ்லிம்கள் அம்மய்யித்தை விரைவாகக் குளி ப்பாட்டி ,கபன்செய்து , தொழுகை நடாத்தி நல்லடக்கம் செய் யும் விடயத்தில் விரைவாகச் செயற்படுவது கடமையாகும். இவை நான்கும் மையித்துக்காக ஒவ்வொருவரும் செய்யும் பர்ழு கிபாயா சார்ந்த கட்டாயக் கடமையாகும்.

நபியவர்கள் ஒட்டகத்திலிருந்து கீழே வீழ்ந்து மரணித்த ஸஹாபி விடயத்தில் ‘இவரை தண்ணீரால் இலந்தை இலை கொண்டு குளிப்பாட்டுங்கள் என்றார்கள். அவ்வாறே தனது மகள் ஸைனப்(றழி) மரணித்தபோதும் அவரை மூன்று அல்லது ஐந்து தடவைகள் குளிப்பாட்டுங்கள். தேவையேற்படின் அதைவிட அதிகரியுங்கள் என்றார்கள். அவரது உடலின் வலது பக்கத்திலிருந்தும் வுழுவின் உறுப்புகளிலிருந்தும் ஆரம்பியுங்கள் என்றார்கள். –புகாரி.

மையித்தைக் குளிப்பாட்டும் விடயத்தில் பின்வரும் சுன்னா ஒழுங்குகள் பின்பற்றப்பட வேண்டும்.

- மூன்று தடவைகள் குளிப்பாட்டுதல். தேவையேற்படின் அதைவிட அதிகமாக செய்யவேண்டுமென கருதும் பட்ச த்தில் ஒற்றைப் படையில் அதிகரித்துக் கொள்ளலாம்.
- குளிப்பாட்டும் போது வலது பக்கத்தை முற்படுத்துதல். அவ் வாறே வுளூவின் உறுப்புக்களை முற்படுத்தல்.
- இலந்தை இலை அல்லது அவைபோன்று பிசுபிசுப்பான சவ ர்க்காரம், சம்பு திரவம் போன்றவற்றைப் பயன்படுத்தல்.
- இறுதிச் சுற்றில் வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தல். கற்பூரம் மிகச் சிறந்ததாகும்.
- பெண் மையித்தாயின் கொண்டையை அவிழ்த்து நன்கு கழுவி முடியை சீவி மூன்று ஜடைகளாகப் பின்னி விடுதல்.
- ஆண் மையித்தை ஆண்களும் பெண் மையித்தாயின் பெண்களும் குளிப்பாட்டுதல் வேண்டும்.. எனினும் கணவன் மனைவியின் மையித்தையும் , மனைவி கணவனின் மையித் தையும் குளிப்பாட்டுவது சிறந்ததென்பது இதிலிருந்து விதி விலக்கானதாகும்.

இவற்றுக்கான ஆதாரம் உம்மு அதிய்யா(றழி) அவர்கள் அறி விக்கும் நபிமொழியாகும்.

நபியவர்களின் அன்பு மகள் ஜைனப்(றழி) மரணித்த போது நாங்கள் அவரை குளிப்பாட்டத் தயாராகிய வேளை நபி யவர்கள் எங்களிடம் வந்து பின்வருமாறு கூறினார்கள். ‘நீங் கள் அவரை மூன்று ,அல்லது தேவையேற்பட்டால் ஐந்து, ஏழு தடவைகள் குளிப்பாட்டுங்கள். அவரது வலது பக்கத்தையும் வுளூவின் உறுப்புக்களையும் கொண்டு ஆரம்பியுங்கள் என் றார்கள். ஒற்றைப் படையாகவா? நாயகமே ! என்றதற்கு ஆம் என்றார்கள். பின் இறுதித் தடவையில் கற்பூரத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள். குளிப்பாட்டி முடிந்தவுடன் என்னிடம் சொல்லு ங்கள் என்றார்கள். அவ்வாறே அவர்களுக்கு அறிவித்ததும் தனது கைலியை எங்களிடம் தந்து இத்துணியால் அவரைப் போர்த்துங்கள் என்றார்கள். பின்பு நாங்கள் அவருக்கு முடி சீவி அவரது தலைமுடியை மூன்று பகுதிகளாக்கி முன்பக்கம் ஒரு பகுதியையும் பின்னந்தலைப் பக்கம் இரண்டு பகுதி களையும் வைத்தோம். –புகாரி,முஸ்லிம்.

- மையித்தைக் குளிப்பாட்டும் போது அதள் ஆடைகளை நீக்கி நிர்வாணமாக்காதிருத்தல் வேண்டும். அணிந்திருக்கும் ஆடையை நீக்குவதானால் மேவே ஒரு துணியால் மூடி விட்டு பின் துணிக்குள் கைகளை விட்டு ஆடைகளைக் களைய வேண்டும்.

நபியவர்கள் மரணித்தபோது அவர்களைக் குளிப்பாட்ட மக்கள் தயாரான வேளை ஏனையவர்களைக் குளிப்பாட்டும் போது நாம் ஆடைகளைக் நீக்குவது போல் நபியவர்களுக்கும் ஆடையை நீக்கி விடுவதா? இல்லையா என அவர்கள் கருத்து வேற்றுமைப்பட்டார்கள். அப்போது அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் தூக்கத்தை ஏற்படுத்தினான். அவர்கள் அனைவரின் நாடிகளும் நெஞ்சைத் தொடுமளவு அயர்ந்து தூங்கினர். பின்பு வீட்டின் உட்புறமிருந்து ஒருவர் ‘நபியவர்களின் ஆடைகள் அப்படியே இருக்கும் நிலையிலேயே அவர்களைக் குளிப்பாட்டுங்கள்’ என்று சொன்னார். சொன்னவர் யாரென்று எமக்குத் தெரியாது. உடனே அவர்கள் எழுந்து சென்று அவ்வாறே நபியவர்களைக் குளிப்பாட்ட ஆரம்பித்தார்கள். ஆடைக்கு மேலால் நீரை ஊற்றி ஆடையிலேயே தேய்த்துக் கழுவினார்கள். பின்பு ஆயிஷா(றழி) நாம் அலட்சியமாகத் தவற விட்டதை முன்னமே கண்டுகொண்டிருந்தால் நபியவர்களைக் குளிப்பாட்டும் பொறுப்பை அன்னாரின் மனைவிமாரான நாங்களே பொறுப்பெடுத்திருப்போம் என்றார்கள் . – ஆபூதாவுத்.

- இஹ்ராம் தரித்த நிலையில் மரணித்தவருக்கு குளிப்பாட்டும் போது வாசனைத் திரவியங்கள் பாவிக்கக் கூடாது.
  ஏனெனில் நபியவர்கள் இஹ்ராம் தரித்த நிலையில் ஒட்டகத்திலிருந்து கீழே விழுந்து மரணித்த மனிதரின் விடயத்தில் அவருக்கு மணம் பூசாதீர்கள். ஏனெனில் அவர் மறுமையில் தல்பியாச் சொன்ன நிலையிலேயே எழுப்பப்படுவார்’ என்று கூறியுள்ளார்கள். புகாரி,முஸ்லிம்.
- கணவன் மனைவியையும் ,மனைவி கணவனையும் குளிப்பாட்டுவது சிறந்ததாகும்.

இதற்கு மேலுள்ள ஆயிஷா(றழி) அவர்களின் ஹதீஸ் ஆதார மாகும். அவ்வாறே ஒருமுறை நபியவர்கள் ஆயிஷா(றழி)யைப் பார்த்து 'எனக்கு முன் நீ மரணித்து விட்டால் நானே உன் னைக் குளிப்பாட்டுவேன் , கபன் செய்வேன்.நானே உனக்குத் தொழுகையும் நடத்தி நானே நல்லடக்கமும் செய்வேன் என்றா ர்கள். – இப்னுமாஜ.். .

➢ ஒரு மையித்தைக் குளிப்பாட்டுவதற்கு மிகவும் அருகதையு டையோர் அவரின் நெருங்கிய உறவினர்களாவர். எனினின் குளிப்பாட்டும் முறை , சட்டதிட்டங்களை அவர்கள் தெரிந் திருத்தல் அவசியம்.

நபியவர்களை அவர்களின் சாச்சாவின் மகனும் மகளின் கண வருமான அலி(றழி) குளிப்பாட்டியமை குறிப்பிடத்தக்கது. அவ ர்கள் கூறுகின்றார்கள்... நபியவர்களை நான்தான் குளிப்பாட் டினேன். வழக்கமாக மையித்களின் காணப்படும் விடயங்கள் (அசுத்த நிலைகள்) நபிகளாரிடமும் உள்ளனவா? எனக் கவ னித்தேன்.ஆனால் அவ்வாறு எதையும் என்னால் காண முடிய வில்லை. நபியவர்கள் உயிருடனும், மரணித்த பின்னரும் மணம் கமளக் கூடியவர்களாகவே இருந்தார்கள். - இப்னு மாஜ.்..

➢ ஜனாஸாவைக் குளிப்பாட்டுவதை, அல்லது நல்லடக்கத் துக்காக கப்று வெட்டுவதைப் பொறுப்பெடுப்போர் அப்பணி யை (கூலியை எதிர்பார்க்காமல்) அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்துடன் செய்வதோடு, ஜனாஸாவில் தென்படும் குறைகளை யாருக்கும் சொல்லாமல் மறைக்கும் நம்பிக்கை க்குரிவர்களாக இருந்தால் அல்லாஹ் அவர்களுக்கு மிகப் பெரிய நற்கூலிகளை வழங்குகின்றான் என்று நபியவர்கள் உறுதியளித்துள்ளார்கள்.

யார் ஒரு மையித்தைக் குளிப்பாட்டும் போது தென்படும் குறை களை யாரிடமும் சொல்லாமல் மறைக்கின்றாரோ அல்லாஹ் அவருக்கு நாட்பது தடவைகள் பாவங்களை மன்னிக்கின்றான். யார் மையித்துக்காக் கப்று தோண்டுகிள்றாரோ அவர் அம் மய்யித்துக்கு மறுமைநாள் வரை வீடுகட்டி குடியிருத்தினால் கிடைக்கும் நன்மையைக் கொடுக்கின்றான் .மையித்தைக் கப ன் செய்பவருக்கு மறுமையில் அல்லாஹ் சுந்துஸ், இஸ்பத்ரக் எனப்படும் இரு உயர் ரகப் பட்டாடைகளைப் போர்த்தி கௌர விக்கின்றான் என்று நபியிவர்கள் கூறியுள்ளார்கள் . - ஹாகிம்.

எந்த நல்லமலாகினும் அது அல்லாஹ்வால் ஏற்றுக் கொள் ளப்படுவதற்கு இக்லாஸ் எனும் தூய எண்ணம் அவசியம் என் பதை பல்வேறு குர்ஆன்-ஹதீஸ் ஆதாரங்கள் உணர்த்தி நிற்கின்றன.

அபூஉமாமா எனும் நபித்தோழர் நபியவர்களிடம் வந்து அல் லாஹ்வின் தூதரே! ஒருவர் பணத்துக்காகவோ, புகழுக்கா கவோ இறைபாதையில் போர் புரிந்தால் அவருக்கு அதற்காக நன்மை கிடைக்குமா? என்று வினவினார்கள். அதற்கு நபிய வர்கள் ‘ அவருக்கு எவ்வித நன்மையும் கிடையாது, அல்லா ஹ் அவனுக்காக மட்டும் தூய்மையாகச் செய்யப்பட்ட , அவ னது திருப்பபொருத்தம் மாத்திரமே எதிர்பார்க்கப்பட்ட அமல் களைத் தவிர வேரெந்த அமல்களையும் ஏற்றுக்கொள்வதில் லை என்றார்கள். –நஸாயி.

- மையித்தைக் குளிப்பாட்டியவர் குளித்துக்கொள்வது ஸூன்னத்தாகும்.

நபியவர்கள் கூறினார்கள்.. மையித்தைக் குளிப்பாட்டியவர் குளித்துக் கொள்ளவும். அதனைத் தூக்கிச் சென்றவர் வுளூச் செய்து கொள்ளட்டும். – அபூதாவுத், திர்மிதி .

➢ போர்க்களத்தில் ஸஹீதாக்கப்பட்டவர்களைக் குளிப்பாட்டக் கூடாது. அவர்கள் குளிப்பு கடமையான – ஜூனுபாளிகளாக இருப்பினும் சரியே. அவ்வாறே அவர்களுக்கு ஜனாஸாத் தொழுகை நடத்தவும் கூடாது.

இதற்கான ஆதாரங்கள்..

- உஹத் யுத்தத்தில் மரணித்த ஸஹீத்கள் அனைவரும் குளி ப்பாட்டப் படாமல் தொழுவிக்கப்படாத நிலையிலேயே நல்ல டக்கம் செய்யப்பட்டார்கள். – அபூதாவுத்.

-நபியவர்கள் உஹத் யுத்தத்தில் வீரமரணமடைந்த தியாகிகள் விடயத்தில் ‘அவர்களை அவர்களது இரத்தத்துடனேயே அடக் குங்கள். அவர்களுக்கு நான் சாட்சியாளனாவேன்’ என்று கூறி விட்டு அல்லாஹ்வுக்காக போர்க்களத்தில் காயமுற்ற யாரா கிலும் அவர்கள் மறுமையில் அதேபோல் இரத்தம் தோய்ந்தவ ர்களாகவே எழுப்பப்படுவார்கள். அதன் நிறம்தான் இரத்தத்தின் நிறம். வாடையோ கஸ்தூரி வாடையாயிருக்கும் என்றார்கள். –புகாரி.

-உஹத் யுத்தம் முடிவுற்றதும் நபியவர்கள் யாராவது காணா மல் போயுள்ளார்களா? என வினவியதும் தோழர்கள் ஆமாம் இன்ன இன்ன நபர்களைக் காணவில்லை என்றனர். உடனே நபியவர்கள் ஜூலைபிப் என்ற நண்பரை நான் காணவில்லை என்றதும் அனைவரும் அவரைத் தேடினர். அவர் ஓரிடத்த்தில் ஏழு எதிரிகளுக்குமத்தியில் வீரமரணமடைந்து கிடந்தார். நபி யவர்களிடம் நபித்தோழர்கள் ‘யாரஸூலல்லாஹ்! அவர் ஏழு எதிரிகளைக் கொன்றுவிட்டு வீரமரணமடைந்து விட்டார் என்று கூறினர். உடனே நபியவர்கள் ‘ யாஅல்லாஹ் இவர் என்னை ச் சார்ந்தவர் நான் இவரைச்சார்ந்தவன் என மூன்றுமுறை சொ ல்லி விட்டு தனது கைகளால் அவரைத் தூக்கிய நபியவர்கள்

அவருக்காகத் தோண்டப்பட்ட கப்ரில் அவரைக் கிடத்தினார் கள். அவர் குளிப்பாட்டப்பட வில்லை. –முஸ்லிம்.

அதேபோல் ஹன்ழலா (றழி) எனும் நபித்தோழர் (திருமணம் முடித்து முதலிரவை மாத்திரமே மனைவியுடன் கழித்த நிலை யில்) உஹத் யுத்தத்தில் கலந்துகொண்டு மரணித்தவேளை நபியவர்கள் தம் தோழர்களிடம் ‘ மலக்குகள் உங்கள் நண் பரைக் குளிப்பாட்டுவதை நான் காண்கின்றேன். எனவே அது பற்றி அவர்களின் மனைவியிடம் விசாரியுங்கள் என்றார்கள். விசாரித்தபோது அவர்கள் அன்றிரவு இல்லறத்தில் ஈடுபட்டு விட்டு கடமையான குளிப்பைக்கூட நிறைவேற்றாத நிலை யிலேயே போர்க்களத்துக்கு வந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. அப்போது நபியவர்கள் அதனால்தான் மலக்குகள் அவரைக் குளிப்பாட்டியிருக்கின்றார்கள் என்றார்கள். - பைஹகி, ஹாகிம்.

# (09)

# கபன் செய்தல்.

மையித்தின் முழு உடலையும் சுத்தமான துணியால் உரிய முறைப்படி சுற்றிக் கட்டுவதை கபன் அணிவித்தவ் எனப்படும. மையித்தைக் குளிப்பாட்டுதல் நிறைவுற்றதும் அதைக் கபன் செய்வது கடமையாகும். ஏனெனில் நபியவர்கள் ஒட்டக த்திலிருந்து கீழே விழுந்து மரணித்த ஸஹாபியின் விடயத்தில் மையித்துக்கான கமைகளைத் தெளிவுபடுத்தும் போது ‘ அவ ரைக் கபன் செய்யுங்கள்’ என்று கூறியுள்ளார்கள். – புகாரி, முஸ்லிம்.

கபன் விடயத்தில் பின்வரும் நபியவர்களின் வழிகாட்டல்களைக் கவனத்தில் எடுப்பது அவசியமாகும்.

**1-கபன் மற்றும் ஜனாஸா நல்லடக்கத்திற்கான அனைத்து செலவினங்களும் மையித்தின் தனிப்பட்ட கணக்கிலிருந்து செலவுசெய்யப்படல் வேண்டும்.** ( யாராவது மனமுவந்து வழ ங்க முன்வந்தாலும் ஏற்றுக்கொள்ள முடியும்.)

இதற்கு முஸ்அப் பின் உமைர்(றழி) அவர்களின் சம்பவம் ஆதாரமாகும். கப்பாப்(றழி) அறிவிக்கின்றார்கள்..

நாம் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி நபியவர்களு டன் ஹிஜ்ரத் செய்திருந்தோம். அதற்கான கூலி அல்லாஹ் விடம் எங்களுக்கு உறுதியாகி விட்டிருக்கும். அக்கூலியின் பெறுபேறாக இவ்வுலகில் பிற்காலத்தில் சிறிது பலனடைந் தவர்களுமுண்டு. எதையுமே அனுபவிக்காமல் மரணித்து விட்ட வர்களும் உண்டு. முஸ்அப்(றழி) யும் அப்படியானவர்தான்.

உஹத் யுத்தத்தில் அன்னார் கொல்லப்பட்டபோது அவர் அணிந்திருந்த ஆடையைத் தவிர அவரிடம் எவ்வித சொத்தும் இருக்கவில்லை. அதனால் அவரின் தலையை மூடினால் காலும் காலை மூடினால் தலையும் வெளிப்படுமளவுக்கு சிறியதாயிருந்தது. நபியவர்கள் ‘அவரது தலையை துணியால் மூடிவிட்டு கால்களுக்கு புற்களைக் போட்டு மறையுங்கள்’ என்றார்கள். — புகாரி.

**2-கபன் துணி மையித்தின் அனைத்து உடலையும் நன்கு மறைக்குமளவுக்கு விசாலமாக தாராளமான இருப்பது அவசியமாகும்.**

நபித்தோழர் ஒருவர் மரணித்தபோது மக்கள் நபியவர்களுக்கு அறிவிக்காது குறைந்த துணியால் கபன் செய்து இரவிலேயே அடக்கம் செய்து விட்டார்கள். இதையறிந்த நபியவர்கள் மக்கள் இரவுவேளையில் ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொள்வது சிரமமாயிருப்பதால் அத்தியாவசிய தேவைக்காகவேயன்றி இரவில் அடக்கம் செய்ய வேண்டாமென தடுத்தார்கள். அவ்வாறே ‘நீங்கள் கபன் செய்தால் சிறப்பாக முழுமையாகக் கபன் செய்யுங்கள்’ என்றார்கள். —முஸ்லிம்.

சிறப்பாக கபன் செய்வதென்பது போதுமையானளவு துணியைப் பயன்படுத்தலென பொருள் கொள்ளப்படும். அத்துணி பாவித்த பழைய சுத்தமான துணியாயினும் சரியே! மாறாக மிக அதிகமான அல்லது மிக விலையுயர்ந்த துணியால் கபன்செய்தல் என்று அர்த்தமாகாது.

**3-கிடைத்த கபன்துணியால் உடலின் ஒரு பகுதியையே மறைக்க முடியுமாயிருப்பின் அதனைக் கொண்டு தலையை மறைத்துவிட்டு கால்களை இலை தழைகளால் மறைப்பது நபிவழியாகும்.** இதற்கு மேற்கூறப்பட்ட முஸ்அப்(றழி)யின் சம்பவத்துடன் கப்பாப்(றழி) அவர்களின் சம்பவமும் ஆதாரமாகும்.

ஹாரிதா(றழி) அறிவிக்கின்றார்கள்..

கப்பாப்(றழி) மரணப்படுக்கையிலிருக்கும் போது நான் அன்னாரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவர்களின் வயிற்றில் ஏழு இடங்களில் ( காபிர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில்)

தீயினால் சுட்ட தழும்புகள் இருந்தன. அப்போது அவர்கள் வேதனையால் துடித்துக் கொண்டே ‘ நபியவர்கள் உங்களில் எவரும் அவருக்கு ஏற்பட்ட துன்பத்தினால் மரணிக்க ஆசைப் பட வேண்டாம்’ என்று சொல்லியிருக்காவிடில் நான் அப்போது மரணிப்பதையே விரும்பியிருப்பேன். நான் நபியவர்களுடன் இருந்த காலத்தில் என்னிடம் ஒரு வெள்ளிக்காசு கூட இருந்ததில்லை. ஆனால் தற்போது என் வீட்டில் நாற்பதாயிரம் வெள்ளிக்காசுகள் உள்ளன என்றார்கள் . அப்போது அவர்கள் தனக்காக தயாராக வைத்திருந்த கபன் துணி கொண்டு வரப்பட்டது. அதைப் பார்த்தவுடன் அழுதுகொண்டே .. ஹம் ஸா(றழி) அவர்கள் உஹதில் ஸஹீதாக்கப்பட்ட வேளை அவ ர்களைக் கபன் செய்ய போதிய துணிகூட இருக்க வில்லை. அவர் அணிந்திருந்த துணியால் தலையை மூடினால் காலும் காலை மூடினால் தலையும் வெளிப்பட்டன. எனவே அத்துணி யால் தலையை மூடிவிட்டு கால்களுக்கு இத்கிர் எனப்படும் புற்கள் போட்டு மறைக்கப்பட்டன என்றார்கள் – அஹ்மத்.

**4-கபன் துணி குறைவாகவும் ஜனாஸாக்கள் அதிகமாகவும் இருக்கும் சந்தர்ப்பங்களில் ஒரே துணியில் பல ஜனாஸாக் களைக் கூட கபன் செய்ய அனுமதியுள்ளது. அவ்வாறே ஒரே கப்ரில் பல் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யவும் அனுமதியுள்ளது.**

நபியவர்களின் சாச்சாவான ஹம்ஸா(றழி) அவர்கள் உஹது யுத்தத்தில் ஸஹீதாக்கப்பட்ட போது நபியவர்கள் அன்னாரின் உடலுக்கு அருகில் நடந்துவந்தார்கள். அவ்வுடல் சித்திரவதை செய்யப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு இருந்தது. உடனே நபி யவர்கள் துக்கத்துடன்.. ‘ஹம்ஸாவின் சகோதரி ஸபிய்யா சங் கடப்படுவார் என்றில்லாவிடில் அன்னாரின் ஜனாஸாவை அப் படியே பறவைகள் விலங்குகள் கொத்திச் சாப்பிடட்டும், மறு மையில் பறவை-விலங்குகளின் வயிற்றிலிருந்து அவர் எழுப் பப்படட்டும் என விட்டிருப்பேன் எனக் கூறிவிட்டு அவர்கள் அணிந்திருந்த துணியினாலேயே அன்னாரைப் போர்த்தி கபன் செய்தார்கள். தலையை மூடினால் காலும் காலை மூடினால் தலையும் வெளிப்பட்டன. எனவே தலையை துணியால் மூடி விட்டு கால்களைப் புற்களால் மூடினார்கள். அன்று உஹது

போரில் ஸஹீதானோரில் அவரைத் தவிர வேறு எவருக்கும் நபியவர்கள் தொழுகை நடத்தவில்லை. கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததால் துணி போதவில்லை என் பதை நபியவர்களிடம் முறையிட்டோம். அதற்கு நபியவர்கள் இரண்டு, மூன்று பேர்களை ஒரே துணியில் கபன் செய்வித்து 'ஒரே கப்ரில் இரண்டு மூன்று பேரை அடக்குங்கள். அதிகம் குர்ஆனை மனனம் செய்தவரை முதலில் கப்ரிலே வையுங் கள்" என்றார்கள். – அபூதாவுத் ,திர்மிதி.

**5- யுத்தத்தில் மரணித்த ஷஹீத்கள் அணிந்திருந்த ஆடை களைக் கழட்டி வேறுபடுத்தாது அவ்வாடையுடனேயே கபன் செய்ய வேண்டும் என்பது நபியின் கட்டளையாகும்.**

நபியவர்கள் உஹதில் ஸஹீதாக்கப்பட்டவர்களின் விடயத்தில் கூறினார்கள் .. அவர்களை அவர்களின் துணியுடனேயே போர்த்துங்கள். – அஹ்மத்.

**6- கபன் செய்யும்போது மூன்று துணிகளால் போர்த்தி கபன் செய்வது ஸுன்னத்தாகும். அவ்வாறே உஹதில் உயிர் நீத்த ஸாபாக்களுக்கு போல் ஒரு துணி ,இரு துணிகளாலும் கபன் செய்யவும் முடியும். துணியெதுவும் இல்லாதவிடத்தில் உடு த்திருந்த ஆடையையே கூட கபனாக ஆக்கிக் கொள்ள முடியும்.**

ஆயிஷா(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்களுக்கு கபன்செ ய்யும்வேளை சட்டை தலைப்பாகை நீங்கலாக - யமன் நாட்டு ஸஹூலிய்யா ரக வெண்ணிற ஆடைகள் மூன்றினால் கபன் செய்யப்பட்டது. அவ்விரண்டும் மேலதிகமாக உடுத்தப்பட்டன. – அபூதாவுத் ,திர்மிதி.

மேலும் நபியவர்கள் கூறியுள்ளார்கள்.. உங்கள் ஆடைகளில் வெண்ணிற ஆடைகளையே அணியுங்கள். ஏனெனில் அது உங்கள் ஆடைகளிலேயே சிறந்ததாகும். அவ்வெள்ளைத்துணி யினாலேயே உங்கள் மரணித்தவர்களை கபன் செய்யுங்கள். – அபூதாவுத், திர்மிதி.

**(7)ஒரு துணியால் மாத்திரம் கபன் செய்தாலும் போதுமாகும் என் பதற்கு பின்வரும் ஹதீஸ் நிகழ்வுகள் சான்றாகின்றன.**

ஒரு கிராப்புற அறபி நபிகளாரிடத்தில் வந்து இஸ்லாத்தை ஏற்று ஹிஜ்ரத்தும் செய்தார். ஸஹாபாக்கள் சிலரின் கால்நடைகளைகப் பராமரிப்பதே இவர் தொழில். கைபர் போரின் போது ஏராளமான கனீமத் பொருட்கள் முஸ்லிம்களுக்குக் கிடைத்த வேளை நபியவர்கள் அவற்றை ஸஹாபாக்களுக்குப் பகிர்ந்தளித்த போது இவருக்கும் ஒரு பங்கு கொடுக்கப்பட்டது. அதைப் பெற்ற அவர் நேராக நபியிடத்தில் வந்து என்ன இது? என்று கேட்டார். நபிகளும் யுத்தத்தில் உமக்குக் கிடைத்த பங்கு என பதிலளித்தார்கள். அப்போது அவர் நான் இதற்காக இஸ்லாத்தைத் தழுவவில்லை. இதற்காக உம்மைப் பின்பற்றவுமில்லை. மாறாக ( தனது தொண்டைப் பகுதியைக் காட்டி) இவ்விடத்தில் எனக்கு அம்பால் எறியப்பட வேண்டும் அதனால் நான் ஸஹீதாக வேண்டும் என்பதற்காகவே இஸ்லாத்தை ஏற்றேன் என்றார். நபியவர்கள் நீ அல்லாஹ்வின் விடயத்தில் உண்மையாளனாகின் அல்லாஹ் உன்னை உன்மைப்படுத்துவான் என்று கூறி விட்டுவிட்டார்கள். பின்பு நடந்த ஓர் யுத்தத்தில் அவர் ஸஹீதாக்கப்பட்டு அவர் அப்போது சுட்டிக்காட்டிய அதே இடத்தில் அவர் அம்பினால் தாக்கப்பட்ட நிலையில் அவரை நபீயவர்களிடம் தூக்கிக் கொண்டு வரப்பட்டது. அப்போது நபியவர்கள் அவரா இவர்? எனக் கேட்க ஆமென பதில்கூறப்பட்டது. அவர் உண்மைகூறியதால் அல்லாஹ்வும் அவரை உண்மைப்படுத்தி விட்டான் எனக் கூறிவிட்டு நபியவர்களின் ஜூப்பா ஒன்றினால் அவரைக் கபன்செய்து முன்னால் வைத்து அவருக்குத் தொழுகையும் நடத்தினார்கள். அத்தொழுகையில் அவருக்கு கேட்ட துஆவில் 'யாஅல்லாஹ் நிச்சயமாக இவர் உன் அடிமை. உன் பாதையில் ஹிஜ்ரத் செய்து ஷஹீதாகியும் விட்டார். இதற்கு நான் சாட்சியாவேன்' என்று பிரார்த்தித்தது தெளிவாகக் கேட்டது. – நஸாயி.

**அடுத்த சம்பவம்**.. ஸுபைர் பின் அவாம்(றழி) அறிவிப்பது..
உஹத் போர் முடிவுற்ற நேரத்தில் ஒரு பெண் யுத்தத்தில் சித்திரவதைக்குள்ளாகி கொல்லப்பட்டோர் கிடக்கும் இடத்தை நோக்கிச் சென்றார். நபியவர்கள் ஒரு பெண் இக்காட்சியைக் காண்பதை வெறுத்ததனால் ஒருபெண்! ஒரு பெண்! தடுத்து

நிறுத்துங்கள் எனக் கூறினார்கள். நான் அவரைத் தடுக்க உடனே ஓடிச்சென்றபோது தான் அவர் எனது தாயும் ஹம்ஸா (றழி)யின் சகோதரியுமான ஸபிய்யா(றழி) என்பதை அறிந்தேன். அவரை நான் தடுத்த போது எனது நெஞ்சில் கையால் தள்ளிவிட்டு விலகிச்செல்! என்றுகூறிவிட்டு நடந்தார்கள். அவர் பலம்மிக்கதொரு பெண்ணாய் இருந்தார்கள். நானோ ‘ நபியவர்கள் உங்களைச் செல்லவேண்டாமெனத் தடுக்கின்றார்கள்’ என்று சொன்னவுடன் அப்படியே நின்று விட்டார்கள்.
அங்கே ஹம்ஸா(றழி) சித்திரவதைக்குள்ளாகி இறந்து கிடந்தார்கள். அவர்களுக்கு அணிவிக்கவென இரு துணிகளை சகோதரி சபிய்யா(றழி) கொண்டுவந்திருந்தார். அங்கே மற்றொரு அன்சாரி ஸஹாபியும் ஸஹீதாகிக் கிடந்தார். அவருக்கும் கபன் செய்ய ஆடையில்லை. ஹம்ஸா(றழி)யை இரு துணிகளால் கபன் செய்துவிட்டு அன்சாரியை வெறுமனே விட நாம் வெட்கப்பட்டு ஆளுக்கொரு துணியால் கபன்செய்ய முடிவெடுத்து யாருக்கு எந்தத் துணியென முடிவெடுக்க சீட்டுப் போட்டுப் பார்த்தோம். அதன் படி அவரவருக்கு கிடைக்கப் பெற்ற துணியால் கபன் செய்து அடக்கம் செய்தோம்.

– அஹ்மத்.

**8-ஹஜ் உம்றாவுக்காக இஹ்ராம் தரித்த நிலையில் மரணிக்கும் ஆணிகளை அதே இரு இஹ்ராம் துண்டுகளிலேயே கபன் செய்வது நபிவழியாகும்.**

நபியவர்கள் ஹஜ்ஜில் வைத்து ஒட்டகத்திலிருந்து வீழ்ந்து மரணித்த ஒரு நபித்தோழர் விடயத்தில் ‘அவரது இரு துணிகளிலேயே அவரைக் கபன் செய்யுங்கள்’ என்று கூறியுள்ளார்கள்.

**9- கபன் செய்ய வெள்ளை ஆடையே சிறந்ததெனிலும் வெள்ளையில் சிறு சிவப்புக் கோடுகள் போடப்பட்ட ஆடையில் கபன் செய்ய வசதியிருப்பின் அதனால் கபன் செய்வதும் ஸுன்னத்தாகும்.**

நபியவர்கள் கூறினார்கள்.. உங்களில் ஒருவர் மரணித்தால் அவரை ஹிப்ரா எனப்படும் வெள்ளையில் சிவப்புக்கோடுபோடப்பட்ட துணியால் கபன் செய்ய வசதியிருப்பின் அவ்வாறு செய்யவும். – அபூதாவூத்.

**9- கபன் துணி விடயத்தில் அதிக விலைமிக்க துணிகளைத் தவிர்ப்பதும் மூன்று துணிகளுக்கு அதிகமாக கபன் செய்வதும் ஸுன்னாவுக்கு மாற்றமானதாகும்.** அது வீண் விரயம் செய் வதாகவே கருதப்படும். பணத்தை வீண் விரயம் செய்வது பற் றி பல எச்சரிக்கைகள் உள்ளன. அல்லாஹ் மூன்று விடயங்க ளை வெறுக்கின்றான். ஆதாரமற்ற செய்திகளைப் பரிமாறல், பொருள் விரயம், (மார்க்க விடயத்தில்) அளவுக்கதிகம் (குதர்க்க) வினாக்கள் தொடுத்தல் என்பனவாகும். – புகாரி, ஸுன்னாவில் 3 துணிகளால் கபன் அனுமதிக்கப்பட்டமை அந்த மையித்துக்கு நாம்செய்யும் கண்ணியம் என்ற வகையிலாகும். அதனால் அதுகூட விரயம் போல் தெரிந்தாலும் அது வீண் விரயமல்ல!. இவ்விடத்தில் கலீபா அபூபக்ர்(றழி)யில் நிலைப் பாடு நினைவுகூறத்தக்கதாகும். அவர்களின் மரண வேளையில் தன்னை பழைய துணியால் கபன் செய்யுமாறும் புதுத்துணிக்கு உயிரோடிருப்பவரே மிகத் தகுதியானவர் என்றும் கூறினார்கள். இது அவர்களின் பேணுதலின் உச்ச நிலையாகும். – அர் றவ்ழா அந்நதிய்யா 1-165.

**8- கபன் துணியின் எண்ணிக்கை விடயத்தில் ஆண்-பெண் இருவருக்கும் ஒரே சட்டமேயாகும். பெண் மையித்தை ஐந்து துணிகளால் கபன் செய்ய வேண்டுமென வரும் லைலா பின்த் காயிப் அவர்களின் ஹதீஸ் ளயீபாகும்.**

# (10)

# மையித்தை சுமந்து செல்லல்.

ஜனாஸாவுக்குச் செய்ய வேண்டிய மூன்றாவது கடமை மையித்துக்காகத் தொழுவிப்பதாகும். அதற்கு முன் மையித்தை தொழுகைக்காகச் சுமந்துசெல்லும் முறை அதன் சிறப்புகள், அதில் தவிர்க்கப்பட வேண்டியவைகள் பற்றி நோக்குவோம்.

## மையித்தை சுமந்து செல்லல்.

மையித்தைத் தொழுகைக்காகவும் நல்லடக்கத்திற்காகவும் சும ந்து செல்வதும் அதைப் பின்தொடர்ந்து செல்வதும் ஒரு முஸ் லிம் மற்றொருவருக்குச் செய்யவேண்டிய கடமைகளில் உள்ள தாகும்.
நபியவர்கள் கூறியுள்ளார்கள்..
ஒரு முஸ்லிம் தன் சகோதர முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்தாகும். ஸலாத்துக்கு பதிலளித்தல்,நோய் விசா ரித்தல், ஜனாஸாவைப் பின்தொடர்தல், (விருந்து போன்ற) அழைப்புக்கு பதிலளித்தல், தும்மியவருக்கு றஹ்மத் வேண்டி பிரார்த்தித்தல் ஆகியனவாகும் என்றார்கள். –புகாரி.

நோயுற்றோரை சந்தித்து வாருங்கள், ஜனாஸாவைப் பின் தொ டர்ந்து செல்லுங்கள். அது உங்களுக்கு மறுமையை நினைவூ ட்டும். – புகாரி பில் அதப், அஹ்மத்.

➢ ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்வது இருவகைப் படும். ஒன்று வீட்டிலிருந்து தொழுகைக்காக எடுத்துச் செல்வ து, அடுத்தது அங்கிருந்து அடக்குமிடத்திற்கு எடுத்துச் செல்வ து. இவ்விரண்டிலும் முதல் வகைக்கு ஒருகிராத் (மலை யள

வு) நன்மைகளும் இரண்டையும் சேர்த்து செய்தால் இரண்டு கீராத் நன்மைகளும் கிடைக்குமென நபியவர்கள் வாக்களித் துள்ளதால் இருவகையிலும் பின்தொடர்தலே மிக ஏற்றமா னதாகும்.

அபூஹுரைரா(றழி) அறிவிக்கின்றார்கள்.. யார் ஒரு மையித்தை அதற்குத் தொழுகை நடத்தப்படும் வரை பின்தொடர்ந்து செல் கின்றாரோ அவருக்கு ஒரு கீராத் நன்மைகள் வழங்கப்படும். அடக்கம் செய்யப்படும் வரை பின்தொடர்ந்து சென்றால் இர ண்டு கீராத் நன்மைகள் வழங்கப்படும் என நபியவர்கள் கூறி னார்கள். கீராத் என்றால் யாதென வினவப்பட்டபோது நபிய வர்கள் இரண்டு பிரமாண்டமான மலையளவு நன்மை அல்லது உஹது மலையளவு நன்மை என்றார்கள். –புகாரி.

இந்த ஹதீஸைக் கேள்விப்பட்ட இப்னுஉமர்(றழி)யவர்கள் ஆச்சரியப்பட்டு ஒருவரை ஆயிஷா(றழி)யிடம் அனுப்பி இப்படி நபியவர்கள் சொன்னார்களா? என உறுதிப்படுத்தி வரும்படி அனுப்ப அன்னையாரும் ஆம் என பதிலளித்தார்கள். உடனே இப்னுஉமர் நான் இதுவரை எத்தனையோ கீராத் நன்மை களை வீணாக்கி விட்டேனே! என கைசேப்பட்டார்கள். அதற்கு அபூஹுரைரா(றழி) நான் வியாபாரத்திலோ , விவசாயத்திலோ ஈடுபடுவதில்லை. மாறாக சதாநேரமும் நபியவர்களுடனேயே இருப்பேன். அது நபியவர்களிடம் கற்றுக் கொள்வதற்காகவும் , அவர்கள் தரும் உணவைப் பெற்று உண்பதற்காகாவுமே! என்றார்கள். அதற்கு இப்னு உமர்(றழி) நீங்கள்தான் நபிய வர்களுடன் அதிகம் கூட இருந்தவரும் அவர்கள் சொன்ன ஹதீஸ்களை அதிகம் கற்ற சிறப்புக்குரியவருமாவீர் என்றார் கள். – முஸ்லிம்.

**மையித்தைப் பின்தொடர்ந்து சென்று தொழுகையில் கலந்து கொள்வதன் சிறப்பு பற்றிய மற்றொரு நபிமொழி..**

ஒருமுறை நபியவர்கள் ஸஹாபாக்களைப் பார்த்து இன்று உங்களில் யாரேனும் நோன்பு நோற்றவர் உண்டா? என்ற போது அபூபக்ர்(றழி) ஆம் நான் என்றார்கள். இன்று ஒரு நோயாளியை நோய் வினவச் சென்றவர் உண்டா? என்ற போது அதற்கும் அவர்களே ஆம் என்றார்கள். இன்று ஒரு

ஜனாஸாவில் கலந்து கொண்டவர் யாரெனக் கேட்க அதற்கு அவர்களே ஆம் என்றார்கள். இன்று உங்களில் யார் ஒரு ஏழைக்கு உணவளித்தவர் என்றதற்கு அதற்கும் அவர்களே ஆமென்றார்கள். உடனே நபியவர்கள் இந்த நான்கு விடயங் களும் ஒரே தினத்தில் ஒரு நபரிடமிருந்து இடம்பெற்றால் நிச்சயமாக அவர் சுவர்க்கவாதியாகவே இருப்பார் என்றார்கள். – முஸ்லிம்

➢ **ஜனாசாவைப் பின்தொடர்ந்து செல்வதன் மகிமை பற்றிய ஹதீஸ்கள் ஆண்கள் விடயத்தில் மாத்திரம் சொல்லப்பட்ட தாகும். பெண்கள் ஜனாஸாவைப் பின்தொடரப் கூடாதென நபியவர்கள் தடுத்துள்ளார்கள். இருப்பினும் அது கட்டாயத் தடை இல்லை. அத்தியாவசியமான சில சமயங்களில் அதற்கு பெண்களை அனுமதித்துமுள்ளார்கள்.**

உம்மு அதிய்யா(றழி) அறிவிக்கின்றார்கள்.. பெண்களாகிய நாங்கள் மையித்தைப் பின்தொடர்ந்து செல்லக் கூடாதெனத் தடுக்கப்பட்டோம். எனினும் அது கட்டாயத் தடையாக இருக்க வில்லை. –புகாரி.

➢ **மையித்தைச் சுமந்து செல்வோர் மற்றும் பின்தொடர் வோர் அந்நேரத்தில் அமைதியாகச் சுமந்து செல்வதும் மார்க்க த்திற்கு முரணான எச்செயலையும் செய்யாமலிருப்பதும் நபிவழியாகும்.**

உதாரணமாக அழுது ஒப்பாரிவைத்த நிலையில் செல்லல், சாம்புராணி, ஊதுபத்திப் புகை போட்டுக் கொண்டு செல்லல். மையித்தைப் பின்தொடர்வோருக்குப் பன்னீர் தெளித்தல் போன் றவை நபியவர்கள் செய்யாத நூதன அனுஸ்டானங்களாகும். இவற்றில் சிலவற்றை நேரடியாக நபியவர்கள் குறிப்பிட்டுத் தடைசெய்துள்ளார்கள்.

நபியவர்கள் கூறினார்கள்..தீச்சட்டி ஏந்தியோ, சத்தமிட்டுக் கொண்டோ மையித்தை எடுத்துக் கொண்டு செல்லக் கூடாது. அபூதாவூத் , அஹ்மத்.
மற்றொரு அறிவிப்பில் நபியவர்கள் கூச்சல் போட்டுக் கொண் டும், தீ எரித்தும் மையித்தை எடுத்துச் செல்வதைத் தடுத்துள்

ளார்கள்.
(அபூ ய.்.லாவின் அறிவிப்பில்) மணியோசையுடன் ஜனாஸா கொண்டுசெல்லப்படக் கூடாது என்றும் இடம்பெற்றுள்ளது. - இப்னு மாஜ.்..
மேற்படி விடயங்கள்எதுவும் தமது ஜனாஸாக்களைக் கொண்டு செல்லும் போது இடம்பெறக்கூடாதென அபூஹுரைரா, அம்ர் பின் ஆஸ்(றழி) போன்ற பல ஸஹாபாக்கள் கண்டிப்பாக வஸி ய்யத்தும் செய்துள்ளார்கள். பார்க்க : முஸ்லிம் 1-78 அஹ்மத் 4-199.

இவ்வாறே சில பகுதிகளில் மையித்தைக் கொண்டுசெல்கை யில் தக்பீர், ஸஹாதத் கலிமா, திக்ர் போன்றவற்றை சத்த மிட்டு ஓதி- சொல்லிக் கொடுக்கும் வழக்கமும் பித்அத் ஆகும். கைஸ் பின் இபாத் அறிவிக்கின்றார்கள்.. நபித்தோழர்கள் ஜனாஸாவின் போது சத்தமிட்டுக் கொண்டு செல்வதை வெறுத் துள்ளார்கள். பைஹகி 4-74

மேலும் இப்பழக்கம் கிருஸ்தவர்களின் பழக்கத்தைப் பின்பற்றுவ தாகவும் அமையும். அவர்கள்தான் பிரேதங்களை எடுத்துச் செல்லும்போது அவர்களின் வேதங்களை ஓதி மந்திரங்களை ஜபித்துக் கொண்டு செல்லும் வழக்கதைக் கொண்டிருக்கின் றார்கள்.
இதைவிட கேவலமான செயல் யாதெனில் சில முஸ்லிம் நாடுகளிலேயே பிரேதங்களை மியூசிக், பேண்ட் வாத்தியங்கள் மேள-தாளங்களுடன் எடுத்துச் செல்லப்படுவதுதான் . அல் லாஹ்தான் இவர்களுக்கு நேர்வழி காட்ட வேண்டும் .

ஷாபி மத்ஹபின் பிரதான அறிஞரான இமாம் நவவி(றஹ்) இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.
அறிந்துகொள்! இவ்விடயத்தில் மிகச்சரியானதும் தெரிவு செய் யப்பட்ட கருத்துமானது யாதெனில் ஸலபுகள் வழிமுறையான மையித்தைக் கொண்டுசெல்லும் போது திக்ர், திலாவத் வேறு எதுவுமே ஓதாது அமைதியாகக் கொண்டு செல்வதேயாகும். அதன் நோக்கம் தெளிவானதாகும். அதாவது கொண்டு செல்வோரின் மனநிலை மரண சிந்தனையில் இருப்பதும், இந்த மையித்துக்கு என்ன நடக்கப்போகின்றதோ அதுதானே

எனக்கும் நடக்கும் என்பது பற்றிய அச்சத்தில் உள்ளம் அமைதியடைவதுமாகும். அந்த நேரத்தில் அதுதான் ஒருவருக்குத் தேவை. அதுதான் யாதார் த்தமும் கூட.. அதிகமானோர் இதற்கு மாற்றமாகச் செயற் படுவதுபற்றி அலட்டிக்கொள்ளவோ ஏமாந்துவிடவோவேண்டாம். ஏனெனில் புளைல் இப்னு இயாழ்(றஹ்) சொல்லும் போது நீ நேர்வழியில் நிலைத்து நில்! அதைப் பின்பற்றுவோர் குறை வாயிருப்பதையிட்டு அலட்டிக் கொள்ளாதே!. வழிதவறிய பாதைகளை உனக்கு எச்சரிக்கின்றேன். அதைப் பின்பற்றுவோர் அதி கமென்பதைக் கண்டு ஏமாந்து விடாதே! என்று கூறியுள்ளார்கள்.

தொடர்ந்து இமாமவர்கள் குறிப்பிடுகையில்.. அறிந்து கொள்! சில மார்க்க அறிவற்றவர்கள் திமஸ்க் மற்றும் பல பகுதிகளில் ஜனாஸாவை வைத்துக் கொண்டு குர்ஆன் ஓதுவதும் , அதுவும் வசனங்களை வளைத்து ராகமெடுத்து கீத நயத்துடன் ஓதுவதும் அறிஞர்களின் ஏகோபித்த முடிவின் படி ஹறாமாகும். எனது ஆதாபுல் கிராஅத் எனும் நூலில் இச்செயல் எவ்வளவு மோசமானதும் கடும் ஹராமானதுமாகும் என்பதையும் , இதனைத் தடுத்து நிறுத்த முடிந்தும் செய்யாமலிருப்போர் பாவிகளாவர் என்பது பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளேன். அல்லாஹ்வே உதவி செய்யப் போதுமானவன். அத்காருந்நவவி ப: 203.

➢ **மையித்தை தொழவைப்பதற்காகவும் நல்லடக்கத் திற்காகவும் எடுத்துச் செல்லும்போது விரைவாக எடுத்துச் செல்ல வேண்டும்.** அதாவது ஓடோடிச் செல்லவும் கூடாது. ஊர்ந்து செல்லவும் கூடாது. அவ்வாறே தேவையேற்பட்டாலேயன்றி வாகனங்களில் கொண்டு செல்லாது தோள்களில் சுமந்து செல்வதும் நபிவழியாகும்.

நபியவர்கள் கூறினார்கள்.. ஜனாஸாவை விரைவாக எடுத்துச் செல்லுங்கள். அது நல்ல ஜனாஸாவாயின் அதற்குக் கிடைக்கவிருக்கும் பாக்கியங்களை நோக்கி விரைகின்றீர்கள் என அர்த்தமாகும் அவ்வாறில்லையெனில் உங்கள் தோள்களில் ஒரு தீயவரை அதிக நேரம் சுமக்கின்றீர்கள் என அர்த்தமாகும்.
. புகாரி, முஸ்லிம்.

மற்றொரு ஹதீஸில் 'ஒரு மையித்தை ஆண்கள் சுமந்து செல்லும்போது அது நல்லதாக இருந்தால் என்னை விரைவாகக்

கொண்டு செல்லுங்கள் எனவும் தீயதாக இருந்தால் என்னை என்னை எங்கே கொண்டு செல்கின்றீர்ககள் என்றும் அங்கலாய்க்கின்றது. அது பேசும் சத்தத்தை மனிதனைத்தவிர மற்ற அனைத்து உயிரினங்களும் செவிமடுக்கின்றன. மனிதன் அதைக் கேட்டால் அப்படியே மயக்கமுற்று வீழ்ந்து விடுவான். . . புகாரி.

எனவே மையித்தை விரைவாக எடுத்துச் செல்வது கடமை என்பதை மேற்படி ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன.

இமாம் இப்னு கையும் ஜவ்ஸிய்யா(றஹ்) கூறுகின்றார்கள். இன்று சில இடங்களில் மையித்தை ஊர்வலம் செல்வது போல் மெதுவாக எடுத்துச் செல்வது மார்க்கத்திற்கு முரணான பித்அத்தும் யூதர்களைப் பின்பற்றும் செயலுமாகும். – ஸாதுல் மஆத்.

➢ **ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்பவர் ஜனாஸாலுக்கு முன்னாலும் செல்லலாம், அதிக தூரமில்லாமல் பின்னாலும் செல்லலாம். வலது ,இடது பக்கங்களிலும் செல்லலாம்.** எனினும் வாகனத்தில் அமர்ந்து செல்பவர் ஜனாஸாவை முந்தாமல் பின்னால்ச் செல்வதே நபிவழியாகும். அவ்வாறே நடந்து செல்பவர் பின்தொடர்ந்து பின்னால் செல்வதானது முன்னால் செல்வதை விடச் சிறந்ததாகும்.

நபியவர்கள் கூறியுள்ளார்கள்.. வாகனத்தில் வருபவர் ஜனாஸாவுக்குப் பின்னால் வரட்டும். நடந்து செல்பவர் முன்னாலோ, பின்னாலோ , வலது-இடதாலோ வரட்டும். – அபூதாவூத்.

அலி(றழி) குறிப்பிடுகின்றார்கள். கூட்டுத் தொழுகை தனித்துத் தொழுவதை விடச் சிறந்தது போல ஜனாஸாவுக்குப் பின்னால் செல்வது முன்னால் செல்வதைவிடச் சிறந்ததாகும். -இப்னு அபி ஷைபா.

➢ **வாகனத்தில் அமர்ந்து ஜனாஸாவைப் பின்தொடர்வது அத்தியாவச நிலைகளிலேயே அனுமதிக்கப்படுகின்றது.** அடக்கி விட்டுத்திரும்பும் போது தாராளமாக வாகனத்தில் ஏறி வரலாம். நபியவர்களுக்கு ஜனாஸாவைப் பின்தொடர ஒரு வாகனம் கொண்டுவரபப்பட்டது. ஆனால் அதில் ஏற மறுத்துவிட்டார்கள். அடக்கம் செய்யப்பட்ட பின் வாகனம் கொண்டுவரப்பட்ட போது அதில் ஏறினார்கள். இதுபற்றி வினவப்பட்டபோது மலக்குகள்

இந்த ஜனாஸாவுக்கு சமுகமளித்திருந்தார்கள் . அவர்கள் நடந்து வர நான் அமர்ந்து வருவதை விரும்பவில்லை என்றார்கள். அபூதாவுத்.

**➢ ஜனாஸாவை வாகனத்தில் வைத்து எடுத்துச் செல்லலாமா?**

ஜனாஸாவை வாகனங்கள் எடுத்துச்செல்வதால் பல்வேறு ஸுன்னத்துக்கள் தப்பிப்போகும் நிலை ஏற்படுகின்றது.ஏனெனில் அதுஸுன்னாவுக்கு முரணான பித்அத்தான வழிமுறையாகும். அடுத்தது அது காபிர்களின் பழக்கமாகும். அதேபோல் சுமந்துசெல்வோருக்கு வாக்களிக்கப்பட்ட நல்கூலிகளை இது இழக்கச் செய்வதோடு ஜனாஸாவைப் பின்தொடர்வோரின் எண்ணிக்கையையும் குறைத்து அவர்களுக்கு கிடைக்கவிருந்த நற் கூலிகளையுடம் இல்லாமலாக்கி விடுகிள்றது.

**➢ மையித்துக்காக எழுந்து நிற்கலாமா?**

மையித் கொண்டுசெல்லப்படும் போது பாதையில் எதிர்படுவோர் எழுந்து நிற்பதும், அவ்வாறே கப்ரைச் சூழ நிற்போர் அடக்கப்படும் வரை நின்று கொண்டிருப்பதும் ஆரம்ப கட்டத்தில் மார்க்க விடயமாக இருப்பினும் பின்னர் அது மாற்றப்பட்டு விட்டது. எனவே ஜனாஸாவுக்காக எழுந்து நிற்க வேண்டியதில்லை.

இதற்கான ஆதாரங்கள்..

-நபியவர்கள் ஜனாஸாவுக்காக எழுந்து நிற்பார்கள். அப்போது நாமும் எழுந்து நிற்போம். பிற்காலத்தில் நபியவர்கள் உட்கார்ந்திருக்கக் கண்டு அதனால் நாங்களும் அமர்ந்து விடுபவர்களாக ஆகிவிட்டோம்.

-நபியவர்கள் மையித்துக்காக எழுந்து நிற்குமாறு எங்களைப் பணிப்பார்கள். பின்னர் அவர்களே அமர ஆரம்பித்து விட்டார்கள். எங்களையும் அமர்ந்திடுமாறு பணித்தார்கள். – அஹ்மத்.

-இஸ்மாயீல் பின் மஸ்ஊத் கூறுகின்றார்கள்... ஈராக்கில் ஒரு முறை நான் ஜனாஸா ஒன்றில் கலந்து கொண்டேன். மக்கள் அடக்கப்படும் வரை நின்று கொண்டிருந்த வேளை அலி(றழி) அவர்கள் ‘அனைவரும் அமருங்கள் ஏனெனில் நபியவர்கள் மையித்துக்காக எழுந்து நிற்குமாறு கூறிவிட்டு பின்னர் அமருமாறு கட்டளையிட்டுள்ளார்கள் என்றார்கள். –தஹாவி.

# (11)

# ஜனாஸாத் தொழுகை நடாத்துதல்.

மையித்துக்காகத் தொழுகை நடத்துவது பர்ழு கிபாயா ஆகும். ஏனெனில் நபியவர்கள் மையித்துக்குத் தொழுகை நடத்துமாறு கட்டளையிட்ட ஏராளமான ஹதீஸ்கள் உள்ளன. அவற்றில் பல முன்னர் கூறப்பட்டுள்ளன.
மையித்துக்காகத் தொழுகை நடத்துதல் கடமை என்று பொது விதியிலிருந்து சிலர் விதிவிலக்குப் பெறுகின்றனர். அவர்கள் சிறு குழந்தைகளும் யுத்தத்தில் உயிர் நீத்த ஸஹீத்களுமா வார்கள். இவ்விருவருக்கும் தொழுவிப்பது கடமையில்லை. இருப்பினும் விரும்பினால் தொழுவிக்க முடியும் என்பதைப் பின்வரும் ஹதீஸ்கள் உணர்த்துகின்றன.

**சிறு குழந்தைகள்:** நபியவர்கள் தனது மகன் இப்றாஹீம் மரணித்த போது அவருக்குத் தொழவைக்க வில்லை.
ஆயிஷா(றழி) அறிவிக்கின்றார்கள்..
நபியவர்களின் மகன் இப்றாஹீம் பதினெட்டு மாதக் குழந்தை யாக இருக்கும்போது மரணித்து விட்டார்கள். நபியவர்கள் அவருக்காகத் தொழுவிக்க வில்லை. – அபூதாவூத்.

**ஷஹீத்:** ஏனெனில் நபியவர்கள் உஹத் யுத்தத்தில் மரணித்த ஹன்ழலா,ஜூலைபிப் உட்பட ஏனைய ஸஹீத்களுக்கு குளிப் பாட்டவும் தொழுவிக்கவும் இல்லை. இது பற்றிய ஹதீஸ்கள் குளிப்பாட்டல் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

இருப்பினும் விரும்பினால் அவர்களுக்கும் தொழுகை நடத்து வது கூடும். இதற்குப் பின்வரும் நபியவர்களின் ஹதீஸ்கள் ஆதாரமாக இடம்பெறுகின்றன.

-மரணித்த சிறுவர்களுக்கும் தொழுகை நடத்தப்படும். அவர்களி

ன் பெற்றோருக்கு மன்னிப்புக் கோரி பிரார்த்திக்கப்படும். – அபூதாவூத் ,நஸாயீ
-ஆயிஷா(றழி) அறிவிக்கின்றார்கள்..
அன்ஸாரிகளில் ஒருவரின் குழந்தையொன்று மரணித்து விட்டது. நபியவர்கள் அக்குழந்தைக்காகப் பிரார்த்தித்தார்கள். அப்போது நான் இக்குழந்தைக்கு நற்சோபனம் உண்டாகட்டும். சுவனத்துச் சிட்டுக்களில் ஒரு சிட்டுக்குருவி எந்தப் பாவமும் செய்யவுமில்லை. பாவம் செய்யும் வயதை அடையவுமில்லை எனப் பாராட்டிக் கூறினேன். அப்போது நபியவர்கள் ‘ ஆயிஷாவே! அல்லாஹ் சுவர்க்கத்தைப் படைத்து சுவர்க்கம் செல்வோரையும் படைத்தான். அவர்களை அவர்களின் பெற்றோரின் முள்ளந்தண்டுகளிலேயே உருவாக்கி வைத்து விட்டான். அவ் வாறே நரகைப் படைத்து நரகம் செல்வோரையும் படைத்து அவர்களின் பெற்றோரின் முதுகந்தண்டிலேயே உருவாக்கி விட்டான் என்றார்கள். – முஸ்லிம்.

**குறைப்பிரசவக் கட்டிக்குத் தொழவைக்க வேண்டுமா?**
குறைப்பிரசவக் கட்டி உயிர் பெற்ற நிலையில் இருந்திருந்தால் அதாவது கர்ப்பம் தரித்து நான்கு மாதங்கள் பூர்த்தியான நிலையில் பிறந்தால் தொழுவிக்க முடியும். அதற்கு முற்பட்ட காலப்பகுதியில் பிறந்தால் தொழுவிக்க முடியாது. ஏனெனில் உயிர் கொடுக்கப்பட்ட பின் உயிர் பிரிந்தால்தான் அதற்கு மையித் எனப்படும்.
நபியவர்கள் கூறுகின்றார்கள்… உங்களில் ஒவ்வொருவரும் தன் தாயின் வயிற்றில் முதல் 40 தினங்கள் விந்தாகவும் அடுத்த 40 நாட்கள் ஒட்டும் கட்டியாகவும் பின்னுள்ள 40 நாட்கள் சதைப் பிண்டமாகவும் இருந்தீர்கள். பின் ஒரு வானவர் அனுப் பப்பட்டு அதில் அவர் உயிரை ஊதுகின்றார்… - புகாரி.

சில அறிஞர்கள் பிறக்கும்போது சிசுவுக்கு உயிரிருந்தால் தான் தொழுவிக்க முடியும் எனக்கூறி ‘சிசு பிறக்கும்போது அழுதால் தொழுவிக்கப்படும், வாரிசுமையும் பெறும்’ என்ற ஹதீஸை ஆதாரமாகக் காட்டிகாலும் அந்த ஹதீஸ் பலவீனமானதாகும்.
**பருவடைவதற்கு முன் மரணிக்கும் அனைத்து குழந்தைகளும் சொர்க்கம் செல்லுமா?**

முஸ்லிமல்லாத பெற்றோருக்குப் பிறந்து சிறுபிராயத்தில் மரணிக்கும் சிறுவர்கள் விடயத்தில் பலத்த கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற வேளை முஸ்லிம் பெற்றோருக்குப் பிறந்து சிறுவயதில் மரணிக்கும் சிறுவர்கள் அனைவரும் சுவர்க்கவாசிகளே என்பது அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும். இதைப் பல ஹதீஸ்களும் வலியுறுத்துகின்றன. எனினும் மேற்படி ஆயிஷா(றழி)யிள் ஹதீஸில் மரணித்த அச்சிறுவனைப்பார்த்து அவர்கள் 'சுவனத்துச் சிட்டு' என்று வர்ணித்ததை நபியவர்கள் விரும்பாத விதமாக நடந்து கொண்டதற்கு அறிஞர்கள் பல விளக்கங்களை அளிக்கின்றனர். இமாம் ஸிந்தி (றஹ்) கூறுகின்றார்கள்.

மரணிக்கும் குழந்தைகளின் விடயம் அவர்களின் பெற்றோர் முஸ்லிமா? இல்லையா? என்பதை வைத்தே தீர்மானிக்கப் படுகின்றது. எனவே ஒரு தனிப்பட்ட முஸ்லிமை சொர்க்கவாதியென உறுதியாகச் சொல்வது தடுக்கப்பட்டதாகையால் குழந்தையின் விடயம் பெற்றோரை வைத்தே முடிவாகின்றது என்ற அடிப்படையில் அக்குழந்தையில் பெற்றோர் முஸ்லிம்களாயிருப்பினும் அவர்களை சுவர்க்கவாசிகள் என்று அடித்துச் சொல்ல முடியாததால் அவர்களின் பிள்ளைக்கும் அதே சட்டம்தான். பெற்றோர் ஒருவேளை வெளிரங்கத்தில் மாத்திரம் முஸ்லிமாகவும் உள்நிலையில் காபிராகவும் இருந்திருப்பின் அவர் பிள்ளையின் நிலையும் அதுவே எனக் குறிப்பிடுகின்றார்கள். . ( ஹாஸியதுன் நஸாயி)

➢ **அவ்வாறே யுத்தத்தில் வீரமரணமடைந்த ஸஹீத்களுக்கும் தொழுவிக்க வேண்டியதில்லையெனினும் விரும்பினால் தொழுவிக்க முடியும்.** ((நபியவர்கள் இவ்விருவர் விடயத்திலும் மரணித்தவரின் உறவினர்களின் மனநிலையைக் கவனித்து தொ ழுவிப்பதால் அவர்களுக்கு மன சாந்தி ஏற்படுமெனக் கருதிய தால் நபியவர்கள் தொழுவித்திருக்கின்றார்கள் என்றும் ஹதீஸ்க ளிலிருந்து விளங்கிட முடிகின்றது.)

நபியவர்கள் ஷஹீத்களுக்கு தொழுவித்தமைக்கு ஹம்ஸா(றழி) மற்றும் இஸ்லாத்தை ஏற்ற கிராமப் புற ஸஹாபி இருவரின் சம்பவங்களும் ஆதாரமாக அமைகின்றன. இவை முன்னமே கூறப்பட்டுள்ளன.

- **பாவச் செயலில் ஈடுபடுவோர், ஹத் அடிக்கப்பட்டு மரணித்தோர், தற்கொலை செய்தோருக்காகத் தொழுவிக்க முடியுமா? .**

ஆம்!. இவர்களுக்காகவும் தொழுவிக்க வேண்டும். ஏனெனில் இவர்களும் முஸ்லிம்களே!. இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றும் செயல்களில் எதையும் பகிரங்கமாக சொல்லாத செய்யாத, நம்பாத வரைக்கும்- கிப்லாவை முன்னோக்கி தொழும் அனைவரும் முஸ்லிம்களே! என்பதே அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும்.

ஹத் (மரணதண்டனை) நிறைவேற்றப்பட்டவருக்காக தொழுவிக்க வேண்டும் என்பதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்.

இம்ரான் பின் ஹுஸைன்(றழி) அறிவிக்கின்றார்கள்..
ஜுஹைனா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண் விபச்சாரத்தில் ஈடுபட்டதால் கர்ப்பமுற்ற நிலையில் நபியவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் மரணதண்டணைக் குற்றத்தை செய்துவிட்டதால் எனக்கு தண்டணையை நிறைவேற்றுங்கள் என்றார்.உடனே நபியவர்கள் அப்பெண்ணின் வலிகாரரை அழைத்து (விசாரித்து விட்டு) இப்பெண்ணை நன்றாக நடத்துங்கள். அவர் பிரசவித்ததும் அழைத்து வாருங்கள் என்றார்கள். அவ்வாறே அவர் வந்ததும் ( குழந்தை பால்குடி மறந்தபின் அழைத்து வாருங்கள் என்றார்கள்) அதன் பின் அப்பெண்ணின் ஆடைகளை இறுகக் கட்டிவிட்டு அவருக்கு கல்லெறிந்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. பின் நபியவர்கள் அப்பெண்ணுக்கு தொழுகை நடாத்தினார்கள். இதைக்கண்ட உமர்(றழி) ஒரு விபச்சாரிக்கு நீங்களே தொழுகை நடாத்துவதா? என ஆச்சரியத்துடன் கேட்டதற்கு ‘இப்பெண் செய்துள்ள தவ்பாவை மதீனா வாசிகள் அனைவருக்கும் பங்கிட்டாலும் போதுமையாகும். அவ்வளவு தூய தவ்பாச் செய்துள்ளார் என்றார்கள். – முஸ்லிம்.

பாவச்செயல்களில் ஈடுபட்டவர், மார்க்க கடமைகளை செய்யாத மதுபோதை, தவறான தொடர்பு இப்படிப்பட்ட பாவங்களில் ஈடுபட்டவரென அறியப்பட்டவருக்கும் தொழுவிக்க வேண்டும்.

எனினும் ஊரின் சிறந்த உலமாக்கள், பிரபல அறிஞர்கள் இத்தொழுகையை நடத்தாமல், பற்கேற்காமல் இருப்பது நல்ல தென அறிஞர்கள் கருதுகின்றனர். காரணம் இவ்வாறான செயல் களில் ஈடுபடும் ஏனையோருக்கு இதுவொரு பாடமாகவும் திரு ப்புமுனையாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக..

இதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்.
அபூகதாதா(றழி) அறிவிக்கின்றார்கள்..
நபியவர்கள் ஜனாஸாத் தொழுகை நடத்த அழைக்கப்பட்டால் அந்த மையித்தைப்பற்றி விசாரிப்பார்கள். அவரைப் பற்றி நல்ல விதமாகச் சொல்லப்பட்டால் எழுந்து சென்று தொழுவிப்பார்கள். அந்த மையித்தைப் பற்றி நல்லபடியாகச் சொல்லப்படாவிடில் அவ்விடயத்தை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி தொழுவிக்காமல் சென்று விடுவார்கள்.-அஹ்மத்.

ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்..
நபியவர்களின் அண்டைவீட்டில் நோயாளியொருவர் இருந்தார். ஒருநாள் வீட்டார் அழும் சத்தம் கேட்டது. அயல் வீட்டுக்காரர் வந்து அல்லாஹ்வின் தூதரே! அவர் மரணித்து விட்டார் என்று கூற நபியவர்கள் இல்லை. அவர் மரணிக்க வில்லை. நன்றாகப் பார்த்துவிட்டு வா என்றார்கள். அவர் திரும்பிச் சென்று பார்த்த போது அம்மனிதர் உயிருக்குப் போராடிய நிலையில் கூரியஆயு தமொன்றால் தன்னைத் தானே குத்தித் தற்கொலை செய்து கொண்டார். இதைக் கண்ட அவர் நபிகளாரிடத்தில் வந்து செய் தி சொன்னபோது அவர் தற்கொலை செய்ததை நீ கண்களால் பார்த்தாயா? எனவினவ ஆமென்றார். அதற்கு நபியவர்கள் அப் படியெனில் நான் அவருக்குத் தொழ வைக்க மாட்டேன் என்றா ர்கள். – முஸ்லிம்.

இந்த ஹதீஸை அடிப்படையாகக் கொண்டு அறிஞர்கள் தற் கொலைதாரிக்கு ஜனாஸாத் தொழுகை நடத்தும் விடயத்தில் இரு கருத்துக்களைக் கூறுகின்றனர். ஒரு சாரார் கிப்லாவை நோக்கித் தொழும் ஒருமுஸ்லிம் நல்லவனோ கெட்டவனோ எப்

படிப்பட்டவனாயினும் அவனுக்கு வழமை போன்று தொழுவிக்க வேண்டும் என்றுகூற மற்றுமொரு சாரார் தற்கொலையாளி போன்ற பாவிகளுக்கு இமாமோ முக்கியமானவர்களோ தொழுவிப்பதைத் தவிர்த்து சாதாரணமாக ஒருசிலர் தொழுவிக்க வேண்டும். அதாவது வழக்கமான ஜனாஸாக்களைப் போல் சிறப்பிக்காமல் செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர்.

இமாம் இப்னு தைமியா அவர்கள் கூறுகையில்..
தற்கொலைதாரி,கடன்காரன், மோசடிக்காரன் போன்றவர்களின் தொழுகையில் இமாம்,மற்றும் முக்கியஸத்தர்கள் கலந்து கொள்ளாமல் இருந்தால் அதுவே சிறப்பானதாகும். ஏனெனில் இப்படியான செயல்களில் ஏனையோர் ஈடுபடாமல் இருக்க இது வொரு தடுப்பாகும். இருப்பினும் வெளிப்படையாக அவ்வாறு தவிர்ந்து கொண்டு ரகசியமாக அவருக்கு பாவமன்னிப்புக்காக துஆச் செய்தால் அது மிகமிகச் சிறந்தது. ஏனெனில் இதனால் மையித்துக்கு நன்மை கிடைப்பதுடன் அவ்விடயத்தில் வந்த அனைத்து ஹதீஸ்களையும் அமுல்ப்படுத்தியதாகவும் அமையும். ( நூல் : இக்தியாராத் ப: 52)

## கடன் பட்ட நிலையில் மரணித்தவருக்கும் தொழுகை நடத்த வேண்டும் என்பதற்கான ஆதாரங்கள்.

கடன்பட்டவர் கடனை அடைக்காமல், அதற்கான ஏற்பாட்டையும் செய்யாத நிலையில் மரணிப்பதும் இஸ்லாத்தின் பார்வையில் ஒரு குற்றச் செயலே!. இதனால் தான் தற்கொலைதாரி , பாவி போன்றோரின் ஜனாஸாக்களுக்குத் தொழுகை நடத்தாது விலகிக் கொண்டது போல கடன்பட்டு அடைக்காமல் மரணித்தவரின் ஜனாஸாவையும் நபியவர்கள் புறக்கணித்தமையை ஹதீஸ்கள் ஊடாக விளங்க முடிகின்றது.
நபித்தோழர் ஸலமா பின் அக்வா (றழி) அறிவிக்கின்றார்கள். நாங்கள் நபியவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது ஜனாஸா கொண்டுவரப்பட்டது. அதற்காகத் தொழுவிக்குமாறு நபியவர்களிடம் சொல்லப்பட்ட போது இம்மையித்துக்குக் கடன்

உண்டா? என வினவினார்கள். இல்லையெனக் கூறப்பட்டதும் அதற்காகத் தொழுவித்தார்கள். சற்று நேரத்தின் பின் மற்றொரு ஜனாஸா கொண்டுவரப்பட்டு அதற்கும் நபியவர்களை தொழுகை நடாத்துமாறு கேட்கப்பட்ட போது முன்பு வினவியது போல் கடன் உள்ளதா ? என வினவ ஆம் எனக் கூறப்பட்டது. ஊடனே நபியவர்கள் . அக்கடனை அடைக்கும் பொருட்டு ஏதேனும் செல்வத்தை விட்டுச்சென்றுள்ளாரா? எனக்கேட்க ஆம் ! மூன்று தங்கக் காசுகளை விட்டுச் சென்றுள்ளார் எனக் கூறப்பட்டதும் அதற்காகவும் ஜனாஸாத் தொழுகை நடாத்தினார்கள். மூன்றாவதாக ஒரு ஜனாஸா கொண்டுவரப்பட்ட போது அதன் கடன் பற்றி வினவியதற்கு ஆம்! மூன்று தங்கக் காசுகளைக் கடனாக வைத்துச் சென்றுள்ளார் எனக் கூறப்பட்டதும் உங்கள் நண்பருக்கு நீங்களே தொழ வைத்துக் கொள்ளுங்கள் என்று நபியவர்கள் மறுத்துவிட அங்கிருந்த அபூகதாதா என்ற நபித்தோழர் யாரஸூலல்லாஹ்! அவரது கடனுக்கு நான் பொறுப்பு என்றால் நீங்கள் தொழுவிப்பீர்களா? எனக் கேட்ட நபியவர்கள் ஆமெனக் கூறியதும் அவர் புறப்பட்டுச் சென்றார். திரும்பி வந்ததும் கடனை அடைத்து விட்டீரா எனக் கேட்க ஆமென்றதும் நபியவர்கள் அவருக்காகப் பிரார்த்தித்து தொழுகையும் நடத்தினார்கள். – புகாரி,நஸாயி.

## கப்ரிஸ்தான் சென்று அங்கே ஜனாஸாத் தொழுகை தொழும் சந்தர்ப்பங்கள்.

ஒரு ஜனாஸா தொழுவிக்கப்பட முன் அடக்கம் செய்யப்பட்டு விட்டால், அல்லது முக்கியமான சிலருக்கு ஜனாஸாத் தொழுகை தவறிப்போய் விட்டால் அவர்கள் அம்மய்யித்துக்காகத் தொழவிரும்பும் பட்சத்தில் கப்ரிஸ்த்தான் வந்து அம்மய்யித்துக்காகத் தொழ அனுமதியுண்டு. இதற்குப் பின்வரும் ஹதீஸ் ஆதாரமாக அமைகின்றது.
அபூஹுரைரா(றழி) அறிவிக்கின்றார்கள்..

நபியவரகளின் காலத்தில் மஸ்ஜிதைக் கூட்டிப் பெருக்கும் வேலையைச் செய்துவந்த கருப்புநிறப் பெண்ணொருவர் திடீரென மரணித்து விட்டார் . நபியவரகள் அப்பெண்ணைக் காணாததால் அவரைப் பற்றி விசாரித்தபோது அவர் சில தினங்களுக்கு முன் மரணித்து விட்டார் எனக் கூறப்பட்டது. நபியவர்கள் ' எனக்கு அறிவித்திருக்கக் கூடாதா? எனக் குறைப்பட்டதற்கு அவர்கள் யாரஸூலல்லாஹ் அப்பெண் மரணித்தது இரவு நேரமாகையால் தங்களை சிரமப்படுத்தக் கூடாது என்பதற்காக உங்களிடம் சொல்லவில்லை என்றார்கள். உடனே நபியவர்கள் அவரது கப்ரை எனக்குக் காட்டுங்கள் என்று கூற காட்டப்பட்டதும் அவ்விடத்துக்கு வந்து நபியவர்கள் அவருக்காக ஜனாஸாத் தொழுகை தொழுதார்கள். – புகாரி , முஸ்லிம்.

மற்றொரு ஹதீஸில்..

நபியவர்கள் பகீ.ஃ.மையவாடிப் பக்கமாக நடந்து சென்றவேளை புதிதாக அடக்கப்பட்ட கப்ர் ஒன்றைக் கண்டார்கள். அது யாரின் கப்ரென விசாரித்த போது இன்ன பெண்ணின் கப்று எனக் கூறப் பட்டது. அவரது மரணச்செய்தியை ஏன் எனக்கு அறிவிக்கவில்லையெ நபியவர்கள் வினவியதற்கு அல்லாஹ்வின் தூதரே! அப்போது ளுஹ்ர் வேளையாக இருந்தது நீங்கள் அன்று நோன்பாகையால் தூங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தீர்கள். உங்களைத் தொந்தரவு செய்ய நாங்கள் விரும்பாததால் நாங்களே தொழுவித்து அடக்கம் செய்து விட்டோம் என நபித்தோழர்கள் பதிலளித்தனர். இல்லை. நாங்கள் உங்கள் மத்தியில் இருக்கும் காலெமெல்லாம் யார் மரணித்தாலும் எனக்கு அறிவிக்காது இவ்வாறு செய்து விடாதீர்கள். ஏனெனில் அவர்களுக்காக நான் தொழும் தொழுகை றஹ்மத்தாகும். என்று கூறிவிட்டு அந்த கப்ரிடத்தில் நின்று பின்னால் நாமும் ஸப்பில் நின்ற நிலையில் நான்கு தக்பீர்கள் கட்டி தொழுகை நடத்தினார்கள். – நஸாயி , இப்னு மாஜா.

எனவே ஜனாஸாத் தொழுகை தவறி விட்டவர்கள் கப்ரிஸ்தானம் சென்று மக்பராவின் ஒரு ஓரமாக மரணித்தவருக்காக தொழ அனுமதியுள்ள அதே நேரம் கப்ருகளுக்கு மத்தியில்- கப்ர்களுக்கிடையே தொழுவதை நபியவர்கள் தடுத்துள்ளார்கள்.

கப்ர்களுக்கு மத்தியில் நின்று ஜனாஸாக்களுக்காக தொழுவதை நபியவர்கள் தடுத்துள்ளார்கள். துபரானி.

நீங்கள் கப்ர்களின் மீது உட்கார வேண்டாம். ஆதனை நோக்கி தொழவும் வேண்டாம்.

## மறைவான ஜனாஸாத் தொழுகை விபரம்.

ஒரு மையித்துக்காக வேறொரு இடத்தில் இருப்பவர்கள் ஜனா ஸாத் தொழுகையை நிறைவேற்றுவதற்கே மறைவான ஜனாஸ ாத் தொழுகை எனப்படும். இது பற்றிய விபரம், கருத்துவேற்று மைகள் பற்றிப் பார்ப்பதற்கு முன் இதற்கு ஆதாரமாக வரும் நஜ்ஜாஸி மன்னருக்காக நபியவர்கள் ஜனாஸாத் தொழுகை நடத்திய ஹதீஸைப் பார்ப்பபோம்.

நபியவர்கள் ஒருநாள் நஜ்ஜாஸி மன்னரின் மரணச் செய்தியை எங்களுக்குச் சொன்னார்கள். உங்களது சகோதரர்களில் ஒரு வரான அபிசீனியா- எத்யோப்பியா நாட்டின் மன்னர் இன்று மர ணித்து விட்டார்கள். அவருக்காகப் பாவமன்னிப்புத் தேடுங்கள் , மேலும் வாருங்கள் அவருக்காகத் தொழுகை நடத்துவோம் என் கூறி தொழுமிடத்துக்கு வந்தார்கள். நபியவர்களுக்குப் பின்னால் நாங்கள் ஜனாஸாவுக்குப் பின்னால் நிற்பது போல் இரண்டு வரி சையான ஸப்-அணிவகுத்து நின்றோம். நபியவர்கள் நான்கு தக் பீர்கள் கட்டி ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றினார்கள். – புகாரி முஸ்லிம்.

எவ்வாறான மையித்துக்கு மறைவான தொழுகை நிறைவேற்ற லாம் என்பதில் அறிஞர்கள் 3 விதமான கருத்துக்களைக்கொண் டிருக்கின்றனர். அதனை இமாம் இப்னுகையும் ஜவ்ஸிய்யா (றஹ்) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

'நபியவர்கள் மறைவான ஜனாஸாக்கள் அனைத்துக்கும் தொழு விப்பது அவர்களின் வழக்கமாக இருந்ததில்லை. நபியவர்களின் காலத்தில் ஏராளமான முஸ்லிம்கள் தூர இடங்களில் வபாத்தா கியுள்ளார்கள். அவர்களுக்ககெல்லாம் மறைவான தொழுகை நடத்தியதாக எந்த ஹதீஸ்களும் இல்லை. எனவேதான் மறை வான ஜனாஸாத் தொழுவிக்கும் விடயத்தில் அறிஞர்கள் மூன்று விதமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றார்கள்.

**முதலாவது கருத்து:** இமாம் ஷாபி , அஹ்மத்(றஹ்) ஆகியோர் மறைவான ஜனாஸாத் தொழுகை மறைவாக மரணித்த அனை வருக்கும் நடத்த முடியும் என்று கூறுகின்றனர்.

**இரண்டாவது:**இமாம் அபூஹனீபா,மாலிக்(றஹ்) ஆகியோர் மேற் படி நஜ்ஜாஸி மன்னருக்குத் தொழுவித்தது அவர்களின் விடய த்தில் மட்டும் செய்யப்பட்ட சட்டமாதலால் மறைவான ஜனா ஸாத் தொழுகை என்ற ஒன்றே கிடையாது என்கின்றனர்.

**மூன்றாவது:** இமாம் அஹ்மத்(றஹ்) மற்றொரு அறிவிப்பில் அம் மையித்துக்கு அவர் மரணித்த ஊரில் தொழுகை நடத்தப்பட் டிருந்தால் வேறுஊரில் மறைவான ஜனாஸாத் தொழுகை நி றைவேற்ற வேண்டியதில்லை. முஸ்லிம்களற்ற நாடு , அல்லது வேறேதும் காரணங்களால் அங்கு தொழுவிக்கப்பட வில்லையா யின் அவருக்காக மறைவான ஜனாஸாத் தொழுகை நடத்த வேண்டும் என்கின்றார்கள். ஷாபி மத்ஹபின் அறிஞரான றூயா னி (றஹ்) அவர்களும் இக்கருத்தையே தெரிவுசெய்துள்ளார் கள்.

மேலும் நான்கு குலபாக்களும் மரணித்த போது வெளியிட ங்களிலிருந்த யாரும் இவர்களுக்காக மறைவான ஜனாஸாத் தொழுகை நடத்தியதாகவும் எவ்வித செய்திகளும் இல்லை என்பது இக்கருத்தை மேலும் வலுவூட்டுகின்றது.

(இமாம் அல்பானி அவர்கள் தொழுகை நடத்தப்பட்ட மையித்துக்கு மறைவான ஜனாஸாத் தொழுகை நடத்துவது கூடாது . அது பித்அத்தாகும் எனும் நிலைப்பாட்டில் உள்ளார்கள்)

எனினும் இமாம் இப்னு தைமியா(றஹ்) அவர்கள் அஹமத் பின் ஹன்பல் இமாம் சொன்னதாகக் கூறும் மற்றொரு கருத்தின்படி மரணித்தவர் அதீத சிறப்புமிக்கவராக-மிகப்பெரிய மார்க்க அல்லது சமூக சேவையாராக இருப்பின் அவருக்காகத் தொழுது பிரார்த்திக்க முஸ்லிம்கள் ஆவலாயுள்ள நிலையில் அவர்களின் மன சாந்திக்காக மறைவான தொழுகை நடத்தலாம் என்ற கருத்தை சொல்கின்றார்கள். இக்கருத்தையே சமகால அறிஞர்கள் பலரும் முன்வைக்கின்றனர். மக்கா மதீனா ஹரம்களிலும் இவ்வாறு முக்கிய சிலருக்கு மறைவான ஜனாஸாத் தொழுகை நடத்தப்படுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது . சமகால தப்ஸீர்க் கலை மேதை இமாம் ஸ.ஃ. திய்(றஹ்) உற்பட பல அறிஞர்கள் இக்கருத்தைத் தெரிவுசெய்கின்றனர்.

எனவே மரணித்த அனைவருக்கும் மறைவான ஜனாஸாத் தொழுகை நடத்துவது மார்க்கமல்ல என்பதும், அங்கு தொழுகை நடத்தப்படவில்லையாயின் எங்காவது தொழுகை நடத்தப்பட வேண்டும் என்பதையும் சில சந்தர்ப்பங்களில் விதிவிலக்காக ஒருவரின் மரணம் அனைத்து முஸ்லிம்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாக இருக்கும் நபர்களுக்காக தொழுகை நடத்த இடமுண்டு என்பதையும் இக்கருத்து வேறுபாட்டின் சுருக்கமாக முடிவாகப் பெறமுடியும். இதுவே இமாம் இப்னுபாஸ் (றஹ்) அவர்களின் கருத்தாகும். ( அல்லாஹு அ.ஃ.லம்)

## முஸ்லிமல்லாதவருக்ககாக ஜனாஸாத் தொழுவிக்கலாமா?

முஸ்லிமல்லாதவருக்ககாக ஜனாஸாத் தொழுதல், பிரார்த்தித்தல், அவருக்கு இறை கருனையை வேண்டி நிற்றல் அனைத்தும் ஹராமாகும்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்..
நபியே! நீர் (காபிராக மரணித்த) அவர்களின் மீது ஒருபோதும் தொழுவிக்கவோ அவர்களின் கப்ருக்கருகில் நிற்கவோ வேண் டாம்.அவர்கள் அல்லாஹ்வையும் றஸூலையும் நிராகரித்து , பாவிகளாக மரணித்த காபிர்களாவார்கள். –ஸூரா தவ்பா: 84

நபியவர்களின் காலத்தில் முஸ்லிமைப் போல் நடித்துக் கொண் டிருந்த முனாபிக்- காபிரான அப்துல்லாஹ் பின் உபையிப்னு ஸலூல் என்பவரின் விடயத்தில் இறங்கிய வசனமே இது.. இச் சம்பவம் பின்வரும் ஹதீஸில் உள்ளது.
உமர்(றழி) கூறுகின்றார்கள்..
அப்துல்லாஹ் பின் உபை ஸலூல் மரணித்தபோது நபியவர்கள் அவர்மீது தொழுவிக்க அழைக்கப்பட்டார்கள். நபியவர்கள் மை யித்தின் அருகில் சென்று தொழுவிக்க ஆரம்பித்த போது நான் நபியவர்களின் ஆடையைப் பிடித்து இழுத்து அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் விரோதியான இவருக்கா தொழுவிக்கப் போகின்றீர்கள்!. இவர் உங்களையும் முஸ்லிம்களையும் பற்றி என்னனென்ன சொல்லியிருக்கின்றார் என உங்களுக்குத் தெரி யாதா?, இவர் விடயத்தில் ‘முனாபிகீன்களுக்கு நபியே நீர் பாவ மன்னிப்புத் தேடுங்கள் அல்லது தேடாதிருங்கள் . நீங்கள் எழு பது முறை பாவமன்னிப்புக் கேட்டாலும் அல்லாஹ் அவர்களை மன்னிக்கமாட்டான்’ என அல்லாஹ் குர்ஆனில் கூறவில்லையா? எனக் கேட்க அதற்கு நபியவர்கள் ‘ அல்லாஹ் என்னைத் தடு க்க வில்லைதானே! எழுபது தடவைக்கு மேல் பாவமன்னிப்புக் கோரினால் அல்லாஹ் அவரை மன்னிப்பானாயிருந்தால் அதை யும் நான் செய்வேன் என்றார்கள்.
பின்பு நபியவர்கள் அவருக்காகத் தொழுவித்தார்கள். நாங்களும் பின்னால் நின்று தொழுதோம். நபியவர்கள் கப்ர் வரைக்கும் நடந்து சென்று அடக்கி முடியும் வரை அங்கேயே நின்றார்கள். பின் அங்கிருந்து திரும்பி சிறிது தூரம் கூடச் செல்லவில்லை. ‘முனாபிக்களான அவர்களிலிருந்து மரணித்த யாருக்கும் நீங்

கள் தொழுவிக்கவோ அவர்களை அடக்குமிடத்தில் நிற்கவோ வேண்டாம்' என்ற இறைவசனம் இறங்கியது. இதன்பின்பு நபியவர்கள் மரணிக்கும் வரை நயவஞ்சகர்கள் யாருக்கும் தொழுவிக்கவோ அவர்களின் கப்ருக்கருகில் நிற்கவோ இல்லை . அன்று நான் நபியவர்களிடம் தைரியமாக நடந்துகொண்ட விதத்தை எண்ணி இன்றும் நான் ஆச்சரியப்படுகின்றேன். - புகாரி.

நபியவர்களின் சிறிய தந்தையான அபூதாலிப் விடயத்தில் இறங்கிய வசனமும் இதற்கு ஆதாரமாகும்.
அந்த சம்பவம் வருமாறு..
நபியவர்களின் சிறிய தந்தை அபூதாலிபுக்கு மரணநேரம் நெரு -ங்கியபோது நபியவர்கள் அங்கு வந்தார்கள். அங்கே அபூ ஜஹ்ல், உமையா ஆகியோரும் இருந்தனர். அப்போது நபியவர்கள் எனது சிறிய தந்தையே! நான் நன்றி கூறக் கடமைப்பட்டவர்களில் நீங்கள் முதன்மையானவராவீர். எனக்கு மிக பக்க பலமாக நீங்கள் இருந்தீர்கள். எனது தந்தையை விடவும் நான் தங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன். எனவே லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற ஒரு வார்த்தையை மட்டும் கூறுங்கள். அதை வைத்து நான் அல்லாஹ்விடம் வாதாடி உங்களுக்காக சாட்சி சொல்வேன் என்றார்கள். அப்போது அபூஜஹலும் உத்பாவும் அபூதாலிபே! உங்கள் மூதாதையினரின் மார்க்கத்தை விட்டு விலகப் போகின்றீர்களா? என மிரட்டினர். நபியவர்களும் திரும்பத் திரும்ப இவ்வாறே கூற அபூதாலிப் இறுதியாகச் சொன்ன வார்த்தை "நான் அப்துல் முத்தலிபின் சமயத்திலேயே இருக்கப் போகின்றேன்" என்பதாகும். லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூற இறுதிவரைக்கும் அவர் மறுத்துவிட்டார். குறைஷியர்கள் என்னை இழிவாகப் பழிப்பார்கள் எனும் அச்சம் எனக்கில்லாது விட்டிருந்தால் மகனே! நான் உன் கண்களைக் குளிர்ச்சியடையச் செய்திருப்பேன் என்றார். அப்போதும் நபியவர்கள் நிச்சயமாக நான் அல்லாஹ் என்னைத் தடுக்கும் வரை அவருக்காகப் பிழை பொறுக்கத் தேடுவேன் என்று கூறி இறைஞ்ச ஆரம்பித்தார்கள். இதைக் கண்டு ஏனைய முஸ்லிம்களும் தமது காபி

ராக மரணித்த உறவினர்களுக்காகப் பிரார்த்திக்க ஆரம்பித் தார்கள். அப்போதுதான் ..

‘நபிக்கோ மு.ஃ.மின்களுக்கோ நரகவாசிகளெனத் தெளிவாக அறியப்பட்ட முஷ்ரிகீன்களுக்காகப் பாவமன்னிப்புக் கேட்க அனு மதியில்லை. அவர்கள் நெருங்கிய உறவினர்களாயிருப்பினும் சரியே! எனும் வசனமும் நபியே! நீங்கள் விரும்பியவர்களுக் கெல்லாம் உங்களால் நேர்வழி காட்டி விடமுடியாது. மாறாக அல்லாஹ் அவன் நாடியவர்களுக்கே நேர்வழி காட்டுகின்றான்’ எனும் வசனமும் இறங்கியது.
அலி(றழி) அறிவிக்கும் ஒரு ஹதீஸில் ..
ஒருவர் தன் காபிராக மரணித்த பெற்றோருக்காக பாவமன்னி ப்புத் தேடுவதை அவர்கள் கண்ணுற்ற போது காபிர்களுக்குப் பாவமன்னிப்புத் தேடக்கூடாதல்லவா? எனச் சொன்னதற்கு அம் மனிதர் இப்றாஹீம் நபி தனது காபிரான பெற்றோருக்காக மன்னிப்புக் கேட்டுள்ளார்கள்தானே! என நியாயப்படுத்திய போது தான் மேற்கூறிய வசனமும் அதற்கடுத்த வசனமான ‘ இப்றா ஹீம் நபி தன் பெற்றோருக்காகப் பாவமன்னிப்புக் கேட்டமை யானது அவர்கள் அவருக்கு அளித்திருந்த வாக்குறுதிக்காகவே யன்றி வேறில்லை. எப்போது அவர் அல்லாஹ்வின் விரோதி யென்பது தெளிவாகி விட்டதோ அப்போது அவர்கள் அதிலிரு ந்து நீங்கிக் கொண்டார்கள். நிச்சயமாக இப்றாஹீம் அதிகம் அஞ்சுபவராகவும் பொறுமையாளராகவும் இருந்தார்கள்’ என்ற வசனம் இறங்கியது. – நூல் நஸாயி.

இதனால்தான் இமாம் நவவி(றஹ்) குறிப்பிடும் போது…
காபிர்களுக்காகத் தொழுகை நடத்துவதும் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரிப் பிரார்த்திப்பதும் குர்ஆன்-ஹதீஸ், இஜ்மா ஆதாரங்களின் அடிப்படையில் ஹராமாகும் என்று குறிப்பிடு கின்றார்கள். அல் மஜ்மூ.ஃ- 5-144

## ஜனாஸாத் தொடுகையை ஜமாஅத்தாக நிறைவேற்று வது அவசியமா?

ஜனாஸாத் தொடுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றுவது அவசியமாகும் என்பது அதிகமானஅறிஞர்களின் கருத்தாகும். ஏனெனில் நபியவர்கள் தமது வாழ்வின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஜனாஸாத் தொழுகையை ஜமாஅத்தாகவே நிறைவேற்றி வந்திருக்கின்றார்கள். அதேபோல் நான் எவ்வாறு தொழுவதைக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள் என்றும் கட்டளையிட்டிருக்கின்றார்கள். —புகாரி

நபியவர்கள் மரணித்தபோது அவர்களுக்கான ஜனாஸாத் தொழுகைகையை ஸஹாபாக்கள் தனித்தனியாகவே தொழுதார்கள் என்ற செய்தி இச்சட்டத்திற்கு முரணாகாது. காரணம் நபியவர்களது அவ்விடயம் அச்சந்தர்ப்பத்துக்கு மட்டுமானதாகும். ஏனெனில் நபியவர்களின் மகத்துவத்தால் அவர்களுக்கு தொழுவிக்க யாரும் முன்வராத நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் அப்போது எடுக்கப்பட்ட முடிவாகவே அதைக் கருத வேண்டும். நபிவழி -ஸுன்னாவானது ஸஹாபாக்களின் செயலைவிட பலமானதும் முற்படுத்தப்பட வேண்டியதுமாகும் என்பது அறிஞர்களின் முடிவாகும். தனித்தனியாகத் தொழுதாலும் கடமை நீங்கும். ஆனாலும் ஜமாஅத்தாகத் தொழாமையால் குற்றமேற்படும் என இமாம் அல்பானி(றஹ்) குறிப்பிடுகின்றார்கள்.இமாம் நவவி(நஹ்) அவர்களும் தனியாக ஜனாஸாத் தொழுதாலும் எவ்வித குற்றமுமில்லை. அதுவும் ஆகுமானதே!. எனினும் நபியவர்கள் ஜமாஅத்தாக அதை நிறைவேற்றியுள்ளதாக அனேக ஹதீஸ்கள் இடம்பெறுவதால் அதுவே மிகச் சிறப்பான சுன்னாவாகும் இதுவே ஏகோபித்த முடிவுமாகும் எனக் குறிப்பிடுகின்றார்கள் .
அல்மஜ்மூ.  5-314

பொதுவாக ஜமாஅத் தொழுகைக்கு இருவர் போதுமாகும் என்பது அறிஞர்களின் முடிவாகும். ஜும்ஆ மற்றும் ஜனாஸாத் தொழுகை விடயத்தில் இரண்டா மூன்றா எனும் கருத்து வேறுபாடு உள்ளது.

ஜனாஸாத் தொழுகை ஜமாஅத் நடத்துவதற்குரிய குறைந்த பட்ச எண்ணிக்கை மூன்றாகும் என இமாம் அல்பானி குறிப்பிடு கின்றார்கள் அதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்.

தல்ஹா(றழி) தனது மகன் மரணித்தவேளை தொழுவிப்பத ற்காக நபியவர்களை வீட்டுக்கு அழைத்தார்கள். நபியவர்கள் இமாமாகநிற்க பின்னால் அபூதல்ஹாவும் அவருக்குப்பின்மனை வி உம்மு ஸுலைமும் நின்றார்கள். –பைஹகி, ஹாகிம்.

எனினும் இரண்டுபேர்கூட ஜமாஅத் நடத்த முடியும் என்பதற்கும் பல ஆதாரங்கள் உள்ளன. நபியவர்கள் இரவுத் தொழுகை தொழுதபோது இப்னு மஸ்ஊத்(றழி) நபியவர்க ளுக்கு இடதுபுறமாக நிற்க நபியவர்கள் அவரை வலப்பக்கம் இழுத்தெடுத்த ஹதீஸ் இதற்கு ஆதாரமாகும். அதேபோல் தனி யாகத் தொழப் போன ஒருவரைத்தடுத்து இவ ருக்கு ஸதகா செய்பவர் யார்? எனக்கேட்டு வந்த ஒருவரோ டு இருவரையும் ஜமாஅத்தாக தொழுவைத்த ஹதீஸும் ஆதார மாகும்.

ஜனாஸாத் தொழுகையில் எவ்வளவு அதிகமானவர்கள் கலந்து கொள்கின்றார்களோ அந்தளவுக்கு அது மையித்துக்கு சிறந்ததும் அதிகம் பயனளிக்கக் கூடியதுமாகும். இதற்கு பின் வரும் இரு ஹதீஸ்களும் ஆதாரமாகும்.

எந்தவொரு மையித்திற்கும் முஸ்லிம்களிலிருந்து நூறு பேர் ஒன்றுகூடித் தொழுது அம்மையித்துக்காகச் சிபாரிசு செய்தால் அவரின் பாவங்கள் மன்னிக்கப்பட்டே தீரும். முஸ்லிம் மற்றொரு ஹதீஸில் ஒரு மையித்தின் தொழுகையில் முஸ் லிம்களில் அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்காத நாற்பது நபர்கள்

கலந்துகொண்டு தொழுதால் அல்லாஹ் அவர்களின் சிபாரிசை நிச்சயம் ஏற்றுக் கொள்வான் என்றார்கள். முஸ்லிம்.

## ஜனாஸாத் தொழுகையில் ஈடுபடுவோர் எத்தனை பேராயினும் மூன்று ஸப்பு- வரிசைகளாக நின்று தொழுவது சுன்னத்தாகும்.

அபூஉமாமா(றழி) அறிவிக்கின்றார்கள்..

நபியவர்கள் ஒரு ஜனாஸாவுக்காகத் தொழுவித்தார்கள். ம∴மூ ம்கள் ஏழு பேர் இருந்தனர். மூவரை ஒரு ஸப்பாகவும் இரு வரை அடுத்த ஸப்பிலும் மற்ற இருவரையும் மூன்றாவது ஸப்பிலும் நிறுத்தினார்கள். தபரானி.

மற்றொரு ஹதீஸில் .. முஸ்லிம்களில் மூன்று ஸப்பு அளவு க்கு உள்ளவர்கள் ஒரு மையித்துக்காகத் தொழுது பிரார்த் தித்தால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படாது இருப்பதில்லை. அபூதாவுத்.

ஜனாஸாத் தொழுகை தொழ இமாமுடன் ஒரேயொரு ஆண் மாத்திரமே இருப்பின் அவர் வழக்கமான தொழுகைகளில் இமாமுக்கு அருகில் நிற்பது போலல்லாது இமாமுக்குப் பின் னாலேயே நிற்க வேண்டும். முன்னார் வந்த அபூதல்ஹாவின் ஹதீஸே இதற்கும் ஆதாரமாகும்.

## ஜனாஸாத் தொழுகை நடாத்துவதற்கு மிகவும் அருகதையுள்ளவர் யார்?

ஜனாஸாத் தொழுகை நடாத்துவதற்கு மிகவும் அருகதையுள் ளவர் மக்கள் தலைவர் அல்லது அவரின் பிரதிநிதியே. ( அவ ர்கள் இல்லாத பட்சத்தில் மஸ்ஜிதின் பொறுப்பான இமாம் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.) அவரும் இல்லாதபோது குர்ஆனை நன்கு ஓதத்தெரிந்த அறிஞர், மார்க்கம் அதிகம் தெரிந்த அறிஞர் என்ற முறைப்படியே இமாம் முன்னிலை ப்படுத்தப்பட வேண்டும். மையித்தின் உறவினர்கள் இமாமாக முன்னிலைப்படுத்தப் படுவதற்கு ஆதாரம் ஏதுமில்லை.

இமாம்ஹஸன்(றழி) மரணித்த போது அவருக்காக ஜனாஸாத் தொழுகையில் ஹஸன்(றழி)யும் இருந்தார்கள். அவர்கள் அன்று மதீனாவின் ஆளுனரான ஸயீத் பின் ஆஸ்(றழி)யிடம் நீங்களே தொழுவியுங்கள். அதுதான் சுன்னத்-நபிவழி. அவ்வாறில்லையெனில் உங்களைத் தொழுவிக்க விட்டிருக்க மாட்டேன். என்றார்கள். அவ்விருவருக்குமிடையில் சிறிய மனஸ்தாபம் ஒன்றிருந்தது. - ஹாகிம், பைஹகி.

அம்ர் பின் சலமா அறிவிக்கின்றார்கள்..

நான் சிறுவனாயிருந்தேன். எனது கூட்டத்தினர் நபியவர்களிடம் எங்கள் பகுதியில் எங்களுக்கு தொழுவிக்கும் இமாம் யாரெனக் கேட்க அதிகம் குர்ஆனை எடுத்தவர்- மனனம் செய்தவர் என நபியவர்கள் பதிலளித்தார்கள். என்னை விட அதிகம் குர்ஆனை மனனம் செய்தவர் எங்கள் கூட்டத்தில் யாருமில்லை. எனவே சிறுவனான என்னையே மக்கள் இமாமாக்கினார்கள். இன்றுவரை நானே அவர்களின் ஜனாஸாக்களைத் தொழுவித்து வருகின்றேன். - பைஹகி.

நபியவர்கள் கூறியுள்ளார்கள்.. குர்ஆனை அதிகம் மனனம் செய்த நன்றாக ஓதத் தெரிந்தவர் மக்களுக்கு இமாமத் செய்யட்டும். கிராஅத்தில் அவர்கள் சம அந்தஸ்த்தில் இருந்தால் சுன்னாவை அதிகம் அறிந்தவர் முன்னிலைப்படுத்தப்பட்டும். சுன்னா- மார்க்க அறிவிலும் சமமானவர்களாயின் ஹிஜ்ரத்தால் முந்தியவரும் அடுத்து இஸ்லாத்தால் முந்தியவரும் முன்னிலைப்படுத்தப் படுவர். முஸ்லிம்.

மையித்தின் உறவினர்கள் இமாமத் செய்ய முற்படுத்தப்படுவதற்கு ஆதாரமில்லை என்ற கருத்தையே இமாம் அபூஹனீபா, மாலிக் ,அஹ்மத், இமாம் ஷாபி(பழைய கருத்தாக) ஆகியோர் குறிப்பிடுகின்றார்கள். பார்க்க : மஜ்மூ. 5- 217

இமாம் இப்னு ஹஸ்ம் ளாஹிரி உறவினர்கள் தான் இமாமத் செய்ய முற்படுத்தப்படுவர்கள் எனக் குறிப்பிடுகின்றார்கள். அவ

ர்கள் பொதுவானதொரு அல்குர்ஆன் வசனத்தை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

## ஒரே நேரத்தில் பல ஜனாஸாக்கள் தொழுகைக்காக் கொண்டு வரப்பட்டால்...

ஒரே நேரத்தில் பல ஜனாஸாக்கள் தொழுகைக்காக் கொண்டு வரப்பட்டால் ஒரே தடவையிலேயே தொழுகை நடத்துவதே நபி வழியாகும். ஆண் ஜனாஸாக்களை அவை சிறுவர்களாயிருப் பினும் இமாமுக்கு முன்பாக வைக்கப்படும். பெண் ஜனாஸா க்களை அதற்குப் பின்னால் வைக்கப்படும்.

நாபி.். இப்னு உமர் (றழி) அறிவிக்கின்றார்கள்..

இப்னு உமர்(றழி) அவர்கள் ஒருமுறை ஒன்பது ஜனாஸாக்க ளுக்கு ஒன்றாகத் தொழுகை நடாத்தினார்கள். அங்கு இப்னு அப்பாஸ்,அபூஹுரைரா (றழி) மற்றும் பலரும் இருந்தனர். ஆண் ஜனாஸாக்களை இமாமுக்கு முன்னால் வைக்கப்பட்டனர். பெண் ஜனாஸாக்கள் கிப்லாவுக்கு நெருக்கமாக–அதாவது ஆண் ஜனாஸாக்களுக்கு முன்னால் வைக்கப்பட்டன . அது பற்றி நான் வினவியபோது அதுதான் நபிவழியென அவர்கள் கூறினார்கள்.- நஸாயி.

பல ஜனாஸாக்கள் தொழுகைக்காக கொண்டுவரப்படும் சம யத்தில் ஒவ்வொரு மையித்துக்காகவும் தனித்தனியே தொழுவி க்கவும் முடியும். இன்னும் சொல்லப்போனால் அதுதான் அடிப்ப டையுமாகும். இதற்குப் பின்வரும் உஹுத் யுத்தத்தில் மரணித் தவ 72 பேருக்கும் நபியவர்கள் தனித்தனியாகத் தொழுவித்த ஹதீஸ் ஆதாரமாக உள்ளது.

இப்னு அப்பாஸ்(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்கள் உஹு த் யுத்தம் முடிவுற்றதும் தனது சிறிய தந்தையான ஹம்ஸா (றழி)யின் உடலை கொண்டுவருமாறு பணித்தார்கள். அது

கிப்லாப்பக்கமாக வைக்கப்பட்டது. அவருக்காக ஒன்பது தக்பீர் கட்டி தொழுவித்தார்கள். பின் ஒவ்வொரு ஸஹீத்களாகக்க கொண்டுவரப்பட்டு அவர்கள் ஒவ்வொருவருக்குமாக தனித்த னியாக எழுபத்திரெண்டு தடவைகள் தொழுவித்தார்கள். தபரானி.

இமாம் நவவி(றஹ்) இதுபற்றிப் பேசும்போது பல ஜனாஸாக் கள் ஒரே சமயத்தில் கொண்டுவரப்படும்போது ஒவ்வொன்று க்கும் தனித்தனியாகத் தொழுவிப்பதே மிகச் சிறந்ததாகும். இருப்பினும் ததிம்மா எனும் நூலசிரியரான இமாமவர்கள் ஒன் றாகத் தொழுவிப்பதே சிறந்தது ஏனெனில் தனித்தனியாகத் தொழுவிக்கப்படும் போது நீண்ட நேரமெடுப்பதால் அடக்கம் செய்வதை விரைவுபடுத்தும் சுன்னாவை அது தடுக்கும் என்று கூறுகின்றார்கள் . எனினும் ஷாபி மத்ஹபின் ஏற்றமான கருத்து தனித்தனியாக தொழுவிப்பதே சிறந்ததென்பதாகும். ஏனெனில் அதனால் அதிகம் தொழவும் பிரார்த்திக்கவும் முடிவ துடன், துஆ கபூலாக அதிகம் வாய்ப்புமுள்ளது. அதைப்போய் அடக்கத் தாமதமாக்கும் விடயம் என்பது பொருத்தமற்றது. மஜ்மூ.:.5-225

## ஜனாஸாத் தொழுகையை மஸ்ஜிதுக்குள்ளா? வெளியிலா?

ஜனாஸாத் தொழுகையை மஸ்ஜிதுக்குள் ஜனாஸாவைக் கொ ண்டுவந்து அங்கேயே நடத்துவதும் ஆகுமானதாகும். இருப் பினும் மஸ்ஜிதின் வெளிப்பக்கமாக அதற்கென ஒதுக்கப்பட்ட பிரத்தியேக இடத்தில் வைத்து நடத்துவது மிகச் சிறந்ததாகும். இம்முறையே நபியவர்களின் காலத்தில் அதிகம் கடைப்பிடி க்கப்பட்ட முறையாகும்.

மஸ்ஜிதுக்குள் ஜனாஸாத் தொழுகை நடத்த முடியும் என்பதற் கான ஆதாரம் இதோ,..

ஸஃது பின் அபீ வக்காஸ்(றழி) மரணித்த போது அன்னாரின் ஜனாஸாத் தொழுகையில் நபியவர்களின் மனைவிமாரும் கலந்து கொள்ள விரும்பியதால் ஜனாஸாவை மஸ்ஜிதுக்குள் கொண்டு செல்லுமாறு கேட்க அவ்வாறே செய்து தொழுகை நடத்தப்பட்டது. இருப்பினும் சிலர் அவ்விடயமாக சுன்னத்துக்கு மாற்றமானதெனக் கூறிக்குறைப்பட்டமையை அறிந்த போது ஆயிஷா(றழி) அவர்கள் 'மனிதர்கள் தமக்குத் தெரியாத மார்க்க விடயங்களில் ஏன்தான் முந்திக்கொண்டு கருத்துத் தெரிவிக்கின்றார்களோ!.. மஸ்ஜிதுக்குள் ஜனாஸாத் தொழுகை நடத்தியதை விமர்சித்தது எனக்கு ஆச்சரியமளிக்கின்றது. அல்லாஹ் மீது ஆணையாக சுஹைறல்(றழி) மற்றும் அவரது சகோதரர்களுக்கான ஜனாஸாத் தொழுகையை நபியவர்கள் நடுப்பள்ளியில் வைத்தே நடத்தியுள்ளார்கள் என்றார்கள். முஸ்லிம்.

இருப்பினும் அதிகமான சந்தர்ப்பங்களில் நபியவர்கள் ஜனாஸாத் தொழுகைக்கெனப் பிரத்தியேகமாக உள்ள இடத்திலேயே ஜனாஸாக்களை வைத்துத் தொழுவித்திருக்கிக்றார்கள். இதற்கான ஆதாரங்கள்..

-ஒரு ஸஹாபி மரணித்தபோது அவரைக் குளிப்பாட்டி கபனிட்டு மஸ்ஜிதுன் நபிவியின் மகாமு ஜிப்ரீல் எனும் இடத்தில் ஜனாஸாக்களை வைக்கும் இடத்தில் நாம் வைத்துவிட்டு நபியவர்களுக்கு அறிவித்தோம். நபியவர்கள் அங்கே வந்து தொழுவித்தார்கள். ஹாகிம்.

-நபியவர்கள் நஜ்ஜாஸி மன்னர் மரணித்த செய்தியை ஸஹாபாக்களுக்கு அறிவித்துவிட்டு அவருக்காகத் தொழுவிப்பதற்காக ஜனாஸாத் தொழுமிடத்தில் மக்களை ஒன்றுகூட்டி 4 தக்பீர் கட்டி தொழுவித்தார்கள். புகாரி முஸ்லிம்.

நாங்கள் மஸ்ஜிதுந்நபவியின் முற்றத்தில் ஜனாஸாக்கள் வைக்கப்படும் இடத்தில் அமர்ந்திருந்தோம்.. அஹ்மத்.

இவைபோன்ற இன்னும் பல்வேறு ஹதீஸ்கள் நபியவர்களின் காலத்தில் ஜனாஸாக்கள் மஸ்ஜிதுக்குப் புறம்பாகவுள்ள ஒரு இடத்திலேயே வைக்கப்பட்டு தொழுவிக்கப்படுவது வழக்கமாக இருந்தது என்பதையும் சில தேவையேற்பட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரமே மஸ்ஜிதுக்குள் ஜனாஸா கொண்டுவரப்பட்டு தொழு விக்கப்பட்டன என்பதையும் அறிய முடிகின்றது.

## ஜனாஸாத் தொழுகை நடத்தும் இமாம் நிற்குமிடம்..

ஜனாஸாத் தொழுகை நடத்தும் இமாம் ஆண் மைய்யித்தாக இருந்தால் அதன் தலைப்பகுதிக்குப் பின்னாலும், பெண் மையி த்தாயின் அதன் மத்திய பகுதிக்குப் பின்னாலும் நின்று தொழு கை நடத்த வேண்டும். அதுவே ஸுன்னாவாகும்.

அபூகாலிப்(றழி) அறிவிக்கின்றார்கள்…

அனஸ்(றழி) தொழுவித்த ஒரு ஆண் ஜனாஸாவின் தொழுகை யில் கலந்துகொண்டேன். அம்மையித்தின் தலைப்பகுதியில் அவர்கள் நின்றார்கள். தொழுவித்து முடிந்தவுடன் மற்றொரு பெண்ஜனாஸா கொண்டுவரப்பட்டது. அதன் மத்திய பகுதியில் நின்று தொழுவித்தார்கள். அப்போது நான் அபூ ஹம்ஸாவே! நபியவர்கள் இப்படித்தான் ஆண்-பெண் ஜனாஸாக்களிடத்தில் நின்றார்களா? எனக்கேட்க ஆம் என்றார்கள். அப்போது அங்கி ருந்த அலா∴(றழி) இதைப் பாடமிட்டுக் கொள்ளுங்கள் என்றா ர்கள். அபூதாவூத்.

இவ்வாறே மற்றொரு ஹதீஸில் ஸமுறா(றழி) கூறும்போது நான் நபியவர்களுடன் பெண் ஜனாஸாவுக்கான தொழுகையில் கலந்துகொண்ட போது மையித்தின் நடுப்பகுதியில் நபியவர் கள் நின்றார்கள். புகாரி.

# (12)

# ஜனாஸாத் தொழுகை முறை .

## ஜனாஸாத் தொழுகையின் தக்பீர்களின் எண்ணிக்கை.

நான்கு தக்பீர்கள் கட்டி தொழுவிப்பது பல ஹதீஸ்கள் வாயி லாக அறிவிக்கப்படுகின்றன. எனினும் அதற்கு மேலாக ஒன்பது தக்பீர்கள்வரைக்கும் கட்டி தொழுவிப்பதற்கு ஆதாரங்கள் உள் ளன. ஹதீஸ்களையும் அமுல்ப்படுத்தும் விதமாக பல்வேறு விதமாகவும் மாறிமாறிச் செய்வதே மிகச்சிறந்தது. இருப்பினும் நான்கு தக்பீர்கள் கட்டித் தொழுவித்ததாகவே அனேக ஹதீ ஸ்கள் வருவதால் ஒரே முறையை மாத்திரம் கடைப்பிடிக்க விரும்பின் அவ்வாறு செய்வது நல்லது.

நபியவர்கள் நஜ்ஜாஸி மன்னர், மஸ்ஜிதைக் கூட்டிப் பெருக் கும்பெண், இரவில் அடக்கப்பட்டமனிதர் போன்ற பலரின் ஜனா ஸாத் தொழுகையை நான்கு தக்பீர்கள் கட்டியே தொழுவித் துள்ளார்கள்.

அபூஉமாமா(றழி) அறிவிக்கின்றார்கள்.. ஜனாஸாத் தொழுகை யில் முதலாம் தக்பீரில் சத்தமில்லாது பாத்திஹா ஸூரா ஓது வதும் பின்பு மூன்று தக்பீர்கள் கட்டுவதும் கடைசி தக்பீரில் ஸலாம் கூறுவதும் நபிவழியாகும் - நஸாயி.

**ஐந்து தக்பீர்களும் கட்டலாம் என்பதற்கு ஆதாரம்..**

அப்துர்ரஹ்மான் இப்னு அபீ லைலா(றழி) அறிவிக்கின்றார்கள்.. ஸைத் பின் அர்க்கம்(றழி) அவர்கள் ஜனாஸாத் தொழுவிக்கும் போது நான்கு தக்பீர்கள் கட்டியே தொழுவிப்பார்கள். ஒரு முறை 5 தக்பீர்கள்கட்டி தொழுவித்ததை நான்பார்த்ததும் அது பற்றி வினவியபோது நபியவர்கள் 5 தக்பீர்கள் கட்டித் தொழு வித்ததை நான் கண்டுள்ளேன். எனவே அதை யாருக்காகவும் ஒருபோதும் விடமாட்டேன் என்றார்கள். முஸ்லிம்.

**ஆறு-ஏழு தக்பீர்களுக்கான ஆதாரம். ..**

அலி(றழி) அவர்கள் பத்ரில் கலந்துகொண்ட ஸஹாபாக்களுக்குத் தொழுவித்தால் ஆறு தக்பீர்களும், ஏனைய நபித்தோழர்களுக்கு 5தக்பீர்களும் ஸஹாபிகளல்லாத முஸ்லிம்களுக்கு நான்கு தக்பீர்களும் கட்டி தொழுவிக்கும் வழக்கமுடையவராய் இருந்தார்கள். துஹாவி.

ஆலி(றழி0யவர்கள் ஒருமுறை ஸஹ்ல்பின் ஹனீப் அவர்களுக்கு ஜனாஸாத் தொழுவித்த போது ஆறு தக்பீர்கள் கூறித் தொழுவித்து விட்டு எம் பக்கம் திரும்பி இவர் பத்ர் ஸஹாபி என்றார்கள். முஹல்லா.

ஆலி(றழி)யவர்கள் அபூ கதாதா (றழி) அவர்களுக்கு ஜனாஸாத் தொழுகை நடத்தும் போது ஏழு தக்பீர்கள் கூறி தொழுவித்தார்கள் . அவர்களும் பத்ரி போரில் கலந்து கொண்டவர்களாய் இருந்தார்கள். ஆதாரம்: தஹாவி.

நுபியவர்கள் ஹம்ஸா(றழி) அவர்களின் ஜனாவுக்கு ஒன்பது தக்பீர்கள் சொல்லி தொழுவித்தார்கள்.

மேற்படி தகவல்கள் சில ஸஹாபாக்களின் செயல்களாயினும் அவை நபியவர்களின் ஹதீஸின் அந்தஸ்த்தைப் பெறுகின்றன. நுபியவர்களின் காலத்திலும் அதற்குப்பின்னரும் இவ்வாறு நான்கு தப்பீர்களுக்கு மேலாக 5,6,6,7,9 தக்பீர்க்ள சொல்லி தொழுவிப்பது நடைமுறையில் இருந்துள்ளது. எனவே

இதையும் அவ்வப்போது நடைமுறைப்படுத்த வேண்டும். ஒன்பது தக்பீர்களுக்கு அதிகமாக சொல்லி தொழுவித்தமைக்கு ஆதாரம் ஏதும் இல்லாததால் அவ்வாறு செய்யக் கூடாது.

ஒருசில அறிஞர்கள் நான்கு தக்பீர்களுக்கு மேல் சொல்வவை நபியவர்கள் ஆரம்பத்தில் செய்திருப்பினும் இறுதியில் நான்கு தக்பீர்களுடன் சுருக்கிக் கொண்டார்கள். எனவே நான்கை விட அதிகரிக்கக்கூடாது என்பர். இதற்கு ஆதாரமாக நபியவர்கள் த னது கடைசி காலத்தில் ஜனாஸாத் தொழுகையில் நான்கு தக்பீர்களையே கட்டினார்கள் என்ற ஹதீஸை முன்வைக் கின்றனர். இது பலவீனமாக ஹதீஸாகும். அவ்வாறே ஸஹாபா க்கள் நபியவர்களிக்குப் பின்னரும் நான்குக்கு மேலாக தக்பீர் சொல்லித் தொழுவித்தமை நபியவர்களின் இவ்வழிமுறை மா ற்றப்படவில்லை என்பதற்கான ஆதாரமாகும்.

# ஜனாஸாத் தொழுகை முறை .

மையித்தின் மீது கடமையான ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றுவதாக நிய்யத் வைத்துக் கொண்டு முதல் தக் பீரில் கைகளை உயர்த்தி அல்லாஹு அக்பர் எனக்கூறி நெஞ் சுப் பகுதியில் இடது கையின் நடுப்பகுதி மேல் வலது கையி னை வைத்துக் கொள்ள வேண்டும். முதல் தக்பீரை அடுத்து ஸுரத்துல் பாத்திஹாவை ஓத வேண்டும். இரண்டாம் தக்பீரின் பின் நபியவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும். மூன்றாம் தக் பீருக்குப் பின் மையித்துக்காக அல்லாஹ்விடம் பிழைபொறுக்கு மாறு பிரார்த்திக்க வேண்டும். இவைகளே ஜனாஸாத் தொழு கையின் சுருக்க வழிமுறையாகும்.

**இனி இந்நான்கு தக்பீர் கொண்ட தொழுகையில் கடைப்பிடி க்கப்பட வேண்டிய சுன்னத்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.**

- ஏனைய தொழுகைகளைக் போல் ஜனாஸாத் தொழு கையிலும் ஆரம்ப தக்பீரின் போது இரு கைகளையும் உயத்தி தக்பீர் கட்டுவது சுன்னத்தாகும்.

நபியவர்கள் ஒருவருக்கு ஜனாஸாத் தொழுவிக்கும்போது தம் இரு கைகளையும் உயர்த்தி வலதை இடதுகையின் மீது வை த்தார்கள். திர்மிதி,

நபிமார்களான நாம் விரைவாக நோன்புதிறக்க வேண்டுமெ ன்றும் ஸஹர் உணவை தாமதிக்குமாறும் தொழுகையில் வல துகையை இடதின் மீது வைக்க வேண்டுமென்றும் கட்டளை யிடப் பட்டுள்ளோம். - இப்னு ஹிப்பான்.

பொதுவாக தொழுகையின் போது கைகளை தொப்புளின் கீழ் வைக்கும் முறைக்கான ஆதாரம் நவவி(றஹ்), ஸைலயி(றஹ்) போன்ற ஹதீஸ்க்கலை அறிஞர்களின் ஏகோபித்த முடிவின் படி பலவீனமானதாகும்.

- முதலாவது தக்பீருக்குப் பின் சூரத்துல் பாத்திஹா ஓத வேண்டும். அதனை சத்தமின்றி ரகசியமாக ஓதுவது சுன்னத்தா கும். சிலசமயங்களில் சத்தமிட்டு ஓதவும் அனுமதியுண்டு. பாத் திஹாவுக்குப் பின் சிறிய சூரா ஓதுவதற்கும் நபிவழியில் அனு மதியுண்டு .

தல்ஹா(றழி) அறிவிக்கின்றார்கள். நான் இப்னு அப்பாஸ்(றழி) க்குப் பின்னால் நின்று ஜனாஸாத் தொழுதேன். அவர்கள் பா த்திஹா சூரத்தை சத்தமிட்டு ஓதிவிட்டு மற்றொரு சூராவையும் ஓதினார்கள். பின்னர் நான் சத்தமிட்டு ஓதக்காரணம் அது சுன் னா என்பதை நீங்கள் அறிந்திடவே.. என்றார்கள். – புகாரி.

அபூ உமாமா(றழி) அறிவிக்கின்றார்கள் .. ஜனாஸாத் தொழு கையில் பாத்திஹாவை சத்தமிட்டு ஓதுவது சுன்னத் - நபிவழி யில் உள்ளதாகும். – நஸாயி.

ஹனபி மத்ஹபில் பாத்திஹா சூரத் ஓத வேண்டியதில்லை என்ற கருத்து நபிவழிக்கு மாற்றமானதாகும்.

- அடுத்து இரண்டாம் தக்பீரைச் சொல்லி அதில் நபியவர்கள் பேரில் ஸலவாத் சொல்ல வேண்டும். அபூ உமாமா(றழி) யின் ஹதீஸ் தொடரில் .. பின் இரண்டாம் தக்பீரில் நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வது சுன்னாவாகும். – நஸாயி.

ஜனாஸாத்தொழுகைக்கென பிரத்தியேக ஸலவாத் வாசகங்கள் எதுவும் ஹதீஸ்களில் இடம்பெறவில்லை. எனவே அத்தஹிய்யாத்தில் ஓதும் ஸலவாத் இப்றாஹீமிய்யாவையே இதிலும் ஓத வேண்டுமென்பதைப் புரிய முடிகின்றது. ஸலவாத் இப்றாஹீமிய்யா ஏழு வாசகங்களில் சிறு மாற்றங்களுடன் பல்வேறு ஹதீஸ்களில் அறிவிக்கப்படுகின்றது.

- அடுத்த இரண்டு தக்பீர்களுக்குப் பின்னரும் மையித்துக்காக துஆக் கேட்பது சுன்னத்தாகும்.

நபியவர்கள் கூறினார்கள்.. நீங்கள் மையித்துக்காகத் தொழுதால் அதற்காகத் தூயமுறையில் பிரார்த்தியுங்கள். அபூதாவுத்.

மையித்துக்காகப் பிரார்த்திப்பதற்காக நபியிவர்கள் கற்றுத் தந்த நான்கு துஆக்களை ஹதீஸ்களில் காண முடிகின்றது. அவற்றில் சில..

**அல்லாஹும்மக.ஃ.பிர் லஹு வர்ஹம்ஹு வஆபிஹி வ.ஃ.பு அன்ஹு வஅக்ரிம் நுஸுலஹு வவஸ்ஸி.ஃ. முத்கலஹு வ.ஃ.ஸில்ஹு பில்மாயி வத்தல்ஜி வல் பர்தி வநக்கிஹி மினத் துனூபி வல் கதாயா, அல்லாஹும்ம அப்தில்ஹு தாரன் கைரன் மின் தாரிஹீ வஸவ்ஜன் கைரன் மின் ஸவ்ஜிஹீ வஅஹ்லன் கைரன் மின் அஹ்லிஹீ வஅத்ஹில்ஹுல் ஜன்னத வஅஇத்ஹு மின் அதாபில் கப்ரி வமின் அதாபின் நார். -முஸ்லிம்.**

(பொருள்: யாஅல்லாஹ்! மரணித்த இம்மனிதரை மன்னித்து அருள்பாலிப்பாயாக, அவருக்கு மறுமையில் நல்லாரோக்கிய த்தை வழங்கி பிழைபொறுப்பாயாக. அவர் நுழையவிருக்கும் மண்ணறையை கண்ணியப்படுத்தி அவர் தஙகுமிடத்தை விசா லமாககுவாயாக, அவரை தண்ணீராலும் பனியாலும் குளிர் ச்சியாலும் கழுவி சுத்தப்படுத்துவாயாக. யாஅல்லாஹ்! அழுக் கிலிருந்து வெள்ளை ஆடை சுத்தப்படுத்தப்படுவது போல அவ ரையும் அவரது பாவங்களை விட்டும் பரிசுத்தப்படுத்துவாயாக. அவருக்கு உலகிலிருந்த வீட்டைவிடவும் சிறந்த வீட்டையும், அவரின் துணைவியை விட சிறந்த துணைவிகளையும், குடும்பத்தினரைவிட சிறந்த குடும்பத்தினரையும் அருள்வாயபக. மேலும் அவரைக் கப்ரின் வேதனைகளை விட்டும் நரகத்தின் வேதனைகளை விட்டும் காத்தருள்வாயாக.)

**ஆல்லாஹும்ம.ஃபிர் லிஹய்யினா வமய்யதினா வஷாஹிதினா வகாயிபினா, வஷகீரினா வகபீரனா வதகரினா வஉன்தானா அல்லாஹும்ம மன் அஹ்யய்தஹு மின்னா பஅஹ்யிஹி அலல் இஸ்லாம், வமன் தவப்பைத்தஹு மின்னா பதவக்கஹு அலல் ஈமான் . அல்லாஹும்ம லாதஹ்ரிம்னா அஜ்ரஹு வலா துளில்லனா ப..ஃதஹு.**

(பொருள்: யாஅல்லாஹ்! எங்களில் உயிர்வாழ்பவர்களுக்கும் மரணித்தவர்களுக்கும் பிழை பொறுப்பாயாக. அவ்வாறே இங்கு வந்துள்ள –வராத சிறிய-பெரிய ஆண்-பெண் அனைவருக்கும் பிழைபொறுப்பாயாக. யாஅல்லாஹ்! எங்களில் உயிரோடிப்பவர் களை இஸ்லாத்திலே வாழவைப்பாயாக. மரணித்தவர்களை ஈமானோடு மரணிக்க வைப்பாயபக. யாஅல்லாஹ் ! அவர்களு டைய நற்கூலிகளை இல்லாமல் செய்துவிடாதே!. அவர்களின் மரணத்தின் பின் எங்களை வழிதவறச் செய்துவிடாதே!.)

**அல்லாஹும்ம அப்துக வஇப்னு அமதிக.. இஹ்தாஜ இலா றங்மதிக, வஅன்த கனிய்யுன் அன் அதாபிஹீ, இன் கான முஹ்ஸினன் பஸித் பீ இஹ்ஸானிஹீ வஇன் கான முஸீஅன்**

**பதஜாவஸ் அன்ஹு.**

(பொருள்: யாஅல்லாஹ்! நிச்சயமாக இம்மனிதர் உன் அடிமையாவார். உன் பெண்ணடிமையான ஹவ்வா(அலை)யின் மகனாவார். அவர் உன்றஹ்மத்தை வேண்டி நிற்கின்றார். அவரை வேதனைசெய்யும் அவசியம் உனக்கில்லை.அதைவிட்டும் நீ தேவையறறவன். எனவே அவர் நல்லவராயின் மென்மேலும் அவரின் நல்லறங்களை அதிகரிப்பாயாக. அவர் தீயவராயின் அவரை மன்னித்து விடுவாயாக.) பைஹகி.

மரணித்தவர் பருவ வயதையடையாத பாலகர், சிறுவராயின்.. **அல்லாஹும்மஜ்அல்ஹு லனா ஸலபன் வபர்தன் வஅஜ்ரன்**.. என்று ஓதவதும் நபிவழியாகும். – **பைஹகி.**

(பொருள் : யாஅல்லாஹ்! இக்குழந்தையை அதன் பெற்றோருக்கு நற்கூலியாகவும், முற்படுத்தி வைத்த சேமிப்பாகவும், பெற்றோரின் வருகைக்காகக் காத்திருக்கும் வரவேற்பாளராகவும் ஆக்குவாயாக.)

நான்காவது தக்பீருக்குப் பின்னரும் மையித்துக்காக துஆக் கேட்பது சுன்னத்தாகும். எனினும் இதில் நபியவர்கள் மையித்துக்காக துஆக்கேட்டதாக ஹதீஸில் இடம்பெற்றாலும் எந்தெந்த வாசகங்கள் என்பது இடம்பெறவில்லை. எனவே விருப்பிய துஆக்களைக் கேட்கலாம் என்பது தெளிவாகின்றது. சிலர் **அல்லாஹும்ம லா தஹ்ரிம்னா அஜ்ரஹு வலா தப்தின்னா ப.்.தஹு வக்பிர் லனா வலஹு** என்று சொல்ல வேண்டுமெனக் குறிப்பிட்ட போதிலும் அந்த வாசகமும் மூன்றாம் தக்பீரில் கூறப்பட வேண்டியதாகவே ஹதீஸில் இடம்பெற்றுள்ளது.

- அதன் பின்பு வழக்கமான தொழுகையை முடிக்க ஸலாம் கொடுப்பதைப் போல வலது இடது பக்கமாக இரண்டு ஸலாம்கள் கொடுக்க வேண்டும்.

இப்னுமஸ்ஊத்(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்கள் செய்து வந்த மூன்று விடயங்களை சில மனிதர்கள் விட்டுவிட்டார்கள்..

அதிலொன்றுதான் ஜனாஸாத் தொழுகையில் ஐங்காலத் தொழுகைகளில் ஸலாம் கொடுப்பது போல் ஸலாம் கொடுப்பதாகும். –பைஹகி.

நபியவர்கள் ஐங்காலத் தொழுகைகளில் இரண்டு தடவைகள் ஸலாம் கொடுப்பார்கள் என்று முஸ்லிம் நூலில் இடம் பெறுகின்றது.

- ஒருதடவை மாத்திரம் ஸலாம் கொடுப்பதுடன் சுருக்கிக் கொள்ளவும் முடியும். அப்படியும் நபியவர்கள் செய்துள்ளார்கள்.

நபியவர்கள் ஒருவருக்கு ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள். அதில் நான்கு தக்பீர்கள் சொல்லி ஒரு தடவை ஸலாம் கொடுத்தார்கள். பைஹகி.

ஹம்பலி மத்ஹபில் இம்முறையைத்தான் பின்பற்றுகின்றார்கள். இமாம் அஹ்மத் பின் ஹன்பல்(றஹ்) அவர்களிடம் இதுபற்றிக் கேட்கப்பட்ட போது தனது கழுத்தை வலப்பக்கம் திருப்பி இப்படித்தான் ஸலாம் கொடுக்க வேண்டும் என்று செய்து காட்டினார்கள் . –அபூதாவூத்.

- **அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ** என்று சொல்வதும் சுன்னத்தானதே ! சில அறிஞர்கள் அதை மறுத்தபோதிலும் மேலே கூறப்பட்ட இப்னு மஸ்ஊத் (றழி) யின் ஹதீஸில் அதுவும் ஆதாரப் பூர்வமாக இடம்பெறுகின்றது.
- தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தாலேயன்றி ஜனாஸாத் தொழுகையை தடுக்கப்பட்ட மூன்று நேரங்களில் செய்யாமலிருப்பது அவசியமாகும். உக்பா(றழி) அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் மூன்று நேரங்களில் தொழுவதையும் மையித்தை அடக்குவதையும் தடுத்துள்ளார்கள். சூரியன் உதிக்க ஆரம்பித்ததிலிருந்து முழுமையாக உயரும் வரை, உச்சிக்கு வந்தது முதல் சாயும் வரை, மறைய ஆரம்பித்ததிலிருந்து

முழுமையாக மறையும் வரை – முஸ்லிம்.

அறிஞர்கள் இவ்வாறு தடுக்கப்பட்ட நேரங்களில் ஜனாஸாக் களை அடக்கம்செய்வது ஹறாமா? மக்ரூஹா? என்பதில் கரு த்து வேற்றுமைப்படுகின்றனர். இமாம் ஷாபி(றஹ்) இவ்வாறு செய்வது ஆகும் என்றும் சொல்கின்றார்கள். ஹதீஸில் தடை தெளிவாக உள்ளதால் அதைத் தவிர்ந்து கொள்வதே மிகச் சிறந்தது.

- இரவு நேரத்தில் தொழுவிப்பதும் அடக்கம் செய்வதும் ஆகுமானதாகும். அபூபக்ர்(றழி) அவர்களை இரவிலேயே அடக் கம் செய்யப்பட்டது. ஸஹாபாக்கள் பல ஜனாஸாக்களை இர வில் தொழுவித்து அடக்கியுள்ளார்கள். இரவில் அடக்கக் கூடா தென நபியவர்கள் சில சந்தர்ப்பங்களில் தடுத்த காரணம் நள் ளிரவில் ஜனாஸாவில் கலந்துகொள்வது மக்களுக்குச் சிரம மாகலாம் அவர்கள் வருகை தராதிருக்க காரணமாகி விடலாம் என்பதனாலேயே ! எனவே முன்னிரவில்- போதியளவு மக்க ளின் வருகை எதிர்பார்க்கப்பட்ட நிலை இருக்குமாயின் இரவு நேரத்திலும் ஜனாஸாத் தொழுவிக்க முடியும்.

# (13)

# நல்லடக்கம் செய்தல்.

மையித்தை நல்லடக்கம் செய்வது மரணித்த ஒவ்வொருவருக்கும் அவர் முஸ்லிமல்லாதவராக இருப்பினும் உயிரோடிருப்பவர்கள் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாகும். இதற்கான ஆதாரங்கள்..

அபூதல்ஹா(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்கள் பத்ர் யுத்தம் முடிவுற்றவேளை அதில்மரணித்த இருபத்திநான்கு குறைஷிக் காபிர்களின் சடலங்களை கப்ர்களை வெட்டி அடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். பின் அவர்களின் முக்கியமானவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அழைத்து அபூ ஜஹ்லே! ஹிஸாமே! உத்பாவே! ஷைபாவே! வலீதே ! நீங்கள் அல்லாஹ்வுக்கும் றஸூலுக்கும் வழிப்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.? அல்லாஹ் மு.ஃ.மின்களான எங்களுக்கு வாக்களித்த(வெற்றி அல்லது வீரமரணம்) ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டோம். நிராகரிப்பாளர்களான உங்களுக்கு அவன் வாக்களித்த (நரகத்)தைப் பெற்றுக் கொண்டீர்களா? என்றார்கள். அப்போது நாம் உயிரற்றுப் போன இச்சடலங்களுக்கு நீங்கள் பேசுவது கேட்குமா? என வினவ ஆம்! அவர்களுக்கு உங்களை விட நன்றாகக் கேட்கும். நான் அவர்களுக்கு அன்று சொன்னது உண்மையே என்பதை இப்போது அவர்கள் அறிந்திருப்பார்கள் ஆனால் அவர்களால் பதிலளிக்க முடியாது என்றார்கள். கதாதா (றழி) கூறுகின்றார்கள்.. (மரணித்தவர்களால் கேட்க முடியாது) எனினும் அல்லாஹ் நபியவர்கள் பேசியதைச் செவியுறுவதற்காக அவர்களுக்கு உயிரைத் திருப்பிக் கொடுத்தான் என்றார்கள். – புகாரி .

அலி(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்களின் சிறிய தந்தையான என்தந்தை அபூதாலிப் மரணித்த போது நான் நபியவர்களிடத்தில் வந்து உங்களின் வழிதவறிய சிறிய தந்தை மரணித்துவிட்டார் அவரை அடக்கம் செய்வது யார் என்றேன்.

நபியவர்கள் நீங்களே அடக்கம் செய்யுங்கள் என்றார்கள். பின் எதுவும் பேசாமல் என்னிடம் வரவும் என்றார்கள். யாரஸுல ல்லாஹ் ! அவரோ காபிராக மரணித்துள்ளார் என்றபோது நீ சென்று அடக்கம் செய்துவிட்டு குளித்துக்கொள். பின் எதுவும் பேசாமல் என்னிடம் வாரும்! என்றார்கள். நானும் அடக்கிய பின் குளித்துவிட்டு நபியவர்களிடத்தில் வந்த போது எனக்காக சில துஆக்களைக் கேட்டார்கள். எனக்கு விலையுயர்ந்த சிவ ப்பு, கறுப்பு ஒட்டகைகள் (விலையுயர்ந்த செல்வம்) கிடை ப்பதை விட இந்த பிரார்த்தனையே எனக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இருந்தது. —அஹ்மத் .

# நல்லடக்கம் செய்யும் விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சுன்னத்தான விடயங்கள்..

- முஸ்லிம்களின் மையவாடியில் காபிர்களையோ காபிர்க ளின் சவக்காலையில் முஸ்லிம்களையோ அடக்கம் செய்யக் கூடாது. இவ்விதிமுறை நபியவர்களின் காலத்திலிருந்து இன்று வரை அறிஞர்களுக்கு மத்தியில் கருத்துவேறுபாடற்ற நிலை யில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

பஷீர்(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்களும் நானும் ஒரு முறை கைகளைப் பற்றிப் பிடித்தவர்களாக நடந்துசென்றோம். அப்போது நபியவர்கள் முஷ்ரிகீன்களின் மண்ணறைப்பக்கம் வந்தபோது ‘ இவர்களுக்கு நிறைய நல்லவைகள் நடப்பதற்கு முன் இவர்கள் முந்திக் கொண்டார்கள்.( அதாவது இஸ்லா த்தை ஏற்கும் பாக்கியம் அற்றுப் போனார்கள்.) என்று கூறி னார்கள். பின் அப்படியே நடந்துகொண்டு முஸ்லிம்களின் கப்ரி ஸ்தான் பக்கம் வந்து இவர்கள் நிறைய பாக்கியங்களை அடைந்து கொண்டார்கள் என்றார்கள். அப்போது நபியவ ர்களின் பார்வை ஒரு மனிதனின் பக்கம் நிலைத்தது. அம்மனிதர் கப்ர்களுக்கிடையில் இரு செருப்புக்களை அணிந்து நடந்து சென்றார். உடனே நபியவர்கள் மிருவடிக்கட்டைச் செருப்பு அணிந்தவரே! உம் மிருவடிக்கட்டையை கழட்டிப்

போடுவீராக என்றார்கள். உடனே அம்மனிதர் தனது இரு செருப்புக்களையும் கழட்டி வீசியெறிந்தார். –அபூதாவுத்.

இந்த ஹதீஸில் முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் வெவ்வேறு மையவாடிகள் நபியவர்களின் காலத்தில் இருந்துள்ளதென அறிய முடிகின்றது. அவ்வாறே மையவாடியில் செருப்புடன் நட மாடக் கூடாது என்றும் அறிஞர்கள் இந்த ஹீஸிலிருந்து சட்ட மெடுத்திருக்கின்றார்கள். அதிபற்றி விரிவாகப் பின்னர் பார்ப் போம்.

- பொது மையவாடியிலேயே அனைவரையும் அடக்கம் செய்வது நபிவழியாகும். நபியர்களை அன்னாரின் வீட்டிலேயே அடக்கம் செய்தமை அவர்களுக்கு மாத்திரம் உள்ள விசேட ஆதாரத்தின் அடிப்படையிலாகும். ஸஹாபாக்கள் ஸலபுகள் யாரிடத்திலும் எவ்வளவு உயர்ந்த தனிதரையும் தனி மக்ப ராவில் அடக்கம் செய்யும் வழக்கம் இருந்ததில்லை.

உங்கள் வீடுககளை மண்ணறைளாக ஆக்கிக் கொள்ளாதீர் கள்.(முஸ்லிம்) என்ற ஹதீஸிலிருந்தும் வீடுகளில் ஜனாஸா க்களை அடக்ககக் கூடாது என்பதை விளங்கிட முடியும்.

ஆயிஷா(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்களின் உயிர் பிரி ந்த போது அன்னாரை அடக்கம் செய்யும் இடம் விடயத்தில் மக்கள் கருத்துவேற்றுமைப்பட்டனர். அப்போது அபூபக்ர்(றழி) அவர்கள் 'அல்லாஹ் எந்த நபியையும் அடக்கம் செய்யப்பட வேண்டிய இடத்தில் வைத்தேயன்றி மரணிக்க வைப்பதில்லை' என்ற ஹதீஸை எடுத்துரைத்தார்கள். பின் நபியவர்கள் மர ணித்த அதே இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

மையித்களை அவரவர் வீடுகளில் அடக்கும்போது பல்வேறு விரும்பத்தகாதவை நடக்கவும் வாய்ப்புள்ளது. அவ்விடங்களு க்கு மக்பராவுடைய சட்டங்ககளை நடைமுறைப்படுத்த வேண்டி வரும். மக்பராவில் தொழுவது வெறுக்கது என்ற சட்டம், கட்டிடம் கட்ட முடியாமை அவ்விடத்தில் நடக்க உட்கார முடியாமை போன்ற சட்டங்களை அமுலாக்குவவதில் சிக்கல்

ஏற்படலாம். இது பற்றி இமாம் புகாரி(றஹ்) அவர்களும் பேசியுள்ளார்கள். காலப்போக்கில் மரணித்தவரிடம் உதவி தேடல் போன்ற சிர்ககான விடயஙகளும் தனி மக்பராவில் ஏற்படும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

- பொது மையவாடியில் அடக்குவதிலிருந்து மார்க்க அறப் போரில் உயிர் நீத்த ஸுஹதாக்களுக்கும் சுன்னாவில் விதிவிலக்களிக்கப்படுகின்றது. அவர்களையும் அவர்கள் உயிர் நீத்த யுத்தகளத்திலேயே அடக்கம் செய்வது நபிவழியாகும்.

ஜாபிர்(றழி) அறிவிக்கின்றார்கள்.. உஹத் போரில் என் தந்தையும் மாமனும் உயிர் நீத்தனர். அவ்விருவரையும் நல்லட்கத்துக்காக மதீனாவுக்கு எடுத்துவர நான் எத்தனித்த போது ஒரு நபித்தோழர் ‘ அறிந்திடுங்கள் யாரும் இங்கிருந்து ஜனாஸாக்களை எடுக்காது திரும்பி விடுமாறும் ஷுஹதாக்களை மாத்திரம் அவர்கள் மரணித்த போர்க்களத்திலேயே அடக்கம் செய்திட வேண்டுமென்றும் நபியவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்’ என்று அறிவிப்புச் செய்தார். இதைக் கேட்டதும் நாங்கள் அவர்களை அங்கேயே அடக்கம் செய்துவிட்டுத் திரும்பினோம். –அபூதாவுத் , அஹ்மத்.

- தவிர்க்க முடியாத நிலைகளிலேயேயன்றி தடுக்கப்பட்ட மூன்று நேரங்களிலும் தொழுவிப்பதோ ஜனாஸாக்களை அடக்கம் செய்வதோ கூடாது.

நபி(ஸல்) அவர்கள் பின்வரும் மூன்று நேரங்களிலும் தொழுவிப்பதையும் எங்கள் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதையும் தடுத்துள்ளார்கள். சூரியன் உதயமானகியதிலிருந்து உயரும் வரை, நடு உச்சிக்கு வந்ததிலிருந்து சாயும் வரை, மறைய ஆரம்பித்ததிலிருந்து முற்றாக அஸ்த்தமிக்கும் வரை உள்ள நேரங்களாகும்.

இந்த நேரங்களில் தொழுவிப்பதும் அடக்கம் செய்வதும் மக்ரூஹ்- வெறுக்கத்தக்கது ஆகும். ஹராம் அல்ல என்பதே அதிகமான அறிஞர்களின் கருத்தாகும்.

- அவ்வாறே தக்க காரணிமின்றி இரவு நேரத்தில் அடக் கம் செய்வதும் கூடாது.

நபித்தோழர் ஒருவர் இரவில் மரணித்து விட்டபோது போதுமை யற்ற துணியில் கபன் செய்யப்பட்டு இரவோடிரவாக அடக்கம் செய்யப்பட்டு விட்டார்கள். இதையறிந்த நபியவர்கள் அவருக் காகத் தொழமுடியாமல் போனதற்காக இரவில் ஜனாஸாக் களை நல்லடக்கம் செய்வதை தடுத்தார்கள். இக்கட்டாள நிலைகளின் போதே தவிர. –முஸ்லிம்.

மேற்படி தடை இரவில் ஜனாஸா நல்லடக்கம் இடம்பெறும்போது மக்கள் கலந்து கொள்ள முடியாமல் போகும் என்பதற்காக என்று ஹதீஸ் வாசகம் அமைந்துள்ளதால் அச்சங்கடம் நீங்கிவிட்டால் தடையும் நீங்கிவிடும் என்பதை அறிய முடிகின்றது. இத்தடையும் மஹ்ரூஹ் வகையைச் சேர்ந்ததா கும்.
எனவே இரவில் மக்கள் ஒன்று சேர்வதில் சிரமமில்லை என்றிருந்தாலோ அல்லது இரவில் அடக்க வேண்டிய கட்டாயம் ஏற் பட்டாலோ அடக்கலாம் என்பதும் இந்த ஹதீஸிலிருந்து தெளி வாகின்றது. அச்சந்தர்ப்பத்தில் இரவில் அடக்குவது மக்ரூஹ் அல்ல.. ஸஹபபாக்கள் இரவில் அடக்கம் செய்தமைக்கும் பல ஆதாரங்கள் உள்ளன.

- இரவில் அடக்கவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டாலும் தாராளமாக அடக்கலாம். றபியவர்கள் ஒருமனிதரை இரவில் அடக்குவதறகாக கப்ருக்குள் வைத்தார்கள். கப்ருக்குள்ளே விளக்கையும் பிடித்தார்கள். -இப்னுமாஜா.

எனவே இரவில் அடக்கம் செய்வதால் தொழவருவோர் எண்ணிக்கை குறையும் அல்லது மக்களுக்குச் சிரமாகும் என்ற நிலைகளிலேயே அவ்வாறு செய்வது விரும்பத்தகாததாகும். அப்படியில்லா விட்டாலோ அல்லது அவசியமேற்பட்டாலோ இரவில் அடக்குவதில் எவ்வித தடையுமில்லை .

- **கப்ரை ஆழமாகவும் விசாலமாகவும் அழகாகவும் தோண்டுவது கடமையாகும்.** அவ்வாறே அவசியமேற்பட்டால் விசாலமான ஒரு கப்ரில் பல ஜனாஸாக்களை அடக்கம் செய் வதும் ஆகுமானதாகும்.

ஹிஷாம்(றழி) அறிவிக்கின்றார்கள் ..
உஹத் யுத்தத்தின்போது முஸ்லிம்களில் பலர் மரணித்தும் காயமுற்றும் இருந்தனர். ஆதலால் நாம் யாரஸுலல்லாஹ்! ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக கப்ர் தோண்டுவது சிர மமான காரியமாகும். எனவே என்ன செய்வதென்று எங்களுக் குச் சொல்லுங்கள் என்றோம். அதற்கு நபியவர்கள் ஆழமா கவும் விசாலமாக, அழகாகவும் தோண்டுங்கள். ஒரே கப்ரில் இரண்டு,மூன்று மையித்துகளை வையுங்கள் அதிகம் குர் ஆனைக் கற்றவரை முதலில் கப்ரில் வையுங்கள் என்றார்கள். அதிகம் குர்ஆனைக் கற்றவர் என்ற வகையில் எனது தந்தை மூன்றாவதாகக் கப்ரில் வைக்கப்பட்டார்கள் -அபூதாவுத், நஸா யி.
அவ்வறே அம்ர் பின் ஜமூஹ் எனும் கால் ஊனமுற்ற நபித் தோழர் உஹதில் கலந்துகொள்ள அனுமதி கேட்டார். நீர் கல ந்து கொள்ளத் தேவையில்லை. உமக்கு சலுகையளிக்கப்பட் டுள்ளது என்று நபியவர்கள் கூறியும் இல்லை நான் இந்த ஊனமுற்ற கால் சீர்பெற்று சுவர்க்கத்தில் நடந்துசெல்ல விரும்புகின்றேன். எனக்கு அனுமதிதாருங்கள் என்றார். பின் அவரும் அவரின் சகோதரனின் மகனும் அவரது உரிமை யிடப்பட்ட அடிமையும் யுத்தத்தில் ஷஹீதாகி விட்டனர். நபியவர்கள் அம்மூவரையும் ஒரே கப்ரில் வைத்து நல்லடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். –அஹ்மத்.

மற்றொரு அன்ஸாரி நபித்தோழர் அறிவிக்கின்றார்கள்..

நான் என் தந்தையுடன் ஒரு ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து கொண்டேன். அங்கே நபியவர்கள் கப்ரின் ஓரத்தில் அமர்ந்து கொண்டு கப்ரு வெட்டுபவரிடம் கப்ரை தலைப்பக்கமும் கால்ப் பக்கமும் நன்கு ஆழமாக வெட்டுங்கள். சுவனத்தில் அவருக்கு எம்மாத்திரம் பேரீத்தங் குலைகள் காத்திருக்கின்றன என்றார் கள். அபூதாவுத்.

- **கப்ர் தோண்டுவதில் இரு முறைகள் உள்ளன.**

அவை லஹ்த் முறை சிக் முறை என்பனவாகும். லஹ்த் என் பது மண்ணில் செவ்வக அமைப்பில் ஆழமாகத் தோண்டிவிட்டு பின் வலப்பக்கமாக பக்கவாட்டில் ஒரு குழிதோண்டி அதற்குள் மையித்தை வைத்து கற்களால் வாயிலை மூடிவிட்டு பின்னர் குழியை மூடுவதாகும். அல்லது குறிப்பிட்ட ஆழத்துக்கு கப்ரை தோண்டிவிட்டு பின் அக்கப்ருக்குள் சற்று சிறிதாக மற்றொரு கப்ரை வெட்டி ஜனாஸாவை உள்ளே வைத்து அக்குழியை பலகை அல்லது பெரிய கற்களால் மூடிவிட்டு பின் மண்ணால் கப்ரை மூடுவதாகும். இவ்விரண்டு முறைக்கும் லஹ்த் என்றே சொல்லப்படும். லஹ்த் வகைக்குழி இறுகியமண் கொண்ட பகு திகளிலேயே தோண்டுவது இலகுவாகும். அப்பகுதிகளில் இவ் வாறு தோண்டுவது சிறந்தது.
சிக் என்பது மண்ணில் செவ்வகவடிவில் ஒரே சீராக ஆழமாகத் தோண்டப்படும் கப்ராகும். இறுக்கமற்ற மணற்பாங்கான பகுதி களில் இவ்வகைப் கப்ரே தோண்டுவது இலகுவானதாகும். அங்கு இவ்வகைக் கப்ர் சிறந்ததாகும்.

நபியவர்கள் மரணித்தவேளை மதீனாவில் கப்ர்வெட்டும் இருவர் இருந்தனர். ஒருவர் லஹ்த் வடிவிலும் மற்றவர் சிக் வடிவிலும் வெட்டும் வழக்குடையவர்கள். ஸஹாபாக்களான நாம் யாரை கப்ர் வெட்ட அழைப்பதென யோசித்துவிட்டு அல்லாஹ்விடம் உதவி தேடியவர்களாக ‘ இருவருக்கும் சொல்லியனுப்புவோம். யார் முதலில் வருகின்றாரோ அவர் நபியவர்களுக்கு கப்ர் வெட்டட்டும்’ என்று சொல்லிக் கொண்டோம். லஹ்த் வடிவில் வெட்டுபவரே முதலில் வந்தார். எனவே நபியவர்கள் லஹ்த் கப்ரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். -இப்னுமாஜா.

இவ்வாறே ஆமிர்(றழி)யவர்கள் மரணிக்கும் போது எனக்கு நபி யவர்களுக்கு செய்யப்பட்டதுபோல் லஹ்த் கப்ர் வெட்டி அதில் என் உடலுக்கருகில் கற்களை நட்டி அடக்கம் செய்யுங்கள் என வஸிய்யத் செய்தார்கள். —முஸ்லிம்.

லஹ்த் முறை கப்ர் (மதீனாவாசிகளான அல்லது அறபுப்பகு தியில் வசிப்போரான) எமக்குரியதாகும். சிக் எம்மல்லாத ஏனையோருக்காகும் என நபியவர்கள் கூறினார்கள். -ஹாகிம்.

- **மையித் ஆணாயினும் பெண்ணாகிலும் ஆண்களே கப்று க்குள் இறங்கி மையித்தை வைக்க வேண்டும்.** இதுவே நபி யவர்களின் காலத்திலிருந்து இன்றுவரை நடைமுறையில் இரு க்கும் விடயமாகும். ஆண்களே இதற்கு மிகப் பொருத்தமானவ ர்கள் என்பதாலும் பெண் இப்பணியில் ஈடுபடும் போது ஆடை நீங்கி அவ்ரத் வெளிப்படும் அபாயம் இருப்பதாலும் நபியவர் கள் அவ்வாறு செய்திருக்கலாம்.

- **அவ்வாறே மரணித்தவர்களின் ஆண் உறவினர்கள் கப்ரு க்குள் இறங்கும் விடயத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டி யவர்களாவர்.**

அலி(றழி) அறிவிக்கின்றார்கள்..
நபியவர்களை நான்தான் குளிப்பாட்டினேன். மரணித்தவர்களின் உடலிலிருந்து வழக்கமாக வெளியாகுபவைகளை நான் தேடி ப்பார்த்தேன். ஆனால் அப்படி எதுவும் இருக்கவில்லை. அவர் கள் உயிருடனும் மரணித்த பின்னும் மணம்வீசுபவர்களாகவே இருந்தார்கள். அவர்களை அடக்கம் செய்வதிலும் கப்ருள்ளே வைப்பதிலும் அலி,அப்பாஸ், பழ்ல்,சாலிஹ் (றழி) ஆகிய உற வினர்களான நாங்கள் நால்வருமே ஈடுபட்டோம். - ஹாகிம்.

நபித்தோழர் அப்துர்ரஹ்மான் அறிவிக்கின்றார்கள்..

நபியவர்களின் மனைவியரில் ஒருவரான ஷைனப்பின்த் ஜஹ்ஸ் (றழி) யின் ஜனாஸாத் தொழுகையை உமர்(றழி) நடத்தினார் கள். அதில் நானும் கலந்துகொண்டேன். உமர்(றழி)யவர்கள் நபியின் மனைவியரிடம் தகவலனுப்பி கப்ரில் அன்னாரை வை ப்பதை யார் செய்யவேண்டுமென வினவினார்கள். அதற்கு மனைவிமார் ஷைனபை(றழி) உயிருடன் வாழும்போது கண்டவ ரான (உமர்தான்) மரணித்தபின்பும் அவர்களை கப்ரில் வைக்க உரித்தானவர் என்று சொல்லியனுப்பினார்கள். அதற்கு உமர் (றழி) ஆம்! அவர்கள் சொன்னது உண்மைதான் என்றார்கள். –தஹாவி.

- **ஒருபெண்ணின் ஜனாஸாவை அவளின் கணவன் கப்ரில் இறங்கி நல்லடக்கம் செய்வது சிறந்ததாகும் . எனினும்** அவர் அன்றிரவு உடலுறவு கொள்ளாமல் இருந்திருப்பது நிபந்தனையாகும். அடுத்ததாக மஹ்ரமான ஆண்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். ஆன்றேல் வேறு ஆண்களே அதற்கு அருகதையுடையவராவர்.

ஆயிஷா(றழி) அறிவிக்கின்றார்கள்..

நபியவர்கள் அன்னாருக்கு காய்ச்சல் ஆரம்பித்த நாட்களில் ஒரு தடவை என்னிடம் வந்தார்கள். நான் அன்று தலைவலி தாங்க முடியாமல் முனங்கிக் கொண்டிருந்தேன். அதைக்கண்ட நபியவர்கள் எனக்குமுன் நீங்கள் மரணித்தால் உங்களை நானே குளிப்பாட்டி பாவமன்னிப்புக் கோரி நானே அடக்கம் செய்யும் பாக்கியம் பெற்றிருப்பேனே! என்றதும் நான் உங்களுக்கென்ன? நீங்கள் என்னை அடக்கம்செய்துவிட்டு புது மாப்பிள்ளை போல் மற்ற மனைவியரிடம் சென்றுவிடுவீர்களே! என ரோசத்துடன் கூறினேன். அஹ்மத்.

அனஸ்(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்களின் மகளொருவரின் ஜனாஸாவில் நான் கலந்து கொண்டேன். நபியவர்கள் அவர்களின் கண்களில் கண்ணீர் மல்க கப்ருக்கருகில் அமர்ந்திருந்தார்கள். பின்பு உங்களில் இன்றிரவு மனைவிமாருடம் உறவில் ஈடுபடாதவர் யாரோ அவர் கப்ரில் இறங்கி மையித்தை வைக்கட்டும். என்றார்கள் . அபூதல்ஹா (றழி) நான் யாரஸுலல்லாஹ்! என்றதும் நபியவர்கள் உள்ளே இறங்கச் சொல்ல அவர் இறங்கி அவர்களை கப்றுக்குள் வைத்தார்கள். —புகாரி.

இமாம் நவவி(றஹ்) குறிப்பிடுகையில்.. இந்த ஹதீஸில் மையித்தை அடக்கம் செய்வது ஆண்களுடைய பணி, பெண்களுக்கு அதில் இடமில்லை என்பதையும் அங்கிருந்தவர்களில் நபியவர்களும் அப்பெண்ணின் கணவர் உத்மான்(றழி) அவர்

களும் மஹ்ரமானவர்களாய் இருந்தும் மேற்படி காரணத்தால் கப்ரில் இறங்கவில்லை என்பதை அறிய முடிகின்றது.-மஜ்மூ.ஃ. 5-289.

இந்த சுன்னத் தெளிவதாக ஹதீஸில் இருந்தும் அதிகமான பிக்ஹ் மத்ஹபு நூல்கள் எதிலும் இதுபற்றிப் பேசப்பட வில்லை என்பது வருந்தத்தக்கதாகும்.

- **மையித்தை கப்றுக்குள் வைக்கும்போது கப்ரின் கால்ப் பக்கமாக மையித்தை கப்ரினுள்ளே நுழையவைத்து பின் உள் ளிருப்பவர் மையித்தைப் பெற்று கீழே வைக்க வேண்டும்.**

நபித்தோழர் ஹாரித்(றழி) அவர்கள் தன்னை தொழுவிக்குமாறு ஒருவருக்கு வஸிய்யத் செய்தார்கள். அவர் தொழுவித்துவிட்டு கப்ருக்குள் மையித்தின் தலையை கப்ரின் கால்ப்பக்கமாக உள்ளே எடுத்து கப்றுக்குள் வைத்துவிட்டு இதுதான் நபிவழி யாகும் என்றார்கள். அபூதாவுத்.2-69

- **மையித்தை கப்றுக்குள் வைக்கும்போது முகம்-நெஞ்சு கிப்லாவை முன்னோக்கும் விதத்திலும் தலையும் கால்களும் கிப்லாத் திசையின் வலது-இடது பக்கங்களில் இருக்கும் விதத்திலும் மையித்தை பக்கவாட்டில் வைப்பது சுன்னத்தாகும். இவ்வாறுதான் நபியவரகளின் காலம் முதல் இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகின்றது.**

- **கப்றுக்குள் மையித்ததை வைப்பவர் பிஸ்மில்லாஹி வஅலா மில்லதி ரஸுலில்லாஹ் என்று சொல்வது நபி வழியாகும்.**

இப்னு உமர்(றழி) அறிவிக்கின்றார்கள்.. நீஙகள் உங்களின் மையித்தை கப்ரில் வைத்ததும் பிஸ்மில்லாஹி அவலா மில்லதி றஸுலில்லாஹி என்று கூறுங்கள் என நபியவர்கள் கூறினார்கள். அபூதாவுத், திர்மிதி.

- மையித்தை கப்ருக்குள் வைத்ததும் மூடும் முன் ஒவ்வொரு வரும் மூன்று பிடி மண்ணை எடுத்து கப்ருக்குள் போடுவதும் சுன்னத்தாகும்.

நபியவர்கள் ஒரு ஜனாஸாவுக்குத் தொழுகை நடத்திய பின் அடக்கும்போது மையித்தின் தலைப்பக்கமாக நின்று மூன்று பிடி மண்ணைப் போட்டார்கள். -இப்னுமாஜ.்..

- மூன்று பிடி மண்ணைப் போடும் வேளையில் முதலாவதில் மின்ஹா கலக்னாகும் என்றும் இரண்டாவதில் வபீஹா நுயீதுகும் எனவும் மூன்றாவதில் வமின்ஹா நுக்ரிஜுகும் தாரதன் உக்ரா எனவும் ஓதுவது சுன்னத் என சில அறிஞர்கள் கருதுகின்றனர். எனினும் அதற்கு ஆதாரமாக இருக்கும் அஹ்மதில் இடம்பெறும் ஹதீஸ் மிகப் பலவீனமானதெனவும் மற்றும் சிலர் இட்டுக்கட்டப்பட்டதெனவும் ஹதீஸ்க்கலை அறிஞர்கள் விளக்குவதால் அதன்படி அமல்ச்செய்யாமல் இருப்பமே சிறந்ததாகும். இதையே ஷாபி மத்ஹபு ஹதீஸ்க்கலை அறிஞர் இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்களும் சரிகாண்கின்றார்கள் . பார்க்க : அஹ்காமுல் ஜனாஇஸ். தப்யீனுல் அஜப் பீ பழ்லி றஜப்)

# (14)

# அடக்கம் செய்து முடிவுற்றதும்..

அடக்கம் செய்து முடிவுற்றதும் பின்வரும் விடயங்களைச் செய்வது சுன்னத்தாகும்.

**முதலாவது: கப்ரை பூமியோடு சமமாக்கி விடாமல் ஒரு சாண் அளவுக்கு மண்போட்டு உயர்த்துவது சுன்னத்தாகும்.**

காரணம் யாதெனில் அவ்விடத்தில் கப்ர் இருப்பதை அறிவித்து அதற்குரிய கண்ணியம் பேணப்பட்ட வேண்டும் என்பதற்காக..

நபியவர்களின் கப்று லஹ்த் வகைக்குழி தோண்டப்பட்டு அதற் குள் கற்களால் அடுக்கி மூடப்பட்டது. பின்னர் நிலமட்டத்திலிரு ந்து சுமார் ஒரு சாணளவு உயர்த்தப்பட்டது. -இப்னு ஹிப்பான்.

நபியவர்களின் கப்ரை நான் பார்த்தேன். அது ஒருசாண் அளவு உயர்த்தப்பட்டிருந்தது. அபூதாவுத்.

கப்ரை ஒருசாண் உயத்துவதென்பது அக்கப்ரைத் தோண்டி மையித்தை வைத்ததால் ஏற்பட்ட மேலதிக மண்ணால் கப்ரை உயர்த்தும்போது கிடைக்கப்பெறும் அளவாகும்.அதைவிட அதி கமாக உயர்த்தக் கூடாது. ஏனெனில் கப்ரைத் தோண்டுகை யில் கிடைத்த மண்ணல்லாத வேறு மண்ணால் கப்ரை உயர் த்தக் கூடாதெனத் தடை வந்திருப்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

**இரண்டாவது: அந்த கப்ரின் ஒரு சாண் உயர்த்தப்பட்ட மணல் ஒட்டகத்தின் திமிழ் போன்று கூம்ப வடிவில் இருக்க வேண்டும்.** அதாவது அடிப்பகுதி விசாலமாகவும் மேல்ப்பகுதி ஒடுங்கியதாகவும் இருப்பது நபிவழியாகும்.

சுப்யான் திமார்(றஹ்) அவர்கள் நபியவர்களின் கப்ரைப் பார்த்த போது அது கூம்ப வடிவில் இருக்கக் கண்டதாக அறிவிக்கின்றாாகள். – புகாரி.

நபியவர்கள் அலி(றழி) அவர்களை பூமியல் உயர்த்தப்பட்டுள்ள கப்ர்கள் அனைத்தையும் சமப்படுத்தாமல் விடாதே! என்று வஸிய்யத் செய்த ஹதீஸுக்கும் இதற்குமிடையில் முரண்பாடு ஏதுமில்லை. நபியவர்கள் சமப்படுத்தல் என்பதன் மூலம் சொல்ல விரும்பியது யாதெனில் அங்குள்ள சாணளவு உயர்த்தப்பட்ட ஏனைய கப்ர்களுடைய அளவுக்கு இந்த உயர்த்தப்பட்டிருக்கும் கப்ரும் சமப்படுத்தப்பட வேண்டும் என்பதையே!.

**மூன்றாவது: கல்லொன்றினால் அக்கப்ருக்கு அடையாளமிட வேண்டியதும் சுன்னத்தாகும்.**

இதற்குக்காரணம் கப்ரின் தலைப் பக்கத்தை இனங்காண்பதும் அக்கப்ர் அருகே அவரின் ஏனைய உறவினர்களை அவர்கள் வஸிய்யத் செய்யும் பட்சத்தில் அடக்கும் வாய்ப்பைப் பெறுவதற்குமாகும்.

நபித்தோழர் உத்மான் பின் மழ்ஊன்(றழி) மரணித்த வேளை நபியவர்கள் ஜனாஸாவுடன் மக்பராவுக்கு வந்து அன்னாரை நல்லடக்கம் செய்தார்கள். பின்பு பெரிய கல்லொன்றை எடுத்துவர ஒருவருக்கு உத்தரவிட்டார்கள். அவரால் அக்கல்லைத் தூக்க முடியவில்லை. உடனே நபியவர்களும் தன் சட்டைக் கையை விலக்கிவிட்டு கூடச் சென்று அக்கல்லைப் பிடித்து கொண்டுவந்து கப்ரின் தலைப் பக்கமாக வைத்துவிட்டு ‘ இக்கல்லின் மூலம் நான் என் சகோதரனான இவரின் கப்றுக்கு அடையாளமிடுகின்றேன். என் குடும்பத்தினரையும் அவருக்கு அருகிலேயே அடக்கம் செய்வேன் என்றார்கள். –அபூதாவுத்.

**நான்காவது: தற்காலத்தில் சில பகுதிகளில் நடைமுறையிலிருக்கும் தல்கீன் ஓதுதல் எனும் சடங்கை செய்யாமல்**

**இருப்பது அவசியமாகும்.** ஏனெனில் அதுபற்றி வந்ததிருப்பது மிகப் பலவீனமான ஹதீஸிலாகும். இமாம் நவவி(றஹ்) அவர்களும் இதனைத் தெளிவுபடுத்துகின்றார்கள். இமாம் ஸன்ஆனி இது பித்அத்தாகும் என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றார்கள்.

- **நல்லடக்கம் நடந்து கொண்டிருக்கும் போது கூடியிருப்போரை அங்கு அமரச்செய்து மரணத்தைப் பற்றியும் அதன் பின் நடக்கவிருப்பவை பற்றியும் நினைவூட்டல் செய்வது நல்லதாகும்.**

பர்ராஹ் பின் ஆஸிப்(றழி) அறிவிக்கும் நீண்ட ஹதீஸில்..

நாங்கள் நபியவர்களுடன் அன்சாரித் தோழர் ஒருவரின் நல்லடக்கத்துக்காகப் புறப்பட்டு மக்பராவை அடைந்தோம். கப்று வெட்டி முடிக்கப்படவில்லை. நபியவர்கள் கிப்லாவை முன்னோக்கி அமர்ந்ததும் நாமும் அவர்களைச் சூழ அமர்ந்தோம். எங்கள் தலைகளில் பறவை அமர்ந்திருந்தால் எப்படி அசைவற்று இருப்போமோ அவ்வாறே ஆடாமல் அசையாமல் இருந்தோம். நபியவர்கள் குச்சியொன்றினால் தரையைக் கிண்டிய வண்ணம் வானத்தையும் பூமியையும் மாறிமாறிப் பார்த்தவர்களாக சிந்தனையில் மூழ்கியிருந்தார்கள். பின்னர் எங்களிடம் கப்றுடைய வேதனையை விட்டும் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள் என இரண்டு மூன்று தடவைகள் கூறிவிட்டு யாஅல்லாஹ்! கப்ருடைய வேதனையை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன் என்றும் கூறினார்கள். பின்னர் இவ்வாறு கூறினார்கள்.

ஒரு இறைவிசுவாசியான மனிதன் இவ்வுலக வாழ்க்கையை முடித்துக்கொண்டு மறுமைப் பயணத்தை முன்னோக்க ஆரம்பித்ததும் வானத்திலிருந்து மலக்குகள் இறங்குகின்றார்கள். அவர்களின் முகம் வெண்மையாக சூரியனைப் போன்று பிரகாசிக்கும். அவர்களிடம் சுவனத்திருந்து எடுத்துவரப்பட்ட பட்டுத் துணியாலான கபனும் வாசனைத் திரவியங்களும் இருக்கும்.

அவர்கள் மரணப்படுக்கையில் இருப்பவரின் கண்ணுக்கெட்டிய தூரம்வரை உட்கார்ந்திருப்பார்கள். அவ்வேளையில் மலக்குல் மௌத் எனும் உயிர்வாங்கும் வானவரும் வருகைதந்து அவரின் தலைமாட்டில் அமர்ந்து கொண்டு சாந்தியடைந்த நல்ல ஆத்மாவே! அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் மன்னிப்பையும் நோக்கிப் புறப்படுவாயாக.. என்று கூறியதும் அவரது உயிர் தோல்ப்பபையின் வாயிலிருந்து தண்ணீர் வழுக்கிச் செல்வது போல் அவரது உடலிலிருந்து பிரிய ஆரம்பிக்கும். உயிர் பிரிந்ததும் மலக்குல் மௌத் அதைக் கைப்பற்றிக் கொள்ள வானம் பூமியிலுள்ள அத்தனை மலக்குகளும் அவரது பாவ மன்னிப்புக்காகப் பிரார்த்திக்க அவ்வுயிரை அந்த பட்டுக்கபனில் சுற்றி வாசனைமிட்டு வானுலகுக்கு எடுத்துச் செல்வார்கள். ஒவ்வொரு வானத்தையும் அடைந்ததும் அங்கிருக்கும் வானவர்கள் வானத்தின் கதவுகளைத் திறந்து பிரார்த்தித்தவர்களாக தொடந்து மேலே செல்ல அனுமதிப்பார்கள். அந்த ஆத்மாவிலிருந்து மிகச் சிறந்த கஸ்தூரி வாசம் வீச ஆரம்பிக்கும். வானவர்கள் அவ்வுயிருடன் ஒவ்வொரு வானமாகக் கடந்துசெல்லும் போதெல்லாம் அங்கிருக்கம் மலக்குகள் இந்த மணங்கமளும் ஆத்மா யாருடையது? என்று வினவுவார்கள். அதற்கு மலக்குகள் உலகில் அவரை அழைக்கப்பட்ட பெயர்களில் மிகச் சிறந்த பெயரைக்கூறி அறிமுகப்படுத்துவர். இப்படியே ஒவ்வொரு வானமாகக் கடந்து ஏழாவது வானத்தை சென்றடைந்ததும் எனது நல்லடியானின் இவ்வாத்மாவின் ஏட்டை இல்லிய்யீன் எனும் ஏட்டில் பதிவு செய்து விடுங்கள் என அல்லாஹ் உத்தரவிடுவான். இல்லிய்யீன் என்பது சுவர்க்கத்திலுள்ள சுவனவாசிகளின் பெயர்ப்பட்டியலாகும். அதனை சங்கைமிகு மலக்குகள் காவல் காப்பர். பின்னர் அவரது பெயர் அதில் பதிவுசெய்யப்பட்ட பிற்பாடு இவரது உயிரை திரும்பவும் பூமிக்குக் கொண்டு செல்வீராக. ஏனெனில் அதலிருந்தே அவரைப் படைத்து அதனிடமே திரும்ப மீட்டு மீண்டும் அதிலிருந்தே திரும்பவும் எழுப்புவதென வாக்களித்துள்ளேன் என்று அல்லாஹ் கூறுவான். பின் அவரின் உயிர் உலகுக்குக் கொண்டுவரப்பட்டு அவரின் உடலுக்கு

ள்ளே மீட்டப்படும். அந்நேரத்தில் அவரை அடக்கம் செய்து விட்டுத் திரும்பிச் செல்வோரின் செருப்பின் அடியெடுத்து வைக் கும் ஓசையைக்கூட அவர் செவிமடுப்பார்.

அதன்பின் அவரிடம் இரண்டு மலக்குகள் வந்து அவரை எழு ப்பி உட்கார வைக்கின்றனர். அவரிடம் உனது இரட்சகன் யா ரென வினவ என்றப்பு அல்லாஹ் எனவும் உன் மார்க்கம் என் ன? என்றதற்கு இஸ்லாம் என்றும் உங்களுக்கு அனுப்பப்பட்ட இந்த மனிதர் யாரென (நபியவர்களைக் காட்டிக்) கேட்டதற்கு இவர்தான் அல்லாஹ்வின் தூதர் முஹம்மதாவார்கள். தெட்டத் தெளிவான அத்தாட்சியையும் நேர்வழியையும் இவர் கொண்டு வந்தபோது நாம் அவர்களை விசுவாசித்து பினபற்றினோம் என் று பதிலளிப்பார். இக்கேள்வி கணக்குதான் ஒரு மு∴மினுக்கு ஏற்படும் கடைசிச் சோதனையாகும். அல்லாஹ் விசுவாசிகளை உறுதிமிக்க சொல்-பதிலைக் கொடுத்து உறுதிப்படுத்துவான் என்ற குர்ஆன்வசனத்தில் இடம்பெறும் உறுதியான சொல் என் பது மலக்குகளின் கேள்விகளுக்கு சரியான பதிலளிப்பதையே குறிக்கும்.

இதன்பின் வானத்திலிருந்து ஒரு சப்தம்கேட்கும். எனது அடி யான் உண்மைசொல்லி விட்டான். எனவே அவனுக்கு சுவன த்து விரிப்புகளை விரியுங்கள். சொர்க்கத்துப் பட்டுகளை அணி வியுங்கள். சுவனத்துக் கதவுகளைத் திறவுங்கள் என்று கட்ட ளையிடப்படும். பின் சுவனத்து தென்றலை நுகர்ந்து சொர்க்க த்து நறுமணங்களை அனுபவித்தவராக அவர் இன்பங்களில் திளைத்திருப்பார். அவரது பார்வையின் எல்லைவரை அவரு க்கு கப்ரை விசாலமாக்கப்படும். அவரிடம் அழகிய ஆடை யணிந்து வசீகர தோற்றத்தில் நறுமணம் கமழ ஒருவர் வந்து உமக்கு மகிழ்ச்சியளிக்கும் நற்செய்தியொன்றைச் சொல்கின் றேன். அல்லாஹ்வின் திருப்பொருத்தமும் அவனது இன்பமிகு நிரந்தர சுவரக்கமும் உமக்கு நிச்சயமாகி விட்டது. உமது நல்லறங்களுக்கு கூலிவழங்குவதென வாக்களிக்கப்பட்ட நாள்

இன்றுதான் என்பார். அதற்கு அம்மனிதர் இலங்கும் வதனத்தோடு வந்து நற்செய்தி சொல்லும் நீங்கள் யார்? என வினவியதும் நான்தான் நீர் புரிந்த நல்லமல்களாவேன். நான் அறிந்தவரை நீர் அல்லாஹ்வுக்கு வழிப்படுவதில் விரைபவராகவும் மாறுசெய்வதில் தூரமாகுபவராகவுமே அறிந்திருக்கின்றேன். அல்லாஹ் உமக்கு நற்கூலி வழங்குவானாக என்று கூறுவார். பின் அம்மலக்கு நரகின் வாயிலைத் திறந்து காட்டிவிட்டு அல்லாஹ்வுக்கு நீ மாறுசெய்திருப்பின் இங்குதான் சென்றிருப்பாய் எனக் கூறிவிட்டு சுவனத்தின் வாயிலைத் திறந்து விடுவார். சுவர்க்கத்தின் இன்ப சுகங்களை தன் கண்களால் கண்ட இம்மனிதன் யாஅல்லாஹ்! கியாமத் நாளை விரைவாக வந்தடையச் செய்வாயாக என வேண்டிக் கொள்வார்.

இவ்வாறே இறைநிராகரிப்பாளன் அல்லது பாவி மனிதனைப் பொறுத்தவரை அவன் தனது உலகவாழ்வை முடித்துக்கொண்டு மறுமைப்பயணத்தை ஆரம்பிக்கவிருக்கும் வேளையில் - அதாவது உயிர் பிரியப்போகும் தருணத்தில் வானிலிருந்து அகோர தோற்றங்கொண்ட கறுத்த முகத்தையுடைய முறட்டு சுபாவமிகு மலக்குகள் அவரிடம் வருகை தருகின்றனர். அம்மலக்குகள் தம்முடன் உயிரைக் பறித்துப் போடுவதற்காக கடின நார்களால் பின்னப்பட்ட கோணிப்பை போன்ற ஒன்றையும் எடுத்துவந்து அவரது பார்வை எட்டும் தூரமளவுக்கு அணிவகுத்திருப்பார்கள். அதன்பின் அவ்விடத்துக்கு மலக்குல் மௌத் சமூகமளித்து அவரது தலைப்பகுதியில் அமர்ந்துகொண்டு கெட்ட ஆத்மாவே! அல்லாஹ்வின் கோபமும் வெறுப்பும் உனக்காகக் காத்திருக்கின்றன. வெளியேறி வருவாயாக! எனக் கூறியதும் அவ்வுயிர் வரமறுத்து உடலில் அங்குமிங்கும் ஓடிப் பதுங்கும்.உடனே அம்மலக்கு அவ்வுயிரைப் பலவந்தமாகப் பிடித்திழுத்ததும் முட்கள் நிறைந்த கிளையொன்றை நனைந்த கம்பளித் துணியால் சுற்றிவிட்டு இரண்டையும் வெவ்வேறாக இழுத்தெடுப்பதைப் போல் தாங்கமுடியாத வேதனையுடன் அவ்வுயிரை உடலைவிட்டும் பறித்தெடுப்பார். வேதனை தாங்

காமல் அவரின் உடல் எலும்புகள் நாளங்களெல்லாம் நொறு ங்கிவிடுவது போல் அவர் உணர்வார். உயிரைக் கைப்பற்றிக் கொண்ட வானவர் சற்றும் தாமதிக்காது அவ்வுயிரை தாம் கொண்டுவந்து முரட்டு கோணிப்பையில் போட்டு இறைவனிடம் அதை ஒப்படைப்பதற்காக மேல்நோக்கிச் சென்றதும் வானிலு ள்ள மலக்குகள் அவ்வுயிருக்குச் சாபமிட்டவர்களாக வானத் தின் கதவுகளை மூடிவிட்டு அல்லாஹ்விடம் அவ்வுயிரை மேல் நோக்கி எடுத்துச் செல்ல மலக்குல் மௌத்துக்கு அனுமதியளி க்க வேண்டாமென மண்றாடுவார்கள். ஏனெனில் அவ்வுயிரிலி ருந்து உலகில் எங்குமே அதற்கு நிகரான துர்வாடை கிடை யாதளவுக்கு மிகக் கொடிய சகிக்க முடியாத பிணவாடை வீசும். மலக்குகள் என்னவொரு மோசமான ஆத்மாவை இங்கு எடுத்து வந்தீர்கள் எனக்கூறி வானின் கதவுகளைத் திறக்க மறுத்துவிடுவார்கள்.

இவ்விடத்தில் நபியவர்கள் கீழ்காணும் திருக்குர்ஆன் வசன த்தையும் ஓதிக்காட்டினார்கள்.

எவர் எமது அத்தாட்சிகளைப் பொய்ப்பித்து தலைக்கணத்து டனும் ஆணவத்துடனும் அவற்றைப் புறக்கணித்தார்களோ அவ ர்களுக்கு வானத்தின் கதவுகள் திறக்கப்பட மாட்டாது. மேலும் ஊசித்துளையில் ஒட்டகம் நுழையும் வரை அவர்கள் சுவர் க்கத்துக்குச் செல்லமுடியாது. பாவிகளுக்கு இப்படித்தான் நாம் தண்டணை வழங்குவோம்.(ஸூரா அ.்.ராப் )

பின் அல்லாஹ் அம்மலக்குக்கு உலகின் படுபாதாளத்திலுள்ள சிஜ்ஜீன் எனும்நரகில் இவரது பெயரைப் பதிவுசெய்துவிட்டு விசாரணைக்காக பூமிக்கே அவரது உயிரை மீட்டுங்கள். ஏனெ னில் நான் மண்ணிலிருந்தே மனிதனைப் படைத்து அதனிடமே அவ்வுயிரை மீட்டி மீண்டும் மண்ணிலிருந்தே அவனை மறுமை நாளுக்காக வெளிப்படுத்துவதாக வாக்களித்துள்ளேன் என்று கூறுவான். உடனே அவனது உயிர் உலகுக்குத் தூக்கி வீசி யெறியப்பட்டு அவனது உடலுக்குள் மீண்டு வந்துவிடும் .

அப்போது உறவினர் அவ்வுடலை அடக்கிவிட்டுக் கலைந்து செல்லும் தருணமாக இருக்கும். அவர்கள் திரும்பிச்செல்லும் போது செருப்புகளால் எழும் காலடியோவசையைக் கூட அம் மனிதர் கப்றுககுள் செவியுறுவார். நபியவர்கள் பின்வரும் வச னத்தையும் ஓதிக்காட்டினார்கள்.

அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கான உவமை யாதெ னில்  வானிலிருந்து தூக்கி வீசப்பட்டு கீழே விழ (அவ்வேத னையால் துடிதுடிக்கும் போதே) பறவையொன்று அவரை இறாஞ்ச்சிக் கொண்டு மேலே சென்று அனாதரவான இடமொ ன்றில் வீசியெறிந்து விட்டுச் செல்லப்பட்டவரைப்போல் அல்லது வானிலிருந்து விழுந்தவரை புயற்காற்றால் மீழவும் மேலே தூக்கி வீசியெறியப்பட்டவரைப் போலாவார்.

பின்னர் கப்றுக்குள்ளே கேள்வி விசாரணைக்காக பயங்கர தோ ற்றங்கொண்ட இரு மலக்குகள் வருகைதந்து அவரைத் தூக்கி அமரவைத்து உனது இரட்சகன் யார்? உனது மார்க்கம் என் ன? என்று கேட்பார்கள். அதற்கவன் ஹாஹ்! ஹாஹ்!!(என அலறிக்கொண்டு) எனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி விடுவான்.  முஹம்மது நபியவர்களை உனக்குத் தெரியுமா? எனக் கேட்கப்பட்டதற்கு அப்பெயரைக்கூட அவன் அறிந்திருக்க மாட்டான். ஹாஹ்! ஹாஹ்!! எனக்குத் தெரியாது மக்கள் என் னென்னவோ பேசிக்கொண்டார்கள் எனக்கு எதுவும் நினை வில்லை என்றதும் மலக்குகள் நீ இவற்றைப்பற்றி படிக்க வில்லை அதனால் அறியவுமில்லை என்று கூறிவிடுவார்கள். அப்போது வானிலிருந்து ஒரு சத்தம்,, இவன் பொய்யன். பொ ய் சொல்கின்றான். எனவே இவனுக்கு நரகத்து விரிப்புக்களை விரித்து நரகின் கதவுகளையும் திறந்து விடுங்கள் என்று சொல்லப்படும். நரகிலிருந்து கொடிய நச்சுக்காற்றும் தாங்க முடியாத வெப்பமும் வெளிப்படும் . அவனது விலா எலும்புகள் ஒன்றுடனொன்று பின்னிக் கொள்ளுமளவுக்கு கப்ர் அவனை நெருக்க ஆரம்பிக்கும்.

அப்போது அங்கு விகார தோற்றமும் கந்தலாடையுமுடைய மனிதர் துர்நாற்றம் வீசும் நிலையில் வந்து நான் உனக்கு நடக்கப்போகின்ற கொடூர வேதனைகளைப் பற்றி செய்தி சொல்ல வந்துள்ளளேன். பாவியான உன் போன்றவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தினமே இன்றைய நாளாகும் என்று கூறு வார். அதற்கு அம்மனிதன் எனக்கு கெட்ட செய்தியைச் சொல் லும் நீ யாரெனக் கேட்க அதற்கவர் நான்தான் நீ உலகில் புரிந்த கெட்ட செயல்களின் வடிவமாவேன். நிச்சயமாக நீ அல் லாஹ்வுக்கு வழிப்படுவதில் பொடுபோக்காளனாகவும் அவனுக் கு மாறுசெய்வதில் விரைவும் ஆர்வமும் காட்டுபவனாக இருந் துள்ளாய். அல்லாஹ் உனது பாவத்துக்கான தண்டனையைத் தருவானாக! என்று சபித்ததும் அவனுக்கு வேதனை செய்வ தற்காக பார்வையற்ற, காதுகேளாத வாய்பேசாத கொடூர (மல க்கு) ஒருவர் சாட்டப்படுவார். அவரது கையில் பெரியதொரு சம்மட்டி இருக்கும். அதனால் அவர் ஒரு மலைமீது அடித்தா லும் மலை வெடித்து மணல் துகள்களாகி விடும். அவ்வளவு பலமாக அச்சம்மட்டியால் அவனுக்கு ஓங்கி அடித்ததும் அவன் நசுங்கி மண்ணோடு மண்ணாகிப் போவான். திரும்ப மறு அடி அடிப்பதற்குள் அவன் உடல் முன்பிருந்ததைப் போல் ஆகி விடும். ஓவ்வொரு அடியினதும் வேதனை தாங்காது அவன் அலறியடித்து விடும் ஓலத்தை இவ்வுலகிலுள்ள மனிதன்-ஜின் வர்க்கத்தைத் தவிர ஏனைய அனைவரும் செவியுறுகின்றனர். பின்பு அவருக்கு நரகத்தின் வாயல்கள் திறக்கப்பட்டு நரகத்து விரிப்புக்கள் விரிக்கப்பட்டு வேதனைகள் தொடர்கின்றன.. ( இவ்வேதனைகளை விட மறுமையில் நரகில் வீசியெறியப் பட்ட பின்னர் கிடைக்கும் வேதனைகள் மிகக் கொடூரமானவை என்பதை அறிந்த அவன்) எனது றப்பே! மறுமை நாளை வர வைத்து விடாதே! என மன்றாடுவான். –அபூதாவுத்.

- **தக்க காரணங்களுக்காக கப்ரில் அடக்கப்பட்ட மையித் தைத் தோண்டி வெளியிலெடுக்க மார்க்கத்தில் அனுமதியுள் ளது.**

ஆப்துல்லாஹ் பின் உபை மரணித்து அடக்கம் செய்யப்பட்ட பின்னர் நபியவர்கள் அவரின் கப்ரைத் தோண்டி மையித்தை வெளியிலெடுக்குமாறு கட்டளையிட்டதும் அவ்வாறே செய்ய ப்பட்டது. அவர் மீது ஓதி ஊதிய நபியவர்கள் தமது ஆடை யையும் அவருக்கு அணிவித்தார்கள். – புகாரி.

அஹ்மதில் இடம்பெறும் அறிவிப்பில் அவரது மகன் நபிகளாரி டம் வந்து மன்றாடிக் கேட்டதாகவும் நபியின் ஆடையை அணி விக்குமாறும் அவரே வேண்டியதாகவும் இடம் பெறுகின்றது.

- ஒருவர் தளக்குரிய கப்ரை முன்கூட்டியே தோண்டி தயா ர்படுத்தி வைப்பது தேவையற்ற விடயமாகும். அது எந்த வகையிலும் விரும்பத்தக்கதல்ல. நபியவர்களோ ஸாபாக்களோ இவ்வாறு செய்தது கிடையாது. அவ்வாறே ஒருவருக்கு எங்கு மரணம் ஏற்படும், எங்கு அடக்கப்படுவார் என்பதை அல்லாஹ் வையன்றி யாரும் அறிய மாட்டார்கள். மரணத்திற்கு எப்போ தும் தயார் நிலையில் உள்ளதை உணர்த்துவற்காக சிலர் இவ்வாறு செய்வர். எனினும் அவர்கள் நல்லமல்களை அதிகரி ப்பதன் மூலம் மரணத்துக்குத் தயாராவதே மிகப் பொருத்தமா னதாகும்.

# (15)

# - த.்.ஸியத் -

### மரணித்தவரின் உறவினருக்கு ஆறுதல் கூறல்.

மரணித்தவரின் உறவினர்களுக்கு சலிப்பாற்றி ஆறுதல் கூறு வது மார்க்கத்தில் ஆர்வமூட்டப்பட்ட விடயமாகும். இதன் சிற ப்பு பற்றி பல ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன.

நபித்தோழர் குர்ரா அல் முஸனி(றழி) அறிவிக்கின்றார்கள்..

நபியவர்கள் மஸ்ஜிதில் அமர்ந்திருக்கும் போது ஸஹாபாக்க ளும் அன்னாரைப் புடைசூழ அமர்ந்திருப்பது வழக்கம். அவ ர்களின் ஒரு நபித்தோழர் தனது சிறிய மகனொருவரையும் அழைத்து வருவார். அச்சிறுவன் தந்தையின் தோளின்மேல் ஏறுவதும் மடியில் அமர்வதுமாக விளையாட பார்ப்போருக்கு வேடிக்கையாக இருக்கும். (அவரும் அன்பு மேலீட்டால் அச் சிறுவனின் சேட்டைகளைக் கண்டுகொள்ளாது பொறுமை காப் பார். ) நபியவர்கள் ஒருசமயம் ஆச்சரியத்தால் உம் மகனை அதிகம் நேசிக்கின்றீர்களோ எனக் கேட்க அவரும் ஆமென் றார். திடீரென அச்சிறுவன் மரணித்துவிட தந்தை இடிந்துபோய் கவலை மேலீட்டாலும் மகனின் நினைவாலும் நபியவர்களின் சபைக்கு வருவதையே விட்டு விட்டார். அவரைக் காணாத நபி யவர்கள் தோழர்களிடம் விசாரித்தபோதுதான் அவரது மகன் மரணித்த செய்தியே நபியவர்களுக்குத் தெரியவந்தது. உடனே நபியவர்கள் ஆறுதல் சொல்லி தேற்றுவதற்காக ஸஹாபாக்கள் சிலருடன் அவரின் வீட்டுக்குச் சென்றார்கள். மரணச் செய்தி களைக் கேட்டறிந்து கொண்ட நபியவர்கள் அவரிடம் பின்வ

ரும் இரண்டில் எது உமக்கு விருப்பமானது?.. காலமெல்லாம் நீ உன் சிறிய மகனுடன் வாழ்வதா? அல்லது அவன் உனக்கு முன்னரே சுவர்க்கம் சென்று உமது வருகையை எதிர்பார்த்து உமக்காகச் சுவர்க்கத்துக் கதவுகளைத் திறந்துவிடக் காத்திருப்பதா? என வினவியதும் யாரஸூலல்லாஹ் இரண்டாவதுதான் எனக்கு மிகவிருப்மானது எள அவர் பதிலளிக்க அப்படியாயின் அது உமக்குக் கிடைக்கட்டும் கவலைப்படாதிருங்கள் என்று ஆறுதல் கூறினார்கள் . நபித்தோழர்கள் இது அவருக்கு மட்டுமா அல்லது மரண இழப்பில் பொறுமைகாக்கும் அனைவருக்குமா? என வினவ அனைவருக்கும்தான் என நபியவர்கள் பதிலளித்தார்கள். –நஸாயி.

மேலும் நபியவரிகள் கூறினார்கள்..

யார் தனது சகோதரன் பாதிக்கப்பட்டிருக்கும் போது அவனிடம் சென்று ஆறுதல் கூறுகின்றாரோ அல்லாஹ் அவரை மறுமை நாளில் பச்சைக்கம்பளம் ஒன்றினால் போர்த்தி கண்ணியப் படுத்துகின்றான். முஸன்னப் இப்னு அபீ சைபா.

மற்றொரு ஹதீஸில்.. ஒருவர் நோயுற்றிருக்கும் ஒருவரை சந்தித்து ஆறுதல்சொல்ல சென்றால் அவரைக் பார்த்து நீங்கள் மணமாகி விட்டீர்!,, உங்களது நடையும் மணமாகட்டும். உங்களுக்கு சுவர்க்கத்தில் ஒரு தனியிடத்தை நீர் தயார்படுத்திக் கொண்டீர்! என மலக்குகள் பிரார்த்திக்கின்றார்கள். ( திர்மிதி.)

## -த.ஃ.ஸியத் (ஆறுதல்) கூறுவது எப்படி?

மரணித்தவரின் உறவினருக்கு ஆறுதல்-மனஅமைதி கிடைக்கும் வகையில் கவலையைப் போக்க்க் கூடிய - அதிலிருந்து அவர் மீழ உதவும் பேச்சுக்களால் அவரைச் சாந்தப்படுத்த வேண்டும். மார்க்க உபதேசமாகவோ அல்லது மார்க்கத்துக்கு முர

ணற்ற சாதாரண ஆறுதல் வார்த்தைகளாகவோ அவை இருக்கலாம்.

## நபியவர்கள் த.ஃ.ஸியத் தெரிவித்த சில ஹதீஸ்கள்..

உஸாமா(றழி) அறிவிக்கின்றார்கள்..

- நபியவர்களின் பேரப்பிள்ளையான உமைமா பின்த் ஸைனப் என்றபிள்ளை நோயுற்று உயிர்பிரியும் தருவாயில் இருப்பதால் உடனடியாக வருமாறு மகளார் நபியவர்களுக்கு செய்தியனுப்பினார்கள். நபியவர்கள் பதிலுக்கு ஒருவரை அனுப்பி தனது ஸலாத்தை தெரிவிக்குமாறு கூறி பின்வருமாறு த.ஃ.ஸியத் கூறியனுப்பினார்கள்.

‘அல்லாஹ் எதைக் கைப்பற்றிக் கொண்டானோ அதுவும் அல்லாஹ்வுக்கே சொந்தம். எதை வழங்கினானோ அதுவும் அல்லாஹ்வுக்கே சொந்தம். எல்லா உயிர்களுக்கும் அவனிடம் குறிப்பிட்டதொரு தவணையுண்டு. எனவே பொறுமையயாக இருந்து நல்கூலி பெறுங்கள்.’ என்று சொல்லியனுப்பினார்கள். திரும்பவும் மகளார் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு தாங்கள் வந்துதான் ஆகவேண்டுமென வலியுறுத்தி சொல்லியனுப்பியதும் நபியவர்கள் தன்மகள் ஸைனபின் வீடுசெல்ல எழுந்தார்கள் நாமும் அன்னாருடன் புறப்பட்டோம். அங்குசென்றதும் நபியவர்களின் மடியில் அக்குழந்தை கொண்டுவந்து வைக்கப்பட்டபோது உயிர் தொண்டைக்குழிக்குள் ஊசலாயதால் பாத்திரத்தில் தண்ணீர் கொதிக்கும்போது வரும் சத்தம் போல் கேட்டுக் கொண்டிருந்தது. இதைக்கண்ணுற்ற நபியவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்தோட நபியவர்கள் கண்கலங்கி நின்றார்கள். (நபியவர்கள் மரணித்தவருக்காக அழக்கூடாதென ஏலவே சொல்லியிருந்ததால்) நபியவர்களே! என்ன இது?? என ஸஹாபாக்கள் வினவினார்கள். அதற்கு நபியவர்கள் இது அல்லாஹ் தனது அடியார்களில் தான் விரும்புபவர்களின் உள்ளத்தில் ஏற்படுத்தியிருக்கும் கருணையின்

வெளிப்பாடாகும். அன்பு காட்டுபவர்களுக்கே அல்லாஹ்வும் அன்பு காட்டுகின்றான் என்று கூறினார்கள். புகாரி.

ஒப்பாரி வைத்து அல்லது சத்தமிட்டு அழுவதுதான் தடுக்கப்பட்டது என்பதை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. இந்த ஹதீஸில் இடம்பெறும் வாசகமே த∴ஸியத்திவேயே மிகச் சிறந்த த∴ஸியத்தின் வாசகமாகும் என இமாம் நவவி (றஹ்) கூறுகின்றார்கள். – அத்கார்.

- நபியவர்கள் அன்ஸாரி தோழர்களின் சுக-துக்கங்களை கேட்டறிபவர்களாகவும் பாதிக்கப்பட்டவர்களை சென்று பார்த்து வரும் வழக்கமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். ஒரு தடவை ஓர் முதிர்ந்த அன்ஸாரிப் பெண்ணின் ஒரேமகன் மரணித்து விட் டதால் அம்மூதாட்டி திடுக்கத்திலும் கவலையிலும் இருப்பதாக அறிந்தார்கள். உடனே அவரதுவீட்டுக்கு நபியவர்கள் புறப்பட் டார்கள். நபியவர்கள் சலிப்பாற்ற வந்திருப்பதாக சொல்லப்பட் டு உள்ளே செல்ல அனுமதி பெறப்பட்ட பின் உள்ளே சென்ற நபியவர்கள் உங்களின் மகனார் மரணித்த செய்தியறிந்தேன். தாங்கள் கடும் துக்கத்தில் இருக்கின்றீர்களாமே என்று வினவ, அல்லாஹ்வின் தூதரே! நான் எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்? நானோ முதியவள். எனக்கு இனி குழந்தைப் பாக்கி யம் கிடையாது. எனக்கிருந்ததோ ஒரே மகன் என்று அங்கலா ய்த்தார் அப்பெண். நபியவர்கள் ‘எந்தவொரு ஆணுக்கோ பெண்ணுக்கோ மூன்று பிள்ளைகள் மரணித்து அதில் அவர் இ றைவனிடம் நற்கூலி பெற பொறுமை காத்தால் அல்லாஹ் அவர்களின் பொருட்டால் அப்பெற்றோரை சுவனத்தில் நுழை விப்பான் என்றார்கள். இரு பிள்ளைகள் மரணித்தாலுமா? என வினவப்பட்டபோது அதற்கும் ஆமென பதிலளித்தார்கள். -ஹா கிம்.
- இவ்வாறே நபித்தோழர் அபூஸலமா(றழி) மரணித்தபோது அவரின் வீடுசென்ற நபியவர்கள் பின்வருமாறு பிரார்த்தித்து த∴ஸியத் செய்தார்கள். யால்லாஹ்! அபூஸலமாவுக்கு உன்

மன்னிப்பை நல்குவாயாக. அவரது அந்தஸ்த்தை நேர்வழி பெற்ற நல்லவர்களுடன் உயர்த்துவாயாக. அவரது மறைவுக்குப் பின் நீயே அவரின் குடும்பத்தைப் பொறுப்பெடுப்பாயாக. எமக்கும் அவருக்கும் மன்னிப்பளிப்பாயாக. அவரது கப்ரை விசாலமாக்கி பிரகாசிக்கச் செய்வாயாக. – முஸ்லிம்.

## -த.ஃ.ஸியாவுக்குச் செல்வதற்கு கால வரையறை உண்டா?

மூன்று நாட்களுக்குள் த.ஃ.ஸியாவுக்குச் செல்லவேண்டுமென அறிஞர்கள் சிலர் கூறியபோதும் அதற்குப்பிறகு த.ஃ.ஸியத் செய்யக்கூடாது என்பதற்கு எவ்விதத் தடையுமில்லை. இதுவே இமாம் அஹ்மதின் முடிவாகும். ஷாபி மத்ஹபிலும் ஒருசாரார் இக்கருத்தையே ஆதரிக்கின்றனர். ஏனெனில் த.ஃ.ஸியத்தின் நோக்கம் ஆறுதல் சொல்வதும் அவர்களுக்காக துஆச் செய்வதுமாகும். அது மூன்றுநாட்கள் கடந்த நிலையிலும் உண்டாகலாம். மூன்று தினங்களுக்குமேல் துக்கம் அனுஷ்டிக்கத் தடைவந்திருப்பதால் குடும்பத்தவர்களுக்கு துக்கத்தை புதுப்பிக்க த.ஃ.ஸியத் காரணமாகி விடக் கூடாது என்பதே மூன்று தினங்களுக்கு பின் த.ஃ.ஸியத் செய்யக்கூடாது என்பவர்களின் நோக்கம். (எனவே நிலமைகளைப் புரிந்து நடந்துகொள்ள வேண்டும்.) தவிர்க்கமுடியாத நிலைகளில் இவ்வாறு செய்வது தவறல்ல.

ஜ.ஃ.பர்(றழி) அவர்கள் மரணித்தபோது மூன்று நாள்கள் கடந்த நிலையிலும் நபியவர்கள் அன்னாரின் குடும்பத்தவர்களிடம் சென்று த.ஃ.ஸியத் செய்துள்ளார்கள் என்பதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகின்றது.

நபியவர்கள் ஸைத் பின் ஹாரிதாவின் தலைமையில் ஒரு

படையை அனுப்பிவைத்தார்கள். அப்போது ஆற்றிய உரையில் உங்கள் அமீர் ஸைத் ஹதீதாக்கப்பட்டால் ஜ.்.பர்(றழி) அடுத்த அமீராக்கப்பட வேண்டும். அவரும் உயிரிழந்தால் அப்துல்லா ஹ் பின் றவாஹா தளபதியாக வேண்டும் என்று அறிவித்திருந் தார்கள். அவர்கள் கூறியபடியே அம்மூவரும் வீரமரணமடை ந்ததும் காலித் பின் வலீத்(றழி) அவர்கள் தளபதிப் பொறுப் பை ஏற்று அப்போரில் வெற்றியீட்டினார்கள். இம்மூன்று நபித் தோழர்களும் வீரமரணமடைந்த செய்தி நபியவர்களுக்குக் கி டைத்ததும் பொதுமக்களை ஒன்றுகூட்டி விடயத்தைத் தெரிவி த்துவிட்டு ஜ.்.பர் (றழி) அவர்களின் குடும்பத்தினருக்கு தான் மூன்று தினங்கள் கழித்து ஆறுதல் சொல்ல வீடு வருவதாக சொல்லியனுப்பினாாகள். அடுத்த நாள் அவர்களின் வீட்டுக்கு வந்த நபியவர்கள் இன்றைய தினத்துக்குப் பின்னர் யாரும் அவரது மறைவுக்காக அழக்கூடாது என்று கூறிவிட்டு என் சகோதரர் ஜ.்.பரின் இரு பிள்ளைகளையும் அழைத்து வாருங் கள் என்று கூற அவ்விருவரும் பறவைக் குஞ்சுகளைப் போல் நலிந்து போய் வந்தார்கள். முடிவெட்டுபவரை வரவழைத்து அவ்விருவரின் அலங்கோலமாயிருந்த தலைமுடியை வெட்டி சீர்செய்துவிட்டு யாஅல்லாஹ்! ஜ.்.பரின் குடும்பத்தாருக்கு நீ யே பொறுப்பாளன். அவரது பிள்ளைகளுக்கு பரக்கத் செய்வா யாக எனப் பிரார்த்தித்தார்கள். அப்போது ஜ.்.பர்(றழி)யின் மனைவியார் எனது பிள்ளைகள் அனாதைகளாகி விட்டார்களே என்று அங்கலாய்த்தார். அதற்கு நபியவர்கள் நீங்கள் வறுமை யைப் பயப்படுகின்றீர்களா? வேண்டாம். நான் உலகிலும் மறு மையிலும் இவ்விரு பிள்ளைகளுக்கும் பொறுப்பாயிருப்பேன் என்றார்கள். –அஹ்மத்.

# த.்.ஸியத் செய்வதன் ஒழுங்கு முறைகள்.

- **த.்.ஸியத்துக்காக செல்லும்போது மக்பறா- வீடு-மஸ்ஜித் இப்படி குறிப்பிட்ட ஓர் இடத்தில் திட்டமிட்டு அனைவரும் ஓரே நேரத்தில் ஒன்று கூடுவதோ வருபவர்களுக்கு மையித் வீட்டில் விருந்தளித்தல்- உணவு பரிமாறுதல் போன்ற ஏற்பாடுகளைச் செய்வதோ மார்க்கத்தில் தடுக்கப்பட்டதாகும்.**

ஜரீர் பின் அப்துல்லாஹ் அல்பஜ்லி (றழி) அறிவிக்கின்றார்கள்

மையித்து வீட்டில் அனைவரும் ஒரே நேரத்தில் ஒன்றுகூடுவ தையும் அடக்கியபின் உணவு தயாரிப்பதையும் நாங்கள் தடுக் கப்பட்ட விடயங்களாகவே கணக்கிட்டு வந்தோம். அஹ்மத்.

இமாம் நவவி(றஹ்) தனது மஜ்மூஉ எனும் நூலில் குறிப் பிடுகின்றார்கள். த.்.ஸியத்துக்காகச் செல்பவர்கள் அங்கு சென் று உட்கார்வதைப் பொறுத்தவரை ஷாபி இமாமவர்களும் அவ ர்களின் அஸ்ஹாபுகள் பலரும் அது வெறுக்கப்பட்ட செயலா கும் எனக் குறிப்பிடுகின்றார்கள். அதாவது யாருக்கு எப்போது வசதியோ அப்போது சென்று சுருக்கமாக த.்.ஸியத்தை முடித் துக்கொண்டு திரும்பிவிட வேண்டும். இவ்விடயத்தில் ஆண்கள்- பெண்கள் இருவருக்கும் சட்டம் பொதுவானதே!. (5-306)

இமாம் ஷாபி குறிப்பிடுகின்றார்கள்.. மையித்து வீட்டில் ஒரே நேரத்தில் அனேகம்பேர் கூட்டமாகச் சேர்வதை நான் வெறுக்கின்றேன். காரணம் அது அவ்வீட்டாரை மென்மேலும் கவலைப்பட வைக்கும் .வீட்டாருக்கு உபசாரச் செலவுகளை யும் ஏற்படுத்தும். அதனாலேயே ஸஹாபாக்கள் அதைத் தடுக்கப்பட்டதாகக் கருதியதாக ஹதீஸில் இடம்பெறுகின்றது.

கிதாபுல் உம்மு 1-248

- **மரணித்தவரின் தூரத்து உறவினர்களே மையித் வீட்டாருக்கு உணவு சமைத்துக் கொடுப்பது சுன்னத்தாகும்.** ஏனெனில் நபியவர்கள் ஜ.ஃபர் (றழி) மரணித்தபோது ஸஹாபாக்களிடம் 'ஜ.ஃபரின் குடும்பத்தினருக்கு உணவு சமைத்துக் கொடுங்கள். அவர்களுக்கு (சமைப்பதை விட்டும்) பராக்காக்கும் துக்க சம்பவம் நடந்துவிட்டது என்று கூறினார்கள். அபூ தாவுத்,திர்மிதி.

- **மரணவீட்டுக்குச் செல்பவர் மரணித்தவர் விட்டுச்சென்ற அனாதைக் குழந்தைகள் இருப்பின் அவர்களின் தலைகளைத் தடவி ஆறுதல் சொல்லவதும் நபிவழியாகும்.**

ஜ.ஃபர்(றழி)யின் மகன் அப்துல்லாஹ் அறிவிக்கின்றார்கள்..

எம் தந்தை மரணத்தபின் ஒருநாள் சிறுவர்களான நானும் என் சகோதரன் குதமும் விளையாடிக் கொண்டிருந்தபோது நபியவர்கள் அங்கு ஒரு வாகனத்தில் வந்தார்கள். உடனே அங்கிருந்தவர்களிடம் எங்களைத் தூக்கி உயர்த்துமாறு கூறி பின் எங்கள் தலைகளில் தடவி யாஅல்லாஹ்! ஜ.ஃபரின் பிள்ளைகளை நீயே பொறுப்பேற்பாயாக எனப் பிரார்த்தித்தார்கள். –அஹ்மத், பைஹகி.

# (16)

## மரணத்தின் பின் மையித்துக்கு நன்மை சேர்க்கும் காரியங்கள்.

ஒருவர் மரணிப்பதுடன் பொதுவாக அவரது அமல்களும் முற்றுப் பெறுகின்றன. இருப்பினும் ஒருசில நல்லமல்கள் அவனது மரணத்துக்குப் பின்னும் அவனைச் சென்றடைகின்றன என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. அவ்விடயங்களாவன..

1- **ஒரு முஸ்லிம் அவருக்காகப் பிரார்த்திக்கும் தூய துஆ- பிரார்த்தனை.**

நபியவர்கள் மரணதடைந்த ஏராளமான ஸஹாபாக்களுக்குப் பிராத்தித்தமை பற்றியும் அவர்களின் துஆ பரக்கத்தினால் அவர்கள் பலனடைந்ததாக நபியவர்களே எடுத்துக்கூறிய ஏராளமான ஹதீஸ்கள் காணப்படுகின்றன.

நபியவர்கள் கூறியுள்ளார்கள்..

ஒரு முஸ்லிம் தனது சகோதர முஸ்லிமுக்காக உள்ளத்தால் மறைவாகக் கேட்கும் பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப்படக் கூடியதாகும். அவரின் தலையருகில் ஒரு மலக்கு இருந்துகொண்டு அவர் துஆக்கேட்கும் போதெல்லாம் ஆமீன் கூறியவராக அதேபோல் உனக்கும் கிடைக்கட்டும் எனப் பிரார்த்திக்கின்றார். முஸ்லிம்.

இவ்வாறே ஜனாஸாத் தொழுகையில் நாம் செய்யும் அதிகமான செயற்பாடுகள் அவருக்காக துஆக் கேட்பதும் பாவமன்னிப்புக் கோருவதாகவுமே அமைந்துள்ளன.

**2- மையித்தின் நெருங்கியவர்கள்(வலிதாரர்) அவர் நோற்காது விட்ட நேர்ச்சை நோன்புகளை நோற்று அவருக்கு நன்மை சேர்ப்பிக்க முடியும்.**

நபியவர்கள் கூறினார்கள்.. யார் தன்மீது நோன்பு இருக்கும் நிலையில் மரணிக்கின்றாரோ அவருக்காக அந்நோன்பை அவ ரது வலீ-பொறுப்புதாரி நோற்கவும். புகாரி-முஸ்லிம்.

மற்றொரு அறிவிப்பில் நேர்ச்சை நோன்பு இருக்கும் நிலையில் மரணித்தால் .. என்றே தெளிவுபடுத்தி இடம்பெற்றுள்ளது.

ஒருபெண் கடல்ப்பயணம் செய்தபோது அல்லாஹ் என்னை ஆபத்தின்றி கரைசேர்த்தால் ஒருமாதகாலம் நோன்புநோற்பதாக நேர்ச்சை வைத்திருந்தார். அல்லாஹ்வும் அவரைக் காப்பாற்றி விட்டான். ஆனாலும் அப்பெண் நேர்ச்சையை நிறைவேற்றாம லேயே மரணித்துவிட்டார். அவரது மகள் நபியவர்களிடம் வந்து அதுபற்றி வினவியபோது நபியவர்கள் அப்பெண்ணிடம் உன்தாய் யாரிடமாவது கடன்பெற்று அதை அடைக்காமல் மர ணித்தால் அக்கடனை நீ அடைக்க வேண்டாமா? எனக்கேட்க அப்பெண்ணும் ஆமென்றார். அதற்கு நபியவர்கள் அப்படியா யின் அல்லாஹ்வின் கடன் அடைக்கப்படுவதற்கு மிகவும் அரு கதையானது அக்கடனை நீ நிறைவேற்று என்று கூறினார்கள். அபூதாவுத், நஸாயி.

றமழான் போன்ற கடமையான நோன்புகளை விட்டுச்சென்றிரு ப்பின் அதை உறவினர் நோற்க முடியாது என்பதற்குப் பின் வரும் ஹதீஸ்கள் சான்றாகும்.

இம்றா எனும் ஸஹாபிப் பெண் அறிவிக்கின்றார்கள்.. அதாவது அன்னாரின் தாயார் றமழான் நோன்பு கடமையான நிலையில் மரணித்தபோது அன்னை ஆயிஷா(றழி)யிடம் இதுபற்றி வினவ அவர்கள் இல்லை! அவரது றமழான் நோன்பை நீ நோற்க

முடியாது. மாறாக ஒவ்வொரு நோன்புக்கும் பதிலாக அரை ஸாஊ – ஒரு கொத்து தானியம் ஸதக்காச் செய்துவிடுங்கள் என்றார்கள். – தஹாவி. இவ்வாறே இப்னு அப்பாஸ்(றழி) அவர்களும் பத்வா வழங்கியுள்ளார்கள்.- அபுதாவுத்.

**3- மரணித்தவரின் கடன்களை யாராவது பொறுப்பெடுத்து அடைப்பதும் மையித்திற்கு பலனளிக்கும் விடயமாகும்.**

இதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. ஜனாஸாத் தொழு கையின்போது நபியவர்கள் கடனாளியாக மரணித்தவருக்குத் தொழுவிக்க மறுத்ததும், பின்னர் சிலர் அக்கடனைப் பொறுப் பேற்றதும் தொழுவித்தார்கள் என்ற ஹதீஸ்களும் ஜனாஸாத் தொழுகை பற்றிய பகுதியில் விலாவாரியாக விபரிக்கப்பட்டுள் ளது.

**4- ஒருவர் மரணித்த பின் அவரது ஸாலிஹான பிள்ளைகள் செய்யும் நல்லமல்கள். இதில் அப்பிள்ளையின் பெற்றோருக் கும் பங்கு கிடைக்கும். அவ்வாறே அவர்களுக்காகச் செய்யும் துஆ, ஸதகா போன்ற அமல்களும் அப்பெற்றோரைச் சென்றடையும்.**

ஆதனால் பிள்ளைகள் செய்த நல்லறங்களுக்கான நன்மையில் எந்த குறைதலும் ஏற்படாது. ஏனெனில் இந்நல்ல பிள்ளையை பெற்றதே–உருவாக்கியதே இவர்தான். அது அவரது முயற்சி யால் கிடைத்தபிள்ளை. எனவே முயற்சிக்குக கூலியுண்டு என் ற அடிப்படை விதி இங்கு கவனிக்கத்தக்கதாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் ‘ஒரு மனிதனுக்கு அவன் முயற்சித்தவற்றுக்கா ன கூலியைத் தவிர வேறெதுவும் கிடையாது’ என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

நபியவர்கள் கூறுகின்றார்கள்.. ஒரு மனிதன் உழைத்து உண் ணும் உணவே உணவுகளில் மிகச் சிறந்தது. அவனது பிள் ளையும் அவனின் உழைப்பினால் வந்ததே!. – அபுதாவுத்.

ஸஃத் பின் உபாதா(றழி) ஒருமுறை நபியவர்களிடத்தில் வந்து அல்லாஹ்வின் தூதரே! எனது தாய் நான் ஊரிலில்லாத நேரத்தில் இறந்துவிட்டார்கள். அவருக்காக நான் ஏதாவது தானதர்மம் செய்தால் அது அவருக்குப் பயனளிக்குமா? எனக் கேட்டதற்கு நபியவர்கள் ஆம்! என்றார்கள். உடனே நான் எனது தோட்டமொன்றை அவர்களுக்காக ஸதகாச் செய்து விட்டேன். –புகாரி.

ஆஸ் பின் வாயில் எனும் நபித்தோழர் மரணிக்கும்போது தனக்காக நூறு அடிமைகளை உரிமையிட வேண்டுமென வஸிய்யத் செய்திருந்தார்கள். அவரது இரண்டு பிள்ளைகளில் ஒருவரான ஹிஷாம் தனது பங்குக்கு ஐம்பது அடிமைகளை உரிமையிட்டுவிட்டார். நான் இதுபற்றி நபியவர்களிடம் கேட்டதற்கு உங்கள் தந்தை முஸ்லிமாயிருந்த நிலையில் மரணித்திருப்பின் அவருக்காக நீங்கள் அடிமையை உரிமையிட்டாலும் தான தர்மம் செய்தாலும், ஹஜ் செய்தாலும் அவை அவருக்குப் பயனளிக்கும் என்றார்கள். –அபூதாவுத்.

இவ்விடத்தில் முக்கியமாக ஒரு விடயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் செய்த நல்லறங்கள் மாத்திரமே பயனளிக்கும் என்பது இஸ்லாத்தின் பொதுவான அடிப்படை விதியாகும். தானதர்மம், நேர்ச்சை நோன்பு, ஹஜ் போன்றனவற்றை தந்தைக்காக பிள்ளைகள் நிறைவேற்றலாம் என்பது அதிலிருந்து விதிவிலக்காக வந்த சட்டமாகும். அப்பிள்ளையும் அவனின் தேட்டத்தில் உள்ளதாகும் என்பதால் இச்சலுகை கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால் மரணித்தவருக்கு எவை பயனளிக்குமென ஹதீஸ்களில் பொது விதியிலிருந்து விதிவிலக்காக கூறப்பட்டதோ அவை தவிர்ந்த எவையும் அவருக்குப் போய்ச் சேராது என்பது தெளிவாகும். அதுவும் மரணித்தவரின் பிள்ளைகள் செய்தால்தான் பயனளிக்கும் என்பதும் ஹதீஸ் வாசகங்களில் இடம்பெற்றுள்ளது.

மையித்தின் பிள்ளைகள் அல்லாத உறவினர்கள் மற்றும் உற வினரல்லாதோரைப் பொறுத்தவரை அவர்கள் செய்யும் ஸதகா போன்றனவும் மரணித்தவரைச் சென்றடையும் என நவவி இமாம் தெரிவித்திருப்பினும் அதற்கு நேரடியானா ஆதாரங்கள் இல்லை.

முஸ்லிமான சகோதரருக்கு அவர் உயிரோடிப்பினும் மரணித்தி ருப்பினும் அவருக்காக துஆ, பாவமன்னிப்புக் கோருதல், கட னையடைத்தல் ஆகியன மாத்திரம் உறவினரல்லாதோரும் கூட செய்யலாம் என்பது ஹதீஸில் தெளிவாகக் குறிப்பிடப்பட் டுள்ளது. எனவே ஒரு பொது சட்டத்திலிருந்து சிலவிடயங்கள் விதிவிலக்களிக்கப்பட்டால் அவ்விதிவிலக்களிக்கப்பட்டதில் வே று விடயங்களை ஒப்பீடு-கியாஸ் செய்து வேறுவிடயங்களுக்கும் அச்சட்டத்தை வழங்க முடியாது என்பது பிக்ஹ் கலையின் விதிமுறையாகும்.

அதன்படி துஆ யார் செய்தாலும் அது மையித்துக்கு பலனளி க்கும் என வந்துள்ளதால் அதன் சட்டத்தை சதகா நோன்பு போன்றவற்றுக்கு வழங்கமுடியாது. மையித்தின் பிள்ளைகள் துஆ-இஸ்திக்பாருடன் சேர்த்து ஸதகா, நேர்ச்சை நோன்பு, ஹஜ் செய்யலாம் என்ற சலுகை பிள்ளைகள் விடயத்தில் மாத் திரமே!

அவ்வாறே இவைதவிர்ந்த வேறு வணக்கங்களை மரணித்தவ ருக்காக அவரது பிள்ளைகள் செய்தாலும் அவை அவரைச் சென்றடையாது. மரணித்தவர் தொழாது விட்ட தொழுகையை பெற்ற பிள்ளை கூட நிறைவேற்றி நன்மை சேர்க்க முடியாது. காரணம் ‘அவரவர் செய்ததே அவருக்கு’ என்ற பொது விதியி லியிலிருந்து தொழுகையை வெளியேற்றும் எவ்வித ஆதாரமும் சுன்னாவில் இடம்பெறவில்லை.

**5- ஸதகதுன் ஜாரியா- நிலையான தர்மம். ஒருவர் மரணித்த பின்னும் மக்களுக்கு பயனளிக்கும் நிலையான**

**தர்மம், பயனுள்ள கல்வி ஸாலிஹாக பிள்ளை போன்றவற்றை அவர் விட்டுச் சென்றிருப்பின் அவற்றின் நன்மைகளும் மரணத்தின் பின்னரும் அவருக்கு நன்மை சேர்க்கும்.**

நபியவர்கள் கூறினார்கள்.. ஒரு மனிதன் இறந்துவிட்டால் அவரது அனைத்து அமல்களும் நின்றுவிடுகின்றன. மூன்று விடயங்களைத் தவிர.. நிலையான தர்மம் , பயனுள்ள அறிவு, பெற்றோருக்காகப் பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளை என நபியவர்கள் கூறினார்கள். முஸ்லிம்.

மற்றொரு அறிவிப்பில்..

ஒரு மு.ஃமினின் மரணத்தின் பின்னர் அவர் உலகில் செய்த நற்காரியங்களிலிருந்து சிலவற்றின் நன்மைகள் அவருக்குப் போய்ச் சேர்கின்றன. அவைகளாவன.. அவர் கற்று பரப்பிய அறிவு, விட்டுச்சென்ற ஸாலிஹான பிள்ளை, அனந்தரச் சொத் தாக விட்டுச்சென்ற ஓதப்படும் குர்ஆன் பிரதி, அவர் கட்டிய மஸ்ஜித், வழிப்போக்கர்களுக்கான தங்குமிடம், அவர் வெட்டிய ஆறு(கிணறு), தனது சொத்திலிருந்து தான் சுகதேகியாக இரு ந்தபோது செய்த நிலையான தானதர்மங்கள் இவைகளே மர ணத்தின் பின்னும் அவருக்கு நன்மைசேர்க்கும். இப்னு மாஜ.ஃ..

மற்றொரு ஹதீஸில் நபியவர்கள் கூறினார்கள்..

யாரொருவர் நல்ல வழிமுறையொன்றை உயிர்ப்பிக்கின்றாரோ அவருக்கு அதைச் செய்த நன்மையும் அவரின்பின் அதைச் செய்தவர்கள் அனைவருக்கும் கிடைக்கும் நன்மையளவும் இவ ருக்குக் கிடைக்கும். அவர்களின் நன்மைகளில் எதும் குறைந் தும் விடாது. அதேபோல் யார் ஒரு தீய வழிமுறையை உரு வாக்கிவிட்டுச் செல்கின்றாரோ அவருக்கு அதைச்செய்த தீமை யும் அவருக்குப் பின் யாரெல்லாம் அதைச் செய்தார்களோ அத்தனை பேருக்கும் கிடைக்கும் தீமையும் இவருக்குக் கிடை க்கும் . முஸ்லிம்.

# (17)

# ஸியாரத்துல் குபூர்.

# கப்ரிஸ்தானங்களைத் தரிசித்தல்.

இஸ்லாத்தின் ஆரம்ப கட்டத்தில் கப்ர்களை தரிசிப்பது தடுக்கப் பட்டிருந்தது. இஸ்லாத்தின் கொள்கை- நம்பிக்கைக் கோட்பாடு களை சரிவர அறியாதவர்கள் கப்ருஸ்தானுக்குச் சென்று சிர்க் கான, ஜாஹிலிய்யாக் கால செயற்பாடுகளில் ஈடுபட்டு விடக் கூடும் என்ற அச்சம் நிலவியதால் அவ்வாறு தடுக்கப்பட்டிரு ந்தது. பினனர் நம்பிக்கை சார்ந்த மார்க்க விடயங்கள் நன்கு தெளிவு படுத்தப்பட்டதன் பின்பு மக்கள் ஸியாரத் விடயத்தில் ஆகுமானவை- தடுக்கப்பட்டவை பற்றிய தெளிவு பெற்று விட்ட தையடுத்து நபியவர்கள் மேற்படி தடையை அகற்றி ஸியாரத் செய்வதற்கு அனுமதியளித்துள்ளார்கள். இதை இமாம் நவவி (றஹ்) அவர்கள் தனது மஜ்மூஉ எனும் நூலில் குறிப்பிட்டுள் ளார்கள்.

எனவே மறுமையை நினைவுகூரல், மரணத்தைப்பற்றிய படிப் பினை பெறல் ஆகிய நோக்கங்களுக்காக கப்ர்களை சியாரத் செய்வது மாரக்கத்தில் அனுமதிக்கப்பட்டதாகும். ஆனால் அங் குசென்று அல்லாஹ்வை விடுத்து மரணித்தவரிடம் யாசித்தல், உதவிதேடல், அபயமளிக்கக் கோரல் போன்றவற்றில் ஈடுபடு வதோ அல்லது கப்ரில் அடக்கப்பட்ட குறிப்பிட்ட நபரை வலிய் யுல்லாஹ் எனத் தூய்மைப்படுத்தி அவர் சொர்க்கம் சென்று விட்டவர் என்பதுபோன்ற மார்க்கம் அனுமதிக்காத விடயங்கள் எதிலும் ஈடுபடாமல் இருக்க வேண்டுமென்பது முக்கிய நிப ந்தனையாகும்.

நபியவர்கள் கூறினார்கள்.. நான் உங்களைக் கப்ர்களை தரிசிப்பதை விட்டும் தடுத்திருந்தேன். இப்போது நீங்கள் அவற்றைத் தரிசியுங்கள். அது உங்களுக்கு மறுமையை நினைவுபடுத்தும். எனவே தரிசிக்கச் செல்ல விரும்புவோர் செல்லட்டும். எனினும் வெறுக்கத்தக்க பேச்சுக்கள் எதையும் சொல்லிவிட வேண்டாம். – முஸ்லிம் , அபுதாவுத்.

மற்றொரு அறிவிப்பில் நீங்கள் கப்ர்ஸ்தான்களைத் தரிசியு ங்கள். அதிலே படிப்பினை இருக்கின்றது. மேலும் அது உள் ளத்தை மென்மைப்படுத்தி கண்ணீரைச் சிந்தவைத்து மறுமை யையும் நினைவூட்டும். என்று இடம்பெற்றுள்ளது. – அஹ்மத்.

# ஸியாரத்துல் கப்ர்-மக்பராக்களை சியாரத் செய்வதன் சட்டங்கள்.

### 1-பெண்கள் கப்ர்களை ஸியாரத் செய்ய முடியுமா?

கப்ர்களை அதிகம் தரிசிக்கும் பெண்களை அல்லாஹ் சபிப்பா னாக என்று நபியவர்கள் கூறிய ஹதீஸ் திர்மதியில் இடம் பெறுகின்றது. இதன் அடிப்படையில் கப்ர்களை பெண்கள் சியா ரத் செய்வது அனுமதிக்கப்படவில்லை என ஹதீஸ்க்கலை அறிஞர்களில் ஒரு சாரார் கூறுகின்றனர்.

எனினும் நபியவர்களின் காலத்தில் பெண்கள் கப்ர்களை ஸியாரத் செய்வதை நபியவர்கள் அறிந்தும் தடுக்காதிருந்த தாக பல ஹதீஸ்களில் காண முடிகின்றது.

ஒருமுறை நபியவர்கள் இரவில் வீட்டைவிட்டு வெளியேறி பகீ:. மக்பராவுக்கு வருவதைக்கண்டு அன்னை ஆயிஷா (றழி)யும் நபிகளைப் பின்தொடர்கின்றார்கள். அதன்பின் நபியவர்கள் அல்லாஹ் தனக்கு பகீஉக்குச் சென்று அங்கு அடக்கப்பட்ட வர்களுக்காக பிரார்த்திக்குமாறு கட்டளையிட்டதாகக் கூறிய தும். நான் கப்ராளிகளுக்காக எப்படிப் பிராத்திப்பது என்று

கேட்டதற்கு அஸ்ஸலாமு அலைக்கும் அஹ்லத்தியாரி மினல் மு.ஃ.மினீன வல் முஸ்லிமீன். வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லலாஹிகூன் யர்ஹமுல்லாஹுல் முஸ்தக்திமீன மின்னா வல் முஸ்த.ஃ.கிரீன் என்று கூறுமாறு கற்றுக் கொடுத்தார்கள் . முஸ்லிம்

பொருள்: மு..ஃ.மின்களான முஸ்லிம்களான கப்ராளிகளே! உங் களுக்கு ஸலாம் உணடாவதாக, நிச்சயமாக நாங்களும் உங் களுடன் வந்து சேரக்கூடியவர்களே!. எங்களில் முந்திவிட்ட மற்றும் பின்னர் மரணிக்கக் கூடிய அனைவருக்கும் அல்லாஹ் இரக்கம் காட்டுவானாக.

இந்தஹதீஸில் நபியவர்கள் சியாரத்தின்போது என்ன ஓதவேண் டுமென அன்னைஆயிஷா(றழி) வினவியபோது பெண்கள் சியா ரத் செய்யக்கூடாது என்றிருப்பின் அப்போதே நபியவர்கள் து ஆவைக் கற்றுக்கொடுக்கமுன் பெண்களுக்கு சியாரத் கூடாதெ ன்பதை விளக்கியிருப்பார்களென சியாரத் பெண்களுக்கும் பொ துவானதே எனவாதிடும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

அவ்வாறே மற்றொருதடவை நபியவர்கள் மக்பராவுக்குச் சென் றபோது அங்கொரு பெண் மரணித்துப்போன தனது உறவினரி ன் கப்ரில் அமர்ந்து சத்தமிட்டு அழுவதைக் கண்டதும் பெண் ணே ! அல்லாஹ்வை அஞ்சிக்கொள் என்றார்கள். – புகாரி.

இங்கும் நபியவர்கள் பெண்களுக்கு சியாரத் கூடாதெனில் அப் போதே சொல்லியிருப்பார்களே! என பெண்கள் சியாரத் செய் வதை அனுமதிப்போர் வாதிட நபியவர்கள் கூறிய அல்லாஹ் வை அஞ்சிக் கொள் ! என்ற சொல்லிலேயே அது தடுக்கப்பட் டது என்பதையும் நபியவர்கள் உணர்த்தியுள்ளார்களென அனு மதிக்கப்படவில்லை என்போரும் வாதிடுகின்றனர்.

இப்படி ஹதீஸ்க்கலை அறிஞர்களுக்கு மத்தியிலேயே கடும் கருத்து வேற்றுமை நிலவும் விவகாரமாக இது காணப்படுகின் றது.

இந்த நூலாசிரியரான சேக் நாஸிருத்தீன் அல்பானி (றஹ்)

அவர்கள் சியாரத் விடயத்தில் ஆண்களும் பெண்களும் சமமே! என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள்.

இவ்விரு தரப்பினரிடமும் தமது நிலைப்பாட்டுக்கான வலுவான ஹதீஸ் ஆதாரங்கள் காணப்படுவதால் அனைத்து ஹதீஸ்க ளையும் செயற்படுத்தும் வகையில் பின்வரும் முடிவுக்கு வர முடிகின்றது. அதாவது கப்ரை தரிசிப்பது ஆரம்பத்தில் தடுக்கப் பட்டிருந்தமைக்கான காரணமும் பின்னர் அனுமதிக்கப் பட்ட மைக்கான காரணமும் ஹதீஸ்களில் தெளிவுபடுத்தப்பட்டிருக் கின்றன. அந்த வகையில் கப்ரிஸ்தானுக்கு சியாரத் செல்லும் போது மரணித்தவருக்காக அழுது ஒப்பாரி வைத்தல், அவர்க ளிடத்தில் உதவி,அபயம் கோரல் போன்ற சிர்க்கான அல்லது மார்க்கத்தில் தடுக்கப்பட்ட செயல்கள் பெண்களிடமிருந்து வரு வதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் பட்சத்தில் பெண்களுக்கு சியாரத் தடுக்கப்பட்டதாகின்றது. அவ்வாறின்றி மார்க்க வரைய றைக்குட்பட்ட வகையில் ஆண்-பெண் கலப்புக்கள் ஏதுமின்றி மறுமையை நினைவுகூறும் வகையில் அளவுக்கதிகமின்றி மட் டுப்படுத்தப்பட்ட வகையில் அந்த சியாரத்தை பெண்கள் செய் ய முடியுமான சந்தர்ப்பங்களில் அதற்கு மார்க்கத்தில் அனுமதி யளிக்கப்படுகின்றது என்பதே இவ்விடயத்தில் தீர்வாகக் கொ ள்ளத்தக்க கருத்தாக இருக்கின்றது. இந்நிபந்தனைகளையே பெண்களுக்கு சியாரத்தை அனுமதித்த இமாம் நாஸிருத்தீன் அல்பானி(றஹ்) அவர்கள் கூட குறிப்பிடுகின்றார்கள். அவர்கள் கூறுவதாவது..

‘எனினும் பெண்கள் கப்ர்களை ஸியாரத்செய்வதை அதிகமா க்கிக் கொள்வதோ அடிக்கடி அங்குசென்றுவரும் பழக்கத்தைக்

கடைப்பிடிப்பதோ கூடாது. காரணம் அதுபெண்களிடத்தில் மார்க்கத்தில் தடுக்கப்பட்டவைகள் அங்கு நடப்பதற்குக் காரணமாகி விடலாம். அதை இன்று அதிகமான முஸ்லிம் நாடுகளில் காணலாம். பெண்கள் சியாரத் எனும்பெயரில் அங்கு சென்று சிர்க்கில் வீழ்ந்து விடும் நிலைகளையும் மார்க்க முரண் விடயங்கள் இவர்களது வருகையால் அங்கு இடம்பெறுவதையும் சியாரங்கள் தர்ஹாக்களில் பார்க்கத்தானே செய்கின்றோம். இதனால்தான் நபியவர்கள் கப்ரிஸ்த்தானங்களை அதிகம் சியாரத் செய்யும் பெண்களை அல்லாஹ் சபிப்பானாக என்று கூறியுள்ளார்கள். திர்மிதி.' என்று குறிப்பிடுகின்றார்கள்.

எனவே இதுவே இவ்விடயத்தில் அறிஞர்களின் இறுதித் தீர்வாக அமைகின்றது.

**2-முஸ்லிமல்லாத மரணித்தோரின் கப்ர்களைத் தரிசிக்கலாமா?**

கப்ரிஸ்தான்களை சியாரத் செய்வதன் அடிப்படை நோக்கமான மறுமையை நினைவுகூரல், படிப்பினை பெறல் போன்ற காரணங்களுக்காக மாத்திரம் என்றிருந்தால் இஸ்லாத்தில் மரணிக்காத காபிர்களின் கப்ர்களையும் சியாரத் செய்வதில் தடையில்லை.

நபியவர்கள் தனது தாயார் ஆமினா அவர்களின் கப்ரைத் தரிசித்துள்ளார்கள்.

அபூஹிரைரா(றஹ்) அறிவிக்கின்றார்கள்..

மக்கா வெற்றியின் போது நாங்கள் நபியவர்களுடன் பயணத்தில் இருந்தோம். எம்முடன் ஆயிரத்துக்கு நெருக்கமாக நபித்தோழர்கள் இருந்தனர். அப்போது ஓரிடத்தில் நபியவர்கள் இறங்கி இரண்டு றக்அத்கள் தொழுதார்கள் . பின்னர் சற்று நேரம் கழித்து கண்களில் கண்ணீர் வழிந்தோடும் நிலையில் எம்மை

நோக்கி வந்தார்கள். அதாவது நபியவர்கள் தனது தாயாரின் கப்ரைத் தரிசித்தார்கள். அங்கு (தனது தாய்க்கு ஹிதாயத் கிடைக்காததையிட்டு) அழுதார்கள் அவர்கள் அழுததால் சுற் றியிருந்த தோழர்களும் அழுதார்கள். பின்னர் ‘நான் அல்லா ஹ்விடத்தில் எனது தாய்க்கு பாவமன்னிப்புக் கோர அனுமதி கோரினேன். எனக்கு அனுமதியளிக்கப்படவில்லை. அவர்களின் கப்ரை சியாரத் செய்ய அனுமதி கோரினேன். அதற்கு அல்லாஹ் எனக்கு அனுமதியளித்தான். எனவே நீங்களும் கப் ர்களை தரிசியுங்கள் அது உங்களுக்கு மரணத்தை நினைவு படுத்தும் என்றார்கள் .- முஸ்லிம். அஹ்மத்.

## கப்ர்களை சியாரத் செய்வதன் பலன்கள் யாவை?.

இதன் பலன்கள் இரண்டு. ஒன்று உயிரோடிருப்பவர் மரணித்த வரிலிருந்து பெறும் படிப்பினை. அதாவது மேற்கூறப்பட்ட ஹதீ ஸ்களில் தெளிவுபடுத்தப்பட்டது போன்று மறுமையை நினைவு படுத்தல், மரணத்தை நினைவூட்டல் மரணித்தவரின் நிலை தனக்கும் ஒருநாள் ஏற்படப் போகின்றதே! என்ற கவலையைத் தோற்றுவித்து சுவர்க்கத்தின் பக்கம் நெருக்கமாக்கும் விடயங் களை நோக்கி விரைவதோடு நரகத்தை நினைத்து அதை விட்டும் தூரமாக்கும் விடயங்களிலும் ஈடுபட ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டுமென்பதே சியாரத் கடமையாக்கப்பட்டதன் முதலாவது நோக்கமாகும்.

இரண்டாவது நன்மை யாதெனில் மரணித்தவர் உயிரோடிருப் பவர்களினால் அடையும் நன்மை. அதாவது மரணித்தவர் முஸ் லிமாயிருப்பின் சியாரத் செய்ய வருபவர்கள் இவருக்காகக் கேட்கும் துஆ பாவமன்னிப்பு என்பனவற்றால் மரணித்தவருக்கு நல்லவராயின் அவரது அந்தஸ்த்து மெம்மேலும் அதிகரிப் பதுடன் தீயவராயின் அவரது குற்றங்கள் சில இந்த துஆக்க ளால் மன்னிக்கப்படுகின்றன.

அன்னை ஆயிஷா(றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்கள் எனது வீட்டில் தங்கும் இரவுகளில் இரவின் கடைசிப்பகுதியில் பகீஉ.ஃ. மக்பராவுக்கு புறப்பட்டுச்சென்று இவ்வாறு பிரார்த்திப் பார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் தார கௌமின் மு.ஃ.மினீன். வஇன்னா இன்ஸா அல்லாஹு- பிகும் லாஹிகூன். யக்பரில்லா ஹுல் முஸ்தக்திமீன மின்னா வல் முஸ்த.ஃ.கிரீன்.

மு.ஃ.மின்களான கப்ருலக வாசிகளே! உங்களுக்கு ஸலாம் உண்டாகட்டும். நிச்சயமாக அல்லாஹ்வின் நாட்டப்படி நாங்க ளும் உங்களுடனேயே வந்து சேரவிருக்கின்றோம். எங்களில் முந்திவிட்ட–பிந்திவிட்டவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மன் னித்து அருள்பாலிப்பானாக. – முஸ்லிம்.

மேலும் நபியவர்கள் தொடர்ந்து கூறியதாவது..

நான் மறுமையில் எனது சகோதரர்களைப் பார்க்க ஆசைப் படுகின்றேன் என்றபோது அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் உங்களின் சகோதரர்களில்லையா? என்றதற்கு இல்லை நீங்க ள் எனது தோழர்களாவீர்கள். என்சகோரரர்கள் எனப்படுவோர் பிற் காலத்தில் (என் மரணத்தின்பின்) வருவோராவர். அவர்களுக்கு முன்னரே மரணித்த நான் அவர்களின் வருகைக்காக மறுமை யில் ஹவ்ல் அருகில் (கௌதர் எனும் ஆறு) காத்திருப்பவனா வேன் என்றார்கள். அதற்கு நபித்தோழர்கள். யாரஸூலல்லா ஹ்! நீங்கள் கண்களால் கண்டிராத அவர்களை மறுமையில் எப்படி அடையாளங் காண்பீர்கள்? என வினவியதற்கு ஒருவரது வெள்ளைக் குதிரை கறுப்புக் குதிரைகளுக்கு மத்தியில் இருக் கும்போது அவரால் தனது குதிரைகளை அடையாளங் காண் பது சிரமமானதா? அவ்வாறுதான் எனது உம்மத்தவர்களும் தாங்கள் செய்த வுழுவின் காரணமாக முகங்களும் கைகளும் பளபளக்கும் வெண்மை நிறமுடையவர்களாக காணப்படுவார் கள் நான் அவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்து கௌதர் ஊற்றலிருந்து நீர்புகட்டுவேன். என்று கூறிவிட்டு அறிந்து கொ ள்ளுங்கள். உங்களில் சில மனிதர்கள் வழிதவறித் திரியும்

ஒட்டகம் தூர விரட்டப்படுவது போல் எனது நீரூற்றை விட்டும் விரட்டப்படுவார்கள். நானோ மலக்குகளே ! எனது உம்மத்த வர்களான அவர்களை ஏன் விரட்டுகின்றீர்கள் எனக் கேட்பேன். அதற்கவர்கள் உமக்குப் பின் இவர்கள் மார்க்கத்தை மாற்றி விட்டவர்களாவார்கள் என்று சொல்லப்படும். அதற்கு நான் அப்படியாயின் தூர விரட்டுங்கள் அவர்களை என்று நானும்

சொல்வேன் என்றார்கள். முஸ்லிம்.

**3-கப்ரிஸ்தானத்தில் வைத்து அல்குர்ஆனை ஓதலாமா? .**

கப்ரிஸ்தானத்தில் வைத்து அல்குர்ஆனை ஓதும் வழக்கம் முஸ்லிம்களில் சிலரிடத்தில் காணப்படுகின்றது. எனினும் இத ற்கு ஹதீஸ்களில் எவ்வித ஆதாரங்களும் கிடையாது. அவ் வாறே கப்ர்களில் வைத்து குர்ஆன் ஓதும் வழக்கம் நபியவர்க ளது காலத்திலோ ஸஹாபாக்களின் காலத்திலோ இருந்ததேயி ல்லை. அவ்வாறே கப்ரை தரிசிக்கும்போது என்ன செய்ய வே ண்டுமென அன்னை ஆயிஷா(றழி) நபியவர்களிடத்தில் வின வப்பட்டபோது ஸலாம்கூறல், துஆக்கேட்டல் போன்ற விடய ங்களைக் கற்றுக்கொடுத்த நபியவர்கள் குர்ஆன் ஓதுவது ஆகுமாயிருப்பின் அதையும் கற்றுக் கொடுத்திருப்பார்கள். அவ் வாறு அவர்கள் செய்யாததால் நாமும் அவர்கள் சொல்லாத எதையும் செய்யக் கூடாது.

அவ்வாறே கப்ரிஸ்த்தான் அமல்கள் செய்வதற்குரிய இடமல்ல என்பதை நபியவர்களின் பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்து கின்றது.

உங்கள் வீடுகளில் தொழுங்கள்.. அவற்றைக் கப்ர்களைப் போல் ஆக்கி விடாதீர்கள். முஸ்லிம்.

உங்கள் வீடுகளை மண்ணறைகளாக்கி விடாதீர்கள். சூரா பக ரா ஓதப்படும் வீட்டை விட்டும் ஷைத்தான் விரண்டோடுகின் றான். முஸ்லிம்.

இந்த ஹதீஸ்கள் மண்ணறைகள் இபாதத்களுக்குரிய இடமல்ல என்பதைத் தெளிவூட்டுகின்றன. இதன் அடிப்படையிலேயே மக்ப ராவில் தொழுவதும் மக்ரூஹ்- வெறுக்கத்தக்கது என்ற சட்ட த்தை மத்ஹபுடைய இமாம்களான அபூஹனீபா,மாலிக்,அஹ்மத் மற்றும் பலர் ஏகோபித்து முடிவுசெய்துள்ளனர். இமாம் அஹ் மத் அவர்களிடத்தில் கப்ரடியில் குர்ஆன் ஓதலாமா? எனக் கேட்கப்படடதற்கு இல்லை என பதிலளித்தார்கள்.

இமாம் ஷாபி(றஹ்) இவ்விடயத்தில் எதுவும் கூறியதாக எத் தகவலும் இல்லை. இருப்பினும் ஷாபி மத்ஹபு அறிஞூரான இமாம் சுயூத்தி (றஹ்) அவர்கள் ‘ அன்சாரி ஸஹாபிகள் மை யித்தை அடக்கிவிட்டு கப்ரடியில் சூரா பகரா ஓதியதாக இப்னு அபூ சைபாவில் ஒருசெய்தி உள்ளதாக குறிப்பிடுகின்றார்கள் . இதையே கப்ரடியில் குர்ஆன் ஓதுவதை ஊக்குவிப்போர் ஆதாரமாகக் கருதுகின்றனர்.

எனினும் முஸன்னபு இப்னு அபீ சைபாவில் சக்ராத் நிலையில் ஓதினார்கள் என்றே இடம்பெறுகின்றது. அதுவும் மிகப் பலவீ னமான அறிவிப்பாகும். அத்தோடு இது நபிகள் அங்கீகரிக்கா ததால் ஹதீஸ் அந்தஸ்த்தைப் பெறாது என்பதும் குறிப்பிடத் தக்கது.

அவ்வாறே மற்றொரு அறிவிப்பில் யார் கப்ரடிக்குச் சென்று குல் குவல்லாஹு அஹத் ஸூராவை ஏழு தடவைகள் ஓதி அதை கப்ராளிகளுக்கு அன்பளிப்புச் செய்தால் அந்த மக்பரா வில் அடக்கப்பட்டிருக்கும் கப்ராளிகளின் எண்ணிக்கையின் அளவுக்கு அவருக்கு நன்மைகள் கிடைக்கும் என இடம்பெறும் செய்தியும் இட்டுக்கட்டப்பட்ட போலியான செய்தியாகும். விரிவாகப் பார்க்க : தன்ஸீஹ-ஷ் ஷரீஆ அல்மர்பூஆ.. - இப்னுல் இராக்கி.

அதேபோல் இமாம் ஸ-யூத்தி அவர்களே தனது ஷரஹுஸ் ஸுதூர் எனும் நூலில் இச்செய்தி பலவீனமானது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**4-கப்ரிஸ்த்தானத்தில் வைத்துக் கொண்டு தொழுவது தடுக்கப்பட்ட அதேநேரம் அல்லாஹ்விடத்தில் துஆக்கேட்ப தற்கு அனுமதியுள்ளது . எனினும் துஆவின் போது கப்ரை**

**முன்னோக்காது கிப்லாவை முன்னோக்க வேண்டும்.**

ஆயிஷா (றழி) அறிவிக்கின்றார்கள்.. நபியவர்கள் ஒருநாள் இரவு வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றதும் நான் எனது அடி மை பரீராவை நபியவர்களைப் பின்தொடருமாறு அனுப்பினேன். பரீரா என்னிடம் திரும்பிவந்து நபியவர்கள் பகீஉ மையவாடிக் குச் சென்று அதன் கடைசிப்பகுதியில் நின்றவர்களாக கைக ளை உயர்த்திப் பிரார்த்தித்தார்கள். என்று கூறினார். மறுநாள் நான் நபிகளிடத்தில் அதுபற்றிக் கேட்டபோது பகீஉவில் அட க்கப்பட்டவர்களுக்கு பிரார்த்திக்குமாறு எனக்கு ஏவப்பட்டது என்று பதிலளித்தார்கள். அஹ்மத், நஸாயி.

**5-கப்ரின் மீது உட்கார வேண்டாம். கப்ரை முன்னோக்கி தொழவேண்டாம் என்று தடைவந்திருப்பதால் கப்ரை முன்னோக்கி துஆக் கேட்பதும் வெறுக்கத்தக்கதாகும் என அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.** இதனாலேயே நபியவர்களின் றவ்ழாவை சியாரத் செய்யும்போதும் அவ்விடத்தில் துஆச் செய்ய விரும்பினால் கிப்லாப் பக்கம் திரும்பிவிட வேண்டுமெ ன அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். இது ஷாபி மத்ஹப் உட் பட அனைத்து நான்கு மத்ஹபுசார் அறிஞர்களின் கருத்துமா கும்.

இமாம் நவவி(றஹ்) அவர்கள் ஸ.்.பரானி இமாம் ஜனாயிஸ் எனும் நூலில் சொல்வதாகக் குறிப்பிடுகின்றார்கள். ஸியாரத் தின் போது கப்ரைக் கைகளால் தடவுவதோ கப்ரை முத்தமிடு வதோ கூடாது. இவ்வாறுதான் நபிவழி இருந்துள்ளது. இன்று

பாமர மக்கள் கைகளால் கப்ரைத் தடவுவதோ முத்தமிடுவதோ மறுக்கப்பட வேண்டிய பித்அத்துக்களாகும்.அவை தடுக்கப்பட வும் தவிர்ந்து கொள்ளப்படவும் வேண்டியவைகளாகும். எனவே சியாரத் செய்ய விரும்பினால் சென்று கப்ராளிக்கு சலாம் சொல்லவேண்டும். துஆக்கேட்க விரும்பினால் கிப்லாப்பக்கம் திரும்பி விட வேண்டும். .மஜ்மூ. 5-315

**6-காபிர்களாக மரணித்தவர்களை தரிசித்து ஸலாம் கூறலாமா?அவர்களுக்காக பாவமன்னிப்புக் கேட்கலாமா?**

காபிரரன ஒருவரின் கப்ரை தரிசிக்கச் செல்ல அனுமதியுண்டு. எனினும் அவர்களுக்கு ஸலாம் சொல்லவோ அவர்களுக்காகப் பாவமன்னப்புக் கேட்பதோ கூடாது.

நபியவர்கள் கூறுகையில் நான் எனது அன்னைக்காகப் பாவ மன்னிப்புக் கோர அல்லாஹ்விடம் அனுமதிகேட்டவேளை எனக் கு அனுமதியளிக்கப்படவில்லை. அவர்களின் கப்ரைத் தரிசிக்க அனுமதிகேட்ட போது அனுமதியளிக்கப்பட்டது. எனவே நீங்க ளும் கப்ரை தரிசியுங்கள். அது உங்களுக்கு மறுமையை நினைவூட்டும்.

ஒருமுறை நபியவர்களிடத்தில் ஒருமனிதர் வந்து எனது தந்தை குடும்பத்தினரை சேர்ந்து நடந்தவர். இன்னென்ன நல்ல காரிய ங்கள் செய்தவர்.(ஆனால் முஸ்லிமாக வில்லை) அவர் எங்கி ருப்பார் எனக் கேட்க நபியவர்கள் நரகத்தில்.. என பதிலளித் தார்கள். இதனால் சற்று கலக்கமடைந்த அவர் உங்கள் தந் தை எங்கிருப்பார் எனக் கேட்க அவரும்தான்! எனக் கூறிவிட்டு காபிரான யாரின் கப்ருக்கு அருகில் நீ சென்றாலும் அவருக்கு நரகம் கிடைக்குமென்ற செய்தியைச் சொல்வீராக என்றர்ாகள். தபரானி

மற்றொரு ஹதீஸில் நீங்கள் ஜாஹலிய்யத் கால காபிர்களின் கப்ர்களுக்கு அருகாமையில் நடந்துசென்றால் அவர்களுக்கு

நரகம் கிடைக்கட்டும் என்று செய்திசொல்லுங்கள் என்றார்கள். இப்னுஸ் ஸுன்னி.

### 7-மக்பராவில் செருப்புடன் நடந்து செல்லலாமா? .

மக்பராவுக்குள் செருப்புடன் நடந்துசெல்வது பொதுவாக வெறு க்கத்தக்கதாகும். ஏனெனில மக்பரா கப்ராளிகளின் வீடாகும். அவர்கள் உயிர்வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கிருந்த கண் ணியம் மரணித்த பின்னரும் வழங்கப்பட வேண்டும். எனவே அவர்களின் வீட்டுக்குள் செருப்புடன் நுழைவது அவர்களை அவமானப்படுத்தும் செயலாகும்.

பசீர் பின் ஹன்ழலா(றழி) அறிவிக்கின்றார்கள்..

நான் நபியவர்களுடன் மக்பராவில் சேர்ந்து நடந்து சென் றேன். நபிகளார் முஸ்லிம்கள் அடக்கப்பட்டிருக்கும் பகுதிக்கு வந்தபோது அங்கே ஒருவர் செருப்புடன் கப்ர்களுக்கு மத்தி யில் நடந்து செல்லக் கண்டார்கள். உடனே சிப்திய்யா செருப் புக்காரரே! உமது செருப்புக்களை கழட்டிப் போடுவீராக எனக் கூவியழைத்ததும் அவர் திரும்பிப்பார்த்தார். நபியவர்கள் அங்கி ருப்பதைக் கண்டதும் உடனே தன்னிரு செருப்புக்களையும் கழட்டி எறிந்து விட்டார். அபுதாவுத்,திர்மிதி.

இதன்படி செருப்புகளுடன் கப்ரில் நடப்பது ஹராமாகும் எனவும் இப்னுஹஸ்ம் எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார்கள். எனினும் வெறுக்கத்தக்கது என்பதே இப்னு ஹஜர்(றஹ்) போன்ற பல ஹதீஸ்த்துறை அறிஞர்களின் கருத்தாகும். அஹ்மத் பின் ஹனபல் போன்ற பல அறிஞர்கள் மக்பராவில் நுழைய முன் செருப்பைக் கழட்டும் வழக்கமுள்ளவர்களாக இருந்திருக்கின் றார்கள்.

இமாம் இப்னுபாஸ்(றஹ்) அவர்கள் கூறுகையில்.. மக்பரா கல்-முள் நிறைந்ததாக இருக்கும் பட்சத்தில் செருப்பின்றி நடக்கும் போது ஆபத்து ஏற்படும் நிலை காணப்படும் போது செருப்பு

டன் செல்வதில் தவறில்லை என்பதையும் குறிப்பிடுகின்றார்கள். பார்க்க : பதாவா பாஸிய்யா,

## 8-கப்ரின் மேல் மலர்ச் செடிகளை நடுவது கூடுமா?

மக்பராவில் மையித்தை அடக்கிவிட்டு கப்ரின் மீது பூஞ்செடிக ளை நடும் வழக்கம் முஸ்லிம்களிடம் பரவலாகக் காணப்படுகி ன்றது. ஆனால் இது மார்க்கத்தில் இல்லாத செயலாகும் . நபியவர்களோ ஸஹாபாக்களோ இவ்வாறு செய்ததாக எவ்வித ஆதாரமும் இல்லை. எனவே மார்க்க அனுஷ்டானமாக– நன் மை கிடைக்கும் என்ற எண்ணத்தில் இவ்வாறுசெய்வது மார்க் கத்தில் தடுக்கப்பட்ட பித்அத்தாகும். பித்அத்துககள் அனைத்து மே வழிகேடாகும். மக்கள் அவற்றை நல்லவையெனக் கரு தினாலும் சரியே! என்ற ஹதீஸ் இங்கு கவனிக்கத் தக்கதா கும். -இப்னு பத்தா.·. .

கப்ரின் மேல் மலர்ச் செடிகளை நடுவதற்கு ஆதாரமாகச் சிலர் பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

நபியவர்கள் ஒருமுறை இரு கப்ருகளுக்கு மத்தியில் நடந்த போது இவ்விரு கப்ரிலும் அடக்கப்பட்டிருப்பவர்களுக்கு வேத னை செய்யப்படுகின்றது. அவர்களில் ஒருவர் கோள் சொல் லித் திரிபவராகவும் மற்றையவர் சிறுநீர் கழித்தபின் சுத்தம் செய்யாதவராகவும் இருந்துள்ளமையே வேதனை செய்யப்ப டுவதற்காக காரணம் என்று சொல்லிவிட்டு ஒரு ஈச்சை மட்டை யை எடுத்து இரண்டாகக் கிழித்து இரு கப்ர்களிலும் நட்டி விட்டு இவ்விரு மட்டைகளும் காயாமலிருக்கும் காலம் வரை இவ்விருவருக்கும் வேதனை இலகுபடுத்தப்படக்கூடும் என்று கூறினார்கள். புகாரி ,முஸ்லிம்.

நபியவல்களின் இச்செயல் அவ்விருவர் விடயத்திலும் வந்த வஹியின் கட்டளைக்கேட்ப நபியவர்கள் அவர்களுக்கென தனி ப்பட்ட முறையில் செய்த செயலாகும். அதாவது அவ்விரு மை

யித்களும் அடக்கப்பட்ட பொது எவ்வித மரங்களும் நடப்பட்டி ருக்கவில்லை. பின்னாளில் ஒருநாள் அங்கு சென்ற நபிக்கு அவ்விருவரும் வேதனை செய்யப்படுவது காட்டப்பட்டபோது இவ்வாறு செய்தார்கள். வேதனைசெய்யப்படுவது நபிக்கு காட்டப்படாத ஏனைய கப்ர்கள் எதற்கும் நபியவர்கள் இவ்வாறு செய்யவில்லை என்பதை இந்த ஹதீஸிலிருந்தே உணர முடி கின்றது. அவ்வாறே ஸஹாபாக்களோ ஸலபுகளோ கப்ர்களில் மரங்களை நடும் பழக்கத்தை ஒருபோதும் கொண்டிருக்க

வில்லை. அடக்கம் செய்யும் முறை பற்றி செயல்முறை விளக்கமளித்த நபியலர்கள் வேறு யாரின் கப்ருக்கும் இப்படி செய்ததாக எந்த ஹதீஸும் இல்லை.

இமாம் கத்தாபி(றஹ்) குறிப்பிடுகின்றார்கள்..

நபியவர்கள் தனது துஆவின் பொருட்டால் அவ்விரு மையித்து க்கும் குறிப்பிட்ட காலத்துக்கு வேதனை குறைக்கப்படலாம் என்று கண்டதால் அவ்ஈச்சை மட்டை காயாமல் ஈரமாய் இருக் கும் காலம்வரைக்கும் வேதனை குறைக்கப்படலாம் என்றார் கள். இது நபிக்கு இவ்விருவர் விடயத்தில் வந்த வஹீயாகும். ஆனால் சிலர் இதற்கு மாறாக ஈச்சைமட்டை செய்யும் தஸ்பீ ஹினால்தான் வேதனை குறைக்கப்படுகின்றது என்று புரிந்து கொள்கின்றார்கள். இது தவறாகும். ஈச்சைமட்டை செய்யும் திக்ரினால்தான் வேதனை குறைக்கப்பட்டதெனில் அது காயந்த பின்னரும் வேதனை குறைக்கப்படவே வேண்டும். ஏனெனில் காய்ந்த-பச்சையான, உயிருள்ள உயிரற்ற அனைத்துமே அல் லாஹ்வை தஸ்பீஹ் செய்துகொண்டே இருக்கின்றன.( அனை த்து வஸ்த்துக்களும் அவனை-அல்லாஹ்வைப் புகழ்ந்து துதிக் கின்றன, ஆனால் நீங்கள் அத்துதித்தலை விளங்கிக் கொள்ள மாட்டீர்கள்.- ஸூரா இஸ்ரா.: 44.)

இத்தவறான புரிதலினாலேயே இன்று எகிப்து போன்ற பெரும் அறிஞர்களின் தேசங்களிலும் பாமர மக்கள் மார்க்க விளக்கமி

ன்றி கப்ரில் மலர்ச்செடிகளை நடும் வழக்கத்தையும் கப்ரை சி யாரத் செய்யும்போது கிருஸ்த்தவர்களைப் போல் மலர்ச்செண் டுகளை அஞ்சலி செலுத்தும் எண்ணத்தில் அம்மண்ணறை மீது முகஸ்த்துதிக்காக வைத்து மரியாதை செய்வதையும் வழக் கமாகக் கொண்டுள்ளதைப் பார்க்கின்றோம். – மஆலிமுஸ் ஸுனன்.1-27

மேலும் இமாம் அல்பானி(றஹ்) இதுபற்றி விளக்ககையில்.. நபியவர்கள் அவ்வீச்சை மட்டையை அவ்விரு கப்ரிலும் வைத் தது அவ்விரு கப்ர்களின் விடயத்திற்கு மாத்திரம் சொந்தமான தென்பதற்கும், ஈச்சைமட்டையின் ஈரத்திற்கும் வேதனை குறை க்கப்பட்டதற்கும் சம்மந்தமில்லை மாறாக நபியின் துஆவின் பறக்கத்தாலேயே வேதனை இலேசாக்கப்ப்ட்டது என்பதற்கும் பின்வரும் விடயங்கள் ஆதாரமாயுள்ளன.

-ஸஹீஹ் முஸ்லிமில் இடம்பெறும் ஒருஹதீஸில் நபியவர்கள் கப்ரில் ஈச்சைமட்டை நட்டது பற்றி கூறுகின்றார்கள். நான் ஒருநாள் வேதனை செய்யப்படும் இரு கப்ர்களுக்கு அருகில் நடந்துசென்றேன். எனவே நான் அல்லாஹ்விடம் சிபாரிசு செய் வதன் பொருட்டால் அவ்விரு மட்டைகளும் ஈரமாயிருக்கும் காலம் வரை வேதனை தடுக்கப்பட்ட வேண்டும் என விரும்பி னேன் என்றார்கள். –முஸ்லிம்.

இந்த ஹதீஸ் வேதனை குறைக்கப்பட்டது நபியின் துஆ-சிபா ரிசின் காரணத்திலேயேயன்றி மட்டை செய்யும் திக்ரினால் அல்ல என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

-ஈச்சை மட்டை ஈரமாயிருப்பின் வேதனை குறைக்கப்படுமென் றும் காய்ந்துபோனால் வேதனை தொடரும் என்பதும் மார்க்க ரீதியாகவோ, அறிவுப்பூர்வமாகவோ ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். அப்படியெனில் காபிர்களுக்குத்தான் அதிகம் வே தனை இலகுவாக்கப்படும் என்று சொல்ல வேண்டியேற்படும். ஏனெனில் அவர்கள்தான் தமது மரணித்தவர்களின் கப்ர்களில்

பல்வேறு செடிகளையும் மலர் வளையங்களையும் வைத்து கப்ரை அலங்கரிப்பவர்கள்.

-ஸுயூத்தி இமாம் போன்ற சிலர் மட்டை ஈரமாயிருக்கும் நிலையில் வேதனை குறைக்கப்படுவதற்கு அவை செய்யும் தஸ்பீஹே காரணம் என்று கூறுவதும் பொருத்தமற்றதாகும். ஏனெனில் இது எல்லா வஸ்த்துக்களும் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்கின்றன என்ற வசனத்துக்கு முரண்படக் கூடியதாகும்.

-ஈச்சை மட்டை ஈரமாயிருப்பதுதான் வேதனை குறைக்கப்படக் காரணமெனில் நபியவர்கள் அம்மட்டையைப் பிளக்காமல் அப்படியே வைத்திருப்பதே மிகப் பொருத்தமாக அதைந்திருக்கும். ஏனெனில் இருகூறுகளாகப் பிளப்பதால் அது விரைவில் காய்ந்து போகும். பிளக்காமல் லைத்தால் நீண்ட நாட்கள் காயாமல் இருக்கும். ஆகவே நபியவர்கள் மட்டையை பிளந்ததற்கும் வேதனை குறைக்கப்பட்டதற்கும் சம்பந்தமில்லை என்பது தெளிவாகின்றது.

-அவ்வாறே இவ்வாறு மட்டைகளை கப்ரில் வைப்பதால் வேதனை குறைக்கபடுமெனில் ஸஹாபாக்கள் நபியவர்களின் இச்செயலுக்குப்பின் தாங்களும் கப்ர்களில் மட்டைகளை நடும் வழக்கத்தைக் கொண்டிருப்பார்கள். அப்படி கப்ரில் ஸஹாபாக்கள் மட்டைகளையோ மரங்களையோ நட்டதாக எந்த ஹதீஸ்நூல்களிலும் எத்தகவலும் இல்லை. எனவே ஸஹாபாக்கள் நபியவர்களின் அச்செயலானது அவ்விரு கப்ர்களுக்கு மட்டும் தனிப்பபட்ட முறையில் வந்த இறைவழி காட்டலில் அடிப்படையிலாகும் என்பதைக் புரிய முடிகின்றது. அல்லாஹு அஃலம்.

## கப்ராளிகளுக்கு குர்ஆன் ஓதி நன்மையை சேர்ப்பிக்கலாமா?

# (18)

# கப்ரிஸ்த்தானத்தில் வைத்து செய்யக் கூடாத விடயங்கள்..

- **அடக்கப்பட்ட இடத்தில் அல்லாஹ்வின் பெயரால் கூட மரணித்தவர் சார்பாக பிராணிகளை அறுத்துக் குர்பான் கொடுப்பது கூடாது.**

ஜாஹிலிய்யாக் காலத்தில் ஒருவர் மரணித்தால் அவருக்காக கப்றடியில் வைத்து பிராணியை அறுக்கும் வழக்கம் இருந்து வந்தது. இதற்காகவே நபியவர்கள் இதைத் தடைசெய்தார்கள்.

நபியவர்கள் கூறினார்கள்..

இஸ்லாத்தில் கப்ரடியில் அறுத்தல் என்பதே கிடையாது. அபூதாவுத்.

கப்ரடியில் வைத்துச் செய்யப்படும் இச்செயல் அல்லாஹ்வுக்காகச் செய்யப்பட்டாலும் காலப்போக்கில் அம்மக்பறாவானது மக்கள் ஒன்றுகூடும் இடமாக ஆக்கப்பட்டு பின் கப்ரில் அடக்கப்பட்டவருக்காகவே அது அறுத்துப் பலியிடப்படுகின்றது என்ற தவறான எண்ணம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதனாலேயே நபியவர்கள் இதைத் தடுத்துள்ளார்கள்.

என்னுடைய கப்ரை பெருநாள் கொண்டாட்டத்துக்குரிய இடமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள் என நபியவர்கள் தடுத்ததும் இதனால்தான்.

மற்றொரு ஹதீஸில் புவானா எனும் ஓரிடத்தில் ஒரு நபித்

தோழர் பிராணியொன்றை அறுத்துப்பலியிட நேர்ச்சை செய்த தாகவும் அதை நிறைவேற்றவா? என்றும் நபியவர்களிடத்தில் வினவினார். அதற்கு நபியவர்கள் அவ்வித்தில் பழங்கால விக் ரகங்கள் ஏதேனும் இருந்தனவா? அல்லது பழங்காலத்தில் அங்கு சிலைகளுக்கு விழாஎடுக்கும் பழக்கம் இருந்ததா? அப் படியெதுவும் இல்லையெனில் அங்கு சென்று உம் நேர்ச்சை யை நிறைவேற்றுங்கள் என்றார்கள்.

- **கப்ரை உயர்த்துதல். அதாவது அக்கப்ரைத் தோண்டும் போது பெறப்பட்ட மண்ணல்லாத வேறு மேலதிக மண்ணால் கப்ரை உயத்துதல் தடுக்கப்பட்டதாகும்.**

- **கப்ரை சாந்து கழிமண் போன்றவற்றால் மேற்பூச்சு பூசி மெழுகுதல்.**
- **கப்ரின் மேல் வாசகங்கள் எழுதல்.**
- **கப்ரின் மீது கல்லறை கட்டி எழுப்புதல்.**
- **கப்ரின் மீது அமர்ந்திருத்தல்.**

ஜாபிர்(றழி) அறிவிக்கின்றார்கள்..

நபியவர்கள் கப்ருக்கு மேல் சாந்து பூசுவதையும், அதன்மேல் அமர்வதையும், அதில் எழுத்துக்கள் பொறிப்பதையும், அதன் மேல் கட்டிடம் எழுப்புவதையும், அதை உயர்த்துவதையும் தடைசெய்தார்கள். முஸ்லிம்.

இந்த ஹதீஸுக்கு இமாம் நவவி(றஹ்) விளக்கம் கூறுகையில் கப்ரைத் தோண்டும்போது பெறப்பட்ட மண்ணல்லாத வேறு மண்ணால் கப்ர் உயர்த்தப்படாமல் இருப்பது சுன்னத்தாகும் என்று கூறியுள்ளார்கள்.. ஷரஹு ஸஹீஹ் முஸ்லிம் 5-296.

கழிமண்ணால் கப்ரைப் பூசுவதும் மேற்படி ஹதீஸில் தடுக்கப் படுகின்றது. அவ்வாறு செய்வது ஒருவகை அலங்காரம் என்ப தால் இவ்வாறு தடுக்கப்பட்டிருக்கலாம் என அறிஞர்கள் குறிப் பிடுகின்றனர். இன்னும் சிலர் பூசுவதன் நோக்கம் கப்ரை அல ங்கரித்தல் அன்றி வெள்ளம்,கடுங்காற்று போன்றவை கப்ரை அடையாளம் தெரியாதவாறு சமப்படுத்தி விடும் என்றிருந்தால் அவ்வேளைகளில் சுண்ணாம்பு, கழிமணி போன்றவற்றால் மேற் பூச்சு பூசிவிடுவதில் தவறில்லை என்றும் கூறுகின்றனர். ஏனெ னில் கப்ரை அடையாளப்படுத்தும் நோக்கில் மண்ணைக் கூட் டி உயர்த்தல், தலைமாட்டில் கல்லொன்றை அடையாளமாக வைத்தல் என்பன மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளன என்று கூறுகின்றனர். எவ்வாறாயினும் சுன்னாவில் வந்தபடி செயல்ப் படுவது மிகச் சிறந்ததாகும்.

இமாம் அபூஹனீபா(றஹ்) கூறுகின்றார்கள்...

கப்ரை அது கப்ரென அடையாளம்கண்டு அதை மிதித்து விடா திருக்குமளவுக்கு உயர்த்துங்கள். மேலும் அவர்களின் சிரே ஷ்ட மாணவர் முஹம்மத் கூறுகையில் இதுதான் எங்கள் நிலைப்பாடுமாகும். கப்ரை தோண்டுகையில் கிடைத்த மண் ணன்றி வேற்று மண்ணால் உயர்த்துவதும் கூடாது. அது தவிர்த்து கப்ரை சாந்துபூசுவதோ கழிமண் இடுவமோ அவ் விடயத்தில் கட்டிடம், மஸ்ஜித் அமைப்பதோ கொடி நாட்டுவ தோ, கப்ரில் எழுதுவதோ வெறுக்கத்தக்கவையாகும். கப்ரின் மேல் தண்ணீர் தெளிப்பதில் தவறில்லை. ஆல்ஆதார் 45,

சாதாரண கப்ர்களிலேயே இவற்றைச் செய்வது தடுக்கப்பட்டி ருக்கும் போது வலிமார்கள் நாதாக்களின் கப்ர்கள் என அறியப்பட்டு சிர்க்கான விடயங்கள் நடைபெறும் தர்ஹாக்கள் போன்றவற்றில் இவை செய்யப்பட்டிருப்பது மிகப் பெரும் பாவச் செயலாகும்.

மற்றும் சிலர் அலங்கார நோக்கிலன்றி அடையாளப்படுத்தும் நோக்கில் கப்ரில் அடக்கப்பட்டவரின் பெயரை எழுதுவது ஆகுமென வாதிடுகின்றனர். கப்ரை அடைாளப்படுத்துவதற்காக உயர்த்த அனுமதியுள்ளதால் அதோடு ஒப்பிட்டு இதுவும் ஆகுமென்பது அவர்களின் கருத்து. எனினும் இந்த கியாஸ் ஒப்பீடு பொருத்தமற்றதாகும். காரணம் அடையாளப்படுத்த ஏற் கனவே மண்ணால் உயத்தல், தலைப்பகுதியில் கல்வைத்தல் போன்றன இருக்கும்போது இது தேவையற்றதாகும். அப்படிப் பார்க்கும் போது தர்ஹாக்களில் நடக்கும் அனைத்து பித்அத் துகளையும் குறிப்பிட்ட வலியை அடையாளப்படுத்தவே என சிலர் நியாயப்படுத்த முடியும்.

## ▪ ஒரு சாணளவு கப்ரை உயர்த்துவது சிறந்ததா? அல்லது சமப்படுத்துவது சிறந்ததா?

அபுல் ஹய்யாஜ்(றஹ்) அறிவிக்கின்றார்கள்.

அலி(றழி) அவர்கள் என்னை அழைத்து நபியவர்கள் என்னை எப்பணிக்காக அனுப்பினார்களோ அதே வேலையைச் செய்வத ற்காக நான் உங்களை நியமித்து அனுப்புகின்றேன். எங்கெ ல்லாம் சிலைகளோ விக்ரகங்களோ உருவப்படங்களோ இருக் கின்றனவோ அவற்றையெல்லாம் அடித்து நொறுக்காமல் விடா தே! பூமியில் உயர்த்தப்பட்டிருக்கும் கப்றுகளைக் கண்டால் சமப்படுத்தாமல் விடாதே! என்று கூறினார்கள்.- முஸ்லிம்.

இந்த ஹதீஸில் கப்ரை சமப்படுத்துமாறு வலியுறுத்தப்படுகின் றது. மேல்வந்த ஹதீஸ்களில் ஒருசாணளவு உயர்த்த அனுமதி க்கப்படுகின்றது. இரண்டும் முரண்பாடாதா? என்றால் இல்லை. இதற்கு இரண்டு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. அதாவது அலி(றழி) தடை செய்தது சாணளவுக்கு மேலதிகமாக உயர்த் தப்பட்டிருக்கும் கப்ர்களையே எனப் புரிய முடியும். அப்படியே ஸஹாபாக்களும் விளங்கினார்கள். இதனாலேயே புழாழா (றழி) கப்ரின் மீது மண்ணை கொஞ்சமாகப் போடுங்கள் ஏனெனில்

நபியவர்கள் கப்ரை சமப்படுத்துமாறு கட்டளையிட்டார்கள் என்று அறிவிக்கின்றார்கள். – அஹ்மத்.

அதாவது எல்லாக் கப்ர்களும் ஒரு சாணளவு உயர்த்தப்பட்டு

இருக்கும் நிலையில் அவற்றுக்குச் சமமாக இல்லாது அவ ற்றைவிட அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கும் கப்ர்களைக் கண் டால் அவற்றையும் அதே ஒரு சாணளவுக்கு சமப்படுத்தாது விடாதே! என்பது இதன் பொருளாகும்.

இதனை மற்றொரு விதத்திலும் விளங்கலாம்.

அதாவது எந்தக் கப்ர்கள் மார்க்கத்திற்கு முரணான அனாச்சா ரங்கள் இடம்பெறும் இடமாக மாறிவிட்டதோ அந்த கப்ர்களை மக்களை சிர்க்கிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் முற்றாக சமப்படுத்தி அடையாளம் காணமுடியாத படி ஆக்குங்கள் என் றும் புரிய முடியும். அப்படியெனில் இத்தடை சிர்க் இடம்பெறும் கப்ர்கள் தர்ஹாக்கள் விடயத்தில் கூறப்பட்டதாக ஆகின்றது.

இமாம் ஷவ்கானி (றஹ்) அவர்கள் இந்த ஹதீஸுக்கு விளக்களிக்கும்போது பின்வருமாறு கூறுகின்றார்கள்..

கப்ரை அதிகளவு உயர்த்தக் கூடாதென இந்த ஹதீஸ்கள் கூறுகின்றன. காரணம் அக்கப்ராளி உயர்ந்த மகான் சாதாரண மனிதன் என்ற வேறுபாடின்றி அனைத்து கப்ர்களுக்கும் ஒரே அமைப்பில் இருக்கவேண்டும் என்பதே நபியவர்களின் நோக்க மாகும். இமாம்களான மாலிக், ஷாபி, ஹன்பலி அனைத்து மத் ஹபு அறிஞர்களின் கருத்தும் இதுவே. கப்ரை உயர்த்தக் கூடாது என்ற தடைக்குள் முதலில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய இடம் இன்றைய தர்ஹாக்களில் அமைக்கப்பட்டுள்ள குப்பாக்களும் நினைவுமண்டபங்களுமே! இந்த ஹதீதின்படி முதலில் இவைகளே இடித்துத் தரைமட்டமாக்கப்பட வேண்டும். இவ்விடங்கள் அல்லாஹ்வுக்கு சுஜூது செய்வதற்குப் போட்டி யாக மகான்களுக்கு சுஜூதுசெய்யும் மஸ்ஜித்களாக ஆகிவிட்

டன. மண்ணறைகளை மஸ்ஜித்களாக ஆக்காதீர். அவ்வாறு செய்வோருக்கு இறை சாபம் உண்டாகட்டும் என்ற நபியவர் களின் போதனை அப்பட்டமாக மீறப்படும் இடங்களாக இவை மாறிவிட்டன. ஜாஹிலிய்யாக் காபிர்கள் என்ன நம்பிக்கையில்

தமது சிலைகளிடம் வருவார்களோ அதே நம்பிக்கையிலேயே மார்க்கத் தெளிவற்ற முஸ்லிம்கள் சிலர் இந்த தர்ஹாக்களு க்கு வருகின்றார்கள். அக்காபிர்கள் கூட தமது விக்ரகங்கள் அல்லாஹ்விடம் தமக்காக சிபாரிசு செய்யும் என்றுதான் நம்பி னார்கள். ஆனால் இம்முஸ்லிம்களோ தர்ஹாகக்களில் அடங்க ப்பட்டிருக்கும் மகான்கள் சுயமாகவே தமது தேவைகளை அறி ந்து அவற்றை நிறைவுசெய்தும் தருவார்கள் என்று நம்புவது எவ்வளவு பெரிய சிர்க்காகும். அம்மகான்களை அல்லாஹ்வை நேசிப்பது போல் நேசித்து வணங்கி வழிபட்டு பயந்து, அபயம் தேடி அவர்களைத் தரிசிக்க யாத்திரை மேற்கொண்டு இன்னும் என்னவெல்லாமோ செய்கின்றார்கள். சிலநேரம் ஏதோவதொரு விடயத்தில் சத்தியம் செய்யவேண்டி ஏற்பட்டால் அல்லாஹ்வின் பெயரில் சத்தியம்செய்! எனக் கோரப்பட்டால் துணிந்து பொய் ச்சத்தியம் செய்பவர் அவரது குருவான குறித்த ஷெய்கின் பேரில் சத்தியம் செய்யக் கோரினால் பயந்து நடுநடுங்கி குறி த்த மகான் தன்னைத் தண்டித்து விடுவாரெனக் கலங்கி சத்தி யம் செய்யப் பின்வாங்கி உண்மையை ஒத்துக்கொள்ளும் நிலையையும் பார்க்கின்றோம். இதைவிடவும் பெரிய சிர்க் வே றென்ன இருக்க முடியும்?, நைலுல் அவ்தார் 4-72.

## ▪ கப்ரின் மீது அமர்ந்திருப்பதோ அதன்மேல் மிதிப்பதோ கூடாது..

நபியவர்கள் கூறுகின்றார்கள்..

உங்களில் ஒருவர் ஒரு தீப்பிளம்பின் மேல் அமர்ந்து அது அவரின் ஆடையை எரித்து உடலைக் கரித்து விடுவதானது

அவர் ஒரு கப்ரின் மேல் அமரந்திருப்பதை விடவும் அவருக்கு ச் சிறந்ததாகும். –முஸ்லிம்.

எனவே கப்ரின் மேல் அமர்தல், மிதித்தல் வேறு பொருட்க ளைப் போடுதல், வீடு கட்டிடக்களை அமைத்தல் போன்ற அனைத்தும் மார்க்கத்தில் தடுக்கப்பட்டவையாகும்.

கப்ரின் மேல் அமர்தல், கட்டிடம் கட்டல் போன்றவை அறிஞர் களிடத்தில் ஹறாமாகும். ஒருசில அறிஞர்கள் அதை மக்ரூஹ் என்கின்றனர். இமாம் நவவி மக்ரூஹ் எனக்கூற அதே ஷாபி மத்ஹபு அறிஞரான இப்னு ஹஜர் ஹைதமி அது பெரும்பாவம் ஹறாம் என்கின்றார்கள். இப்படியாக ஒரே மத்ஹபு அறிஞர்க ளுக்கிடையிலேயே வேறுபட்ட கருத்துக்கள் வரும்போது அக் கருத்துக்களில் எது ஸுன்னாவுக்கு மிக நெருக்கமானது – சரி யானது என்று ஆராய்ந்து முடிவெடுப்பதே அறிவுப்பூர்வமான தாகும் ஸஹாபாக்களின் ஸலபுகளிள் வழிமுறையுமாகும். அந் த வகையில் பார்க்கும்போது ஹதீஸ்களில் நேரடியாக வந்து ள்ள இத்தடையை ஹராம் என்ற கட்டத்திலிருந்து மக்ரூஹ் என்ற கட்டத்துக்கு மாற்றுவதற்கான போதிய ஆராரங்கள் கிடைக்காததால் அதை ஹராமாகக் கருதுவதே சுன்னாவை நேரடியாகப் பின்பற்றியதாக அமையும். மக்ரூஹ் என வாதி டுவோர் அமரவேண்டாம்! என்பதன் அர்த்தம் மலசலம் கழிக்க அமர வேண்டாம் என்பதே! என்கின்றனர். இது பொருத்தமற்ற வியாக்கியானமாகும். ஏனெனில் விடயம் அவ்வாறெனில் மல சலம் கழிக்கவன்றி வேறு நோக்கில் அமர்வதில் தவறில்லை என்று ஆகும். ஆனால் அவர்களோ அதை மக்ரூஹ் என்கின்றனர். ஆகுமான ஒன்றை எப்படி மக்ரூஹ் ஆகும்?.

## ▪ கப்ரை முன்னோக்கித் தொழக்கூடாது, கப்ரிஸ்தா னத்தில் தொழவும் கூடாது.

நபியவர்க்ள் கூறினார்கள்…

கப்ரை முன்னோக்கித் தொழ வேண்டாம். கப்ரின் மீது உட்காரவும் வேண்டாம். முஸ்லிம்.

கப்ரை முன்னோக்கி- அதாவது கப்ரானது கிப்லாப்பக்கம் இருக்கும் வகையில் தொழுவது ஹராமாகும் என்பது அறிஞர்களின் முடிவாகும். இமாம் நவவி(றஹ்) அவர்களும் இதையே கூறுகின்றார்கள். ஹனபிகள் இதை மக்ரூஹ் தஹ்ரீம் எனகின்றனர். எனவே கப்ர் கிப்லாப்பக்கம் உள்ள இடத்தில் நின்று தொழுவது தடுக்கப்பட்டதாகும். ஆனால் அந்த கப்ரில் அடக்கபட்டிருப்பவருக்காக,அவரைக்கண்ணியப்படுத்தும் எண்ணத்தில் தொழுதால் அது பகிரங்க ஷிர்க்காகும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

அவ்வாறே மக்பராவில் தொழுவதும் தடுக்கப்பட்டதாகும்.

நபியவர்கள் கூறுகின்றார்கள்..

பூமி அனைத்துமே தொழத்தகுந்த இடமாகும், மக்பராவையும் மலசலகூடம்-குளியலறையையும் தவிர. அபூதாவுத்.

நபியவர்கள் கப்ர்களுக்கு மத்தியில் நின்று தொழுவதைத் தடுத்துள்ளார்கள். முஸ்னது அல்பஸ்ஸார்.

மற்றொரு ஹதீஸில் உங்கள் தொழுகைகளில் சிலதை வீடுகளில் வைத்துக் கொள்ளுங்கள். அவற்றை மண்ணறைகளைப் போல ஆக்கி விடாதீர்கள் என்று இடம்பெறுகின்றது.

இவ்வாறாக ஹதீஸ்கள் மக்பராவில் தொழுவதை தடைசெய்கின்றன. மக்பராவில் தொழுவது வெறுக்கத்தக்கது–மக்ரூஹ் என்பது அதிகஅறிஞர்களின் முடிவாகும்.இமாம் புகாரி(றஹ்) அவர்களும் இவ்வாறே ஸஹீஹுல் புகாரியில் தலைப்பிட்டு இருக்கின்றார்கள். மற்றும சிலர் அது ஹறாம் - தொழுகையும் பாத்தில் - செல்லாது. அத்தொழுகையை மீட்ட வேண்டும். என்றும் கூறுகின்றனர்.

இவ்விடத்தில் ஒரு முக்கிய விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். மக்பராவில் தொழுவது மக்ரூஹா ஹராமா? என்ற இரு கருத்துக்கள் அறிஞர்களிடத்தில் வரக் காரணம் நபிய வர்கள் மஸ்ஜிதைச் சுத்தம் செய்யும் கறுப்புப் பெண் மரணித்த போது அவரது கப்ரைக் காட்டுங்கள் என்று கூறி அப்பெண்ணு க்காக ஜனாஸாத்தொழுகை தொழுததாக இடம்பெறும் ஹதீ ஸாகும். இதில் நபியவர்கள் மக்பராவில் தொழுததாக விளங்க ப்படுவதால் மக்பராவில் தொழுவதைத் தடுக்கும் ஹதீஸ்களை ஹராம் எனும் கட்டத்திலிருந்து மக்ரூஹ் என்ற சட்டத்திற்கு மாற்ற இந்த ஹதீஸை ஆதாரமாகக் கொள்கின்றனர். ஆனால் இதில் நபியவர்கள் அப்பெண்ணுக்காக மக்பறாவில் தொழுத தாக நேரடியாக வரவில்லை. மாறாக அப்பெண்ணின் கப்ரைப் பார்த்த பின் நபியவர்கள் அருகிலுள்ள வழக்கமாக ஜனாஸாத் தொழுகை நடத்தப்படும் இடத்துக்கு வந்தே தொழுதார்கள் என்று புரிந்து கொண்டால் எவ்வித சிக்கலும் இல்லை. ஏனெ னில் நபியவர்கள் ஜனாஸாத் தொழுகையை பள்ளியில் அல் லது அதற்குரிய இடத்திலன்றி வேறெங்கும் தொழுததாக எவ் வித அறிவிப்புக்களும் இல்லை.

கப்றடியில் அல்லது கப்றை முன்னோக்கித் தொழக்கூடாது என் ற தடுப்பட்டமைக்கான பிரதான காரணம் அச்செய்கை காலப் போக்கில் ஷிர்க்கின் பக்கம் இட்டுச்செல்லலாம் என்று அஞ்சிய தினாலாகும். இதற்கு ஸத்துத்தரீஆ எனப்படும். மக்பரா அசுத் தமான நிலையில் இருக்கலாம் என்பதும் ஒரு துணைக் கார ணமாகும்.

- **மக்பராவில் மஸ்ஜித்- கட்டிடம் கட்டுவது கூடாது.**

ஆயிஷா(றழி)அறிவிக்கின்றார்கள்..

நபியவர்களுக்கு மரணவேளை நெருங்கியிருந்த போது ஒரு துணியால் தனது முகத்தை மூடுவதும் திறப்பதுமாக இருந்தா ர்கள். அப்போது பின்வருமாறு கூறினார்கள்..

யூதர்களுக்கும் கிருஷ்தவர்களுக்கும் அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டுமாக. அவர்கள் தங்கள் நபிமார்களின் கப்ருகளை மஸ்ஜித்- வணக்கத்தலங்களாக ஆக்கிக் கொண்டார்கள் என்று அவர்களின் செயலை எச்சரித்தார்கள்.. முஸ்லிம்.

இதை அறிவிக்கும் அன்னை ஆயிஷா(றழி) அவர்கள் நபிய வர்கள் இவ்வாறு எச்சரித்திருக்காவிடில் நபியவர்களின் கப்ரும் பிரபலப்படுத்தப்பட்டிருக்கும். மாறாக அவர்கள் தன் கப்ர் வண க்கத்தலமாக ஆக்கப்படுவதைத் தடுத்தார்கள் என்று கூறுகின் றார்க்ள்.. புகாரி.

மற்றொரு அறிவிப்பில்.. உங்களுக்கு முன்வாழ்ந்தவர்கள் தமது நபிமார்கள், ஸாலிஹீன்களின் கப்ருகளை மஸ்ஜித்க ளாக மாற்றிவிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். நீங்கள் அப்படி கப்றுகளை மஸ்ஜித்களாக மாற்றிவிடதீர்கள். அதை விட்டும் நான் உங்களைத் தடுக்கின்றேன். முஸ்லிம்

மற்றொரு ஹதீஸில்..

நபியவர்கள் மரணப்படுக்கையில் இருந்த வேளை அவர்களின் மனைவிமார் அங்கு கூடியிருந்தார்கள். அவர்கள் தமக்குள் பேசிக்டிருந்த போது உம்மு ஸலமாவும் உம்மு ஹபீபாவும் அபிசீனியாவுக்கு சென்றிருந்த வேளை அங்கு அவர்கள் கிரு ஷ்தவ ஆலயத்தில் கண்ட மாரியா – மேரிமாதா என அழைக் கப்பட்ட (ஈஸாநபியின் அன்னை மர்யம்) சிலையின் அழகை யும் உருவ அமைப்பையும் வியந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இதைச் செவியுற்ற நபியவர்கள் (தமது வருத்தத்தையும் பொரு ட்படுத்தாது) சட்டென எழுந்து நிச்சயமாக கிருஷ்தவர்களான அவர்கள் அவர்களில் ஒரு நல்லமனிதர் மரணித்துவிட்டால் அவரது மண்ணறையில் வணக்கத்தலம் ஒன்றைக் கட்டிவிட்டு பின் அதில் அவரின் உருவச்சிலையை வைத்துவிடுவார்கள். இவர்கள்தான் மறுமையில் அல்லாஹ்விடத்தில் படைப்புக்களி லேயே மிகக் கெட்டவர்கள் என்று கூறினார்கள்.

- **கப்ர்த்தானங்களை பெருநாள்,விழா கொண்டாட்டம் கொடியேற்றம்குரிய இடமாக ஆக்குவதும் மார்க்கத்தில் தடைசெய்யப்பட்டதாகும் .**

கப்ரிஸ்தானங்களை பெருநாள் கொண்டாட்டத்துக்குரிய இடமாக ஆக்குவது என்பதன் அர்த்தம் யாதெனில்..

பெருநாள் போன்ற குறிப்பிட்ட சில காலங்களிலோ நேரங்களிலோ, அல்லது மரணித்தவர் பிறந்த அல்லது மரணித்த வருடாந்த நினைவுகூரலுக்காகவோ கப்ரைத் தரிசிக்கும் நோக்கில் வருதல்,பயணித்தல், அவ்விடத்தில் அன்னதானம் விழா போன்றவற்றை ஏற்பாடுசெய்தல், அதற்காக கப்ரை அலங்கரித்தல், விளக்கேற்றல் போன்றஅனைத்துமே கப்ரை பெருநாள் கொண்டாட்டத்துக்குரிய இடமாக ஆக்கிக் கொள்வதில் அடங்கும்.

நபியவர்கள் கூறியுள்ளார்கள்..

எனது கப்றை கொண்டாட்ட களமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். உங்கள் வீடுகளை(இபாதத்களற்ற) மண்ணறைகளாகவும் ஆக்கிவிடாதீர்கள். நீங்கள் எங்கிருந்தாலும் எனக்காக ஸலாம் கூறுங்கள் . அது என்னை வந்தடையும். அபூதாவுத்.

- **கப்ர்களை தரிசிப்பதற்காக பயணம்-யாத்திரை மேற்கொள்வதும் கூடாது.**

நபியவர்கள் கூறினார்கள்..

பயணத்துக்கான வாகனத்தை மூன்று இடங்களைத் தரிசிப்பதற்காகவேயன்றி கட்டுவது-தயார்படுத்துவது கூடாது. அவை யாவன மஸ்ஜிதுல் ஹராம் எனது மஸ்ஜித் (மஜ்ஸிதுன் நபவி) அல்மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மஸ்ஜித்களாகும். புகாரி.

நபியவர்களின் மதீனத்து மஸ்ஜிதுந் நபவியில் தொழும் நோக் கமன்றி அன்னாரின் றவ்ழா- கப்றை சியாரத் செய்து அன்னா ருக்கு ஸலாம் சொல்லும் நோக்கில் மட்டும் மதீனாவுக்குப் பயணம் மேற்கொள்வதும்கூட கூடாது என்பதை இந்த ஹதீ ஸிலிருந்து புரிய முடிகின்றது.

ஸஹ்ல்(றழி) அறிவிக்கின்றார்கள்.. என்னை ஒருதடவை ஹஸ ன்(றழி)யின் மகனார் அழைத்து என்ன செய்கின்றீர்கள் எனக் கேட்டதற்கு நான் நபியவர்களின் கப்ர் சென்று அன்னாருக்கு ஸலாம் கூறினேன் என பதிலளித்தேன். அதற்கவர்கள் நீங்கள் இம்மஸ்ஜிதுக்கு வந்தால் நபியவர்களுக்கு ஸலாம் சொல்லு ங்கள். ( ஸலாம் சொல்வதற்காக மஸ்ஜிதுக்கு வரவேண்டி யதில்லை. ) நபியவர்களுக்கு இங்கிருந்து ஸலாம் சொல்பவ ரும் ஸ்பெய்ன் நாட்டிலிருந்து ஸலாம் சொல்பவரும் சமமே! என்றார்கள். இப்னு அபிஸ் சைபா, 4-140.

இதனால்தான் மதீனத்து இமாம் என அழைக்கப்படும் இமாம் மாலிக்(றஹ்) அவர்கள் மஸ்ஜிதுந் நபவிக்கு ஐவேளைத் தொ ழுகைக்காக வருவோர் ஒவ்வொரு தடவையும் நபியவர்களின் கப்ரை சியாரத் செய்து ஸலாம் சொல்வது மக்ரூக் - வெறுக்க த்தக்கது என்றும் பயணத்திலிருந்து திரும்பினால், அல்லது பய ணிக்க எண்ணினால் அல்லது எப்போதாவது எதேர்ச்சையாக சியாரத் செய்வதே சரியானதாகும் என்று கூறுகின்றார்கள்.

இப்னுதைமியா (றஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்..

தொழுகைக்காக மஸ்ஜிதுந் நபவிக்கு வந்துவிட்டால் சியாரத் செய்வது அனுமதிக்கப்பட்டதே! எனினும் சியாரத் செய்யும் நோக்கில் மஸ்ஜிதுந் நபவிக்கு பயணித்து வருவது ஆகுமென எந்த அறிஞர்களும் அனுமதித்ததை நான் அறியவில்லை.

ஆவ்வாறே குறிப்பிட்ட ஒரு கப்ரிஸ்தானத்துக்குச் சென்று அவ்விடத்தில் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தால் நாடியது நட க்கும் என்ற எண்ணத்தில் மக்கள் ஒரு கப்ரிஸ்தானத்தை நாடி

ச்செல்வதும் கப்ரடியை விழாக்கொண்டாடும் இடமாக ஆக்கு தல் என்ற தடைக்குள் அடங்கும். இதனால்தான் இமாம் அஹ் மத் (றஹ்) மற்றும் பல இமாம்கள் நபியவர்களையும் அபூ பக்ர்,உமர்(றழி) இருவரையும் ஸியாரத் செய்ததன் பின் துஆக் கேட்க விரும்பினால் கிப்லாப் பக்கம் திரும்பி நின்று பிரார் த்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்கள். எந்த வொரு கப்ராவது மக்கள் அதனை தரிசிக்கவென குறிப்பிட்ட தொரு தினத்தையோ காலத்தையோ நிர்ணயித்து அதில்தான் சியாரத் செய்வதென்ற நிலை காணப்பட்டால் அது கப்ரிஸ்த்தா னத்தை பெருநாள் கொண்டாடும் இடமாக ஆக்கியதாகவே கருதப்படும் என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

முற்றொரு அறிவிப்பில் மூன்று மஸ்ஜித்களை நோக்கி மாத் திரமேயன்றி (ஆத்மீக) யாத்திரை செய்யக்கூடாது.. என்று இட ம்பெற்றுள்ளது. – முஸ்ஸிம்.

அபூபுஸ்ரா எனும் நபித்தோழரை அபூஹுரைரா(றழி) சந்தித்த வேளை எங்கிருந்து வருகிறீர் என விசாரித்தார்கள். அதற்கவர் நான் தூர்சீனா மலைக்கு யாத்திரை சென்றுவருகின்றேன் என் று கூறியதும் அதற்கு அபூஹுரைரா(றழி) நான் உம்மை முன் னரே சந்தித்திருப்பின் ஸியாரத்துக்காக அங்கு செல்ல விட் டிருக்கமாட்டேன். ஏனெனில் நபியவர்கள் மூன்று இடங்களைத் தவிர வேறெங்கும் யாத்திரை மேற்கொள்ளக் கூடாது என்று தடுத்துள்ளார்கள் என்று ஹதீஸைக் கூறிக்ககாட்டினார்கள். தயாலிஸி

மற்றொரு அறிவிப்பில்.. கஸ்ஆ எனும் தோழர் தூர்சீனா மலைக்கு யாத்திரை மேற்கொள்ள நாடி அதுபற்றி இப்னு உமர்(றழி) அவர்களிடத்தில் கேட்டபோது இப்னு உமர்(றழி) அவர்கள் மூன்று மஸ்ஜித்களை நோக்கியே தவிர வேறெங்கும் யாத்திரை மேற்கொள்ளக் கூடாதென நபியவர்கள் தடுத்

திருப்பது உனக்குத் தெரியாதா? எனவே தூர்சீனா செல்வதை விட்டுவிடுங்கள் என ஆலோசனை வழங்கிளார்கள். – தபரானி.

இந்த ஹதீஸ்களின் ஊடாக இம்மூன்று இடங்களைத தவிர வேறு இடங்களான நபிமார்கள் அடக்கப்பட்ட இடங்கள், நல்ல டியார்களின் தர்ஹாக்கள் போன்றவற்றைத் தரிசிப்பதற்காக யாத்திரை மேற்கொள்வது ஹராமாகும்.

இதையே அல்ஹாபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி உட்பட அனைத்து அறிஞர்களும் உறுதிப்படுத்துகின்றார்கள். ஷாபி மத்ஹபின் பிரதான இமாம்களில் ஒருவரான இமாமுல் ஹரமைன் ஜூவைனி(றஹ்) அவர்களும் மற்றும் பல ஷாபி மத்ஹபு அறிஞர்களும் மூன்று மஸ்ஜித்களைத் தவிர வேறிடங்களுக்கு யாத்திரை மேற்கொள்வது ஹராம் என்று தெளிவாகக் கூறியுள்ளனர்.

இதற்கு மாறாக இம்மூன்று மஸ்ஜித்கள் தவிர்ந்த வேறு இடங்களுக்கு யாத்திரைசெல்வது தவறில்லையென வாதிடும் சில அறிஞர்கள் அதற்கு நியாயம் கூறுகையில் ஒருவர் தனது மஹல்லாவிலுள்ள மஸ்ஜிதுக்குச் செல்லாது இம்மூன்று மஸ்ஜித்களைத் தவிர வேறு மஸ்ஜித்களுக்கு தொழுவதற்காக செல்வது கூடாதென்பதையே ஹதீஸ் குறிப்பிடுகின்றது. மஸ்ஜித் அல்லாத கப்ரிஸ்தானங்கள் , நினைவிடங்களுக்குச் செல்வது தடையில்லை என்று பதிலளிக்கின்றனர். இது கொஞ்சமும் பொருத்தமற்ற பதிலாகும். ஏனெனில் மஸ்ஜிதொன்றுக்கு யாத்திரை செல்வதே கூடாதென்றிருக்கும் போது கப்ரை தரிசிக்கச் செல்வது எப்படி ஆகுமாகும்?. அவ்வாறே பல்வேறு மூத்த ஸஹாபாக்கள் தூர்சீனா மலை போன்ற இடங்களுக்கு யாத்திரை மேற்கொண்ட சில நபர்களைக் கண்டித்துள்ளார்கள். எனவே சஹாபாக்கள் இதை எப்படிப் புரிந்தார்களோ அதுவே சரியான புரிதலாகும். எனவே அவ்வறிஞர்கள் சிலரின் மேற்படி கருத்து ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

- **ஆகுமான சுற்றுலாக்கள் சென்று இபாதத் நோக்கம் அன்றி மார்க்கம் அனுமதித்த வகையில் பொது, இஸ்லாமிய வரலாற்று இடங்களைத் தரிசிக்க அனுமதியுண்டு.**

இங்கு மற்றொரு விடயத்தை தெரிந்திட வேண்டும்.

அதாவது யாத்திரை எனப்படுவது நன்மை கிடைக்கும் என்ற எண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் வணக்கம்சார்ந்த ஓர் செயலைக்குறிக்கும். எனவே வணக்கவழிபாடு என்ற எண்ணம் இல்லாமல் சுற்றுலா நோக்கிலோ படிப்பினை கல்வி,ஆய்வு போன்ற காரணங்களுக்காகவோ மஸ்ஜித்கள் நினைவுச் சின்னங்களைப் பார்வையிடப் பயணம் செய்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட பொதுவான முபாஹான விடயங்களில் உள்ளதாகும்.

அவ்வாறே மூன்று மஸ்ஜித்களில் தொழும் நோக்கில் அங்கு நாடிச் செல்பவர்கள் அங்கிருக்கும் பொதுவான அனுமதிக்கப்பட்ட நினைவிடங்களைப் பார்வையிட அனுமதியிருப்பது போல் புனித மதீனத்து மஸ்ஜிதுந் நபவியில் தொழ யாத்திரை மேற்கொள்ளச் சென்றவர் அங்கிருக்கும் நபிகளாரின் றவ்ழா, பகீஉ மையவாடியில் அடங்கப்பட்டிருக்கும் ஸஹாபாக்கள் மற்றும் முஸ்லிம் சகோதரர்கள் , உஹது ஸஹாபாக்கள் , குபா மஸ்ஜித் ஆகியவற்றையும் தரிசிப்பது சுன்னத்தாகும் என்பதை ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன. இவைகளைத் தரிசிப்பதற்கென்றே தனித்து யாத்திரை மேற்கொள்வதே தடுக்கப்பட்டதாகும்.

அவ்வாறே மதீனாவுக்குச் சென்றவர் அங்கிருக்கும் தரிசித்தல் சுன்னத்தாக்கப்படாத இடங்களான கிப்லதைன் பள்ளி பத்ர் யுத்தகளம் போன்றவற்றை பார்வையிட விரும்பினால் அதை இபாதத்-நன்மை பெற்றுத்தரும் செயல் என்று எண்ணாமல் படிப்பினைக்காக, பொது அறிவுக்காக பார்வையிடுவதிலும் தவறி

ல்லை. நன்மை கிடைக்கும் என்ற நோக்கில் தரிசிப்பதே கூடாது.

எனவே சுருங்கக் கூறின் மூன்று புனிதஸ்த்தலங்களைத் தவிர வேறு இடங்களைத் தரிசிக்க யாத்திரை மேற்கொள்வதை நபியவர்கள் தடுத்ததன் அடிப்படையில் அது ஹராமாகும் என்பது அறுதிப் பெரும்பான்மை அறிஞர்களின் நிலைப்பாடாகும். ஷாபி மத்ஹபில் இமாம் ஜுவைனி(றஹ்) போன்றோரும் இதே கருத்தையே கொண்டுள்ளனர். எனினும் சாபி மத்ஹபில் பெருமபான்மை அறிஞர்களின் கருத்துக்கு பல இடங்களில் முரண்பட்டு அபூர்வமான தனிக்கருத்துக்களை முன்வைக்கும் வழக்கம் கொண்ட இமாம் சுப்கி (றஹ்) போன்ற மற்றும் சில அறிஞர்கள் பொதுவாக ஸியாரத் செய்ய அனுமதிக்கப்பட்ட ஹதீஸ்களுக்கு இவை முரணாகின்றது என்று கூறி மூன்று புனிதஸ்தலங்களைத்தவிர வேறு இடங்களுக்கு யாத்திரை செல்லக்கூடாது எனும் புகாரி-முஸ்லிமில் இடம்பெறும் இந்த ஹதீஸ்களை அமுல்ப்படுத்தாது விடுகின்றனர். (இந்த இமாம் ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் தொழுது அவருக்கு நன்மையைச் சேர்ப்பிக்க முடியும் என்றும் ஷாபி அறிஞர்கள் யாரும் சொல்லாத கருத்தை பத்ஹுல் முஈன் எனும் நூலில் சொல்வதும் குறிப்பிடத்தக்கது.) இதனால்தான் சுப்கி இமாம் போன்றோர் மூன்று தலங்களல்லாத இடங்களுக்கு யாத்திரை செல்லக்கூடாது என்று வலியுறுத்தும் இமாம் இப்னு தைமீயா போன்றோரை சியாரத் செய்வதை மறுப்போர் என்று குற்றம் சாட்டி கடுமையாகச் சாடுகின்றனர். இவர்களில் சிலர் வரம்பு மீறி இப்னு தைமியாவை வழிகேடர் வழிகெடுப்பவர் என்றும் தூற்றுகின்றனர். ஆனால் உண்மையில் இப்னுதைமியா (றஹ்) அவர்கள் கப்ர்களை சியாரத் செய்வதை ஒருபோதும் மறுக்கவில்லை. அவர்களின் நூலான மனாஸிகுல் ஹஜ் என்ற நூலில் (3-330) ஹாஜிகள் மஸ்ஜிதுந் நபவியில் தொழ மதீனாவுக்கு சென்றால் நபியவர்கள் ஸஹாபாக்கள் , மற்றும் பகீயில் அடக்கப்பட்டிருப்பவர்களை சியாரத் செய்வது சுன்னத் எனத் தெளி

வாகவே குறிப்பிட்டிருக்கின்றார்கள். சியாரத் பற்றி வந்துள்ள ஸஹீஹான , பலவீனமான மற்றும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்க ளை வேறுபடுத்தியும் காட்டியுள்ளார்கள்.

சுப்கி இமாம் கூறியது தவறு என்று இமாம் அப்துல் ஹாதி அவர்கள் அஸ்ஸாரிம் அல் மன்கிய் பிர்ரத்தி அலச் சுப்கிய் என்ற பெயரில் மறுப்பு நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்கள்.

ஆகவே கப்ரை சியாரத் செய்வதென்பது வேறு அதற்காக யாத்திரை மேற்கொள்வதென்பது வேறு இரண்டும் தனித் தனியான மஸ்அலாக்கள். சியாரத் செய்வது ஆகும் . சியாரத் துக்காக யாத்திரை செய்வது கூடாது. பயணம் செய்யாமல் அங்கு எப்படிச் செல்வது என்பதே இவர்களின் தர்க்க வினா வாகும். அதற்கான பதில் ஒன்று நீங்கள் ஒரு ஊருக்கு தொழி லுக்காகவோ வேறு வேலை நிமிர்த்தமோ செல்கிறீர்கள். அங் கு சியாரத்தும் செய்கின்றீர்கள். இது அனுமதிக்கப்பட்டது. அடு த்தது மஸ்ஜிதுந்நபவியில் தொழும் நோக்கில் மதீனா செல்கி ன்றீர்கள். சென்றபின் தொழுதுவிட்டு அங்குள்ள நபிகளாரின் றவ்ழா பகீ.ஃ.யில் அடங்கப்பட்டோர், உஹது ஸஹாபாக்களை சியாரத் செய்வதும் சுன்னத்தாகும். பத்ர் களத்தை படிப்பினைக் காக பார்வையிடச் செல்பவர் அங்குள்ள பத்ர் ஸஹாபாக்க ளை சியாரத் செய்வதும் சரீஅத்துக்குட்பட்டதாகும். இப்படி விளங்கிக் கொள்வதே சியாரத்தை அனுமதிக்கும் ஹதீஸ்கள் மற்றும் மூன்று புனிதஸ்த்தலங்களை தவிர்ந்த இடங்களுக்கு யாத்திரை செல்வதைத் தடுக்கும் ஹதீஸ்கள் இரண்டையும் ஒருங்கே ஏற்று அமுல்ப்படுத்துவற்கான ஒரே வழியாகும்.

எனவே இம்மூன்று இடங்களில் ஒன்றைத் தரிசிக்கச் செல்லும் வழியில் வேறு ஏதாவது வரலாற்றுச் சிறப்புமிக்க மஸ்ஜித், வேறு மார்க்கத்தில் தடுக்கப்பட்டாத இடங்கள் எதிர்ப்பட்டால் அவற்றைப் பார்வையிவதிலோ சியாரத் செய்வதிலோ தவறி ல்லை. நன்மையை எதிர்பார்க்காது வேறுநோக்கில் ஆகுமான சுற்றுலாக்கள் செய்து ஆகுமாக்கப்பட்ட இடங்களைப் பார்வை

யிடுதும் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதாகும். அவையெல் லாம் நபியவர்களின் அந்தத் தடைக்குள் அடங்காது.

- **மற்றொரு சந்தேகம்.: நபியவர்களின் கப்ர் மஸ் ஜிதுக்குள் இருக்கின்றதே! அக்கப்றை முன்னோக்கி மக்கள் தொழுகின்றார்களே!..**

இக்கேள்வி இன்று மஸ்ஜிதுக்குள் அவ்லியாக்கள் எனப்படுவோ ரின் சியாரங்களை வைத்திருப்போர், அதை ஆதரிப்போரின் மனதிலுள்ள சந்தேகமாகும்.

உண்மை என்வென்றால் நபியவர்கள் மரணித்த போது அன் னார் மஸ்ஜிதுக்கு வெளியேயிருந்த அன்னாரின் மனைவியார் ஆயிஷா(றழி) அவர்களின் வீட்டிலேயே நல்லடக்கம் செய்யப் பட்டார்கள். பொதுவாக யார்மரணித்தாலும் அவர் பொதுமைய வாடியில் அடக்கப்பட வேண்டும் என்பதுதான் சரீஆத்தின் பொதுவிதி. ஆனால் நபிமார்கள் அவர்கள் மரணித்த இடத்தி லேயே அடக்கப்படவேண்டும் என்ற ஹதீஸுக்கமைய ஸஹா பாக்கள் அவ்வாறு செய்தார்கள். பின்னர் அபூபக்ர்,உமர்(றழி) இருவரும் மரணவேளையில் நபிக்குப் பக்கத்தில் அடக்கப்பட வேண்டுமென வஸிய்யத் செய்ததால் அவர்களையும் நபியர்க ளுக்கு அருகிலேயே அடக்க ஸஹாபாக்கள் தீர்மானித்தார்கள். இதுவும் ஸஹாபாக்களின் இஜ்மாஉ ஆகும். எனவே இந்த விதி விலக்கை ஆதாரமாகக் கொண்டு யாரும் பொது மையவாடி யை விடுத்து தனிப்பட்ட இடத்தில் அடக்கம் செய்யப்படுவது சரீஅத்துக்கு மாற்றமானதாகும்.

ஸஹாபாக்களின் காலத்துக்குப் பிற்பாடு உமையாக்களின் ஆட்சிக்காலத்தில் அப்துல் மலிக் பின் மர்வான், மர்வான் அப் துல் மலிக் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் மஸ்ஜிதுந் நபவி புணர்நிர்மாணம் செய்யப்பட்ட போது விஸ்த்தரிப்புப் பணியில் நபியவர்களின் றவ்ழா மஸ்ஜிதுக்குள் உள்வாங்கப்பட வேண் டிய நிலை ஏற்பட்டது. இதனை அறிஞர்கள் மன்னருக்கு சுட்

டிக்காட்டி தடுத்தபோதிலும் அப்போதைய மிகப்பெரிய முப்திகள் வேறுசில காரணங்களுக்காக றவ்ழா மஸ்ஜிதுக்குள் உள்வாங்கப்படுவதே நல்லது என்ற முடிவுக்கு வந்தார்கள். அதாவது நபியவர்களை தரிசிக்க உலகின் பல பாகங்களிலிருந்தும் வரும் முஸ்லிம்களில் பலர் றவ்ழாவில் வைத்து நபியிடத்தில் நேரடியாக உதவிதேடல் பிரார்த்தித்தல் , அதை அலங்கரித்தல் மண்ணை அள்ளி தபர்ருக் பெறல் போன்ற சிர்க்கான, மார்க்க விரோதச்செயல்களைச் செய்யும் வழக்கம் நிலவியதால் நபியவர்களின் கப்ர் அவர்கள் தடுத்த கொண்டாட்ட பூமியாகும் நிலை அன்று காணப்பட்டது. இந்த நிலைமையை கப்ர் மஸ்ஜிதுக்குள் உள்வாங்கப்பட்டால் ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்று அன்றைய உலமாக்கள் அபிப்பிராயப்பட்டார்கள். அதனால் தான் றவ்ழாவை மஸ்ஜிதுக்குள் உள்வாங்கும் மன்னரின் திட்டத்தை அவர்கள் ஆதரித்தார்கள். சரீஅத்தில் இதற்கு இர்திகாபு அகப்புழ் ழளரைன் அல்லது ஸத்துத் தரீஆ என்று சொல்லப்படும். அதாவது ஒரு விடயத்தைச் செய்வதால் ஏற்படும் பாதிப்பை விட அதனால் ஏற்படும் சாதகம் மிக அதிகமாக இருப்பின் தவிர்க்க முடியாத காரணத்தினால் அதை செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு இவ்வாறு சொல்லப்படும். இது பிக்ஹ் சட்டவாக்கத்தின் ஒரு அடிப்படை விதிமுறையாகும்.

அவ்வாறே தற்கால நிலையில் கூட பலலட்சம் மக்கள் ஒரே நேரத்தில் ஒன்றுசேரும் இம்மஸ்ஜிதை விஸ்த்தரிப்பது காலத்தின் கட்டாயமான நிலையில் நபியின் கப்ரை வேறிடத்துக்கு மாற்றுவதும் கூடாது என்ற நிலையில் மஸ்ஜிதுக்குள் இருக்கும் கப்ரை இல்லாமலாக்க வேறு வழியே இல்லை என்ற நிலையில் விதிவிலக்கின அடிப்படயில் நபிகளாரில் றவ்ழாவை அப்படியே வைப்பதைத் தவிர வேறு எந்தத் தீர்வும் யாரிடத்திலும் இல்லை.

எனவே மார்க்க சட்டவாக்கத்தின் பல்வேறு இடங்களில் விதிவி லக்குகள் இருப்பது போல் நபியவர்களின் கப்ர் மஸ்ஜிதுக்குள் உள்வாங்கப்பட்டமையும் தவிர்க்க முடியாத நிலையில் அன் றைய அறிஞர்களால் விதிவிலக்காக எடுக்கப்பட்ட முடிவாகும். அந்நிலையிலும் றவ்ழாவை மஸ்ஜிதை விட்டும் வேறுபடுத்திக் காட்டும் நோக்கில் றவ்ழாவைச் சுற்றி நான்குபக்கமும் நான்கு சுவர்கள் கட்டி எழுப்பப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

- **கப்ரில் விளக்கேற்றல் :**

கப்ரில் விளக்கேற்றல் நபியவர்களினதோ ஸஹாபாக்களினதோ காலத்தில் அறியப்பட்டிராத ஒரு பித்அத்தான செயலாகும். பித் அத்கள் அனைத்தும் வழிகேடாகும். வழிகேடு அனைத்தும் நர கின் பக்கமே இட்டுச்செல்லும் என்பது ஹதீஸாகும்.

ஷாபி மத்ஹபு மேதை இப்னுஹஜர் அல்ஹைதமீ குறிப்பிடுகின் றார்கள்.

கப்ர்-தர்ஹா போன்றவற்றில் விளக்கேற்றி வைப்பதால் வீண் விரயம், பொருளாதார விரயம், நெருப்புவணங்கிகளுக்கு ஒப்பா குதல் போன்றன ஏற்படுவதாலும், சியாரத்துக்கு வரும் எவரு க்கும் அதில் எவ்விதபயனும் இல்லாததாலும் இதுவொரு ஹரா மான- பெரும்பாவங்களில் ஒன்றாகும் என்பது தூரமானதல்ல. இதனால்தான் எங்கள் அஸ்ஹாபுகள்- ஷாபியீன்கள் இது ஹரா மாகும் என்று தெட்டத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். – அஸ்ஸவாஜிர் 1-134 ,

அவ்வாறே கப்ரடியில் விளக்கேற்றுபவர்களின் உள் நோக்கம் அச்செயலால் கப்ராளியின் பரக்கத் சிபாரிசு போன்றவற்றைப் பெறவேண்டுமென்பதேயன்றி வருபவர்களுக்கு இடத்தை வெளி ச்சமாக்க வேண்டுமென்பதல்ல. ( ஏனெனில் மின்சார வசதி யுள்ள இக்காலத்தில் வெளிச்சத்துக்காக தீயினால் விளக்கேற் றுவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்).

மற்றொரு ஹதீஸில் கப்ர்களை ஸியாரத் செய்யும் பெண்க ளையும் அவற்றை தொழுமிடங்களாக்கி விளக்கேற்றுவோரை யும் அல்லாஹ் சபிப்பானாக என்று இடம்பெற்றுள்ளது. அபூ தாவுத். இந்த ஹதீஸின் கருத்து முதவாதிர் தரத்திலுள்ள தாகும்.

- **ஜனாஸாவை வதைத்தல்.**

ஜனாஸாவை எந்த விதத்திலும் வதைத்தல் எலும்புகளை ஒடி த்தல் போன்றன தடுக்கப்பட்ட ஹராமான விடயங்களாகும்.

நபியவர்கள் கூறுகின்றார்கள்..

ஒரு மு.்.மினான ஜனாஸாவின் எலும்பை உடைத்தல் அவர் உயிரோடிருக்கும் நிலையில் எலும்பை உடைப்பதைப் போன்ற தாகும். –அபூதாவுத்.

இந்த ஹதீஸிலிருந்து தவிர்க்க முடியாத இக்கட்டான நிலைக ளிலேயன்றி கப்ரைத் தோண்டி ஜனாஸாவை வெளியாக்குதல் ஹராமாகும். ஏனெனில் இதனால் மையித்தின் எலும்புகள் ஒடிந்து காயங்கள் ஏற்படும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

இமாம் நவவி(றஹ்) குறிப்பிடுகின்றார்கள்..

மார்க்க ரீதியாக அனுமதிக்கப்பட்ட காரணங்களுக்காகவன்றி அடக்கம் செய்யப்பட்ட மையித்தைத் தோண்டி வெளியே எடு ப்பது ஷாபிமத்ஹப் அறிஞர்களின் ஏகோபித்தமுடிவின்படி ஹரா மாகும். மார்க்கம் அனுமதித்த காரணங்களாயிருப்பின் அவ்வா று செய்யலாம். அதன்படி அடக்கப்பட்ட மையித்து உக்கி மண் ணாகி விட்டது உறுதிப்படுத்தப்பட்டால் அவ்விடத்தில் வேறு மையித்தை அடக்கவோ அவ்விடத்தில் கட்டிடம் அமைக்க, மரங்களை நடும் நோக்கில் தோண்டவோ வேறு பயனுள்ள விடயங்களுக்காக அவ்விடத்தைப் பயன்படுத்தவோ முடியும். இதுவும் ஷாபி மத்ஹப் அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும்.

மையித்தின் எப்பாகமும் அவ்விடத்தில் இல்லையென்பது உறு தியாகுவது இதற்குரிய நிபந்தனையாகும். அது மண்ணியல் துறைசார் அறிஞர்களால் உறுதிப்படுத்தப்படும். ஒரு மையித் உக்கி மண்ணாவதற்கான காலஅளவு நாடுகளுக்கும் மண் ணின் தன்மைகளுக்குமேற்ப வேறுபடும். – அல் மஜ்மூ. 5-303.

இதுதவிர மக்பராவை ஆகிகரமித்து அத்தியாவசியமற்ற வகை யில் வர்த்தக தேவை ஏனைய தேவைகளுக்காக கட்டிட ங்களை அமைத்தல் வீதி விஸ்தரிப்புக்காக கப்ரிதானங்களை எடுத்தல் போன்றன மார்க்கத்தில் தடுக்கப்பட்ட ஹராமான காரி யமும் கப்ராளிகளின் உரிமைகளில் கைவைக்கும் அத்துமீறல் களுமாகும். அதிகார தரப்பினர் சிலர் இவ்விடயத்தில் அலட் சியமாக இருப்பது வருந்தத்தக்க விடயமாகும். தமது கட்டிட அபிவிருத்தி தேவைகளுக்காக பொது மக்பராக்களை , அதில் சிலபகுதிகளை அபகரிப்பது முற்றிலும் ஹராமாகும். இவை ஒருபோதும் அத்தியாவசிய விடயத்தில் அடங்காது. இவ் விடயத்தில் அவர்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ள வேண் டும்.

இதிலும் ஆச்சரியமாக விடயம் என்னவென்றால் சில நகர ங்களில் முக்கிய புள்ளிகள் சிலருக்கு நிவைவுத்தூபி அமை த்து மாலை மரியாதை செய்யப்பட்டிருக்கும். நகர அபிவிருத் திக்காக அத்தூபியை தகர்க்க வேண்டி ஏற்பட்டால் அதைப் பாதுகாக்க அவ்வபிவிருத்தித் திட்டத்தையே மாற்றத் துணியும் அதிகாரிகள் அதே அபிவிருத்தி கப்ரிஸ்தான் ஊடாக செய்யப் பட வேண்டி ஏற்படின் கப்ருக்கு மேல் வீதியமைத்தல் கட்டிடம் அமைத்தல் போன்றவற்றை எவ்வித தயக்கமுமின்றி உலமா க்களின் ஆலோசனைகளை உதறித்தள்ளி விட்டு தமது திட்ட த்தை செயற்படுத்த தயாராகி விடுகின்றனர். அவர்களின் பார் வையில் வெறும் கல்லாலான தூபிக்கு இருக்கும் மரியாதை கூட கப்ரிஸ்தானுக்கு இல்லை. இத்தனைக்கும் அவர்களுக்கும் மரணமுண்டு. அவர்களும் அங்கேதான் அடக்கப்பட வேண்டி

வரும் என்பதையும் மறந்து செயற்படுகின்றனர். மற்ற முஸ்லிமின் கப்ரை தோண்டிவிட்டு அதில் கட்டிடம் அமைத்தவருக்கு அவரது கப்ரையும் தோண்டியெறியப்படும் நிலையை அல்லாஹ் ஏற்படுத்தி விடலாமல்லவா?

## ▪ முஸ்லிமல்லாதவர்களின் கப்ர்களை அபிவிருத்தி போன்ற தேவைக்காக அகற்றலாமா? அதன்மேல் கட்டிடம் கட்டலாமா?

நபி(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு முதன்முதலாக வந்தபோது அங்கு பனூ அம்ர் கோத்திரத்தாரிடத்தில் பதினான்கு நாட்கள் தங்கினர்கள். பின்பு பனூநஜ்ஜார் கூட்டத்தாருக்கு தகவல்அனுப்பி அவர்கள் வந்ததும் அபூஅய்யூப் அன்சாரியின் வீட்டுக்கு முன் இருந்த திடலுக்கு வந்தார்கள். நபியவர்கள் தொழுகை நேரம் வந்துவிட்டால் தான் இருக்குமிடத்திலேயே தொழுது விடுவார்கள். எனவே அங்கிருந்த ஆட்டுத்தொழுவத்திலேயே தொழுதார்கள். பின் அவ்விடத்தை மஸ்ஜிதுந்நபவி அமையப் பெறும் இடமாகத் தெரிவுசெய்து பனூ நஜ்ஜார் கூட்டத்தாரிடம் இவ்விடத்தை எனக்கு விலைக்குத் தாருங்கள் என்று விலை பேசினார்கள். அதற்கவர்கள் நாம் அதற்குரிய கூலியை அல்லாஹ்விடம்தான் எதிர்பார்க்கின்றோம் என்று கூறி எவ்வித பிரதி பலனையும் கோராது வக்புச்செய்து விட்டார்கள். அவ்விடத்தில் முஷ்ரிகீன்களின் கப்ர்களும் பாழடைந்த சில குடியிருப்புக்களும் பேரீச்சை மரங்களும் இருந்தன. மரங்களைத் தறிந்து இடிபாடுகளை தகர்த்து அப்புறப்படுத்தி விட்டு கப்ர்களை தோண்டி எச்சங்களை அப்புறப்படுத்துமாறு கட்டளையிட்டார்கள். புகாரி, முஸ்லிம் .

இந்த ஹதீஸின் அடிப்படையில் முஸ்லிமல்லாத ஒருவர் அடக்கப்பட்டிருக்கும் இடத்தை அவசிய தேவையின் நிமிர்த்தம் தோண்டியெடுத்து சடலத்தை , அல்லது எச்சங்களை வேறு ஓரிடத்தில் புதைப்பதில் தவறில்லை என்பது தெளிவாகின்றது.

# (19)

# ஜனாஸா விடயத்திலுள்ள பித்அத்துகள்.

## ஒரு செயலை பித்அத்தாக கணிப்பதற்கான விதிமுறைகள்.

குதைபா (றழி) அறிவிக்கின்றார்கள்..

மக்கள் நபியவர்களிடத்தில் நன்மை தரும் விடயங்கள் பற்றியே கேட்கும் வளக்கமுடையவர்களாயிருந்தனர். ஆனால் நானோ தீமையேற்படுத்தும் விடயங்களைப் பற்றியே கேட்டுத் தெளிவுபெறுவேன். காரணம் யாதெனில் அதை நான் ஒரு போதும் செய்துவிடக்கூடாது என்பதற்காக.. புகாரி.

இந்த ஹதீஸ் மார்க்கத்தில் இல்லாதவற்றை மார்க்கம் என்ற பெயரில் செய்யும் பித்அத் எனப்படும் நூதன அனுஷ்டானங்களை எச்சரிக்கும் நபிமொழியாகும். பித்அத் என்பது மார்க்கம் - இபாதத் எனும் பெயரில்,நன்மை கிடைக்கும் என்ற எண்ணத்தில் எவ்வித ஆதாரமும் இல்லாமல் செய்யப்படும் விடயங்களையே குறிக்கும் .

ஜனாஸா நல்லடக்க விடயத்தில் மார்க்கம் சாராத உலக விடயங்களில் நபியவர்களின் காலத்தில் இருந்திருக்காத ஒன்றை இக்காலத்தில் செய்வதற்கும் பித்அத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

இப்பகுதியில் மரண வீட்டில் மரணித்த தினத்திலும் அதனைத் தொடர்ந்து வரும் நாட்களிலும் உறவினர் சுற்றத்தோரால் மார்க்கத்தின் பேரால் அரங்கேற்றபடும் பித்அத்களைப் பற்றியே தெளிவுபடுத்தப்படுகின்றது.

# ஒரு செயல் பித்அத்தாகக் கணிக்கப்படும் சந்தர்ப்பங்களும் அதற்கான அடிப்படை விதிகளும்.

ஒரு இபாதத் எனும் நம்பிக்கையில் செய்யப்படும் செயல் எந்தெந்த சந்தர்ப்பங்களில் பித்அத்தாகக் கருதப்படும் என்ற அடிப்படை விதிகளைப் பார்ப்போம்.

- **அறிஞர்களால் இஜ்திஹாத்-சுய ஆய்வின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட குர்ஆன் ஹதீஸுக்கு நேரடியாக முரண்படும் திக்ர்-துஆ வாசகங்கள் சொல்,செயல் நம்பிக்கை சார்ந்த கருத்துக்கள். ஆதாரமின்றி இபாதத் எனும் எண்ணத்தில் உருவாக்கப்பட்ட இபாதத்கள் அனைத்தும் பித்அத்தாகக் கருதப்படும்.**

( இதை உருவாக்கிய அறிஞர் சிலவேளை தனது இஜ்திஹாத் தவறாயிருப்பினும் முயற்சித்ததற்காக கூலி கொடுக்கப்படலாம். ஆதலால் அவரை பித்அத்வாதியென ஆராயாது சொல்லிவிட முடியாது.)

உதாரணமாக இலாஹி லஸ்து லில் பிர்தவ்ஸி அஹ்லா-வலா அக்வா அலா நாரில் ஜிஹீமி என்ற திக்ர் பைத்தை ஓதுவது போல.. நபியவர்கள் நீங்கள் அல்லாஹ்விடம் ஜன்னத்துல் பிர்தவ்ஸ் சுவனத்தைக் கேளுங்கள் என்று சொல்லியிருக்க இந்த திக்ரில் நான் பிர்தவ்ஸ் சுவனத்துக்குத் தகுதியற்றவன் என்று கூறப்படுகின்றது. அவ்வாறே 6666 தடவை ஸலாத்துந் நாரிய்யா எனும் ஸலவாத்தை ஓதினால் நினைத்தது கைகூடும் என நம்பிச் செய்தல், மௌலூது பாடல்களை அருள்வேண்டிப் பாடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

செயல் சார்ந்த பித்அத்துக்கு உதாரணம் பெருநாள் தொழு கைக்கு முன் குத்பாவை ஏற்பாடு செய்வதைப்போல.. ஐங்கால த் தொழுகைகளுக்குப் பின் கூட்டாக துஆக் கேட்பதைப் போல.. காரணம் கூட்டு துஆவானது சிலரால் இஜ்திஹாதின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் நபியவர்கள் அதனை ஒருபோதும் தொழுகைக்குப் பின் செய்யாததால் அது நபிவழிக்கு முரண்படுகின்றது.

நம்பிக்கை சார்ந்த பித்அத்துக்கு உதாரணமாக கப்ரில் உள் ளோர் நாம் பேசுவதைக் கேட்கின்றனர், நாம் என்னபாவம்செய் திருந்தாலும் அவ்லியாக்களால் எமக்கு மன்னிப்பைப் பெற்றுத் தந்து சுவர்க்கம் அனுப்ப முடியும் என்று சிலர் நம்புவதைப் போல..

- **இபாதத் எனும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நபியவர்கள் தெளிவாகத் தடுத்திருக்கும் ஒரு விடயம் பித்அத்தாகும்.**

நபியவர்களின் காலத்தில் ஒருவர் கொதிக்கும் வெயிலில் நின்றுகொண்டிருக்க நேர்ச்சை செய்து அவ்வாறு செய்தபோது நபியவர்கள் அதைத் தடுத்து இதனால் அல்லாஹ்வுக்கு எவ் வித தேவையுமில்லை என எச்சரித்தது போல் சிலர் தன்னை திக்ர் எனும் பெயரில் வதைத்தல், முள்ளில் நிற்றல், உறங் காது விழித்திருத்தல், தலைகீழாக நிற்றல் போன்றவற்றை நன்மை கிடைக்குமென்ற நோக்கத்தில் செய்தல் இவ்வகை பித்அத்திற்குள் அடங்கும்.

- **குர்ஆன் ஹதீஸ் ஆதாரத்துடனேயன்றி ஏற்றுக்கொள்ள முடியாத மறைவான விடயங்கள் கப்ரில் நடப்பவை, மறுமையில் நடப்பவை போன்ற விடயங்களை வலுவான ஆதாரமின்றி நம்புதல் பிரச்சாரம் செய்தல் பித்அத்தாகும்.**

ஸஹாபாக்கள் கூறியதாக நிரூபனமான செய்திகளைத் தவிர. ஏனெனில் ஸஹாபாக்கள் நபியிடம் செவியேற்காமல் சொல்லி யிருக்க முடியாது என்பது சட்ட விதியாகும்.
உதாரணமாக அதைச் செய்தால் கப்ரில் ஒளிகிடைக்கும், இதைச் செய்தால் கேள்விகணக்கு இலேசாகும் என்றெல்லாம்

பெரியார்கள் கூறுவதாக வரும் செய்திகள். இவற்றை நம்பி அவ்வெண்ணத்தில் அமல்ச்செய்தல் பித்அத்தாகும்.

- **ஆதாரங்களின் மூலம் நிரூபிக்கப்பட்ட இபாதத்களுடன் துஆ திர்களுடன் பிற்காலத்தில் சிலரால் இணைக்கப்பட்ட பிற்சேர்க்கைகளும் பித்அத்துக்களாகக் கருதப்படும்.**

உதாரணமாக அதானுக்கு முன் ஸலவாத்து திக்ர்களைச் சொல்லல். தொழுகைக்குப்பின் ஸலவாத்து மற்றும் சில திக்ர் களை சத்தமிட்டு சொல்லல்,( குனூத்தில் வபாரிக் லீ மினல் கைரி பீமா அ்.மைத் - இதில் மினல் கைரி ஹதீஸில் வரவில் லை.) போன்றவற்றைக் குறிப்பிடலாம். கப்ர்களை சியாரத் செய்யும்போது அங்கு சந்தணக்கூடேற்றல், கப்ரை அலங்கரித் தல், துணியால் மூடுதல், அங்கு விளக்கேற்றல், ஊதுபத்தி கொழுத்தல், கற்களாலால் கட்டுதல் போன்றனவும் பித்அத்தாகும்.

- **பிற்கால அறிஞர்கள் சிலர் குர்ஆன் ஹதீஸ் ஆதார மின்றி அல்லது அவ்வாதாரங்களைத் தவறாகப் புரிந்ததால் சுன்னத்து – முஸ்தஹப்- விரும்பத்தக்கது என்று சுட்டிக்காட்டிய சில விடயங்களை அதன் உண்மை நிலை தெரிந்தும் பின்பற்றல் பித்அத்தாகக் கருதப்படும்.**

உதாரணமாக ஜனாஸாவின் கண்ணில் கறுப்புத்துணித் துண் டை வைத்தல், கப்ரில் மலர்களை நட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- **மார்க்கம் பொதுவாக ஒரு இபாதத்துக்கு வழங்கிய அனுமதியை வைத்துக்கொண்டு அவ்விபாதத்தை குறிப்பிட்ட ஒரு முறையைக் கொண்டோ, காலம்,நேரம், இடத்தைக் கொண்டோ மட்டுப்படுத்துவதும் பித்அத்தில் அடங்கும்.**

உதாரணமாக றமழான் 27ல் விசேட தவ்பா நிகழ்ச்சி,ஆஸூரா தினத்தில் யாசீன்,பெருநாளன்று திக்ர் மஜ்லிஸ் நடத்தல், ஐங் காலத் தொழுகைக்குப்பின் கூட்டுதுஆ, பயணத்தின் முன்அதா

ன் சொல்லல். அதானுக்கு முன் ஸலவாத் , போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- **துறைசார் அறிஞர்களால் பலவீனமான அல்லது இட்டுக்கட்டப்பட்ட செய்தியென நிரூபிக்கப்பட்ட ஹதீஸை வைத்து அமல்செய்வதும் பித்அத்தாகும்.**

உதாரணமாக அதானில் நபியின் பெயர் கேட்டதும் பெருவிர ல்களால் கண்களை முத்தமிடல், மரணப்படுக்கையில் இருப்பவர் முன்னிலையில் யாசீன் ஓதல், அடக்கிவிட்டு கப்ரடியில் தல்கீன் ஓதுதல் போன்றவை.

மேற்கூறப்பட்ட விடயங்களில் எதையாவது ஒருவர் அது பித் அத் என்று தெரியாமல் செய்துவிட்டால் , அல்லது அது பற் றிய ஆதாரத்தை சரியானது- ஸஹீஹானது என்ற எண்ணத்தி லேயே அவர்செய்து அவ்வாறு நம்பிய நிலையிலேயே மரணி த்திருந்தால், அல்லது அது ஆகுமென ஒரு அறிஞர் கூறிய கருத்தின் அடிப்படையில் அதை செய்து அது கூடாது-பித்அத் என்ற செய்தி அவருக்குக் கிடைககாத நிலையிலேயே மரணி த்திருந்தால் அவரை அல்லாஹ் மன்னிப்பான் என்று எதிர்பார் க்கப்படும். அவருக்கு எப்போது தான் செய்து வந்தது பித்அத் எனத் தெரியவருகின்றதோ- தகவல் கிக்கின்றதோ அப்போது அவர் இதுபற்றி ஆராந்து- தெரிந்தவர்களிடம் கேட்டறிந்து தவறென அறியும்போது அதிலிருந்து விலகி தவ்பாச் செய்து மீழ வேண்டும். தெரிந்த பின்னும் வீம்புடன் பிடிவாதமாக இருப்பவர் பித்அத்வாதியாவார். பித்அத் விடயத்தில் வந்த எச்சரிக்கைகள் அனைத்தும் அவர் விடயத்தில் செல்லுபடி யாகும்.

இவைகளே ஒரு செயல் பித்அத்தாகக் கணிக்கப்படுவதற்குரிய அடிப்படை விதிமுறைகளாகும்.

# ஜனாஸா வீட்டில் இடம்பெறும் பித்அத்துக்கள்.

## ஒரு மையித் மரணிக்க முன் அரங்கேற்றப்படும் பித்அத்துக்கள்.

▪ ஒருவரின் சக்ராத் நேரத்தில் சைத்தான் அவரின் பெற்றோரின் உருவத்தில் யூத- கிருஸ்த்தவ குருக்களின் உடையணிந்து வந்து இஸ்லாத்தை விட்டு மதம் மாறி விடுமாறு அவரைப் பணிப்பதாக நம்பப்படும் செய்தி பொய்யானதாகும் . இதைநம்புவது பித்அத்தாகும். இமாம் இப்னு ஹஜர் ஹைதமி இவ்வாறானசெய்தி எந்த ஹதீஸ்நூல்களிலும் இடம்பெற வில்லை என்று கூறுகின்றார்கள். பார்க்க: பாதாவா ஹதீதிய்யா,

▪ குர்ஆனை மரணிக்க இருப்பவரின் தலையருகில் வைத்தால் சக்ராத் வேதனை குறைக்கப்படுமென நம்புதல்

▪ மரணிக்க இருப்பவரின் அருகில் அமர்ந்து சூரா யாஸீன் ஓதுதல்.

▪ மரணவேளையில் மையித்தை கிப்லாவை முன்னோக்கி வைத்தல். இவ்விரு விடயத்தையும் குறிப்பிட்டு வந்துள்ள ஹதீஸ்கள் மிகப் பலவீனமாகதாகும்.

▪

## உயிர் பிரிந்த பின்னர் இடம்பெறும் பித்அத்துக்கள்

▪ மையித்தின் வீட்டிலுள்ள ஹைழு நிபாஸ் பெண்களை அங்கிருந்து வெளியேற்றல்.

▪ மையித்தின் உயிர் பிரியும் நேரத்தில் அங்கு கூட இருந்தவர்கள் ஏழு நாட்களுக்குத் தொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்தல். மையித்தின் உயிர் ஏழு நாட்களுக்கு அவ்விடத்தில் சுற்றித்திரிவதால் அவர்களைத் தொந்தரவு செய்யுமென்ற மூட

நம்பிக்கையில் இவ்வாறு செய்வது சில இடங்களில் வழக்கமாயுள்ளது.

- உயிர் பிரிந்ததிலிருந்து குளிப்பாட்ட எடுத்துச்செல்லப்படும் வரை அல்லது அடக்கப்படும் வரை அல்லது அடக்கிய பின்னரும் மையித்தை வைத்துக்கொண்டு கூலிக்கு ஆட்களை அழைத்து குர்ஆன் ஓதுவித்தல். சில இடங்களில் இது இருட்டுக்கத்தம், மூன்றாம் நாள் கத்தம், நாற்பதாம் கத்தம், ஆண்டுக்கத்தம் எனும் பெயரில் கூலிக்கு குர்ஆன் ஓதி சம்பாதிக்கும் கூட்டத்தினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது. சில இடங்களில் இவ்வாறு செய்யாவிட்டால் கப்ரில் மையித்துக்கு சிரமமேற்படுமென்று அப்பாவி உறவினர்களை இக்கூலிக் கூட்டம் பயங்காட்டியும் இக்கைங்கரியங்கள் செய்யப்படுகின்றன. ஓவ்வொருவருக்கும் தாம் செய்த அமல்களும் தன் பிள்ளைகளின் அமல்களின் பங்குகளும் , ஏனையோரின் தூய துஆக்களுமே மையித்துக்குப் பயன்தரும் என்பதை பாமர முஸ்லிம்கள் தெரிந்து வைத்திருப்பது அவசியம்.

மையித்துக்காக ஈஸால் தவாப்- அதாவது குர்ஆன் ஓதி நன்மையை சேர்ப்பிக்க முடியும் என்றுவாதிடுவோர் தமது வாதப்படி செய்வதாயினும் மையித் வீட்டுக்குச் சென்று குர்ஆன் ஓதாமல் தாமிருக்கும் இடத்திலிருந்தே ஓதலாம் தானே! அவ்வாறு செய்வார்களா?.. அல்லது ஓதிவிட்டு விருந்தோ கூலியோ பெறாமல் வருவார்களா?.. குர்ஆன் ஈஸால் தவாப் ஆகுமெனக் கூறும் அறிஞர்கள் கூட கூலி வாங்காமல் மனத்தூய்மையுடன் செய்ய வேண்டியது அவசியம்என நிபந்தனையிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஷாபிமத்ஹபின் பிரபலமான சொல்லின்படி ஈஸால் தவாப் கூடாது என ஷாபி மத்ஹபு அறிஞர் இமாம் நவவி அவர்களே குறிப்பிடுகின்றார்கள். பார்க்க: ம.்.மு.். ஷரஹுல் முஹத்தப்.

- மையித்தை அடக்கிவிட்டு வரும்வரை வீட்டிலுள்ளோர் எதுவும் உண்ணாமல் குடிக்காமல் இருக்கவேண்டும் என்பதும் அழுது கொண்டிருக்க வேண்டுமென்பதும் அழுவதற்காக கூலிக்கு ஆட்களை அமர்த்துவதும் மூடநம்பிக்கையும் பித்அத்துமாகும்.

- சாப்பிடும்போது தும்மினால் மரணித்த யாரோ இவரைப்பற்றி பேசுகிறார்கள் என்று நம்புவது மூடநம்பிக்கையாகும்.
- இறைச்சி மீன் போன்ற மாமிச உணவுகளையோ, மணங்குணமாக சமைத்த உணவுகளையோ மையித் வீட்டில் சாப்பிடக்கூடாது என்று நம்புவதும் பித்அத்தாகும்.
- மரணித்தவர் பயன்படுத்திய உடைகள் ஏனைய பொருட்களை பாவிக்காது அழித்து விட்டால், அல்லது மூன்று நாட்களுக்கு அவற்றைத் தொடாதிருந்தால் கப்ரு வேதனை இலேசாக்கப்படும் என்று நம்புவதும் பித்அத்தாகும்.
- வெள்ளிக்கிழமைகளில் கப்ராளிகளுக்கு வேதனை செய்யப்படுவதில்லை என நம்புவதும் பித்அத்தாகும்.
- கப்ராளிகளுக்காக பாத்திஹா ஓதுவதும் பித்அத்தாகும்.
- மரணச் செய்தியை தேவையற்ற அளவுக்கு ஆடம்பரமாக அறிவிப்புச் செய்வதும் பித்அத்தாகும். அதாவது மரணச் செய்தி மக்களைச் சென்றடைவதற்குரிய எளிய முறையில் அறிவிப்புச் செய்ய அனுமதியுண்டு. அதுதவிர மரண அஞ்சலி பெனர்கட்டுதல் ,பந்தல் போடல் பறையறிவித்தல் போன்றன தடுக்கப்பட்ட பித்அத்துக்களாகும்.

## கபனிடும் வேனையில் நடக்கும் பித்அத்துக்கள்.

- மையித்தை அடக்கிவிட்டு அவ்விடத்தில் கூசாவில் தண்ணீர் நிறைத்து வைத்தல்.
- வீட்டில் மரணித்த இடத்தில் மூன்று , ஏழு தினங்களுக்கு மாலைமுதல் காலை வரை அணையாத விளக்கேற்றி வைத்தல்.
- குளிப்பாட்டும் நேரத்தில் ஒவ்வொரு உறுப்புக்களையும் கழுவும் நேரத்தில் தனித்தனி திக்ர்களை ஓதுதல்.
- குளிப்பாட்ட ஆரம்பிக்கையில் சில திக்ர்களை சத்தமாகச் சொல்லுதல்.
- பெண் மையித்தின் கூந்தலை இரு மார்புகளுக்கிடையில் வைத்தல்.

# கபன் செய்யும்போதும் ஜனாஸாவைக் எடுத்துச் செல்லும் போதும் நிகழும் பித்அத்துக்கள்.

- மையித்தை அருகிலுள்ள மையவாடியை விடுத்து தூர இட த்துக்கு எடுத்துச் செல்லல், அவ்லியாக்கள் ஸாலிஹீன்களு க்கு அருகில் அவர்களின் பரக்கத்தைப் பெறும் நோக்கில் அடக்கம் செய்தல்.
- கபனில் மையித்தின் பெயர், ஸஹாதாக் கலிமா போன்றவற் றை எழுதுவதும் வலிமார்கள் என நம்பப்படுவோரின் கப்ரடி மண்ணை வைத்தலும் பித்அத்தாகும்.
- அவ்வாறே க.ஃ.பாவின் திரைச்சீலைத் துண்டை மையித்தின் கண்களில் வைத்தல், மக்கா மதீனத்தை மண்ணை வைத் தல், அல்லது மையித்தின் நகம் முடிகளில் சிலதை மக்கா-மதீனாவில் புதைத்தல் போன்றனவும் மூடநம்பிக்கையும் பித் அத்துமாகும்.
- ஜனாஸாவை மலர்களால் அலங்கரித்தல், முன்னால் கொடி யேந்தி எடுத்துச்செல்லல், செல்லும் வேளை மலர்தூவல், பன்னீர் தெளித்தல், ஜனாஸாவை விசேட பேழை , கண் ணாடிப்பெட்டி போன்றவற்றில் வைத்தல், பைத்து-துக்க கீத ங்களைப் பாடி, அல்லது ஸஹாதத் கலிமா முழக்கத்துடன் எடுத்துச் செல்வதெல்லாம் கண்டிக்கத்தக்க பித்அத்துக்களா கும். ஜனாஸாவை சத்தமின்றி அமைதியாக மௌனமாக எடுத்துச் செல்வதே சுன்னத்தாகும்.
- ஜனாஸா வீட்டுப்படியைத் தாண்டியதும் அவ்விடத்தில் ஆ டொண்றை அறுத்து குர்பானி செய்வது எகிப்தியர்கள் சில ரிடத்தில் உள்ள பித்அத்தாகும். இவ்வாறு செய்யாதவிடத்து மற்றொரு மையித்து அக்குடும்பத்தில் நிகழும் என்பது இவ ர்களின் மூடநம்பிக்கையாகும்.
- மையித்தை அடக்கி விட்டு அவ்விடத்தில் ரொட்டி கறி பங் கிடல், ஸதக்கா எனும் பெயரில் பணம் விநியோகித்தல் போன்றனவும் பித்அத்தாகும்.
- ஸாலிஹான ஜனாஸாவாக இருப்பின் சுமந்து செல்லும் போது எடைகுறைவாக இருக்கும் என நம்புவதும், ஜனா ஸா கனத்தால் பாவச்சுமை காரணமாகவே கனக்கின்றது எனறு நம்புவதும் பித்அத்தாகும்.

- ஜனாஸாவை சுமந்துகொண்டு நாற்பது எட்டுக்கள் நட ந்தால் நாற்பது பெரும்பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நம்புதல். இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும்.
- ஜனாஸாவை அடக்கிவிட்டு வந்து அன்றிரவு இருட்டுக் கத் தம் எனும் பெயரில் திக்ர் கூட்டுப்பிரார்த்தனை, குர்ஆன் பாராயணம். ,புர்தா பாடல், தலாயிலுல் கைராத், அஸ்மாஉல் ஹஸ்னா போன்றவற்றை வாசித்தல் பித்அத்தாகும்.
- சுமந்து செல்கையில் ஹாதா மா வஅதர்ரஹ்மானு வஸ தகல் முர்ஸலூன் கூலூ இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் அஸ்ஸஹாதா.. என்று ஓதிக்கொண்டு செல்லுதல் பித்அத்தாகும்.
- ஜனாஸாவைச் சுமந்து சென்று அவ்லியாக்கள் எனப்படு வோரின் கல்லறையை ஏழு தடவைகள் தவாப் செய்து பாத்திஹா ஓதிவிட்டு பின் அடக்கம் செய்ய எடுத்துச் செல்வது பித்அத்தும் சிர்க்குமாகும்.
- ஒரு சிலர் ஜனாஸாவை க.்.பாவைச் சுற்றி ஏழுமுறை தவாப் செய்துவிட்டு அடக்க எடுத்துச் செல்வதும் பித்அத் தேயாகும்.
- குறிப்பாக பிரபலமானவர்கள் சமூக சமய சேவையாற்றிய வர்களின் ஜனாஸாக்களை மஸ்ஜிதுக்குள் கொண்டுவந்து வைத்துவிட்டு இரங்கலுரை நிகழ்ச்சி நடத்தலும் பித்அத் தாகும். நபியவர்கள் ஸஹாபாக்களின் காலத்தில் எத்தனை யோ முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் மரணித்திருந்தும் ஜனாஸாவை பள்ளிக்குள் வைத்துக்கொண்டு இவ்வாறு இரங்கலுரை செய்யப்படவில்லை. ஜனாஸா பள்ளிக்கு கொண்டுவரப்பட்ட பின் தொழுவிக்காமல் தாமதிக்கப்படும் ஒவ்வொரு நிமிடமும் அதற்குக் கிடைக்கும் பாக்கியங்களை தடுத்ததாகவே அமையும் அவ்வாறு செய்யக்கூடாதென நபியவர்கள் தடுத்துள்ளார்கள். (ஒரு நன்றிக்கடனுக்காக அல்லது சேவை பாராட்டல், மற்றோரையும் ஆர்வமூட்டும் நோக்கிலோ, குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்லும் நோக்கிலோ ஜனாஸா மஸ்ஜிதுக்கு கொண்டுவரப்படுவதற்கு முன்போ அல்லது வேறு இடமொன்றில் நல்லடக்கத்தின் பின் தனிப்பட ரீதியிலோ இவ்வாறு செய்வதில் தவறில்லை என்று கருதுகின்றேன் அல்லாஹ் அ.்.லம்.)

- ஜனாஸாவை தொழுவித்த பின் வாகனத்தில் வைத்து மக்பராவுக்கு எடுத்துச் செல்லுதலும் நவீனகால பித்அத்தாகும். தோள்களில் வைத்து சுமந்து செல்வதே நபிவழியும் நன்மை பெற்றுத்தரும் விடயமுமாகும். சுமந்து செல்ல முடியாதளவு மிகத்தொலைவில் மக்பரா இருப்பின் மக்பராவுக்கு அருகிலுள்ள மஸ்ஜித்வரைக்கும் வாகனத்தில் எடுத்துச்சென்று அங்கு தொழுவித்து அங்கிருந்து சுமந்து சென்று அடக்கம் செய்வது பொருத்தமானதாகும்.
- அரச உயர் அதிகாரிகளுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அடக்குவதற்கு முன் பீரங்கி வேட்டுக்களை தீர்த்தலும், துப்பாக்கிப் பிரயோகத்தை மரியாதை செலுத்தும் நோக்கில் செய்வதும பித்அத்தாகும்.

# ஜனாஸாத் தொழுகை நடத்தும் போது இடம்பெறும் பித்அத்துக்கள்.

- சில மஸ்ஜித்களில் தினமும் அன்று உலகெங்கும் மறைந்த தெரிந்த-தெரியாத அனைவருக்காகவும் ம.ஃ.ரிபின் பின் காயிபான-மறைவான ஜனாஸாத் தொழுகை தொழுவிக்கப்படுகின்றது. இது நூதன பித்அத்தாகும். ஒருவருக்கு ஜனாஸாத் தொழுகை தொழுவிக்கப்பட்டது தெரிந்தும் அவருக்காக ஜனாஸாத் தொழுகை நடத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

- ஜனாஸாத் தொழுகையில் பாத்திஹாவுக்கு முன் வஜ்ஜஹ்து ஓதுவதும், பாத்திஹாவுக்குப் பின் வேறு சூரத் ஓதுவதும் நபிவழிக்கு மாற்றான பித்அத்தாகும்.

- மரணித்தவரின் உறவினர்களைத் திருப்திப் படுத்துவதற்காக இமாம் தொழுவித்த பின் இந்த ஜனாஸாவுக்கு நட்சாட்சி சொல்வோர் யாரெனக் கேட்க அங்குள்ளோர் நாம் சாட்சி சொல்கின்றோம் எனச் சொல்வதும் சில இடங்களில் இடம்பெறும் பித்அத்தாகும்

# நல்லடக்க வேளையில் இடம்பெறும் பித்அத்துக்கள்.

- மையவாடியில் வைத்து மாடொன்றை அறுத்து அதன் இறைச்சியை அடக்க நிகழ்வில் கலந்து கொண்டோருக்குப் பங்கிடுதல் சில இடங்களில் இடம்பெறும் பித்அத்தாகும். இன்னும் இப்பிராணியின் இரத்தத்தை அக்கப்ரில் தெளிக்கும் கெட்ட வழக்கத்தையும் சிலர் கொண்டுள்ளனர்.
- மையித்தை கப்ருக்குள் வைக்கும்போது அதான் சொல்வதும் பித்அத்தாகும்.
- அடக்கியபின் மூன்று பிடி மண் போடுவது சுன்னத்தாகும். ஆனால் அதன்போது இன்னா லில்லாஹி சொல்வது, அல்லது மின்ஹா கலக்னாகும் ஆயத்தை ஓதுவது பித்அத்தாகும். அதேபோல் சிலர் ஏழுதடவைகள் மண் போடுவதுடன் ஒவ்வொன்றின் போதும் தனித்தனி துஆக்களை ஓதுவர். இதுவும் பித்அத்தாகும்.

- கப்ரில் பன்னீர் தெளித்தல், தண்ணீரை தலைப்பக்கமாக ஊற்ற ஆரம்பித்து கால்வரை சென்று பின் நடுவில் முடித்தல், ஊதுபத்தி கொளுத்தி வைத்தல் பித்அத்தாகும்.

- கப்ரின் மேல் செடிகளை பூக்கன்றுகளை நடுவதும் பித்அத்தாகும்.

- தல்கீன் எனும் பெயரில் அறியப்படும்- மலக்குகளின் கேள்விகளுக்கு பதிலளித்தல் எப்படி என்று தெளிவுபடுத்தும் நீண்ட வாசகங்களை மையித்தின் தலைமாட்டில் ஓதல்.

- மையித்தை அடக்கிவிட்டு பாத்திஹா ஓதல், அவ்வாறே கூட்டாக அவ்விடத்தில் துஆக்கேட்டல் பித்அத்தாகும். மாறான ஒவ்வொருவரும் மையித்தின் கேள்விகணக்கு இலேசாக்கப்படுவதற்காக தனித்தனியாக பிரார்த்திப்பதே நபிவழியாகும்.

# த.்.ஸியத் செய்யும் போது ஏற்படும் பித்அத்துக்கள்.

- கப்ரிஸ்தானத்தில் வைத்து அடக்கி முடிந்தபின் கூட்டாக த.்.ஸியத் செய்தல் பித்அத்தாகும். மாறாக மரணித்தவரின் உறவினர்களை எதேர்ச்சையாக சந்திக்கும் போது அல்லது வீடுசென்று அங்கு வெகுநேரம் தரித்திருக்காமல் த.்.ஸியத் செய்துவிட்டுத் திரும்புவதே சுன்னத்தாகும்.

- மையித் வீட்டிலே த.்.ஸியத்துக்காக ஒரே நேரத்தில் மக்கள் ஒன்றுகூடுவதும் அங்கு அவர்களுக்கு அமர இருக்கைகள் ஏற்படுத்துவதும் உபசாரம் செய்வதும் பித்அத்தாகும்.

- அ.்.ழமல்லாஹ அஜ்ரக எனும் த.்.ஸியத் வாசகம் ஹதீஸில் இடம்பெற்றாலும் அதுபலவீனமான ஹதீஸாகும் . எனவே ஸஹிஹான ஹதீஸ்களில் இடம்பெற்ற அல்லது ஆறுதல் அளிக்கும் எவ்வார்த்தையையும் த.்.ஸியாவின் போது பாவிக்க முடியும். இன்ன லில்லாஹி மா அகத வலில்லாஹி மா அ.்.தா வகுல்லு ஷைஇன் இன்தஹுௗ இலா இஜலின் முஸம்மா எனும் வாசகம் நபியவர்கள் பாவித்த புகாரியில் இடம்பெறு வாசகமாகும். அதுவே த.்.ஸிவா வாசகங்களில் மிகச் சிறந்தது என இமாம் நவவி(றஹ்) கூறுகின்றார்கள்.

- மையித்துவீட்டார் ஆட்களை அழைத்து மையித் வீட்டில் சாப்பாடு போடுவது நபிவழிக்கு மாற்றமாகும். மாறாக அயலார்,தூரத்து உறவினரே மையித் வீட்டாருக்கு உணவளித்தல் மூன்று தினங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாகும்.

- முதலாம் ஏழாம், நாற்பதாம் , மற்றும் வருட நிறைவையொட்டி உணவளிப்பதும் , கத்தம் ஓதுவதும் அதற்காக பணம் பெறுவதும் பித்அத்தாகும். இவ்வைபவத்துக்கு பசியாற அழைக்கப்பட்டால் செல்வதும் பித்அத்தாகும்.

▪ மையித்துக்குப் பிடித்த உணவு-பானங்களை அவர் பேரால் ஸதகாச் செய்தலும் அப்படிச் செய்வதால் அப்பொருள் அவரைச் சென்றடையும் என்று நம்புவதும் பித்அத்தாகும்.

▪ நாற்பது குர்ஆன் ஸலாத்துந் நாரியா போன்றவற்றை ஓதி மையித்துக்கு ஓதி அதன் நன்மைகளைச் சேர்ப்பிக்க கூலிக்கு ஆட்களைப் பிடித்தலும் பித்அத்தாகும்.

▪ மரணத்திற்கு எப்போதும் தான் தயார் என்பதை நிரூபிக்கும் விதமாக சிலர் உயிரோடிருக்கும் போதே தமக்காக கப்ர் தோண்டி வைத்தல் பித்அத்தாகும்.

## கப்ரிஸ்தானை சியாரத் செய்யும் வேளை ஏற்படும் பித்அத்துக்கள்.

▪ குறிப்பிட்ட மூன்றாம், ஏழாம் நாற்பதாம் ஒரு வருடமுடிவு நாட்களில் அடக்கப்பட்டவரை சியாரத் செய்தல். அவ்வாறே பிரதி வெள்ளிக்கிழமை, பெருநாள் தினங்களில் , மற்றும் ஆசூரா ,றஜப் ஸ.்.பான் 15ம் தினங்களில் சியாரத் செய்வதை வழக்கப்படுத்திக் கொள்வதும் பித்அத்தாகும்.

▪ கப்ருக்கு முன்னால் தொழுகையில் நிற்பதைப் போல தக்பீர் கட்டிய வண்ணம் நிற்றல், கப்ராளிக்கு மரியாதை செய்யும் நோக்கில் மண்டியிட்டு அமர்தல் போன்றனவும் பித்அத்தாகும். அவ்வாறே சியாரத்தின் போது பாத்திஹா யாஸீன் ஓதுவதும் பித்அத்தே!. இது பற்றி இடம்பெறும் ஹதீஸ்கள் புனையப்பட்ட ஹதீஸ்களாகும்.

▪ சந்திர வெளிச்சம் உள்ள13,14,15 இரவுகளில் சியாரத் சென்று அங்கு உபதேசம் புரியும் வழக்கமும் பித்அத்தாகும்.

▪ நபியவர்களுக்கோ ஏனைய கப்ராளிகளுக்கோ தனது ஸலாத்தை எத்திவைக்குமாறு அங்கு சியாரத் செல்வோரை தூதுவர்களாக நியமித்து அனுப்புவதும் பித்அத்தாகும். உயிரோடிருப்போருக்கே தனது ஸலாத்தை எத்தி வைக்க பிறரை நியமிக்க முடியும். மரணித்தவர்களுக்கு இவ்வாறு எத்திவைக்கும் முறை நபியின் காலத்திலோ ஸஹாபாக்களிடமோ இருந்

ததில்லை. நபியவர்களுக்கு ஸலாம் ஸலலாத் சொல்வதை எங்கிருந்தும் செய்யமுடியும். அதை நபியவர்களுக்கு எத்திவைக்க அல்லாஹ் மலக்குகளை நியமித்துள்ளான் என்பது நபியின் வாக்காகும்.

- நபிமார்களின் ஆதார்களை அதாவது அவர்கள் பாவித்த பொருட்கள் தலைமுடி,பாத்திரங்கள்,உடைகள் எனக் கருதப்படும் பொருட்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு அவற்றைத் தரிசிக்கச் செல்வதும் பித்அத்தாகும். அவை குறித்த நபிக்குரியதுதான் என்று நிருபிக்கப்பட்டிருப்பினும் சரியே!

- அவ்வாறே அவ்லியாக்கள் ஸாலிஹீன்கள் எனப்படுவோரின் அடையாளச் சின்னங்களையும் தரிசிக்கச் செல்வது சிர்க்கின் பால் இட்டுச்செல்லும் பித்அத்தாகும்.

- தான் செய்த தொழுகை நோன்பு இதர இபாதத்களின் நன்மைகளைக் மரணித்த தன் பெற்றோருக்கோ அன்றேல் குறித்த ஒருவருக்கோ அல்லது நபியவர்களுக்கோ ஹதிய்யாச் செய்தல் என்ற பெயரில் சிலர் செய்யும் செயலும் பித்அத்தாகும்.
- குர்ஆனை ஓதி அதை குறித்த மரணித்த ஒருவருக்கு அதன் நன்மைகளை சேர்ப்பதற்காக கூலிக்கு ஆள்ப்பிடிப்பதும் பித்அத்தாகும்.
- குறித்த வலியின் கப்ரில் நின்று துஆக்கேட்டால் துஆக் கபூலாகும், அல்லது குறித்த வலியிள் சிபாரிசு கிடைக்கும் என்ற நோக்கில் அங்கு சியாரத் செல்வது பித்அத்தாகும். தன்தேவையை அவரிடமே முறையிட்டால் அது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடும் கொடிய சிர்க்காகும்.

- சியாரத் செய்யச் செல்வோர் குறித்த ஒருகப்ரை போர்த்துதல் ஊதுபத்தி கொளுத்துதல், விளக்கேற்றல், அக்கப்ரை மட்டும் சுத்தம் செய்தல் அவர் விரும்பிண்ணும் உணவுகளை கப்ரில் படையல் செய்தல் போன்றவை மாற்றுமத செயல்களும் பித்அத்துமாகும்.
- ஓவ்வொரு அவ்லியாவும் ஒவ்வொரு தேவையை நிறைவேற்றுவார் என்று நம்பி நோய்க்கு மருந்துசெய்ய ஒருவர், திருமணம் கைகூட ஒருவர் இப்படி கப்ர்களை-தர்ஹாக்களை

சியாரத் செய்வதும் மாபெரும் பித்அத்தும் பிறமத மூடநம்பிக்கையும் ஆகும்.

- ஓவ்வொரு ஊரிலும் அடங்கப்பட்டுன்ன வலிமார்களே அவ்வூரை பாதுகாக்கின்றனர் என்று நம்புவது மாபெரும் சிர்க்காகும்.
- மனைவி மரணித்த ஆண்கள் மறுமணம் செய்ய விரும்பின் மனைவியின் கப்ரை சியாரத் செய்து கப்ருக்கு நீரூற்றினால் மறுமணத்துக்கு முதல் மனைவி சம்மதிப்பதாக நம்புவதும் மூடநம்பிக்கையும் பித்அத்துமாகும்.
- சியாரத்செய்ய வருவோர் ஓதுவதற்காக கப்ரடியில் குர்ஆன் பிரதிகளை வைத்துவிட்டு வருவதும் பித்அத்தாகும்.
- குறிப்பிட்ட ஒரு கப்ரைச் சுற்றி வேலியமைத்தல் சுவர் கட்டுதல் அலங்கரித்தல் போன்றனவும் பித்அத்தாகும்.
- சியாரத் செய்வேரர் கப்ரில் தனது பிரச்சனைகளை முன்வைத்தல், எழுதிப் போடுதல் துணி கயிறு போன்றவற்றை கட்டுதல் , எண்ணெய் ஊற்றுதல் கப்ரை முத்தமிடல், தொட்டுக் கொஞ்சுதல் போன்றன சிர்க்கை ஏற்படுத்தும் பித்அத்தாகும்.
- கப்ர்களைச் சுற்றிவருதல், குழந்தைகளை பரக்கத் பெறும் நோக்கில் கப்ரடி மண்ணில் போட்டு உருட்டுதல், கப்ரடி மண்ணை பரக்கத்பெற எடுத்துச்செல்லல், அதை வீட்டில் பாதுகாத்துவைத்தல், அங்குவைத்து குழந்தைக்குப் பெயர் சூட்டல் தலைமுடி சிரைத்தல் , அவ்விடத்தில் பிராணிகளை அறுத்து குர்பான் செய்தல் போன்றன சிர்க் சார்ந்த பித்அத்துக் களாகும்.
- சியாரத் செய்துவிட்டு கப்ருக்கு புறமுதுகு காட்டாது பின் பக்கமாக நடந்து மக்பராவை விட்டு வெளியேறுவதும் பித்அத்தாகும்.
- கப்ராளிகளின் பொருட்டால் துஆக் கேட்பது பித்அத்தாகும் அவர்களின் பெயரால் சத்தியம் செய்தல் , அறுத்தல், உதவிதேடல், அபயம் தேடல் போன்றன சிர்க்காகும்.

▪ நபியவர்களின் கப்ரை சியாரத் செய்பவர்கள் சிலர் நபியவர்கள் உலகில் இருந்ததைப் போல் கப்ரிலும் உயிரோடிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையுடன் சியாரத் செய்வதும் அவர்களிடம் தனக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக கேட்குமாறு கோருவதும் ولو أنهم إذ ظلموا أنفسهم جاءوك என்ற குர்ஆன் வசனத்தை நபியவர்களுக்கு ஓதிக் காட்டுவதும், அவர்களின் பெயரில் சத்தியம் செய்வதும் அவர்களிடம் மறுமையில் அபயமளிக்குமாறு கேட்பதும் பித்அத்தான செயல்களாகும்.

▪ நபியவர்களுக்கு தமது தேவைகளை கடிதத்தில் எழுதிக் கொண்டு வந்து அங்கிருக்கும் விளக்கு மாடத்தில் வீசிவிட்டுச் செல்வதும் அறிவிலிகள் சிலர் செய்யும் பித்அத்தாகும்.

▪ நபியவர்களின் கப்ரை சியாரத் செய்யும் சிலர் கப்ரைச் சுற்றியுள்ள சுவர் ,கதவுகளைத் தொட்டுக் கொஞ்சுதல், தனது உடலை அங்கிருக்கும் சுவர்களில் தேய்த்தல், நீண்ட நேரம் அங்கு நின்று றவ்ழாவை நோக்கி பிரார்த்தித்தல், றவ்ழாயன்னலூடாகக் கைகளை விட்டு நபியே ! எனக்கு ஷபாஅத் செய்யுங்கள் என்று கூச்சலிடுவதெல்லாம் மார்க்க அறியாமையால் சிலர் செய்யும் பித்அத்துக்களாகும்.

▪ மற்றும் சிலர் நபியவர்களுக்கு முன்னால் நின்று கொண்டு நமது பிரச்சனைகளை அவர்களிடம் வாய்விட்டுச் சொல்லக் கூடாது, காரணம் அவர்கள் நாம் சொல்லாமலேயே அவற்றை அறியக் கூடியவர்கள் என்று சொல்வதும் அவர்கள் உயிரோடிருக்கும் போது பார்ப்பது கேட்பது பேசுவது போன்றே இப்போதும் நம்மைப் பார்த்துக் கொண்டு நாம்பேசுவதற்கு பதிலளத்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்று நம்புவதும் நபியவர்களை அல்லாஹ்வின் அந்தஸ்த்துக்கு உயர்த்தும் செயலும் சிர்க்கை உண்டாக்கும் பித்அத்துமாகும்.

# (20)

# இத்தா பற்றிய சட்டங்கள்.

இத்தா.( துக்கம் அனுஸ்டித்து காத்திருத்தல்.)

இமாம் அல்பானி அவர்கள் தமது அஹ்காமுல் ஜனாயிஸ் எனும் நூலில் இத்தாவின் சட்டதிட்டங்கள் பற்றிக் குறிப்பிட வில்லை. எனினும் அதன் முக்கியத்துவம் கருதியும் அது அவ சியம் இத் தலைப்புக்குள் உள்வாங்கப்பட வேண்டியதொரு விடயம் என்பதாலும் அது பற்றிய சட்டவிளக்கங்களையும் குர் ஆன் ஹதீஸ் அடிப்படையில் எழுதப்பட்ட நூல்களிலிருந்து சுரு க்கமாக எடுத்துக் கூறுகின்றேன். பொதுவாக பிக்ஹுக்கலை அறிஞர்கள் தலாக் விவாகரத்து பற்றிய பாடத்திலேயே இத் தாவைப் பற்றியும் பேசுவது மரபு. அதனையே இமாம் நாஸி ருத்தீன் அல்பானி அவர்களும் பின்பற்றயிருக்கின்றார்கள் என எண்ணுகின்றேன்.

இத்தா என்றால் அறபுமொழி அகராதி கருத்தின்படி எண் ணுதல், கணக்கிடுதல் எனப் பொருள்படும். இஸ்லாமிய சரீஅத் தரும் அர்த்தத்தின் படி இத்தா என்பது கணவன் மரணித்த, அல்லது கணவனுக்கும் மனைவிக்குமான பந்தம் அற்றுப்போன பெண்கள் துக்கம் அனுஸ்டிக்கும், அல்லது கர்ப்ப நிலை அறி யும் நோக்கில் குறிப்பிட்ட காலத்துக்கு அனுமதிக்கப்பட்ட சில விடயங் களை விட்டு ஒதுங்கியிருப்பது என்று பொருள்ப்படும்.

கணவன்-மனைவிக்கிடையிலான பிரிவு இருவகைப்படும். ஒன்று கணவனின் மரணத்தால் ஏற்படும் பிரிவு. அடுத்தது கணவன் மனைவியை விவாகரத்துச் செய்வதால் ஏற்படும் பிரிவு. இவ்விரண்டுவகைப் பிரிவிற்கும் மனைவியானவள் இத்தா அனு ஸ்டிப்பது கடமையாகும். இதற்குக் காரணம் அவளின் இத்தா க்காலம் முடிய முன் அவள் மறுமணம் செய்யக்கூடாது என்ற கண்டிப்பான இறை உத்தரவை நடைமுறைப்படுத்தல், முன் னாள் கணவனால் கர்ப்பமுற்றிருக்கின்றாளா? என்பது பற்றி

அறிதல், மற்றும் கணவனின் பிரிவுக்காகத் துக்கம் அனுஸ்டித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இத்தா நான்கு வகைப்படும்..

**1- கர்ப்பமுற்ற பெண்ணின் இத்தா.**

ஒரு பெண் கணவர் மரணிக்கும் போது அல்லது இருவருக்குமிடையில் விவாகரத்து ஏற்படும் போது கர்ப்பிணியாக இருந்தால் அப்பெண் தன் கர்ப்பத்திலுள்ள குழந்தையைப் பிரசவிக்கும் வரை இத்தா இருக்க வேண்டும். இச்சட்டம் கணவர் மரணித்த பெண்ணுக்கு மாத்திரமின்றி கணவனால் மீட்டெருக்கும் வகை தலாக்( றஜ்இய்யா) மீட்டெடுக்க முடியாத தலாக் ( பாயின்) அவ்வாறே குல்உ( மனைவி கணவனிடம் தன்னை விவாகரத்து செய்யக் கோரல் மூலமாக) அல்லது பஸ்கு (நீதிபதி இருவரையும் பிரித்துவைக்கும் விவாகரத்து) மூலம் பிரிந்த அனைத்து வகைப் பெண்க ளுக்கும் பொதுவானது.

இதுபற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகையில்..

கர்ப்பிணிப் பெண்கள் அவர்களின் இத்தாக்காலமானது அவர்களின் கர்ப்பத்தைப் பிரசவிக்கும் வரையாகும்.( ஸூரா தலாக்)

**2- மாதவிலக்கு வரும் வயது நிலையிலுள்ள கணவனால் விவாகரத்து- தலாக் சொல்லப்பட்ட பெண்கள்.**

இப்பெண்கள் மூன்று துப்பவரவுக் காலம் (ஹைலுக்காலம்) இத்தா அனுஸ்ட்டிக்க வேண்டும். அதாவது கணவன் தலாக் சொல்ல முடிவெடுத்தால் அவள் மாதவிலக்கிலிருந்து சுத்தமானவுடன் உடலுறவு வைத்துக் கொள்ளாத நிலையில் தலாக் சொல்ல வேண்டும். அந்த துப்பரவுக்காலத்தை ஒரு துப்பரவாகவும் அதன்பின் ஏற்படும் மாதவிலக்கு சுத்தமாகியதும் அதை இரண்டாவது துப்பரவாகவும் அதற்கடுத்த மூன்றாவது ஏற்படும் காலம் வரைக்கும் இத்தா இருந்து துப்பரவு ஏற்பட்ட நாளோடு இப்பெண்ணின் இத்தாக்காலம் நிறைவுபெறும்.

சாதாரணமாக முதலாவது துப்பரவு 25 நாட்கள் அடுத்த மாத விலக்கு 5 நாட்கள் துப்பரவு 25 நாட்கள் அதற்கடுத்த மாதத்தில் மாதவிலக்கு 5 நாட்கள் ஆக மொத்தம் 25+5+25+5 =60 நாட்கள் சராசரியாக இத்தா இருக்க வேண்டி ஏற்படும். நாட்களின் எண்ணிக்கை ஒவ்வொருவருக்கும் சற்று வேறுபட இடமுண்டு.

அல்லாஹ் கூறுகின்றான்…
தலாக் சொல்லப்பட்ட பெண்கள் மூன்று துப்பரவுக் காலங்கள் தம்மை (இத்தாவில்) எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். பகரா: 228)

**3- மூன்றாம் வகைப் பெண்கள் ஹைளு ஏற்படாத பெண்கள்.**

அதாவது பருவ வயதை அடையாத பெண்கள், அல்லது வயது முதிர்ச்சியால் ஹைளு நின்று போய்விட்ட பெண்களும் இதில் அடங்குவர். இவர்களது இத்தாக் காலம் மூன்று மாதங்களாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்..
ஹைளு வருவதிலிருந்து நம்பிக்கையற்றுப் போன பெண்கள் சந்தேகித்தால் அவர்களின் இத்தாக் காலம் மூன்று மாதங்க ளாகும். அவ்வாறே ஹைளு வராத (சின்னப்) பெண்களுக்கும் ( இதே சட்டமே!) தலாக் : 4

4- **நான்காம் சாரார் கணவன் மரணித்த பெண்கள் .**
அதாவது கர்ப்பமுறாத நிலையில் கணவர் மரணித்துப் போன பெண்கள். இவர்கள் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் இத்தா இருக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்..
உஙகளில் மனைவிமாரை விட்டு மரணித்தவர்கள் அத்தகை யோரின் மனைவிமார் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் எதிர்பார்த்து ( இத்தா) இருக்கட்டடும். பகரா 234.

❖ திருமணம் செய்து உடலுறவு கொள்ள முன் கணவர் மரணித்தாலும் அப்பெண் இத்தா இருக்க வேண்டும்.

❖ திருமணம் செய்து உறவுகொள்ள முன் கணவனால் தலாக் சொல்லப்பட்டால் மனைவி இத்தா இருக்க வேண்டிய தில்லை.

அல்லாஹ் கூறுகின்றான்…

இறை விசுவாசிகளே! நீங்கள் மு.்.மினான பெண்களை மண ந்து பின் அவர்களைத் தொடமுன் - உறவின் முன் தலாக் சொல்லி விட்டால் அப்பெண்கள் இத்தா இருக்க வேண்டி யதில்லை. அஹ்ஸாப்: 49

❖ திருமணம் செய்து உறவின் முன் தலாக் சொல்ல ப்பட்டால் நிர்ணயிக்கப்பட்ட மஹரில் பாதியை அப்பெண் பெற தகுதிபெறுகின்றாள். உறவின் பின் தலாக் சொல்லப்பட்டால் நிர்ணயிக்கப்பட்ட முழு மஹர்த் தொகையும் அவளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

## இத்தா இருக்கும் பெண்களுக்கு ஹராமாக்கப்பட்ட – தடுக்கப்பட்ட விடயங்கள்.

1- திருமண ஒப்பந்தம் செய்தல்.

இத்தா இருக்கும் பெண் தலாக் சொல்லப்பட்டவளாயின் அத்த லாக் மீட்டிக்கொள்ளக்கூடிய முதலாம் இரண்டாம் தலாக் குகளாயின் அப்பெண்ணிடம் வேறொரு திருமணத்தைப்பற்றி வெளிப்படையாகவோ , சமிக்கையாகவோ பேசுவதே ஹராமா கும். முத்தலாக் சொல்லப்பட்டவளாயின் வெளிப்படையாக மறு மணப் பேச்சை ஆரம்பிப்பது மட்டும் ஹராமாகும். கணவர் மரணித்த பெண்ணைப் பொறுத்த வரைக்கும் அப்பெண்ணுக்கு திருமண உடன்படிக்கை செய்வது மட்டுமே ஹராமாகும்.

2- மணம் பூசுதல் - வாசனைத் திரவியங்கள் பாவிப்பதும் ஹராமாகும். இத்தா இருக்கும் பெண் தனது உடலிலோ ஆடைகளிலோ வாசனைப் பொருட்களைப் பூசுவது ஹராமா

கும். நபியவர்கள் ‘ அப்பெண் வாசனைப் பொருட்களைத் தொடவேண்டாம்’ என்று கூறியுள்ளார்கள்.

3- உடல்- உடை அலங்காரங்களில் ஈடுபடுவது ஹராமா கும். எனவே மருதானி போடுதல், சுர்மா இடுதல், சாயம் பூசுதல், இவை போனறவைகள் ஹராமாகும். அவ்வாறே அலங்கரிக்கப்பட்ட ஆடைகளை அணிதல், நகைகள் மோதிரம் , தோடு உட்பட அனைத்து வித அணிகலன்களை அணிவதும் ஹராமாகும்.
வெள்ளை ஆடைதான் அணிய வேண்டும் என்று கட்டாயமில் லை. அலங்காரமற்ற வர்ண ஆடைகளை அணுவதும் ஆகு மானதே! .

4- கணவன் மரணித்தபோது அப்பெண் தங்கியிருந்த வீட்டி லேயே அப்பெண் இத்தா இருக்க வேண்டும். சரீஅத் அனும தித்த தவிர்க்க முடியாத காரணங்களால் வேறு இடத்துக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலே தவிர.

இத்தா இருக்கும் பெண் நோயாளிகளைப் பார்க்கவோ, உற வினர்களை சந்திக்கவோ அல்லது அத்தியாசவியமற்ற வேறு விடயங்களுக்காகவோ வீட்டை விட்டு வெளியேறக் கூடாது. உணவு தேடல், அவசிய பொருட்களை வாங்குதல் போன்ற தவிர்க்க முடியாத விடயங்களுக்காக செல்லத்தான் வேண்டுமென்ற நிர்ப்பந்த நிலை ஏற்பட்டால் பகல்ப்பொழுதில் சென்றுவருவதில் தவறிலலை. இரவில் எக்காரணம் கொண்டும் வெளியே செல்லக் கூடாது.

இவைதவிர்ந்த விடயங்களில் இத்தா இருக்கும் பெண் ஈடு படுவதற்கு அவருக்கு அனுமதியுண்டு. நகம்வெட்டுதல், உடல் உரோமங்களை மழித்தல், தலைமுடிகளை சீர்செய்தல், எண் ணைபோட்டு தலைவாருதல், சாதாரண சோப்புப் போட்டுப் குளித்தல் போன்றன அனுமதிக்கப்பட்டவையாகும். அவ்வாறே விரும்பி உணவுகளான பழங்கள் ,காய்கறி, இறைச்சி வகைக ளைச் சாப்பிடுதல், அவ்வாறே சமைத்தல் , ஆடைகளைத் தைத்தல், நூல் நூற்றல், நெசவுசெய்தல் போன்ற வீட்டிலி ருந்தவாறே செய்யக்கூடிய கைத் தொழில்களில் தாராளமாக

ஈடுபடலாம். அன்னிய ஆண்களோடு அனுமதிக்கப்பட்ட விடய ங்களைப் பேசவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் திரைமறைவி லிருந்து பேசலாம்.

இவைதவிர அன்னியஆண்களை ஏதேர்ச்சையாகப் பார்த்து விட் டாலோ பேசிவிட்டாலோ அந்த நாளைக் கணக்கிடாது இத்தாக் காலத்தை ஒருநாள் அதிகரிக்க வேண்டுமென்பதும். இத்தா இருப்போர் மாடிக்குச் செல்லக்கூடாது, சந்திரன்- சூரியனைப் பார்க்கக் கூடாது மஹ்ரமான ஆண்களையும் பார்க்காமல் முக த்தை மறைக்கவேண்டும் என்பதெல்லாம் ஆதாரமற்ற வெற்று வார்த்தைகளாகும்.

## இத்தா வீட்டில் நடந்தேறும் தவிர்க்கபட வேண்டியவைகள்.

1- இத்தாவிலுள்ள பெண்ணை த.்.ஸியத் - ஆறுதல் கூறக் செல்லும் ஸுன்னத்தை 3 நாட்களுககுள் வைத்துக்கொள்வது நல்லது என்பது அதிகமான அறிஞர்களின் கருத்தாகும். எனி னும் தேவையேற்படின் அதற்குப் பின்னரும் செல்வதற்கு அனுமதியுண்டு.

ஆனால் நமது பகுதிகளில் அப்பெண் இத்தாவிலிருந்து வெளி யேறும் வரை பெண்கள் த.்.ஸியத்துக்காகச் செல்லும் பழக்கம் உள்ளது. இது நல்லதல்ல.

2- அவ்வாறே பெண்களில் அதிகமானோர் த.்.ஸியத்துக்குச் சென்று நீண்ட நேரம் அங்கு பேசிக் கொண்டிருக்கும் வழக்க த்தைக் கொண்டிருக்கின்றனர். இது தவறாகும் . அசல் ஸுன் னத் யாதெனில் த.்.ஸியத்துக்குச் செல்வோர் அங்கு உட்கா ராமல், கூட்டம் கூடாமல் நின்ற நிலையிலேயே ஆறுதல் சொ ல்லிவிட்டு வரவேண்டும் என்பதாகும். அதாவது புதிதாக சிலர் வந்துவிட்டால் முதலில் வந்தவர்கள் இங்கிதமாகப் புறப்பட்டு வெளியேறிவிட வேண்டும்.

3-மரண வீட்டில் தங்களை முறையாக நடப்பிக்கவில்லை , தேனீர் விருந்துபசாரம் செய்யவில்லை என்று முறைப்படுவோ ரும் உள்ளனர். அல்லாஹ்தான் இவர்களுக்கு நேர்வழி காட்ட வேண்டும்.

# முடிவுரை.

அல்ஹம்துலில்லாஹ்! இந்நூலை மொழியாக்கம் செய்ய எனக்கு அருள்பாலித்த அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

இதில் ஒவ்வொரு முஸ்லிமும் மரண வீடயம் மற்றும் நல்ல டக்க முறை பற்றி கட்டாயம் அறிந்து வைத்திருக்க வேண்டிய சட்டங்கள் ஆதாரப்பூர்வமான ஸுன்னாவின் ஒளியில் தெளிவுப டுத்தப்பட்டுள்ளன.

இந்நூலின் அறபுமூல நூலாசிரியரான ஹதீஸ்க்கலை மேதை இமாம் நாஸிருத்தீன் அல்பானி அவர்கள் இந்நூலை ஆதார ப்பூர்வமான ஹதீஸ்களின் ஒளியில் தொகுத்து வழங்கியுள் ளார்கள். ஒருசில மேலதிக சேர்க்கைகளை மட்டுமே நான் மூலநூலுக்கு மேலதிகமாக அவற்றின் அவசியம் உணரப்பட்ட தால் இணைத்துள்ளளேன். அவ்வாறே ஹதீஸ்களின் தரம்பற்றி விரிவாகப் பேசும் இமாமவர்களின் அடிக்குறிப்புக்களில் அதிக மானவற்றை அவை ஹதீஸ்த்துறை அறிஞர்களுக்கே புரியுமெ ன்பதால் அவற்றை மொழிபெயர்க்காது விட்டுள்ளேன்.

எனவே மூலநூலாசிரியரான இமாமவர்களுக்கும் மொழிபெயர்த் தோனான எனக்கும் வாசகர்களான உங்களுக்கும் அல்லாஹ் அருள்பாலிப்பதோடு எமது ஜனாஸா விவகாரங்களை ஸுன்னா வின் வழியில் ஆக்கிக் கொள்வதற்கும் பித்அத்துக்களை விட்டு நீங்கி விலகிக் கொள்வதற்கும் ஏனையோருக்கும் இத்தகவல் களை எத்தி வைப்பதற்கும் எம்மனைவருக்கும் அருள்பாலி ப்பானாக. ஆமீன்.